XIII A
100

RECORDS

RELATING TO WATER DISPUTES

OF THE

TRICHINOPOLY DISTRICT.

ARZIS AND ORDERS.

1906.

RECORDS RELATING TO WATER DISPUTES.

REF.— BOARD'S PROCEEDINGS (LAND REVENUE) No. 3306 MIS. DATED 23-9-05.

No. 1.

1830-ஹூ நவம்டர்மீ 19உ யுள்ள 199-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ-மெஸ்தர் நெவில் சொமரவில் கெமரன் துரையவர்கள் சமுகஷமத்துக்கு அரியலூர் தாலூகா தாசில்தார் கிருஷ்ணருவ் மிகவும் வணக்கத்துடனே சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் இந்த தாலூகா எலந்தக்கூடம் கண்டிருகித்தம் இந்த இரண்டு கிருமத்துக்கும் ஏரிதகரார் சங்கதியைக்குறித்து முன்னாலே அசூரிலிருந்துவந்த தீர்ப்புபடிக்கு ஜாக்கிறதை செய்திருந்ததில் இப்பால் மழை வருஷித்து ஜலம் வந்ததில் எலந்தக்கூடம் கிருமத்து சாகுபடிப் பயிர்கள் முழுகிப்போயிருக்கிற சங்கதிக்காக மகஜர்நாமா உடனே ரிபோர்ட்டு பண்ணிக்கொண்டிருந்ததற்காக ஷை தீர்ப்பில் கண்டிருக்கிற ஷரத்துக்குமேல் ஜாஸ்திஜலம் ஏருமல் இருக்கும்படிக்கு எவ்விதமாய் செய்யவேணுமோ அவ்விதமாய் ஜாக்கிறதைசெய்து சாகுபடியாயிருக்கிற பயிர்களுக்கு குந்தகமல்லாமல் பந்தோபஸ்து செய்யச்சொல்லி நாளதுமீ 9உ உத்திரவான 162-நி. சன்னது 11உ வந்தது.

அது காரியத்துக்கு உத்திரவுபடிக்கு பயிசல்நாமாவில் கண்ட ஷரத்துக்கு ஜாஸ்தி ஜலம் ஏருமல் இருக்கும்படி ஜாக்கிறதை செய்யச்சொல்லி ஷை சனதுக்கு சரியான நகலுடனே ஷை இலாகா தென்முகம் பேஷ்காருக்கு தாக்கீது அனுப்பிவித்து அந்தப்படி ஷை யான் போய் பார்த்து தென்புறம் கரையில் வெட்டிவிட்டால் ஏரிக்கு அபாயம் வருமென்று ஷை ரெண்டு கிருமத்தாரையும் வைத்துக்கொண்டு வடபுறம் புதுகலிங்கில் தூத்துபோட்டயிருக்கிற இடத்தில்தானே வெட்டி விடவேணுமென்கிறதாய் எத்தினப்படும்போது ஷை கண்டிருகித்தம் கிருமத்தார் நூறுபேர் வரைக்கும் கும்பல்சேர்த்துக்கொண்டு வந்து கரையில் வெட்டக்கூடாதென்று நிருகரித்து சர்க்கார் அத்து என்கிறது எவ்வளவும் இல்லாமல் மனசுக்கு வந்தபடி உதாசினங்களாய் பேசி சேவுகர் முதலானவர்களையும் நிருகரித்து தள்ளி தொந்திரவு குடுத்து ஜலம் போகும்படி விடவொட்டாமல் தடங்கல்செயததாய் ஷை பேஷ்காரும் தாலூகாவுக்கு ஓலை எழுதிக்கொண்டார். அதின்பேரில் சிலபேர் புறப்பட்டு சமுகத்துக்கு வந்திருக்கிறதாய் தெரியவருகிறது.

ஷை கண்டிருகித்தம கிருமத்தார் நெடுகிலும் பிராளிக்காரர்களானபடியினாலேயும் வடபுறம் புதுகலிங்கல் வழியாவது அல்லது அதுக்குமேல்புறமாயாவது கரை வெட்டிவிடும்படியாய் சன்னதில் கண்டுவந்தால் அந்தப்படி ஜாக்கிறதை செய்யலாம். ஆகையாலும் ஷை கிருமத்தார் சிலபேர் சமுகத்துக்கு வந்திருப்பதாய் தெரியவந்தபடியினாலே அவாளுக்கும் செய்த தண்டைக்காக ரூபுருபில் கண்டிப்பாய் தாக்கீதும் நசியத்தும செய்து இன்ன இடத்தில் போக்குவிடுகிறதென்று கண்டு உத்திரவு அனுப்பும்படி உத்திரவாக வேண்டிய சங்கதி சமுகத்துக்கு தெரியவரவதாய் எழுதிக்கொண்டேன்.

பின்னும் ஷை பேஷ்கார் எழுதிக்கொண்ட ஓலைக்கு சரியான நகலும் இதில் அடக்கமாய் அனுப்பிவித்திருக்கிறதை அறியப்பண்ண அவாளுடைய சண்டைகள் சித்தத்துக்குமெசமயாய் தெரியவரும், ஆகையால் ஜலம் இன்னும் வடியாமல் பயிர்சேசமாய் போகிறதாய் இருக்கிறதானதால் இதுசங்கதிக்கு உத்திரவு வருகிறபடி நடந்துகொள்ளுகிறேன். சித்தமறியவேண்டியது.

1830 ஹூ நவம்பர்மீ 16உ,	(ஒப்பம்)	கிருஷ்ணருவ்,
முகாம் கீளப்பளூர்.	(மாராஷ்டத்தில்)	தசில்தார்.

No 2.

1833-ஹூ ஜூனமீ 8உ யுள்ள 224-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்டரர்கிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் யென்றி மார்ட்டின் பிளோர் துரையவர்கள் சமுகூமத்துக்கு துரையூர் தாலூகா தாசில்தார் ரெங்கராவ் வணக்கததுடனே சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் ஆஊத்துடையாம்பட்டி வகைரு கிருமத்துக்கும் சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகா சோமபை வகைரு கிருமத்துக்கும் நேரிட்டிருந்த கொல்லிமலை தலை அய்யாத்து தண்ணீர் தகருரைக் குறித்து நாமக்கல் தாசில்தாருடனே கூடயிருந்து பயிசல் ஞமாவாங்கி அனுப்பினதில் தழை சங்கதி கரார்ஞமா சரியாயிருக்கிறது என்றும், தண்ணீர் சங்கதி கரார் ஞமாவில் முழுவதும் களிவு தண்ணிக்கே இந்த இலாக்காவுக்கு பாத்தியமென்று கண்டிருப்பதினாலே முன் பிருது பிட்டிஷன் அர்ஜி முதலானதில் அப்படி காணுமலிருக்க இப்போது களிவு தண்ணிக்கு சம்மதித்தானென்றும், மாமூல்படி பயிசல் ஆகியிருக்கிறதா, அல்லது வேறேவிதமாய் பயிசல் ஆகியிருக்கிறதா, கிருமத்தாரிடத்தில் அத்தாகூதி வாங்கி அரிக்கை செய்யும்படியாய் சாதரான 38-வது, 132-வது நீ. பர்வாணு வந்துசேர்ந்தது.

அதுகாரியத்துக்கு ஷை சங்கதியில் அனுபோகம் தெரிந்த தரோபஸ்து கிருமத்து குடிகளை ஆஜர்படுத்திக்கொண்டு விசாரணைசெய்து அத்தாகூதி வாங்கவேண்டியிருந்ததுமல்லாமல் பிதவி ஜமாபந்தி கச்சேரியில் இருந்ததினாலே அவ்விடத்துக்குப்போய் விசாரணை செய்ய தவக்கப்பட்டதேதவிர வேறில்லை.

இப்படிவும் உத்திரவுப்படி அனுபோகம் தெரிந்தவர்களை ஆஜர்படுத்திக்கொண்டு விசாரணை செய்யும்போது மாமூல் நெடுநாளாய் ஷை கொல்லிமலை தலையினாலேயும், அய்யாத்து பிரிவுஜலத்தினாலேயும் ஷை கிருமங்களில் நஞ்சை சாகுபடி வரப்பட்ட வளக்கமேயல்லாது வித்தியாசம் இல்லையென்றும் ஷை சேலம் ஜில்லா சோமபை வகைரு குடிகள் முன்னாலே அவ்விடத்தில் கொஞ்சமாய் நஞ்சை சாகுபடி செய்துவந்தபேர்கள இப்போது வாஸ்தவமாய் நஞ்சை சாகுபடி செய்துகொண்டு வளக்கபடி தழைக்காகவும் தங்களுக்கு முகியமான பிரிவாகிய ஸ்ரீரங்கன் அணை வாய்க்காலுக்கு போய் யெக்கல் யெடுத்து தண்ணீர் திருப்பி வரவும் போகும் போதெல்லாம் அந்த இலாக்கா குடிகள் ஷை சரகத்துக்கே வரக்கூடாதென்றும், மாமூலுக்கு விரோதமாய் வீண் சச்சரவு செய்த நியித்தியம் இனிமேலுக்கும் அப்படி சச்சரவு நேரிடாமல் விஸ்தாரமாய் ஜலம் வரும் போது யாதொரு தகராரும் இல்லாததனாலே சுலபமாய் கருஞ்சலம் வரும்போது ஸ்ரீரங்கன அணையென்கிற அடையாளமாத்திரமேயல்லாது யாதொரு அணை முதலானது இலலாததைப்பற்றி அந்த பாய்ச்சலினால் ஆவி த்தில் சுவல்பமாய் அஞ்சாறு காணி சாகுபடியாகாததினாலே ஷை பிரிவு ஜலமுழுவதும் தாராளமாய் தங்களுக்கேவரும் என்று, அசறது தண்ணி வாகிற யெல்லையாகிய மேற்கே மருதமரம வரைக்கும் போய் மாமூல்படி யெக்கலெடுத்து தண்ணீர் திருப்பிவரலாம் என்றும், அதுக்கு மேற்கே தலை குரம்புக்கு போய் தண்ணீர் திருப்பி வரவேணுமானால் யேத்தக்குறச்சல் நேரிடாமல் அவ்விடத்திய சர்க்கார் மணியகாரனை வைத்துக்கொண்டு திருப்பிவருகிறது என்றும், புளியஞ்சோலை புரிவில் வரப்பட்ட ஜலம் இப்பால் அந்த இலாக்காவில் உண்டாகியிருக்கிற நஞ்சைக்கு பாஞ்சது போக மிச்ச ஜலம் வளக்கபடி இந்த இலாக்கா வாய்க்காலில் விடாமல் அவர்கள் மாச்சரியத்தினாலே ஆத்தில் திருப்பிவிடுகிறதை இனிமேல் எதாபிரகாரம் தங்கள் வாய்க்காலில் திருப்பிவிடுகிறது என்றும் உபயான சம்மதியின்பேரில் மனம் ஒப்பி பைசலாகி கரார்ஞமா பிறந்திருப்பதினாலே அந்த கரார்ஞமாப்படி நடந்தால் தங்களுக்கு யாதொரு குந்தகமும் இல்லையென்றும் அத்தாகூதி எழுதி குடுத்தார்கள்.

ஆனால் முன்னாலே அந்த இலாக்கா கோம்பை வகைரூவில் சுவல்பமாய் சாகுபடியாகி வந்ததினாலே ஜலம் முழுவதும் இவ்விடத்துக்கு வந்துகொண்டிருந்தது. இப்போது அந்த சரகத்தில் நஞ்சை விஸ்தாரமாய் சாகுபடியாகிறபடியினாலே மாமூல்படி ஸ்ரீரங்கன் அணை புரிவில் வரப்பட்ட அசல் ஜலமும் புளியஞ்சோலை புரிவு களிவு ஜலமும் ஆலத்துடையாம்பட்டி வகைரூவுக்கு வருகிறது என்றும் நியாயமாய் பைசல் ஆகியிருக்கிறது.

பின்னும் ஷை கொல்லிமலை ஆத்தில் வரப்பட்ட ஜலம் அந்த இலாக்காவுக்கு உபயோகமானதுபோக மைத்தது இவ்விடத்துக்கே உபயோகமாயிருப்பதினாலே இப்போது பைசல் ஆகியிருக்கிறதில் இந்த இலாகா குடிகளுக்கு யாதொரு குந்தகமும் இல்லை. இதற்காக ஷை யார்கள் கொடுத்த அத்தாக்ஷியை இதில் அடக்கமாய் சமுகத்துக்கு அனுப்பிவிச்சிருக்கிறேன், விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

1833-ஞு ஜுன்மீ 8உ, முசிறி. (ஒப்பம்) (மகாராஷ்டத்தில்) ரெங்கராவ், தாசில்தார்.

No. 3.

1834-ஞு ஏப்பிரல்மீ 29உ யுள்ள 154-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகைபரூ ஆக்ட்டிங்கு கலெக்ட்டருகிய மகா-ா-ா-ஸ்ரீ-மெஸ்சர் டபிளியூ எச் பாபிங்ட்டன் துரையவர்கள் சமுகூமத்துக்கு விட்டுக்கட்டி தாலூகா தாசில் ஆதியப்பசெட்டி மிகவும் வணக்கத்துடன் சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் ஷை தாலூகா பொய்யாமணி திருச்சாப்பூர் இரண்டு கிராமத்தாருக்கும் வாய்க்காலில் பலகைபோட்டு முறைவீதப்படி தண்ணீர் பாச்சக்கொள்ளுகிற சங்கதியில் தகரார் நேரிட்டு அதின்பேரில் ஷை வட்டம் காக்கூன் சேஷய்யங்காரிடத்தில் சொல்லிக்கொண்டதில் ஷை கார்கூன் மாமூல் விசாரித்து உத்திரவு கொடுக்காமல் மாமூலுக்கு விரோதமாய் பொய்யாமணிக்கு ரெண்டு நாளும் திருச்சாப்பூருக்கு மூன்று நாளும் ஜலம் பாச்சிக்கொள்ளும்படி மணியகாரன் தயினாத்துச்சேவுகன் பேரால் சன்னது குடுத்ததற்காக ஷை கார்கூனை சஸ்பெண்டு செய்து விசாரணைக்காக அசூருக்கு அனுப்பிவிக்கச்சொல்லியம் தண்ணீர் பாச்சப்பட்ட சங்கதி மாமூல் செம்மையாக விசாரித்து அறிவிக்கிறதுந்தவிர மாமூல்படி ஷை கிருமங்களில் நடந்துவரும்படியாய் திட்டம் செய்யும்படியாயும் ஷை கார்கூன குடுத்த சன்னதுக்கு நகலுடனே நி. 145-வது பறவானா சாதரான காரியத்துக்கு அதுசங்கதி விசாரணை செய்யவேண்டியதற்சாக பொய்யாமணி திருச்சாப்பூர் பட்டாதார் பள்ளமூப்பன் முதலானவர்களை வரவழைத்து விசாரணை செய்த இடத்தில் பொய்யாமணி கிராமத்து பட்டயதாரூகிய கோபாலய்யன் 1, அண்ணாத்துரை அய்யங்கார் 1, பின்னும் ஷை கிராமத்து பள்ளமூப்பனாகிய முருகன் 1, பெருமாள் 1, இந்த நாலுபேரும் நங்கவாய்க்காலில் வரப்பட்ட ஜலம் பகல் முழுவதும் நங்கபுரத்துக்கு பாய்கிறதென்றும் அஸ்தமிச்சபிற்பாடு பொய்யாமணிக்கு ரெண்டு நாளும் திருச்சாப்பூருக்கு ஒரு நாளும் பேட்டைவாய்த்தலை கிருமத்தானுக்கு ஒரு நாளும் இந்தப்படி ருத்திரிமார் ஜலம் பாய்ச்சி வருகிறதாயும் கிருமத்து பேரிசு கொறம்பு ஆள் கிருமசிலவு ஆள், அமஞ்சி முதலான யெப்பேர்பட்டதும் பொய்யாமணிக்கு இரண்டு பங்கும் திருச்சாப்பூருக்கு ஒரு பங்குமாயும் இந்தப்படி நெடுகிலும் மாமூலாய் நடந்து வருகிறபடியால் அந்தப்படியே ஜலமும் இரண்டு நாள் ஒரு நாளுமாய் பாச்சிவருகிறதாகச் சொல்லி வாக்குமூலம் எழுதிக்கொடுத்ததுந்தவிர திருச்சாப்பூர் கிருமத்து மகாஜனமாகிய வெங்கிட்டருமய்யனையும் ஷை கிருமத்து மூப்பன் சோமன் என்கிறவனையும் வரவழைத்து விசாரணை செய்ததில் ஷை பொய்யாமணி கிருமத்து பட்டயதார் மூப்பன வகையரூ பேர்கள் எழுதிவைத்தபடிக்கு பொய்யாமணிக்கு ரெண்டு தங்களுடைய திருச்சாப்பூர் கிருமத்துக்கு ஒரு நாளும் இந்தப்படி மாமூலாய் பாச்சிவருகிறதுண்டென்று சொல்லி வாக்குமூலம் எழுதிவைத்தாகள்.

மைத்தொரு பட்டயதாரனாகிய வெங்கிட்டபெருமாள் நாயக்கனையும் மிராஸ் குடி ராமகிருஷ்ணபிள்ளையையும் பள்ள ஆண்டியையும் விசாரணை செய்யுமிடத்தில் பொய்யாமணிக்கு ஒரு நாளும் திருச்சாப்பூருக்கு ஒரு நாளும் பாச்சிவந்த வழக்கமென்றும் ஷை இரண்டு கிருமத்தார் ஒருவருக்கொருவர் வியாஜியப்பட்டு பொய்யாமணி கிருமத்தான் தாங்கள் இரணடு நாள் பாச்சுகிறதென்றும் திருச்சாப்பூருக்கு ஒரு நாள் விடுகிறதென்றும் பொய்யாமணி கிருமத்தார் சொன்னதை யிட்டு இரண்டு கிருமத்தாருககும் சச்சரவு நேரிட்டு கார்கூனிடத்தில் சொல்லிக்கொண்டு ஷை யான் ஷை கிருமத்துக்கு வந்து விசாரணை செய்ததில் பொய்யாமணி கிருமத்து பள்ள மூப்பன் தன் கிருமத்துக்கு சேர்ந்தவனாய் இரண்டு நாள் பாச்சுகிறதென்றும் சொல்ல திருச்சாப்பூர் கிருமத்து மூப்பன தன கிருமத்துக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் பாச்சுகிறதென்று சொன்னதாயும் அப்போது திருச்சாப்பூர் கிருமத்து பள்ளன் தான் சொன்ன நம்புதலைக்காக பிரமாணம செய்ய ஒப்புக்கொண்டு மறுபடி பிரமாணம் செய்ய தவரி போனதையிட்டு திருச்சாப்பூருக்கு ஒரு நாளும் பொய்யாமணிக்கு சேர்ந்தவனாய் இரண்டு நாளும் பாச்சிவரும்படியாய் ஷை கிருமமணியகாரன தயன் சேவுகனுக்கு சன்னது குடுத்ததாக வாக்குமூலம் எழுதி வைச்சார்கள்.

அப்பால் ஷை பொய்யாமணி, திருச்சாப்பூர், நங்கபுரம் இந்த மூன்று கிருமத்துக்கும் பட்டயதாரனாகிய அண்ணாத்துரை அய்யர் காரியம் அய்யாவய்யனை விசாரணை செய்யுமிடத்தில் காலமே முதல் ருத்திரி 8-மணி வரையில் வாய்க்காலில் வரப்பட்ட தண்ணீர் முழுவதும் தினபிரதி நங்கபுரத்துக்கு பாய்கிறதென்றும் ருத்திரிமார் பேட்டைவாய்த்தலை கிருமத்துக்கு ஒரு நாள் பொய்யாமணிக்கு இரண்டு நாள் திருச்சாப்பூருக்கு ஒருநாள் இந்தபடி வீதாசாரமாய் மாமூலாய் பாச்சி வருகிற வழக்கமென்றும் வாககுமூலம் எழுதிவைத்தான்.

இதன்மூலியமாய் பார்க்கும்போது பொய்யாமணி கிருமத்துக்கு இரண்டு நாளைக்கும் திருச்சாப்பூருக்கு ஒரு நாளைக்குமாய் இராத்திரிகாலங்களில் வரப்பட்ட வாய்க்கால் ஜலத்தை வீதபிரகாரம் பாச்சிவருகிற வழக்கம் என்கிறதாய் தஸ்தாவேஜுகள் மூலியமாய் தெரியவருகிறதுமல்லாமல் மாமூல்படிக்கே ஷை கார்கூனும் ஜலம் பாச்சிக்கொள்ளும்படியாய் உத்திரவு குடுத்திருக்கிறதாய் காணப்படுகிறபடியினாலே இது சங்கதி விசாரணையில் வாங்கலான தஸ்தாவேசுகள் 9 யும் இதிலடக்கமாய் அனுப்பிவிச்சிருக்கிறதை சுலாவணியாகும்போது சித்தத்துக்கு விசிதமாகும். உத்திரவுபடி ஷை கார்கூன் சேஷய்யங்காரையும் சஸ்பெண்டு செய்து அசூருக்கு அனுப்பியிருக்கிற சங்கதி சித்தத்துக்கு தெரியலாவதாய் எழுதிக்கொண்டேன்.

1834-ஷை எப்பிரல்மீ 29உ, குளித்தலை. (ஒப்பம்) ஆதியப்ப செட்டி, தாசில்தார்.

No. 4.

1834-ஹு மேமீ 7உ யுள்ள 170-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு ஆக்டிங்கு கலெக்டருகிய மகா-ரா-ரா-ஸ்ரீ மெஸ்தர் டப்பிளியூ எஸ் பாபிங்கட்டன் துரையவர்கள் சமுகூமத்துக்கு விட்டுச்கட்டி தாலூகா தாசில் ஆதியப்ப செட்டி மிகவும் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் இந்த தாலூகா பொய்யாமணி கிருமத்தார்க்கும் திருச்சாப்பூர் கிருமத்துக்கும் தண்ணீர் பாயப்பட்டதில் தகரார் நேரிட்ட சங்கதியைக் குறித்து உத்திரவுபடி மாமூல் விசாரித்து தஸ்தாவேசுப் பார்க்கும்போது திருச்சாப்பூர் கிருமத்தாரில்தானே வெங்கிட ருமப்யா முதலானவர்கள் ஒரு விதமாயும் வெங்கிடபெருமாள ஞயக்சன் வகைரு பேர்கள் ஒருவிதமாயும் சொல்லியிருக்கிறதாய்க் காணப்படுகிறது என்றும் அப்படி சொனனவர்களில் வெங்கிட ருயர் முதலானவர்களுக்கு பொய்யாமணி கிருமத்தில் குடித்தனம் இருக்கிறதாவென்று விசாரித்து அரிக்கை செய்யச்சொல்லியும் பின்னும் பொய்யாமணி கிருமத்து பேரீஜும் திருச்சாப்பூர் கிருமதது பேரீஜும் கொஞ்சம ஏறக்குறைய சரியாயிருக்க திருச்சாப்பூர் கிருமத்துக்கு ஒரு நாள் ஜலம் எவ்விதமாய் போறும் என்றும அந்த கிருமததுக்கு இன்னம் வேறு தண்ணீர் ஆசராவுண்டா யென்கிறதாய் விசாரித்து அரிக்கை செய்யும்படியாயும் நாளது மாசம் 3உ சாதரான 163-நி. பர்வாணு வந்துசேர்ந்தது.

அதுகாரியத்துச்கு ஷெ சங்கதிகளைக்குறித்து தாலூகா எட்ஞட்டு கணக்கு சேஷய்யனை கணக்கு மூலியமாய் விசாரிக்குமிடத்தில் முதலாவது பொய்யாமணி கிருமத்தில் வெங்கிடரூயருசகு டங்கு இரண்டே அரைக்கால், அண்ணாத்துரை அய்யங்காருக்கு பங்கு ஆறரை, அண்ணாத்துரை அய்யனுக்கு பங்கு ஆறே காலேயரைக்கால், கோபாலய்யனுக்கு பங்கு மூப்பத்து மூன்றரையே வீசம், இந்தப்படி பங்கு இருககிறதாய் தெரியவருகிறதுந் தவிர திருச்சாப்பூர் கிருமத்திலும் வெங்கிட ருயருக்கு பங்கு அஞ்சே காலே அரைக்கால், அண்ணாத்துரை அய்யனுக்கு பங்கு மூன்றேமுக்காலே மூன்றுவீசம், இந்த இருவருக்கும் இருக்கிறதாய் தெரியவருகிறது.

ஷெ இரண்டு கிருமத்து பேரீஜும் கொஞ்சம் ஏறக்குறைய சரியாயிருக்கிறதில் ஒருநாளை ஜலம் திருச்சாப்பூர் கிருமத்துக்கு எவ்விதமாய் போறும் என்றும் வேறே தண்ணீர் ஆசராயிருக்கிதா வென்றும் உத்திரவில் கண்டு வந்திருக்கிற காரியத்துக்கு,

பொய்யாமணி கிருமம் நாளது பசலி டேரீஜ் ரூ-2801-15-8, திருச்சாப்பூர் நாளது பசலி பேரீஜ் ரூ-1576-6-6, இந்தப்படி கொஞ்சம் ஏறக்குறைய பொய்யாமணி இரண்டு பங்கு டேரீஜும் திருச்சாப்பூர் ஒரு பங்கு பேரீஜுமாய் இருக்கிறதே தவிர வேறில்லை. பின்னும் ஷெ கிருமங்களுக்கு தகரார் நேரிட்டிருக்கிற வாய்க்காலை தவிர வேறே தண்ணீர் ஆசருவும் இல்லை என்கிறதாய் கச்சேரி கணக்கு மூலியமாய் தெரியவருகிறபடியினாலே இதுசங்கதி சமுகூமத்துக்கு தெரியலாவதாக எழுதிக்கொண்டேன்.

1830-ஹு மேமீ 7உ,
மு. குளித்தலை, } (ஒப்பம்) ஆதியப்ப செட்டி,
தாசில்தார்.

No. 5.

1835-ஹு அக்டோபர்மீ 2உ 381-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்ட்டர் ஆகிய மே. ஹென்றி மார்ட்டின் பிளேர் துரையவர்கள் சமுகத்துக்கு.

துறையூர் தாலூகா தாசில்தார் கோவிந்தராவ் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் திருத்தலையூர் கிருமத்து ஏரியில் இருந்து புதுப்பட்டி கிருமத்தான் தட்டு நேரிடும்போது ஜலம் கொண்டுபோகவேண்டியதாயிருக்க அதற்கு விரோதமாய் தங்கள் ஏரி ஜலத்தை வீணாய் கொண்டுபோகிறதாய் ஷெ திருத்தலையூர் கோனேரி அய்யன் வகையருபேர் அசூரில் கொடுத்த பெட்டிஷனை அனுப்பியிருக்கிறதென்றும் அவவிடத்துப்போய் அதைப்பார்த்து புதுப்பட்டி சாகுப்படிக்காக இந்த ஏரி ஜலம் தேவையாயிருக்கிறதா அல்லது வீணாய் கொண்டுபோகிறார்களா இது விவரம் அறிக்கை செய்யும்படியாய் ஆகஸ்டுமீ 31-ம்உயில் 36-வது நி நவாணு சாதருகி வந்திருக்கிறது.

அது காரியத்துக்கு ஷெ திருத்தலையூர் பெரிய ஏரி கீழ்க்கடைக்காலில் முன் புறத்து செங்கல் சுவர் கட்டாமல் இருக்கையில் கடைக்கால் குண்டாங்கல்லுக்கு மேல்கிருப் பத்துறலைகட்டி இருந்ததில் அந்த இடுக்கு வழியாய் கசிவு ஜலம் வந்து புதுப்பட்டி தோட்டக்கால் நிலத்துக்கு பாஞ்சுக்கொண்டிருந்ததில் 41-ம் பசலியில் திரணைக்கட்டு வேலை நடந்ததுந்தவிர ஷெ 41, 42. இரண்டு பசலியில் நல்ல மழையில்லாததினாலே ஷெ தோட்டக்காலுக்கு ஆசருவாயிருக்கப்பட்ட கேணிகளிலும் ஜலத்தட்டு நேரிட்டு பயிர் காச்சல் கொடுத்த நிமித்தம் புதுப்பட்டி கிருமத்தார் அசூரிலும் பிராது சொல்லிக்கொண்டு மாஜி தாசில் றெங்கராயருமபிதவியும் பார்த்ததிலும் அப்போது பயிர் காச்சலாயிருந்ததைப்பற்றி அதற்கு ஒரு ஜதைத்தாதாவு செய்து கொடுக்காதவரையில் தோட்டத்துக்கு பயிர் கம்மிசெய்யவேண்டியதாய் நேரிட்டபடியால் ஷெ திருத்தலையூர் பெரிய ஏரி கீழ்கடை காலில் அரைச்சால் ஜலம் போகும்படியாய் ஒரு கெண்டிகை வச்சு கொடுக்கவேணும் என்று 1834-ஹு பிப்ரவரிமீ 23-ம்உயில் 60-வது நி அர்ஜி எழுதிக்கொண்டதற்கு இஞ்சினீர் மெஸ்தர் காட்டன் துரையவர்கள் ஷெ 34-ம் வருஷம் ஏப்பிரல்மீ முதல் தேதியில் ஷெ புதுப்பட்டி கிருமத்துக்கு வந்து இருந்த இடத்தில் பிதவியும் உத்திரவுப்படி போயிருக்கும்போது புதுப்பட்டி தோட்ட நிலங்களும் கேணி முதலானதும் திருத்தலையூர் பெரிய ஏரியும் சுத்திப்பார்த்து ஷெ இரண்டு கிருமத்தாரையும் வரவழைத்து விசாரித்ததில் புதுப்பட்டி கிருமத்தான் திருத்தலையூர் ஏரியிலிருந்து தனக்கு ஜலம் வரும்படி சாலகம் வச்சு கொடுக்கவேணும் என்றும் திருத்தலையூர் கிருமத்தான் ஏரி ஜலம் கசிவு எறங்காமல் நஞ்சைக்கு உபயோகமாக வேண்டியதற்காக மைத்த கிருமங்களின் ஏரிகளுக்கு கடைகால் முன் புறத்தில் தொரணை கட்டியிருக்கிற ஒப்பந்தம் தன் கிருமத்துக்கும் கட்டியிருக்கிறதாகவும் ஷெ ஏரி கசிவு ஜலம் போகப்பட்ட ஓடையில் இரண்டு மூன்று அணைப்போட்டு புதுப்பட்டி கிருமத்தானுக்கு ஜலம் பாஞ்சு வருகிறது என்றும் அது தவிர இபபோது கட்டியிருக்கிற கடை கால் திரணையில் சாலகம் வச்சு கொடுக்ககூடாதென்றும் சொல்லிக்கொண்டதின்பேரில் திருத்தலையூர் நஞ்சைக்கு ஜலத்தட்டு வராமல் ஏரிக்கு மராமத்து செய்துகொக்டுகிறதாயும் புதுப்பட்டி கிருமத்து தோட்டங்களுக்கு நட நீர்பாய அணை முதலான ஆசரு உள்ளதுபோக மற்ற $16\frac{1}{2}$-காணிக்கு நட்நீர் பாயும்படிக்கு அந்த நிலத்துக்கு கீழ் புறம் இருக்கிற சிய்யாகொளம் என்கப்பட்டதற்கு மராமத்து செய்கிறதாயும் ஷெ சிய்யா கொளத்துக்கு ஜலம் வருகிற வரையில் புதுப்பட்டி தோட்டக்கால் நிலங்களுக்கு காச்சல் நேரிடாமல் திருத்தலையூர் ஏரியிலிருந்து கொஞ்சம் ஜலம்போகவேணுமென்றும் உத்திரவு கொடுத்துப்போட்டு போனார்கள்.

அப்பால் ஷெ கடைகாலில் ஜாதியடியால் ஒரு அடி உயரம் 3-அங்குல அகலத்துக்கு செண்டி கை வச்சு கொடுக்கும்படியாய் ஷெ வருஷம் ஷெ மாசம் 8-ம்உயில் மெஸ்தர் பாபிங்டன் துரையவர்களுடைய

80-வது நி. பர்வாணு சாதருகி வந்து அந்தப்படி ஷை ஏரி கடைகாலில் செண்டிகை வைத்து கொடுத்ததின் பிறகு அந்த செண்டிகை வழியாய் அதிக ஜலம் போகிறதினாலே தங்கள் நஞ்சைக்கு சாவி தட்டுமென்று திருத்தலையூர் கிருமத்தான் ஷை உருஷம் நவம்பர் ௴ 27-ம் ௳ யில் வந்து சொல்லிக்கொண்ட மூலியமாய் பிதவி போய்பார்த்ததில் அந்தப்படி 8-சால் ஜலம் வாயில் போய்க்கொண்டிருந்ததைப்பற்றி ஷை புதுப்பட்டி கிருமத்தாரை வரவழைத்து தோட்டக்கால்களுக்கு சேணி ஜலமும் இறைத்துப்போருதுபோனால் அப்போது அதற்கு உதவியாய் சாலகம் வழியாய் ஜலம் கொண்டுபோகவேணுமே யல்லாது அதிக ஜலத்தைக்கொண்டுபோய் களிவு இறைக்கக்கூடாதென்று தாக்கீது செய்ததில் பகல்மட்டும் சாலகம் வழியாய் ஜலம் வந்தால்போதும் ருத்சரி வரவேண்டியதில்லை என்று வாக்குமூலம் கொடுத்து அந்தப்படி நடந்துகொள்ளும்படி திட்டம் செய்திருந்தேன்.

இப்போது சமுகத்திலிருந்து உத்திரவு சாதரானதின்பேரில் போன செப்டம்பர் ௴ 21-ம் ௳ யில் கிருமத்து சாகுபடி திட்டத்துக்காக பிதவி போயிருக்கும்போது ஆதனூர் வகையரு 5-கிருமத்து மகா ஜனம் குடிகளையனுப்பி ஷை புதுப்பட்டி கிருமத்து தோட்டக்காலுக்கு முக்கிய ஆசராவான சேணி, அணைமுதலானதும் திருத்தலையூர் ஏரி கடைகாலில் விட்டிருக்கிற சாலகம் வழியாய் ஜலம் போகப்பட்டதையும் பார்த்து திருத்தலையூர் ஏரி கடைகால் ஜலம் புதுப்பட்டி தோட்டக்கால் நிலங்களுக்கு அதிகமாயிருக்கிறதா அல்லது வீணாய்க்கொண்டு போகிறார்களா அது விவரம் தெரியப்படுத்திச்சொல்லி திட்டம் செய்ததில் புதுப்பட்டி தோட்டக்கால் நிலங்களுக்கு சேணி, அணைமுதலான ஜலத்து ஆசரு செம்மையாய் இருப்பதினாலே இப்போது திருத்தலையூர் ஏரி கடைகால் ஜலம் அகத்தியம் இல்லாமல் இருக்க வீணாய்க்கொண்டு போகிறதாய் சொல்லி மஜர் நாமா கொடுத்தார்கள்.

பிதவியும் ஷை புதுப்பட்டி தோட்டக்கால் நிலங்களையும் அதுக்குள்ள சேணி அணைமுதலான ஜலம் ஆசருவும் போய்ப்பார்த்ததில்.

ஷை புதுப்பட்டி ஒரு போகம் இருபோகம் உள்பட தோட்ட திட்டம் காணி 47-ல் சேணி ஆசருவும் ஓடையில் அணை போட்டிருக்கிறதில் நடநீர் ஆசருவும் இருக்கப்பட்ட காணி முப்பதனாய வீசம போக மத்த 162-காணிக்கு இருக்கிற 10-சேணியில் முன்னால் ஜலத்தட்டு நேரிட்டதைப்பற்றி திருத்தலையூர் ஏரி கடைகாலில் சாலகம் வழியாய் நடநீர் பாஞ்ச நிலத்துக்கு நடநீர் பாயவேண்டியதற்காக நாளது வருஷத்தில் ரூ 74-11/16-க்கு கல் கட்டு மண்வெட்டு முதலான வேலை நடந்திருக்கிற ஷை புதுப்பட்டி சிப்யாகொளம்மென்கிற ஏரியிலும் ஜலம் இருக்கிறதும் தவிர அந்த 16½-காணி தோட்டத்துக்கு இறைத்துப்பாச்சப்பட்ட சேணிகளிலும் சமர்த்தியாய் ஜலம் இருக்கிறது.

அப்படிக்கிருக்க இந்த தருணத்தில் சேணியில் இறைத்து பாச்சாமல் வீண் ஜலம் கொண்டுபோக வேண்டியது என்னவென்று ஷை புதுப்பட்டி கிருமத்தாருகிய நல்லதம்பிக் கவுண்டன் வகையருபேர்களை வரவழைத்து கேட்டதற்கு இப்போது மருமத்து செய்திருக்கிற ஷை புதுப்பட்டி ஏரியில் ஜலம் வந்து பாஞ்சகொண்டு இருக்கிற வரையில் திருத்தலையூர் ஏரி கடைகால் ஜலம் தேவையில்லை என்றும அந்த ஏரியில் ஜலம் இல்லாத தருணத்தில 15-நாளிகை தண்ணிவிட்டால்போதும என்றும் சொல்லி வாக்குமூலம் கொடுத்தார்கள்.

ஆனால் அந்த 16-காணி நிலத்துக்கு நடநீர் பாயப்பட்ட புதுப்பட்டி ஏரியிலும் ஜலம் இல்லாதிருந்து இறைத்துப்பாச்சப்பட்ட சேணிகளிலும் ஜலத்தட்டு நேரிடும்போது புதுப்பட்டி கிருமத்தான் இப்போது கேட்டிருக்கிறபடிக்கு நாள் 1-க்கு 15-நாளிகை தண்ணீர் திருத்தலையூர் ஏரி சாலகம் வழியாய் முன் உத்திரவுப்படி விட்டு பாச்சப்பட்டது விகிதமான காரியமாயிருக்கிறதே யல்லாமல் இப்போது ஏனியில் புதுப்பட்டி கிருமத்தானுடைய வாக்குமூலத்தினாலேயும் பிதவிபோய் சுத்தி பார்த்ததிலும் புதுப்பட்டி ஏரிக்கு ஜலமும் வந்து கொண்டிருக்கிறதும் தவிர போன வருஷம் நாளது வருஷம் வருஷ சமதையினாலே அந்த 10-சேணியிலும் சமர்த்தியாய் ஷை. புதுப்பட்டி தோட்ட நிலம் சாகுப்படிக்கு தேவையான ஜலம் இருக்கிற இந்த தருணத்திலும் ஷை புதுப்பட்டி தோட்டம் சாகுபடிக்காக திருத்தலையூர் ஏரி ஜலம் கொண்டுபோகப் பட்டது அகத்தியம் இல்லாதாயிருக்க வீணாய்க்கொண்டு போகிறதாய் காணப்படுகிற விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

இது சங்கதியில் ஆதனூர் வகையரு கிருமத்தார் கொடுத்த மஜர் நாமா புதுப்பட்டியான் கொடுத்த வாக்குமூலம் 1, அசல் பிடிஷன் 1, ஆக 3, இதல் அடக்கமாய் சமுகத்திற்கு அனுபவித்திருக்கிறேன்.

1835-ம் ௵ அக்டோபர் ௴ 2௳. (ஒப்பம்.) கோவிந்த ருவ்,

(மாராஷட்டதில்) தாசில்தார்.

No. 6.

1835 ௵ அக்டோபர் ௴ 19௳ யுள்ள 403-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்டருகிய மகா-ா-ா-ஸ்ரீ-மேஸ்தர் ஹென்ரி மார்ட்டின்பிளேர் துரையவர்கள் சமுகத்துக்கு.

துறையூர் தாலூகா தாசில் கோவிந்தருவ் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி என்னவென்றால்.

நெய்குப்பை கிருமத்தான் புஞ்சை நிலத்துக்கு மாமூலுக்கு விரோதமாய் லாலுகுடி தாலூகா நத்தரேலா வாய்க்காலில் கண்ணிகளும் துலைகளும் வச்சு ஜலம் பாச்சிக்கொள்ளுகிறதினால் அனந்தனூர் கிராமத்து நஞ்சை நிலங்களுக்கு ஜலம் கட்டு நேரிடுகிறதாய் அந்த தாலூகா தாசில்தார் ரிபோர்ட்டு செய்திருக்கிறதாயும அதுக்காக முன் அனுப்பிய உத்திரவுபடிக்கு ஏன தாக்கீது செய்யவில்லை என்னும மாமூலுக்கு விரோதமாய் புஞ்சை நிலங்களுக்கு ஜலம் இறைக்காமல் இருக்கும்படிக்கு திட்டம் செய்யச்சொல்லியும், அப்படிக்கு அந்த வாய்க்கால் ஜலத்தை நெய்குப்பை கிராமத்தான் பாச்சிக்கொள்ளுகிறதுக்காக நஞ்சைதீரவை ஏதாவது குடுத்து வாருகிறானென்றும் முசாந்திரம அறிவிக்கும்படியாய் நாளது ௴ 16௳ யில் சாதருன 364-வது நி. பரவானு 17௳ யில் வந்துசேர்ந்தது.

அதுகாரியத்துக்கு ஷை நத்தரேலா வாய்க்கால் ஜலத்தை மாமூலுக்கு விரோதமாய் நெய்குப்பை கிருமத்தான் துலைமுதலானது வைத்து பாச்சாமலிருக்கும்படி திட்டம்செய்யச்சொல்லி ஆகஸ்டு ௴ 22௳ யில் 204 நி. பரவானு சாதருகி வந்தவுடனே அந்தப்படி ஜாக்கிறதை செய்யும்படியாய ஷை மாகாணம் விசாரணை போலீஸ் அமீனா ருமருயர் பேருக்கு கடுதாசி எழுதி அனுப்பி திட்டபபடுத்தி யிருக்கிறேனே யல்லது அதற்காக ஜாக்கிறதை செய்யாமல் இருந்ததில்லை.

ஷை லாலுகுடி தாசில்தார் இந்த நெய்குப்பை கிராமத்தில் கம்மிதீர்வையான கேவலம் புஞ்சை நிலத்துக்கு மாமூலுக்கு விரோதமாய் ஷை நத்தரேலா வாய்க்கால் ஜலத்தை பாச்சிக்கொள்ளுகிற பாவனையாய் சமுகத்துக்கு அர்ஜி எழுதியிருக்கிறதாய் இப்போது வந்த உத்திரவினாலே தோணப்படுகிறது.

ஷை நத்தரேலா வாய்க்காலில் இந்த தாலூகா வளவனூர், ரெத்தினங்குடி, புத்தூர், உத்தமத்தூர், நெய்குப்பை இந்த வகையரு கிராமங்கள் பாச்சலுக்காக மாமூலாய் குமுளிகண்ணிவாய்க்கால் ஏற்பட்டு வாஸ்தவத்து நஞ்சை, நஞ்சைதரம் புஞ்சை நிலங்களும் தொலைகள்வச்சு தோட்ட நிலங்களும் இந்தப்படி ஷை பாச்சலினாலே சாகுபடியாகி வருகிறது.

இந்த நெய்குப்பை கிராமத்திலும் நஞ்சை முதலடியால் கா. 180, தாளடியில் கா. முப்பத்தி ஒண்ணரை அறைக்காலே அரைவீசம் தோட்டத்தில் கா. நாற்பத்தொண்ணறையேவீசம், ஆக முதலடியில் கா. இருநூத்தி இருவத்தி ஒண்ணறையேவீசம் தாளடியில் கா. முப்பத்தி ஒண்ணறையே அறைக்காலே அரைவீசம் இந்தப்படி யேற்பட்டு அதற்கு ரூ 1452-9-3 நெடுகிலும் பேரீஜ கூடுதலாகிவருகிறது.

ஷெ வாறபத்து தோட்ட நிலங்களுக்கு ஷெ வாய்க்கால் ஆஜரூவேயல்லாது வேறே பாச்சலுக்கு ஏரி குளம் முதலானது கிடையாது.

அதற்காக விட்டிருக்கிற 2-குமுளியில் ஒரு குமுளி சிகஸ்தாய்போய் இஞ்சினீர் துரையவர்களும் வந்துபார்த்து அதை பிரிச்சுகட்ட ரூ 71-12-6 க்கும் வாய்க்கால் வெட்டுக்கு ரூ 10-2-0 க்கும் இந்தப்படி ரூ 81-14-6 க்கும் எஸ்டிமேட்டு யேற்பட்டு குமுளிவேலை பூருவாய் நடந்திருக்கிறது.

ஷெ குமுளி கண்ணிதலை முதலானது மாமூலாய் ஏற்பட்டதேயல்லாது நூதனமாய் இப்போது உண்டானதல்ல.

அதற்கு திருஷ்டாந்தமாய் ஷெ வாய்க்கால் ஜலத்தட்டு நேரிடும்போது தலைவில் கொரம்புகட்டி ஜலம் இருப்பவும் வாய்க்கால் வெட்டவும் ஷெ வாய்க்கால் பாச்சல் மைத்த கிருமத்து ஆள்கள் போகப்பட்ட வீதப்படிக்கு இந்த நெய்குப்பை வகையரு கிருமத்து ஆள்களும் போய்வருகிறார்கள்.

ஷெ அனந்தனூர் அம்மயப்பன் பட்டவர்த்திக்கு இந்த நெய்குப்பை வகையரு கிருமம் மெத்த சமீபமானதினாலே அதில் விஸ்தாரமாய் இவாள் சாகுபடி செய்துவருகிறதைப்பற்றி ஒருவருக்கொருவர் ஏதோ மாச்சரியப்பட்டு அந்த தாலூகா குடிகள் அவ்விடத்திலும் இவவிடத்திய குடிகள் போலீஸ் அமீனா இடத்திலும் பிருது குடுத்து இவருடைய சம்மனுக்கு அந்த குடிகள் ஆஜராகாமல் அவ்விடத்திய சமமசில் பேர் தெரியாதரூபம் தெரிந்தவர்களென்று போட்டு நேர்ந்தபடி இந்த நெய்குப்பை குடிகளை பிடிக்கிறதினாலே சாகுபடி காரியத்துக்கு குந்தகமாயிருக்கிறதென்றும் நாம்போய் பார்த்ததிலும் ஷெ நெய்குப்பை கிருமத்தான் சாகுபடிசெய்த நிலத்துக்கு மாமூலாய் வரப்பட்ட வாய்க்காலை அனந்தநல்லூர் கிருமத்தான் தூத்துபோட்டு இவனுடைய சாகுபடி வயலின்பேரில் நூதனமாய் வாய்க்காலை புதுசாய்வெட்டி தாராகிருதம் செய்திருக்கிறதாகவும் இது சங்கதி அருூசகு தெரியப்படுத்தி ஷெ அனந்தனூர் கிராமத்தானை மாமூல்படி வாய்க்காலை வெட்டிவிடும்படி திட்டப்படுத்தவேணுமென்று போலீஸ் அமீனா ருமரூயர் நாளதுமீ 12உ யில் கடுதாசி எழுதி அனுப்பிவிச்சிருக்கிறபடியினாலே அந்த பஜினசு காகிதத்தை இதில் அடக்கமாய் சமூகத்துக்கு அனுப்பிவித்திருக்கிறேன்.

பிதவி லாலுகுடி தாலூகாவில் இருக்கும்போது அப்போது ஷெ நத்தரூலா வாய்க்காலில் இந்த நெய்குப்பை வகையரு பாச்சலுக்காக வைத்திருந்த தலைகண்ணி முதலானது பிதவி பார்க்கப்பட்டிருக்கிறபடியினாலே இப்போது பிதவி சேனப்பனூர் ஏரி ஒடைப்பு அடைப்பின்பேரில் இருக்கிறதைப்பற்றி தீர்ந்தவுடனே அந்த மாகாணம் சாகுபடி தறியாபத்துக்காக போகும்போது ஷெ ஜாகாவைப் போய்பார்த்து அந்த அனந்தனல்லூர் கிருமத்தானுக்கு மேவுதலைபண்ணி மாமூலுக்கு விரோதமல்லாமலும் ஒருவரும் மாச்சரியத்தினாலே வீணாய் சச்சரவு படாமலிருக்குமபடியாயும் திட்டம்செய்து அறிக்கைசெய்யவேணுமென்று இருந்த காரியமேயல்லாது வேறில்லை.

இப்படி நெய்குப்பை ஒரு கிருமத்தில் மட்டும் ரூ 1452-9-0 நஞ்சை பேரீஜ் யேற்பாடாகி வந்துகொண்டு வருஷாவருஷம் ஜமாபந்தி ரிபோர்ட்டு முதலானதுகளிலும் தாக்கலாகி வந்திருக்கப்பட்ட காரியத்துக்கு நூதனமாய் நெய்குப்பை கிருமத்தான மாமூலுக்கு விரோதமாய் ஜலம கொண்டுபோகப்பட்டது நிஜமாயிருந்தால் நத்தரூலா வாக்காலில் இந்த நெய்குப்பை வகையரு கிருமத்துக்காக மாமூலாய் இத்தனை குமுளி இத்தனை கண்ணி வாய்க்கால் இத்தனை தலையென்றும் இப்போது நூதனமாய் இன்ன இடத்தில் நெய்குப்பை கிருமத்தான் இத்தனை தலை அல்லது இத்தனை கண்ணிவாய்க்கால்வரையில்வச்சு ஜலம் கொண்டுபோகிறதாய் எழுதினால் அதைப்பார்த்து நிறுத்திபோடலாம்.

அப்படிக்கில்லாமல் நெய்குப்பை கிருமத்து சாகுபடி நிலத்துக்கு அனந்தனூரான் ஜலம் விடாமல் ஒருவருக்கொருவர் சச்சரவுபட்டு வந்திருக்கிற பிருதுனாலே தானே மாமூல் இல்லாத நெய்குப்பை கிருமத்தான் ஏதோ புஞ்சை நிலத்துக்கு ஜலம் பாச்சுகிறதாய் லாலுகுடி தாசில்தார் என்னகாரணத்தினாலோ அறிக்கைசெய்திருக்கிறாரோ தெரியவில்லை.

ஆகிலும் சமுகத்தில் இருந்து பிறந்துவந்திருக்கிற உத்திரவுபடிக்கு மாமூலுக்கு விரோதமாய் புஞ்சை நிலத்துக்கு வீணாய் ஜலம் கொண்டுபோய் பாச்சாமலிருக்கும்படி தாக்கீதுசெய்ய போலீஸ் அமீனா ருமரூயருக்கு கடுதாசி எழுதி அனுப்பிவிச்சிருக்கிறேன்.

ஷெ அமீனாவின் கடுதாசியில் கண்டிருக்கிறபடிக்கு நெய்குப்பை கிராமத்து நஞ்சை நிலத்துக்கு அனந்தனூரான் மாமூல்படி ஜலம்விடதசுரூர் செய்யாமலிருக்கும்படி கிருமத்தானுக்கு தாக்கீது செய்யச்சொல்லியும் பின்னும இந்த தாலூகாவிலிருந்து ஏதாவது விசாரணைக்கு நபர் வரவேண்டியிருந்தால் காய்தாப்படிக்கு இந்த தாலூகாவுக்கு தெரியப்படுத்தி நபர்களை வரவழைத்துக் கொள்ளும்படியாயும் ஷெ லாலுகுடி தாசில்தார் பேருக்கு உத்திரவு ஆகவேண்டிய சங்கதி விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

1835 ஹு அக்டோபர் மீ 19உ, முசிறி. துறையூர். (ஒப்பம்) (மாராஷ்டத்தில்) கோவிந்தராவ், தாசில்தார்.

No. 7.

1836-ஹு ஜூலை மீ 29உ 389-நெ.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு சலெக்ட்டர் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் ஹென்றி மார்ட்டின் பிளேர் துரையவர்கள் சமுகத்துக்கு.

கோனாடு தாலூகா தாசில் வெங்கிட்ட ராவ் வணக்கத்துடன சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் ஷெ தாலூகா இலுப்பூர் மாங்குடிக்குளம் சாகுபடி செய்யப்பட்ட பரிமணம்பிள்ளை என்பவன் ஷெ குளத்துக்கு வழக்கமாய் ஜலம வரப்பட்டவாரிகளை ஷெ யூர் பாப்பாங்குளம் சாகுபடி செய்யப்பட்ட குடிகள் துருகிருதமாயும் நூதனமாய் குறுக்கே அணைபோட்டு அடைச்சு இருக்கிறதாயும் ஷெ மாங்குடி குளத்துக்கு ஜலம் வருகிறதற்கு வேறே யேது இல்லாமல் சாகுபடி குந்தகமாயிருக்கிறதென்று என்னிடத்தில் பியவஷா கொடுத்ததற்சாக ஷெ இலுப்பூர் வட்டம பேஷ்கார் ஷெ ஜாகாவை கண்பார்த்து நூதனமாயும் துருகிருதமாயும் அணைபோட்டிருந்தால் அதை வெட்டி மாமூல்படி ஜலம் பாயும்படி ஜாக்கிரதை செய்யசசொல்லி தாக்கீது அனுப்பிவிச்சு இருந்த இடத்தில்.

ஷை பேஷ்கார் ஷை ஜாகாவை கண்பார்த்து ஷை மாங்குடி கோணவயல் முன்னாலே சாகுபடி செய்து வந்த அனுபோகஸ்தர்களாகிய பிச்சுக்குட்டி அம்பலகாரன் 1 குமறன் அம்பலகாரன் 1 சிட்டனம்பலகாரன 1 இவர்களை வரவழைத்து நடந்து வந்த வழக்கத்தைக்குறித்து கேட்டதில் ஷை பாப்பாங்குடி தொளம் கலிங்கல் கீழ்புறமாய் வேலான் கண்ணு வனாக்கும் இருபது அடி நீளம ஐந்தாறு வருஷத்துக்கு முன்னே ஷை குளம் சாகுபடி செய்யப்பட்ட குடிகள் தருகிருதமாய் கரைபோகும்போது தாங்கள் தடங்கல்படுத்தினதாயும் இந்த வருஷம் நூதனமாய் ஷை வேலாங்கண்ணு முதல சாலைக்கு கிழக்கு 300-அடி நீளம் வரையில் கரைபோட்டிருந்ததாயம் ஷை பாப்பாங்குளம் மேலக்கால் வாயிக்கு அடுத்த கூட்ட புளியமரத்துக்கு தென்புறம் வரப்பட்ட வாரி ஜலம் பாப்பாங்குளத்துக்கு போகப்பட்ட வழக்கம் என்றும் ஷை கூட்ட புளிக்கு வடபுறம் வரப்பட்ட வாரி ஜலம் மாங்குடி குளத்துக்கு வரப்பட்ட வழக்கம என்றும் அந்த இடத்தில அணை போடப்பட்ட வழக்கம் இல்லையென்று வாக்குமூலம் கொடுத்ததாயும் ஷை இரண்டு ஜாகாவிலும் நூதனமாய் கரைபோட்டிருக்கிறதாயும் ஷை நூதின கரையை எடுக்க வீண தகரார் செய்கிறதாய் ஷை பேஷ்கார் சாட்சிகளிடத்தில் வாங்கின வாக்குமூல பிளானுடன் ரிப்போர்ட்டு செய்தான.

அப்படி தகரார்செய்யப்பட்ட குடிகளையும் சாட்சிகளையும் கூட்டி அனுப்பச்சொல்லி பேஷ்காருக்கு தாக்கீது அனுப்பிவிச்சதில் ஷை குடிகள் ஆஜராகவில்லையென்று சாட்சி இரண்டுபேரை அனுப்பிவிச்சான். அவர்களை கேட்டதில் மாங்குடி குளத்துக்கு வரப்பட்ட வாரியை நூதனமாய் அடைச்சு இருக்கிறதாயும் பேஷ்காரிடத்தில் வாக்குமூலம் கொடுத்து இருக்கிறது சரிதான என்றும் சொல்லி வாக்குமூலம் குடுத்தார்கள்.

இதின்பேரில் பார்க்கும்போது ஷை மாங்குடி குளத்துக்கு வரப்பட்ட வாரி ஜலத்தை நூதனமாய் அடைச்சு இருக்கிறதாய் காணப்படுகிறபடியினால் நூதனமாய்ப்போட்டு இருக்கிற கரையை எடுத்துப்போட்டு மாமூல்படிக்கு வாரிஜலம் வந்து ஷை மாங்குடி குளம் சாகுபடியாக வேண்டியதாயிருக்கிறது.

ஆகையால் இது சங்கதியில் வாங்கின சாட்சி வாக்குமூலம் 3, பிருது 1, பிளான் 1, ஆக 5-ம் இதில் அடக்கமாய் அனுப்பிவிச்சியிருக்கிறேன். இது சங்கதி சமுகத்துக்கு விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன் உத்திரவு வருகிறபடி நடந்துகொள்ளுகிறேன்.

1836-ஞு ஜுலைமீ 29உ, மு. திருச்சினாப்பள்ளி.	(ஒப்பம்.) (மாராஷ்டத்தில்.)	வெங்கிட்ட ராவ், தாசில்தார்,

No. 8.

1836-ஞு அக்டோபர்மீ 27உ யுள்ள 591-நி

திருச்சினாப்பள்ளி சுபா வகையறு கலெக்டர் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ ஹென்றி மார்ட்டின் பிளேர் துரையவர்கள் சமுகஷமத்துக்கு கோனாடு தாலூகா தாசில்தார் கோவிந்த ருவ் வணக்கத்துடனே சலாம செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் இந்த தாலூகா சுரோத்திரியம் பெரிய கருப்பூர் அயன் சின்ன கருப்பூர் இந்த இரண்டு கிருமங்களுக்கும தகராரில்லாமல் தண்ணீர் பாய ஷை இரண்டு கிருமத்து வாய்க்காலில் சட்டை கட்டியிருக்கிறதில் சுரோத்திரியம் பெரிய கருப்பூர் வாய்க்காலில் கட்டியிருக்கிற சட்டையை பகலில் அடைத்து இரண்டு ஜாமம் வரையில் அயன் சின்ன கருப்பூர் மேட்டு நிலம் காணி 40-க்கும் பாச்சிக்கொண்டு அப்பால் பகல் மைத்த இரண்டு ஜாமமும், ராத்திரி முழுவதும் அந்த அடப்பை தறந்துவிட்டு பெரிய கருப்பூரைச்சேர்ந்த காணி-121¼ நிலத்துக்கு பாச்சும்படியாயும் சின்ன கருப்பூர் வாய்க்காலில் கட்டியிருக்கிற கட்டையை பகலில் ஒரு ஜாமம் வரையில் அடைத்து பெரிய கருப்பூர் மேட்டு நிலம் காணி 16-க்கும் பாச்சி பின்பு பகல் மூன்று ஜாமமும் ராத்திரியும் அடப்பை தறந்து சின்ன கருப்பூர் நிலங்களுக்கு பாச்சிக்கொள்ளும்படிக்கும் செய்தால் இரண்டு கிருமத்துக்கும் சாகுபடி நடந்துவருமென்று சூபரிண்டெண்டு ரிபோர்ட்டு செய்திருக்கிறபடிக்கு ஷை இரண்டு கிருமத்தாருக்கும் சம்மதியாவென்று கேட்டு முச்சலிக்கா வாங்கி ரிபோர்ட்டு செய்யச்சொல்லி அக்டோபர்மீ 7உ யில் சாதரான 771-நிர். பரவானா 8உ யில் வந்து சேர்ந்தது.

2. ஷை இரண்டு கிருமத்தாரையும் 9உ யில் வரவழைத்து பரவானாவில் கண்டுவந்திருக்கிற நிபந்தனைபடி ஜலம் பாச்சிக்கொள்ள சம்மதியாவென்று கேட்டதற்கு பெரிய கருப்பூர் கிருமத்துக்கு இரண்டு பங்கும் சின்ன கருப்பூருக்கு ஒரு பங்குமாய் ஜலம் பாச்சிக்கொண்டுவந்த வழக்கம் என்றும் தண்ணீர் தகரார் நேரிட்டபிறகு மாஜி தாசில்தார் இரண்டு வாய்க்காலையும் அடைத்து இரண்டு கிருமத்து மேட்டு நிலம் பாஞ்சதின்பேரில் பகல் முழுவதும் ஒரு கிருமமும் ராத்திரி முழுவதும் ஒரு கிருமமுமாக பாச்சிக்கொள்ளுகிறதென்று தீர்மானம் பண்ணினபடி கட்டை கட்டுகிறதற்கும் கிருமத்து சிலவு பாதிட்டணம தாங்கள் குடுத்திருக்கிறதையும் ஷை இரண்டு வாய்க்காலும் அடைத்து இரண்டு கிருமத்து மேட்டு நிலம் பாச்சினதின் பிறகு பேர்பாதியாய் தண்ணீர் பாச்சிக்கொள்ளும்படி உத்திரவானால் தங்களுக்கு சம்மதியென்றும அப்படிக்கில்லாமல் பரவானாவில் கண்டிருக்கிற வீதாசாரபடி ஜலம் பாச்சிக்கொள்ளுகிறதென்றால் ஜலம் சராகமாய் பாயமாட்டாது ஆகையால் தங்களுக்கு சம்மதியில்லையென்று பெரிய கருப்பூர் கிருமத்து மகா ஜனம் மன்னாரய்யன் வகையறு பேர்கள் குடுத்த வாக்குமூலம் 1. சின்ன கருப்பூர் கிராமத்து முருக பிள்ளை மகன் அப்பு பிள்ளை வகையறு பேர்கள் பெரிய கருப்பூர் வாய்க்காலில் மாரி நாளில் ஷை பெரிய கருப்பூருக்கு தண்ணீர் விடாமல் அணை போட்டு தங்கள் கிருமமாகிய சின்ன கருப்பூருக்கு பாச்சிவந்திருக்கிறதாயும் சின்ன கருப்பூர் வாய்க்காலில் பெரிய கருப்பூருக்கு ஜலம் விட்ட மாமூல் இல்லையென்றும் பரவானாவில் கண்டிருக்கிற விவரப்படிக்கு வீதமாய் ஜலம பாச்சிக்கொள்ள சம்மதியில்லை சர்க்காரில் இருந்து சேவுகரை வச்சு தங்கள் கிருமத்து நிலங்களுக்கு தட்டு இல்லாமல் ஜலம் அடைச்சுவிட்டு வந்தால் தாங்கள் சாகுபடி செய்கிறதாயும் சொல்லி எழுதிக்குடுத்த வாக்குமூலம் 1, ஆக வாக்குமூலம் 2-ம் இதில் அடக்கமாய் சமுகத்துக்கு அனுப்பிவிச்சு இருக்கிறது. சுலாவணியாசையால் சித்தத்துக்கு விசிதமாகும். இது மூலமாய் பார்க்கும்போது சின்ன கருப்பூர் கிராமத்தான் ஒரு மார்க்கத்திலும் ஒதுங்காமல் பெரிய கருப்பூர் கிருமத்துக்கு ஜலம் பாய்கிறதினால் தன கிருமத்தார் நிலங்களுக்கு தண்ணீர் தட்டுப்பட்டு பயிர்களுக்கு காச்சல் குடுத்ததென்றும் சாகுபடியாகாமல் தரிசுகெடந்து போச்சுதென்றும் வீண் தகரார் சொல்ல எத்தனப்பட்டுக்கொண்டு இருக்கிறவனாய் காணப்படுகிறதாகையால் சர்க்காரில் இருந்துதானே ஷை இரண்டு கிருமத்தில் சாகுபடியாகப்பட்ட நிலங்களுக்குதட்டு இலலாமல் ஜலம் பாயும்படிக்கான காலதிஷ்காருஷம் செய்து அந்தயிதப்படிக்கு அந்தந்த கிருமத்தான் பாச்சிக்கொள்ளுகிறதென்றும் அதற்கு

விரோதமாய் நடக்கப்பட்ட கிராமத்தானுக்கு தெண்டனை நடப்பிவிக்கப்படும் என்று கண்டிப்பான உத்திரவு பிறந்தால் ஒழிய ஷெ இரண்டு கிராமத்தானுடைய தண்ணீர் தகரார் தீரமாட்டாதென்பது விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

1836-வ அக்டோபர்மீ 27வ, மு. திருப்பிளாத்துறை. } (ஒப்பம்) (மாராஷ்டத்தில்) கோவிந்தராவ, தாசில்தார்.

No. 9.

1836வ நவம்பர்மீ 4வ யுள்ள 618-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்டருகிய மகா-ா-ா-ஸ்ரீ-மேஸ்தர் ஹென்ரி மார்ட்டின் பிளோர் துரையவர்கள் சமுகத்துக்கு.

கோனாடு தாலூகா தாசில் கோவிந்தராவ் மிகவும் வணக்கத்துடன் சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் ஷெ தாலூகா ஆலத்தூர் வகையரு கிராமத்துக்குடிகள் அசூரில் குடுத்த பிட்டிஷனை அனுப்பியிருக்கிறதென்றும் அதில் உய்யகொண்டானில் வருகிற ஜலத்தை கீழ்முகத்துக்கு விடாமல் மேல்முக கிராமத்தார் ருப்பகல் குளுமிகளை திறந்துகொண்டு போறதினாலே தங்கள் கிராமங்களுக்கு ஜலத்தாழ்வாகிறதாய் கண்டிருக்கிறதாகவும் மேல்முகம் கிராமத்தார் அப்படி நடக்கிறது ஞாயத்தப்பான காரியமென்றும், இனி மேல்முகம் கிராமத்தாருக்கும் தயின்சேவுகன் குளுமிசேவுகன் வகையரு பேர்களுக்கு கண்டிப்பாய் தாக்கீது செய்து மேல்முக கிராமவளிக் குழுமிகளை பகலில் திறக்காமலும் ராத்திரியில் திறந்துகொள்ளுகிறதில் அதிக ஜலம்கொண்டுபோகாமலும் அந்த ஜலம் பயிர்களுக்கு உபயோகமாகும்படியாயும் திட்டம் செய்து கீழ்முகம் கிராமங்களுக்கு ஜலத்தாழ்வு இல்லாமல் பாய்ந்து வரும்படி ஜாக்கிறதை செய்யச்சொல்லியும் ஷெ சங்கதியைக்குறித்து நாளது மீ 2வயில் பிறந்த 937-நி. சன்னதும் பிட்டிஷனும் சாதராச்சுது.

அதுகாரியத்துக்கு மழையில்லாமல் திருக்காவேரியில் அதிகமாய் வத்துக்குடுத்து ஜலத்தட்டாகி 1½ மாதமாச்சுது அதுமுதல் ருமவாய்த்தலை, எலந்தவாய்த்தலை, பேட்டைவாய்த்தலை, இந்த மூன்று குறம்பிலும் பிதிவிபோயிருந்து அந்தந்த குறம்புக்குத் தேவையான ஆள்க்களை அழைப்பிவித்து என்னனன விதங்களாய் வேலை நடப்பிவிக்கவேணுமோ அந்தப்படிக்கெல்லாம் நடப்பிவிச்சு அந்தந்த குறம்புகளில் ஜலம் திருப்பிவிட்டு ஜாக்கிறதைசெய்து வறப்பட்ட ஜலம் கிராமாந்திரங்களுக்கு பாஞ்சுவரப்பட்டதில் உய்யகொண்டானில் வரப்பட்ட ஜலம் கீள்முகம் கிராமங்களுக்குப்போய் பூருவாய் பாய்கிறதற்குப் போருதேனறு காணப்பட்டு அக்டோபர்மீ 21வ தாயித்துக்கிழமை முதல் 24வ புதன்கிழமை வரைக்கும் நாலு நாளைக்கு துரோபஸ்த்து குழுமிகளையும் ராத்திரிப்பகலாய் அடைத்து ஷெ உய்யகொண்டானில் வரப்பட்ட ஜலம் முழுவதும் கீள்முகம் ஆலத்தூர் கற்கண்டார்கோட்டை சோளமாதேவி முதலான கிராமங்களுக்கும் கூத்தப்பார் பெரியகுளம் செவந்தாகுளத்துக்கும் போகும்படியாய் ஜாக்கிறதைப்படுத்தினதும் தவிற அவ்விதத்தில் கீள்முகம் கூத்தப்பார் வகையரு கிராமங்களுக்கு ஜலம் பாஞ்சுவருகுமென்றும் எட்டு நாளைக்குள்ளாக மழை வருஷித்து மேல் ஜலம் வந்தால் ஜலத்தட்டு வறத்தக்கதில்லையென்றும் அப்படிக்கில்லாதவனாயில் மறுபடியும் மேலெழுதியபடி குளுமி அடைத்து ஜலம் விட வண்டியதாய் நேறிடுமென்றும் இதுமுதலான சங்கதியைக்குறித்து அக்டோபர்மீ 27வயில் 593-நி. அர்ஜி யெழுதி யிருக்கிறதினாலே விசிதமாயிருக்குமே.

அதற்கிப்பால் காவேரியில் ஜாஸ்தி ஜலம் வருகிறதற்கு யேதுகரமில்லாமல் நாளுக்குநாள் மேல்வத்து குடுத்து குறம்புகளிலும் ஜலத்தாள்வாகிக் கொண்டு வருகிறதினாலே மேல்கண்ட கீழ்முகம் கிராமங்களுக்கு காரியத்தாட்சியில்லாமல் ஜலம்போய் பாயவேண்டியதற்காக மருபடியும் யிப்போ குழுமியடைப்புக்கு உத்திரவுகொடுத்து ஜலம்போகும்படியாய் திட்டப்படுத்தவேண்டியதாய் நிச்சயித்திருக்கையில் மேலெழுதிய உத்திரவு சாதராச்சுது. இப்படிக்கு மழையில்லாமலும் மேல்ஜலம் வறத்தில்லாமலும் யிருக்கப்பட்ட தருணத்தில் மேல்முகம் கீழ்முகம் எல்லா கிராமங்களுக்கும் ஜலத்தட்டு யில்லாமல் பாயவக்கவேண்டிய காரியத்தில் பிதிவிராத்திரிபகலாய் கெவனம்வைத்து வேண்டிய ஜாக்கிறதை செய்துகொண்டு வருகிறேனே தவிற கெவனிக்காமலிருக்கவில்லை.

ஆனால் ஆலத்தூர் வகையரு கிராமத்து குடிகள் குடுத்த பிட்டிஷனில் மேல்முகம் கிராமத்தார் அதிக ஜலம் கொண்டுபோறதினாலே தங்கள் கிராமத்துக்கு ஜலத்தள்வாகி யிருக்குறதாயும் அதிகஜலம் கொண்டுபோகாமல் சீராய் ஜலம்கொண்டுபோனால் ஜலத்தாழ்வு யில்லாமல் வந்துபாயும்போலேயும் கண்டிருக்கிறார்கள் அது சங்கதிக்கு வாய்க்காலில் பூராவாய் ஜலம் சமுர்த்தியாய் வரும்போதானால் அவாள் எழுதியிருக்கிற பாவத்துபடிக்கி ஜலம்போய் பாயலாமேதவிற இப்படிக்கொற்ற அருந்தலான தருணத்தில் என்ன ஜாக்கிறதை செய்தபோதிலும் பாயத்தக்கதில்லை. ஆகிலும் உத்திரவு பிரகாரம் ஷெ சன்னது பார்த்தக்ஷணமே மேற்கே சிறுகமணி குளுமி முதல் புலிவலம் மணல்போக்குவரையில் இருக்கப்பட்ட குளுமிகளுக்காக சிப்பந்திச்சேவுகன் ஆச்சுனன் 1 அதின் கிழக்கு புலிவலம் சலிங்கிமுதல் சோழங்கநல்லூருக்கு மேற்கேயிருக்கிற உயயகொண்டான திருமலை குளுமிவரைக்கும் யிருக்கப்பட்ட குளிமிக்காக போலீசு சேவுகன் செவத்த ராமசாமி நாயக்கன் 1 இவாள் இருவரை திட்டம்செய்து அவாள்பேராலும் பின்னும் அதின கிழக்கு சோழகநல்லூர் குளுமிமுதல் ஆள்வார்தோட்டம் குளுமிவரைக்கும் இருக்கப்பட்ட குளுமிகளுக்காக தாமபோகி மணியம் வெங்கிட்டரமணய்யன் ஷெ சேவுகன் மருதமுத்து பேராலும் பகல்காலத்தில் யாதொரு குளுமிகளிலும் ஒரு பொட்டுஜலம் விடாமல் சுத்தமாய் அடைத்துப்போடும்படியாயும அஸ்தமானத்துக்குமேல் அந்தந்த குளுமிக்கு ஜலம் திறந்துவிடுகிறதில கழிவில் எவ்வளவும ஜலம் யெறங்காமல் வயல்களுக்குமட்டும் பாய்கிறதறகாக எந்தெந்த குளுமியில் எப்மாத்திரம் ஜலம்விடவேணுமோ, அவ்வளவேவிட்டு மற்றதை அடைக்கும்படியாயும் இதுகாரியத்தில் அவனவன் வெகுஜாக்கிறதையாய் நடந்துவரும்படியாயும் கண்டிப்பாய் தாக்கீதுகள் அனுப்பி திட்டம் செய்ததும்தவிற, வேங்கூர், புத்தூர், வயலூர், திருப்பிளாத்துறை இந்த வட்டவளி பேஷ்காற்காருனுக்கெல்லாம் அந்தந்த வட்டத்தைச்சேர்ந்த கிரமாந்திரங்களில் கழிவுஜலங்கள் வீண்போகாமல் அங்கங்கே குத்தணைபோட்டு வயல்களுக்கு பாச்சும்படியாயும அதில் டாஞ்சதுபோக மற்றதுக்கு குளுமிஜலம் வறபபட்டதைக்கொண்டு பாச்சும்படியாயும் திட்டப்படுத்தி கண்ணுண்டாய்பார்த்து வரும்படி அவாள் பேராலும் உத்திரவுகள் அனுப்பி ஜாக்கிறதைசெய்ததுமன்னியில் நாளதுமீ 5வ சனிக்கிழமை முதல் 8வ செவ்வாய்க்கிழமை வரையில் 4-நாளை காரியத்துக்கு துரோபஸ்து குளுமிகளையும் ராத்திரி பகலாய் அடைத்து வரப்பட்ட ஜலம் முழுவதும் கிழக்கே போகும்படியாயும் போகப்பட்ட ஜலம் கீழ்முகம் ஆலத்தூர், கற்கண்டார்கோட்டை, கிழக்குரிச்சி, சோழமாதேவி இந்த மேட்டு கிராமங்களுக்கெல்லாம் ஜலம் சமுர்த்தியாய் பாயும்படியாயும் கூத்தப்பார் பெரியகுளம், சிவந்தாகுளம் இரண்டுக்கும் ஜலம் பூருவாய்போய கட்டும்படியாயும திட்டம்பண்ணி அதற்

காக சிப்பந்திசேவுகின் சக்கனாருவுத்தனேயும் நேமுகப்படுத்தி அனுப்பிவித்து இவ்விதங்களில் மேல் எழுதிய கீழ்முகம் கிராமங்களுக்கெல்லாம் ஜலத்தாழ்வு இல்லாமல் பாய்ந்துவரும்படி. சர்வ ஜாக்கறதை செய்திருக்கிறேன்.

ஆகையால் இது சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன்.

1836-வரு நவம்பர்மீ 4உ, மு. சோமரசம்பேட்டை.	(ஒப்பம்) (மராஷ்டத்தில்)	கோவிந்த ராவு, தாசில்தார்.

No. 10.

1837-வரு ஜனவரிமீ 15உ யுள்ள 20-நி.

திருச்சினுப்பள்ளி சுபா வகைரு யே. அ. கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ ரொஸ்தர் ஜெ. டி. போர்டிலான் துரையவர்கள் சமக்ஷமத்துக்கு முசிரி தாலூகா தாசில் குப்பய்யர் மிகவும் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

யென்னவென்ருல் ஷை தாலூகா ஒறவந்தூர் கிராமத்து மிராசு குடி மருதநாயக முதலி யென்கிறவன் தன் கிராமத்துக்கு மாமூலாய் வரப்பட்ட கழிவு ஜலத்தை சேலம் ஜில்லா மொகவனூர் கிராமத்து மணியகாரன் முதலான பேர்கள் விடாமல் அநேகம் குந்தகங்களும் செய்து ருசவாய்க்காவில் வரப்பட்ட ஜலத்தை காவேரியில் பொத்துவிட்டுவிடுகிறதாயும இதுமுதலான சங்கதியைக்குறித்து ஷை யான் அகுரில் பிட்டிஷன் குடுத்ததின்பேரில் பிதவியை உடனே அந்த கிருமத்துக்கு போய் நடந்திருக்கற காரியங்களேயும் ஒறவந்தூருக்கு ஜலதட்டாகி குந்தகங்களேயும் பார்த்து தெரியப்படுத்து ப்படியாய் உத்திரவானதாய் டலாயத்தவந்து நாளதுமீ 7உ ராத்திரி சொன்னதின்பேரில் உடனே, பிதவி புறப்பட்டு ஒறவந்தூருக்குப் போனயிடத்தில் மொகவனூர் கிராமத்துக்குப்போய் கழிவு ஜலத்ததை வெட்டிவிட்டதை பார்த்துநடத்தியிருக்கிறகாரியத்தை ரிபோர்ட்டு செய்யசசொல்வி நாளதுமீ 6உயில் பிறந்த முதலாவது நி. யெண்டார்சு உத்திரவு 9உ பகல் 12-மணிக்கி சாதராச்சுது.

அதுகாரியத்துக்கு உத்திரவுபடிக்கு பிதவி ஷை ஒறவத்தூர், மொகவனூர் ரெண்டு கிராமத்து வாய்க்கால், வயல் முதலானது முழுதும்பார்த்து விசாரணை செய்ததில், ஓரவத்தூர் கிராமத்துக்கு மொகவனூர் கிராமத்து மணியகாரன முதலான பேர்கள் மாமூல்படிக்கு கழிவு ஜலம் விடாமல் தவக்கப்படுத்தினதை யிட்டு ஓரவத்தூரில் நஞ்சை திட்டம சாணி 150-க்கு இருபத்தி ஆறனா, மூனஞலே மாரிக்கார் பிசானம் ஸாகுபடியான காணி 140-க்கு இருபத்தொன்னே முக்காலே மூன்றுவீசம், போக பாக்கி காணி 10-கு நாலறையேவீசம், உழுத சேருக்கு ஜலம் இல்லாமல் முன்னல் சாகுபடியாகாமல் சேர் காஞ்சுபோய் தரிசியாய் கிடக்கிறதும் தவிற மறுபடி ஷை மொகவனூர் கிராமத்தார் நானும் நாமக்கல் தாசில்தாரும் தீர்மானம் செய்தபடிக்கி கழ்வு ஜலம் விடாமல் குந்தகம் செய்ததுனலே. ஷை நஞ்சைப் பயிர்களுக்கெல்லாம் ஜலம் இல்லாமல் காஞ்சுபோனதாயும் தெரிய வருகிறதுமல்லாமல் அப்படிக்கு காணி 40-கு இருபத்தி ஐந்தறையே மூன்றுவீசம், நிலம் சுத்தமாய் காஞ்சுபோய் இப்போது ருகி சாகுபடியாகியிருக்கிறது. அது போக மத்த நஞ்சை சாகுபடியாகியிருக்கிறதில் மாரிக்கார் காணி 2-கு தொண்ணூத்தி மூன்றறையே மூணுவீச அறைவீசம், அருப்பாகி மடங்கனுக்கு வந்திருக்கிறது. தைமீ 30உ வரையில் காணி 50 நிலம, அருப்புக்கு வரும்படியாய் கதிர் தலே பா ரங்களாயிருக்கிறதும் தவிற பயிராயும் பூட்டையாயும் காணி 38-கு அறுபதறை நஞ்சை சாகுபடியாகி இருக்கிறதற்கு ஜலம் யில்லாமல் காச்சல் குடுத்துக்கொண்டு வருகிறது. ஷை ஓரவத்தூர் வாய்க்காலில் பூராவாய் ஜலம் வராமல் அறை வாய்க்கால் வருகிறதுனலே அடிக்கடி பயிர்களுக்கு ஜலத்தட்டு நேரிடுகிறது யென்று மொகவனூர் கிராமத்துக்கு பொயிவாய்க்காலில் வரப்பட்ட ஜலமும் வயல்களும் பார்க்கும்போது மொகவனூர் கிராமத்துக்கு பாயப்பட்ட ராஜ வாய்க்காலில் பூராவாய் ஜலம் வந்து வயல்களுக்கு யெல்லாம் சமூர்த்தியாய் ஜலம பாய்ந்துகொண்டு யிருக்கிறது. ஆனல் அந்த வாய்க்காலில் ஓரவத்தூர் நஞ்சையில் சுமார் 10 காணிக்கும் நீர்க்கூலிக்சாக மொகவனூர் கிராமத்தாருக்கு விட்டுயிருக்கிற 12-காணிக்கும் பாச்சல், அந்த நிலங்களிலும் மொகவனூர் கிராமத்து வயல்களிலும் பாயப்பட்ட கழிவு ஜலம் தேங்கி ஓரவத்தூர் மத்த நஞ்சை துரோபஸ்து நிலங்களும் பாஞ்சு மாசூல் தயாராகவேண்டி யிருக்கிறது. ஷை ராசவாய்க்காலில் டகல் ஜலம் ஓரவத்தூர் ஷை பத்து காணிக்கும் நீர்க்கூலி நிலங்களுக்கும் பாயுகிறதும் தவிற ஷை ஓரவத்தூர் யெல்லேயில் அநத வாய்க்கால் வழியாய் சலம் கொண்டுபோய் ஷை மொகவனூர் உள்க்கடை சங்கரம்பாளேயம் வயல்களுக்கு பாச்சுவருகிறது என்றும், ராத்திரி தண்ணி முழுதும் அதின மேற்கே மொகவனூர் வயல்களுக்கு யெல்லாம பாச்சுகிற மாமூல் யென்றும், தெரியவருகிறது. அப்படிக்கு ஜலம் ஸமர்த்தியாய் அந்த வாய்க்காலில் வரப்பட்ட ஜலத்தை கீழ்முகத்துக்கு விட்டுவந்தால் ஒரு வாரத்துக்கு கழிவு ஜலம் தாராளமாய் யெறங்கி யாதொரு தாட்சியும் இல்லாமல் ஜலம பாயும், அப்படிக்கு செய்யாமல் ஷை மொகவனூர் கிராமத்தார் ஓரவத்தூருக்கு ஜலம் இல்லாமல் குந்தகம் செய்யவேணுமென்கிற யெண்ணத்தைத்தானே முன்னிட்டுக் கொண்டு ஷை சங்கரம்பாளேயம் வயல்களிலும், இன்னம் கழிவு யெறங்கப்பட்ட முகத்துவாரமா யிருக்கப்பட்ட வயல்களிலும் வாழை சாகுபடி செயதயிருப்பதினலேயும் அதற்கு மாதத்திற்கு ஒரு ஜலம் விட்டு வருகிறதினலேயும் கழிவு யெறங்க யிடமில்லாமல் ஜலதட்டு நேரிடுகிறதும தவிற ஷை செங்காரம்பாளேயத்தில் வாழை சாகுபடியான நிலம் போக பாக்கி நஞ்சை சாகுபடியான சிருது நிலங்களுக்கு யெவ்வளவு ஜலம் வேணுமோ அவ்வளவு ஜலம் மட்டும் பகலில் ஷை வாய்க்காலில் கொண்டுவந்து பாச்சுக்கொண்டு மத்த ஜலத்தையெல்லாம் செங்கத்துறை பே க்குமுதல் அடைக்கன் தோப்பு வரைக்கும் 20 கவுறுகள் வளியாய் காவேரியில் பொத்துவிட்டு யிருக்கிருர்கள். ராத்திரியில் அவாள் நிலங்களுக்குமட்டும் ஷை போக்குகள் யெல்லாம் அடைச்சு ஜலம பாச்சிக்கொள்ளுகிருர்கள், அப்படிக்கு ஜலம் பாச்சிக்கொள்ளும்போது இருபுறமும் கலிங்கிலும் ஜலம் வடிந்து விழுகிறது, அப்படிக்கி பூராவாய் ஜலம்வந்துகொண்டிருக்க ஷை மொகவனூர் மணியகாரனும் குடிகளும ஒன்றுசேர்ந்துகொணடு கழிவு ஜலம் வீடாமலும் கழிவு யெறங்கப்பட்ட முகத்துவாரங்களில் எல்லாம் வாழை சாகுபடி செய்து ஜலம் விடாமல் காயப்போட்டிருப்பதினலே ஷை ஒறவத்தூர் கிராமத்துக்கு அடிக்கடி ஜலத்தட்டு ஆகிவருகிறதே தவிற வேரில்லே.

ஷை ஓரவத்தூர் கிராமத்துக்கு ஷை மொகவனூர் கழிவு ஜலம நவாப் சாயப் அவர்கள் நாள் முதல் வெகுகாலமாய் வந்து பாய்கிறதே தவிற வேறே ஜலம் வந்து பாய குறம்பு வாய்க்கால் முதலானது ஒனறும் கிடையாது. இது சங்கதியைக்குறித்து அடிக்கடி அகுருக்கு அர்ஜி எழுதியிருக்கிறேன், அதற்காக சேலம் ஜில்லா கலெக்ட்டர் துரையவர்களுக்கும் லெட்டர் அனுப்பிவித்து அந்த துரையவர்கள் உத்திரவும நாமக்கல் தாசில்தார் உத்திரவும் ஷை மொகவனூர் கிராமத்து மணியகாரனுக்கு வந்திருக்கிறது, அப்படி வந்திருந்தும், ஷையான் மாமூல்படி கழிவுஜலம்விடாமலும் செப்டம்பர்மீத்தில் பிதிவியும்நாமக்கல்தாசில்தாரும் இருந்து தீர்மானம பண்ணினதற்கு பின்புமஎவ்வளவும்பயமில்லாமல் ஓரவத்தூர் கிராமத்துக்கு கழிவு யெறங்கப்பட்ட முகத்துவாரத்தில் வயல்களில் உத்தேசம் 5; 6, காணி வரைக்கும நஞ்சை அழிச்சு

ஞை சாகுபடி செய்துயிருக்கிறார்கள். இப்பொழுது மேலெழுதிய குந்தகங்களினாலே அறைவாய்க்கால் ஜலம் ஓரவத்தூருக்கு வருவதினாலே அந்த ஜலத்தினாலே யிப்போ சாகுபடியான பயிற்களும் பூராவாய் பலனுக்கும் வரமாட்டாது. தாளடி திட்டப்படிக்கு காணி 63-கு எழுபத்தி மூன்றே அரைக்கால், சாகுபடியும் ஆகமாட்டாது, கழிவு யிறங்குகிற முகத்துவாரங்களில் சுமார் காணி 25 வரையில் அவாள் சாகுபடி செய்ருப்பதினாலே கழிவு ஜலம் தாராளமாய் வருகிறதற்கும் யேதுகறமில்லை. அவாளுடைய ராஜ வாய்க்காலில் ஜலம் வந்து பாயவேண்டியிருப்பதினாலே அதில் ஒரு குளுமி வச்சு ஜலம் விடும்படி செய்யவேணுமென்றும் ஓரவத்தூர் கிராமத்தார் கேட்டுக்கொள்ளுகிறது மல்லாமல் நான் பார்த்ததிலும் அந்தப்படி குளுமி கட்டிக கொடுத்தால் யாதொரு காரியதாட்சியுமல்லாமல ஜலம ஸராகமாய் வந்து பாயும்போல் காணப்படுகிறது. ஆனால் அந்த மொகவனூர் கிராமத்தார் அந்தப்படி குழுமி கட்டக் கூடாதென்றும் சொல்லுகிறார்கள். அதற்கு மகா-ா-ா-ஸ்ரீ துரையவர்களும சேலம் ஜில்லா கலெக்டர் துரையவர்களும் இஞ்சினீர் துரையவர்களும் வந்து பார்த்து தீர்மானம செய்யவேண்டி யிருகிறது.

ஆகையால் பிதிவி போய் சுத்தி பார்த்து விசாரணை செய்து இருக்கிற ஸ்திதிகளுக்கு ஒரு பிளானும் தயார் செய்து இதில் அடக்கமாய் ஸமுகத்துக்கு அனுப்பிவிச்சிருக்கிறேன. அதினாலே துரையவாகள் சித்தத்துக்கு ஒறவத்தூருககு நேரிட்டிருக்கிற குந்தகங்கள் விசிதமாகுமென்கிற சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் யெழுதிககொண்டேன்.

1837-ஹு ஜனவரிமீ 15உ, மு. முசிரி.	}	(ஒப்பம்)	குப்பய்யர், தாசில்தார்.

No. 11.

1838-ஹு அக்டோபர்மீ 13உ 369-நீ.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு ஆ- கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் உல்லியம்சிசல்ஒகலபி துரையவர்கள் சமுகத்துக்கு.

முசிரி தாலூகா தாசில்தார் குப்பய்யர் மிகவும் வணக்கத்துடன் சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி. என்னவென்றால் ஷை தாலூகா ஓரவத்தூர் கிராமத்துக்கு வரப்பட்ட மொகவனூர் கழிவு ஜலத்தை ஷை மொகவனூர் கிராமத்தார் விடாமல் தடைகள் செய்கிற சங்கதியைக்குறித்து சேலம் ஜில்லா பிரெஸபால கலெகட்டா துரையவர்களுக்கு எழுதினதற்கு அசிஸ்டாண்டு ஸிவில் இஞ்சினீர் துரையவர்கள் நிர்ணயத்துப்படிக்கு காவேரியில் விட்டு இருககிற கழிவு வடிவாய்க்கால் ஜலம் எல்லாம அடைத்துப்போடும்படியாயும் ஓரவத்தூருக்கு ஜலம் வரப்பட்ட வாய்க்காலை அகலிட்டு வெட்டுக்கரையை ஒசத்தி பலப்படுத்தும்படியாயும் உபய கட்சிக்காரர்களிடத்திலும் ராஜிநாமா வாங்கிக்கொண்டு வேலை நடப்பிவிக்கவேணுமென்றும் அந்த ஜில்லா ஏட் அசிஸ்டாண்டு கலெக்ட்டர் துரையவர்கள் லெட்டர் எழுதியிருப்பதாய் நாமக்கல் தாசில்தாரை வரவழித்துககொண்டு அந்த இரண்டு கிராமத்து குடிகளேயும் வைத்துச்சொண்டு பார்த்து அந்தப்படி வேலை நடப்பிவிக்கிறதற்கு ராஜிநாமா வாங்கி உபய கடசிக்காரர்களிடத்திலும் கையெழுத்துவாங்கி ஒரு பிரதி அதை தாசிலதாரிடத்தில் கொடுத்த அவர் கையெழுத்துடனே ஒரு பிரதி வாங்கி அனுப்பிவித்து அப்பால் அசிஸ்டாண்டு ஸிவில் இஞ்சினீர் துரையவர்கள் நிச்சயித்த பிரகாரம் வேலை நடப்பிவிக்கச்சொல்லியும் இது முதலான சங்கதியைக்குறித்து சூலைமீ 23உயில் பிறந்த 267-நீ சன்னது சாதராச்சுது.

அது காரியத்துக்கு உத்திரவுப்படிக்கு நான் ஓரவத்தூருக்கு முன்னாலே நான் போயிருந்து நாமக்கல் தாசில்தாருக்கு கடுதாசி எழுதினதற்கு வரயில்லையென்று ரிப்போர்ட்டு செய்துயிருக்கிறதினாலே சித்தத்துக்கு விசிதமாயிருக்கும். அப்பால் நாளது செப்டம்பர்மீ 15உயில் நாமக்கல் தாசில்தார் ஓரவத்தூர் கிராமத்துக்கு வந்தார்கள். உடனே நானும் அவரும் ஷை ரெண்டு கிராமத்துக்குடிகளுமாயி ஓரவத்தூர் கிராமத்துக்கு குந்தகம் நேரிட்டு இருக்கிறதையும் சுத்திப்பார்த்து ஷை கிராமத்துக்கு ஜலத்தட்டு நேரிட்டு சாகுபடியாகாமல் தரிசுயிருக்கிற நிலங்களேயும் சாகுபடியான பயிர்களுக்கும் உழுதசேருக்கும் ஜலமில்லாமல் காச்சல் கொடுத்துயிருக்கிற சங்கதியைக்குறித்தும் நாமக்கல் தாசில்தாரும காண்பிவித்து ருசுப்படுத்திவச்சிருக்கிறதும் தவிர ஷை ரெண்டு கிராமத்தாரையும் ஸிவில் இஞ்சினீர் துரையவர்கள் பார்த்த யெஸ்டிமெண்டுபடிக்கு வேலை நடப்பிவிக்குறதற்கு ராஜிநாமா எழுதிக்கொடுக்கச்சொல்லி கேட்டதற்கு ஒறவத்தூர் கிராமத்தாருக்கு ராஜிநாமா குடுக்கச்சம்மதிபட்டார்கள். மொகவனூர் கிராமத்தார் அந்த வேலை நடப்பிவிக்கிறதற்கு ராஜிநாமா குடுக்கிறதில்லையென்றும ஷை வேலை நடப்பிவிச்சு கரைப்போட்ட வடிவு வாய்க்கால்வெட்டினால் மொகவனூர் கிராமத்து நஞ்சையில் நூ 602-4-0-தீர்வையுள்ள 27$\frac{3}{8}$-செய் நஞ்சை நிலத்துக்கு தண்ணீர்பாயமல் நஷ்டம் சம்பவிக்கும்யென்றும் அந்த வாக்கால் வெட்டினதினாலேயும் கரையோட்டதுநாலேயும் ஒறவத்தூருக்கு கழிவு ஜலம் அதிகமாய் வறமாட்டாதுயென்றும் மொகவனூரார் சொல்லப்பட்டகாரியத்துக்கு அசிஸடாண்டு சிவில் இஞ்சினீர் துரையவர்கள் கழிவு ஜலம் வீணாய் காவேரியில் விழுந்துபோகப்பட்டதை அடைத்து வாக்கால்வெட்டி கரையும்கட்டினால் அதிகமாய் ஜலம் ஓரவத்தூருக்கு வருமென்று சுத்திப்பார்த்து யெஸ்டிமெண்டு யேற்படுத்தியிருக்கிறார்களே தவிர அதினாலே தண்ணீர் வரமாட்டாதுயென்று காணப்படவில்லை. இப்போது சிறிதுவேலை நடந்ததையும் தடங்கல்பண்ணி நிருத்திப்போட்டு அந்த வேலையை சுத்தமாய் நடப்பிவிக்ககூடாதென்று நிச்சயப்படுத்திக்கொண்டு அந்த வேலை நடப்பிவித்தால் ஓரவத்தூருக்கு ஜலம் போகமாட்டாதென்று வீணான முகாந்திரங்களாய் சொல்லுகிறார்களே தவிர வேறில்லை. அந்த வேலை நடப்பிவித்தால் ஜலம் தாராளமாய்வரும.

2-வது நூ 602-4-0-தீர்வையுள்ள 27$\frac{3}{8}$-செய் நிலம் மொகவனூர் கிராமத்தில் இருக்கிறசற்கு, தண்ணீர் பாயாமல் நஷ்டம் சம்பவிக்குமென்று சொல்லப்பட்ட காரியத்துக்கு அவ்வளவு நஞ்சை நிலங்களுக்கு ஜலம் பாயாமல் குந்தகம நேரிடமாட்டாது. ஆனால் இப்போது இஞ்சினீர துரையவர்கள் நிர்ணயித்தப்படிக்கி கழிவு வாய்க்கால் அகலிட்டுவெட்டி கரைபோட்டால் கொஞ்சம் நிலம் சேதமாகிறது. புதுசாய் கரைப்போடப்பட்டதற்கு தெற்கே காவேரி யோரமிருக்கிற வயல்களுக்கு சிறிது நிலத்துக்கு ஜலம் பாயமாட்டாது யென்று மொகவனூரார் தகரார் சொன்னபோதிலும அந்த நிலங்களுக்கு மேற்காலே அவாளுடைய ராஜ வாய்க்காலிலிருந்து வேறு கண்ணி வாய்க்கால்கள் வந்து பாய்குறதினாலே ஜலம் தாராளமாய் கொண்டுவந்து பாச்சுக்கொள்ளலாம். பின்னும் இப்போது மராமத்து செய்யப்பட்ட கழிவு வாய்க்காலுக்கு மறத்தோணியினால் மேம்பாலம்கட்டி ஜலம்கொண்டுபோய் பாச்சிக்கொள்ளலாமே தவிர ஜலம் பாயுகுறதற்கு யேது இல்லாமல் போகவுமில்லை. விஸ்தரித்து அவாளுக்கு நஷ்டமும் நேரிடமாட்டாது. அசிஸ்டாண்டு சிவில் இஞ்சினீர் துரையவர்களும் அந்தப்படி ஜலம் பாச்சிக்கொள்ளும்படியாய் நிர்ணயித்துயிருக்குறதாயும் ஒறவத்தூர கிராமத்தாராலே தெரியவருகிறது ஷை துரையவர்கள் முன்பாக மொகவனூர் கிராமத்தார் அந்த வேலை நடப்பிவிக்கும்படியாய் சம்மதித்ததாக அசூர் 94-நீ பார்வாணா மூலமாய்

தெரியவருகிறது. அப்படிக்கிருக்க துரையவர்கள் முன்பதாக தாங்கள் சம்மதிப்பட்டதில்லே யென்றுஏ பிரட்டான முகாந்திரங்களாய் சொல்லுகிருர்கள்.

3-வது ஷெ ஓரவத்தூர் கிராமத்துக்கு கழிவு யெறங்கப்பட்ட முகதுவாரத்தில் நஞ்சை சாகுபடி செய்யாமல் வாழை விஸ்தரிச்சு மொகவனூரர் போட்டிருப்பதினலே கழிவு ஜலம் சுத்தமாய் யெறங்காமல் குந்தகப்பட்டு இருக்கிறதும் நாமக்கல் தாசில்தாருக்கு காண்பிவிச்சுயிருக்கிறேன்.

4-வது ஷெ மொகவனூர் மகாஜனம் சாமுவெங்கடாசாரி யென்பவன் நஞ்சை நிலத்து ஓரத்தில் களிவு யெறகப்பட்ட கவுரு ஒடையிருந்ததை இரண்டு மூன்று வருஷத்துக்கு முன் அவன் அளிச்சு நஞ்சை நிலத்துடனே சேர்த்து சாகுபடிசெய்து வருவதினலே கழிவு இறக்காமல் குந்தகப்பட்டு யிருக்கிறதென்று வருஷா வருஷம் அகுருக்கு அநேக அர்ஜிகள் மூலமாய் தெரியப்படுத்திக்கொண்டிருக்கிறதும் தவிர ஒடை ஆஜர் யில்லே. அதற்கு ஷெ மிராசுதாரன ஒடையிருந்தது மில்லே தான் தூத்தது மில்லேயென்று சொன்னன். ஷெ கிராமத்து பயிமாஷ் ஒழுகு கணக்கு வரவழித்து நானும் அந்த தாசில்தாரும் பார்க்கும்போது ஷெ நிலத்தில் 11-4 0 ஒடை கழிவு செய்திருக்கிறதும கணக்கு மூலமாய் ஒப்புவித்து இருக்கிறேன். அதற்கு நஞ்சை நிலத்தில் கம்மியாயிருக்கிறதென்றும் முகாந்திரம சொல்லுகிருர்கள்.

இப்படிக்கெல்லாம் கழிவு யெறங்கப்பட்ட முகதுவாரத்தில் யெல்லாம் கழிவு யெறங்காமல்படிக்கி மொகவனூரர் எடஞ்சல்செய்து வருவதனலேயும் ஷெ யூர் ராஜவாய்க்காலுக்கு சர்க்காரில் வெகுநாளாய் மராமத்து யில்லாத்தனலே கிராமத்தார் தங்களுக்கு வேண்டியமட்டு வெட்டிக்கொண்டு ஜலம்கொண்டு வருவதனலேயும் ஓரவத்தூருக்கு ஜலத்தட்டு அடிக்கடி நேரிட்டு வருஷா வருஷம் பேரிசுகுக்கூட ஐவேசு காணமல் அநேகருக்கு சாவி நேரிட்டுவருகிறது.

இந்த கிராமத்துக்கு கழிவு ஜலம் பாயகுறதற்காகவே 1000-ரூ விலே பொருமான வருஷம் 500-கல நெல் காணும்படியாய் 12-காணி நிலம் முதல் தறத்தில் மொகவனூருக்கு முன்னலே இனமாய் விட்டுயிருந்ததற்கு ரூ 259-சில்லனை அதற்கு தீர்வை யேற்பட்டு சர்க்காருக்கு வசூலாகி வருகிறபடியினலேயும் வாய்க்கால் வெட்டு சிலவுக்காக வென்று வருஷம் 1-க்கு ரூ 24-8-0–சர்க்காரிலிருந்து மொகவனூர் கிராமத்துக்காக அந்த ஜில்லாவுக்கு கொடுத்துவருகிறபடியினலேயும் ஒறவத்தூர் கிராமத்து சாகுபடிக்கு ஜலம் கொண்டு வந்து விடவேண்டியது சர்க்காருடைய பொருப்பாயிருக்கிறதுனலேயும் ஷெ யூர் ராஜவாய்க்கால் பாச்சல் கிராமங்களில் சாஸ்தி சாகுபடியாகியிருக்கிறது. ஷெ ஓரவத்தூர் கிராமத்துக்கு நஞ்சை திட்டம கா, 154 கு, 26½-செப்டம்பர்மீ 15வ வரையில் கா, 80, கு, முப்பத்தி ஒண்ணரைவீசம் நிலம் சாகுபடியாகி யிருக்கிறது மற்ற திட்டபாக்கி கா, 73, கு. தொண்ணூத்கிநாலேமுக்காலேமூணுவீசம் சாகுபடியாகிறதற்கு ஜலம் தாராளமாய் வராமல் தரிசியாயிருக்கிறது. பிருகு வருஷத்தில் அவாளுடைய நீர் கூலி நிலத்தின் மாசூல் விடாமல் அமாந்தத்தில் வைத்திருந்தபடியினலே ஜலம் ஸராகமாய் வந்ததைப்பற்றி பிருகு வருஷம் ஷெ தேதிவரையில் கா, 116, கு, 16¼-வரையில் சாகுபடியாகி இருக்கிறது. இவ்வருஷத்தில் அடிக்கடி ஜலம் விடாமல் தட்டு நேரிட்டபடியினலே சாகுபடியாகாமல் கமிநேரிட்டு யிருக்கிறது. அபபடிக்கிருந்தபோதிலும் அந்த தாசில்தார் வந்து தாக்கிது செய்ததின்பேரில் அரை வாய்க்கால ஜலம் வருவதனலே அதைக்கொண்டு மற்ற திட்டபாக்கி நிலங்களும் பூரா சாகுபடி செப்விக்கும்படி அந்த வட்டம் காற கூனுக்கும் தாக்கிதை செய்திருக்கிறேன்.

ஷெ. மொகவனூரார் ராஜியின்பேரில் ஷெ மராமத்துவேலே நடக்குறதாயிருக்கவில்லே. அவாள் களிவு ஜலமும் தாராளமாய் விடுகிறதாயும் காணப்படாத்துனலே சர்க்காரில் தானே ஷெ ஓரவத்தூர் கிராமத்துக்கு ஜலம தாராளமாய் வந்து பாயும்படிக்கான யேது செய்யவேண்டியிருக்கிறது இப்போது மொகவனூர் களிவு ஜலம் வரப்பட்ட சுவல்ப ஜலத்துனலே ஓரவத்தூர் நஞசை நிலம் பூரா சாகுபடியாகமாட்டாது.

ஆகையால் அசிஸ்டாண்டு சிவில் இஞ்சினீர் துரையவர்கள் நிர்ணயத்தபடிக்கி அகலமாய் வாய்க்கால் வெட்டி கரையும்கட்டி கொடுத்தால் அதனலேயும் இதுவரையிலும் மாமூலாய் பாயப்பட்ட ராஜவாய்க்கால் கவுர் ஆறுநாலேயும் ஜலம் பூரா வந்துபாயும் அப்படிக்கில்லாவிட்டால் ஜலத்தட்டு இல்லாமல் பூரா பாயமாட்டாது வருஷா வருஷம் தரிசுவிழுந்து சர்க்கார் பேரிசுக்கு லுக்குசான் நேரிடும். அந்த இடத்தில் வேலேசெய்யக்கூடாதென்று மொகவனூரார் தடுத்தால் ராஜவாய்க்காலே சர்க்காரில் மராமத்துசெய்து அகலிட்டு வெட்டிவச்சு தருக்காவேரி தண்ணி ஜாஸ்தியாய் அடைச்சுவிட்டு அந்த வாய்க்காலே ஓரவத்தூர் எல்லேயில் வரப்பட்டயிடத்தில் ஆறுகவுர் கண்ணல் சில நஞசை நிலங்களுக்கு பாய்கிறதினலே அதில் ஒரு கவுரில் சின்னதாய் வாய்க்கால்வெட்டி சாண் சவுக்கத்தில் குழிமிகட்டி அதின்வழியாய் ராஜவாய்க்கால் ஜலம் விட்டால் அதனலேயும் மத்த கழிவு ஜலத்தினலேயும் ஜலத்தட்டு இல்லாமல் பாஞ்சு சாகுபடி பூராவாய் ஆகும். அதனலே சர்க்காருக்கு லுக்குஸானும்நேரிடமாட்டாது. அந்த கிராமத்தாரும் யாதொரு குந்தகமும் இல்லே.

ஆகையால் ஷெ இரண்டு கிராமத்தார் இடத்திலும் வாஙகின வாக்குமூலம் ரெண்டுக்கும் ரெண்டு பிரதி எழுதி அதில் கையெழுத்து வாங்கி ஒரு பிரதி நாமககல தாசில்தாரிடத்தில் குடுத்தயிருக்கிறதும் தவிர ஷெ நாமக்கல் தாசில்தர் கையெழுத்துடனே அசல் வாக்குமூலம் 2-ம் இதில அடக்கமாய் சமுகத்துக்கு அனுப்பிவிச்சியிருக்கிறேன். இது சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

1838-ஹூ அக்டோபர்மீ 13வ, மு. முசிரி.	(ஒப்பம்.)	குப்பய்யர், தாசிலதார்.

No. 12.

1838-ஹூ டிசம்பர்மீ 18வ யுள்ள 475-நி.

திருச்சினப்பள்ளி சுபா வகைரு ஆ. கலெக்டர் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் உல்லியம் சேசல்ஒல்கவிதுரையவர்கள் சமுகத்துக்கு முசிரி தாலூகா தாசில் குப்பய்யர் மிகவும் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றுல் ஷெ தாலூகா கல்லூர் சித்தாம்பூர் இந்த கிராமங்களில் எல்லேயில் வரப்பட்ட அய்யாத்தில் கல்லூர் கிராமத்தைச்சேர்ந்ததென்று ஆத்தம்கனாக்கு உள்பரம் வீரபத்ரபிள்ளே அனுபோகத்திலிருந்த அஞ்சுகாணி சொச்சக்குழி நிலத்தில் நார்ப்பதே சொச்சககுழி நிலத்தில் சித்தாமபூர் கிராமத்தானே சேர்த்துக்கொண்டிருக்கிறதாக வீரபத்ரபிள்ளே குடுத்த பெட்டீஷனே அனுப்பியிருக்கிறது என்றுலும் அந்த இடத்துக்குப்போய் கண்ணலே பார்த்து விசாரணேசெய்து தகரூர்பட்ட நிலம் இன்ன கிராமத்துக்குச்சேரவேண்டியதென்று தீர்மானம் செய்து அசல் பெட்டீசனுடனே ரிப்போர்ட்டு செய்யச் சொல்லி 289-வது நெம்பர் சன்னது சாதராச்சுது.

அது காரியத்துக்கு உத்திரவுபடிக்கு பிதிவி அந்த இடத்துகருப்போய் ஷை இரண்டு கிராமத்துக்குடிகள் கணக்குப்பிள்ளை முதலானபேர்களை வரவழைத்துவச்சுக்கொண்டு தகரார் பட்டநிலத்தை கண்ணுலே பார்த்து கணக்கு மூலமாய் விசாரணைசெய்ததில் ஷை தகராற்பட்ட நிலத்தின சுத்திலும் சித்தாம்பூர் நிலமாயிருக்கிறதும் தவிர சித்தாம்பூர் பேமாஷ் ஒழுகு கணக்கிலும் மேங்கரை கட்டளை நிலத்துடனே தகரார்பட்ட நிலமும் சேர்ந்ததாயிருக்கிறதாய் தெரிய வருகிறது தவிர கல்லூர் கிராமத்துக்கு சேர்ந்ததாய் யாதொரு கணக்கு ஆதாரவுமில்லை பெட்டீஷனர் வீரபத்ரபிள்ளை அனுபவித்ததாயும் ருசுவாகவில்லை நான் பார்த்ததிலும் பெட்டீஷனர் சொல்லுகிறபடிக்கு அயயார் புறம்போக்கு நிலததில் யெக்கல் விழுந்த நிலமாயும் காணப்படயில்லை ஆகையால் மேல்படி நிலம் சித்தா பூருக்கு சேரவேண்டிய பாபத்தாய் காணப்படுகிறப்டியினல் ஷை அசல் பெட்டீஷனும் நான்போய் பார்த்தல் ஷை நிலம் ஆஜர் முதலானது இருக்கிறதற்கு வகையரு பிளானும் இதில் அடக்கமாய் சமுகத்துக்கு அனுப்பிவிச்சிருக்கிற சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

1838-ஷு டிசம்பர்மீ 18உ, } (ஒப்பம்.) குப்பய்யர்,
மு. முசிரி. } தாசில்தார்.

No. 13.

1840-ஷு ஜனவரிமீ 22உ யுள்ள 15-நி.

திருச்சினாப்பள்ளி சுபா கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் ஆதர்மூலி ஆன்சலோ துரையவர்கள் சமுகத்துக்கு உடையார்பாளையம் தாலூகா தாசில் தாவீத்துப்பிள்ளை வணக்கமாய் எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் காறக்குரிச்சி கிராமத்துயேரி வரத்துவாரியில் காரக்குடி கிராமத்சார் வாரிவெட்டி ஜலம் கொண்டுபோகறதைக்குறித்து நான அறிவித்துக்கொண்டதற்கு காறக்குடி கிராமத்தார் வாரிவெட்டி தண்ணீர் கொண்டுபோகப்பட்டது யெத்தினை நாளாய் காறக்குரிச்சி கிராமத்தா வழக்கமில்லையென்று சொல்லப்பட்டது நிஜம் தானு விசாரித்து வாக்குமூலத்துடனே அறிவிக்கும்படி அக்டோபர்மீ 15உ யிலான 259-நி. உத்திரவு வந்தது.

அது காரியத்துக்கு உத்திரவுப்படி காறக்குரிச்சி கிராமத்து பட்டேதார் அப்பச்சி உடையானை வரவழைத்து ஷை வரத்துவாரியில் காறக்குடி கிராமத்தான் வாரிவெட்டி ஜலம் கொணடுபோனது வழக்கம் கிடையாது யென்பதற்கு யாரைக்கொண்டு ருசு குடுக்கிறாய் யென்று கேட்டதுக்கு கொடிகால் சின்னது படையாச்சி 1, வேறு நல்லூர் அப்புபடையாச்சி 1, யிருகூர் ராமபடையாச்சி 1, ஸ்ரீபுரந்தான் ராமபடையாச்சி 1, நாலுபேர்களைக்கொண்டு ருசு குடுக்கிறதாக சொல்லி வாக்குமூலம் கொடுத்தான்.

ஷை வாக்குமூலத்தில் கண்ட 4-சாட்சிக்காரர்களை அழைத்து வரும்படி சேவுகனை அனுப்பி விச்சதில் யிருகூர் ராமபபடையாச்சி தவிர மற்ற 3-பேர் ஆஜிருனார்கள். அவர்களிடத்தில் மாமூல் வழக்கம் கண்டு தெறிஞ்சதைக்குறித்து வாக்குமூலம் வாங்கி விசாரணையில் யேர்பட்ட வாக்குமூலம 4-யும் இதில் அடக்கம் செய்திருக்கிறேன சுளாவணியாக விசிதமாகும்.

ஷை வாக்குமூலத்தினல் பார்க்கும்போது காறக்குடி கிராமத்து யேறியானது 20-வருஷத்துக்கு முன் உண்டாகி காட்டுவாரி ஜலம் வந்து கொண்டிருந்ததாயும் இப்ப 2-வருஷகாலமாக ஷை வாரியில் புதுவாரி வெட்டி நூதனமாக ஜலம் கொண்டுபோகுறதாகவும் காறக்குடி யேறிக்கி ஷை காரக்குரிக்சி வாரிவழியாக ஜலம்போன வழக்கம் கிடையாதென்றும் தெரிய வருகிறது. ஆகையால் நூதனமாய் காற குரிச்சியேரி வரத்து வாரியில காறக்குடி கிராமத்தான் வெட்டப்பட்டிருக்கிற வாரியை தூத்துப்போடவேண்டியபாவத்தாகக்காணப்படுவதினாலே சங்கதி தெரியவாவதாய் எழுதிக்கொணடேன்.

1840-ஷு ஜனவரிமீ 22உ } (ஒப்பம்.) தாவீத்துப்பிள்ளை,
மு. கருப்பூர். } தாசில்தார்.

No. 14.

1840-ஷு ஜனவரிமீ 25உ யுள்ள 1-நி.

திருச்சினாப்பள்ளி சுபா எட் அசிஸ்டாண்டு கலெக்ட்டருகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்டர் உட்கேட்டு துரையவர்கள் சமக்ஷமத்துக்கு விட்டுக்கட்டி தாலூகா தாசில் குப்பய்யர் மிகவும வணக்கமாய சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

வைகநல்லூர் கிராமத்து நூறுகாணி நஞ்சைக்குப்பாயப்பட்ட தாளம் வாய்க்காலே வரவாந்தூர் மகா ஜனங்கள் அந்தக்குழுமி புதிசாய் வைத்ததென்று பிருது குடுத்து அடைச்சுப் போட்டிருக்கிறதாகவும் ஷை குழுமி வழியாய் பாய்ந்து வந்ததுக்கு சாட்சிகளிருக்கிறதாகவும் வாலாந்தூர் மகா ஜனங்கள் துராகிருதமாய் பள்ளர்களை விட்டு தரத்துப்போட்டிருக்கிறதாகவும் மாமூல்படி பாய்ச்சிக்கொள்ள உத்திரவாகவேணுமென்று வைகநல்லூர் கிராமத்து மகா ஜனங்கள் சமுகத்தில் குடுத்தபிருது சங்கதியை விசாரணைசெய்து மாமூல் வழக்கத்தையும் கண்டு விபரமாய் ரிப்போர்ட்டு செய்யும்படி ஜனவரிமீ 9உ யில் பிறந்த 2-வது நீ இண்டார்சு உத்திரவு 10உ வந்தது.

அது காரியத்துக்கு ஷை வாய்க்காலில் வைகநல்லூர் கிராமத்தார் புதிசாய் குழுமி உண்டாக்கி ஜலம் கொண்டுபோகுறதாய் மருதூர் வகைரு கீழ்முகம் கிராமத்தார் அஜூரில் பிருதுகுடுத்தார்கள். வைகநல்லூர் கிராமத்தார் தெடுதொளாய் ஷை வாய்க்கால்னாலே நூறுகாணி நஞ்சை நிலத்துக்கு பாயப்பட்டதென்று சொல்லுகிருன.

இது சங்கதியை அசிஸ்டாண்டு சிவில் இஞ்சினீர் துரையவர்கள் பார்த்து ஷை தாளம் வாய்க்காலினாலே கீழ்முகம் மருதூர் வகைரு கிராமங்களில் 1200-காணி நிலத்துக்கு பாயப்பட்டதென்றும் வைகநல்லூர் கிராமத்துக்கு 500 காணிக்கு மண்டபத்து வாயக்காலுடனே இன்னும் ரெண்டு மூனு வாய்க்கால்கள் கலந்து பாயிறபடியினாலே அருந்தல் நாளையில் வைகநல்லூர் கிராமத்தார் கரையை பிளந்து அதிகஜலம் கொண்டுபோவதனாலே மருதூர் வகைரு கிராமங்களின நிலங்களுக்கு ஜலம் குந்சசமாயிருக்குதென்றும் அதனாலே வைகநல்லூர் கிராமத்தார் செய்து வரப்பட்டதை நிருத்திப்போடவேணுமென்று ஷை சிவில் இஞ்சினீர் துரையவர்கள் டயிரியினாலே தெரியவருகிறதென்றும் கரையைப் பிளந்து கொண்டுபோகாமல் இருக்கும்படி தாக்கீதுசெய்து தமுக்கு போடும்படி மேஸ்தர் ஆன்சலோ துரையவர்கள் 1839-ஷு அக்டோ

பர்௴ 15௳யில் 347-நி. உத்திரவு சாதரானதுக்கு நான்போய் பார்த்ததில்கணைப்பிளக்கயில்லையென்றும் அடியில் பொத்து விட்டிருந்ததை அடைத்திருக்கிறதாகவும ஷை ௵ நவம்பர்௴ 6௳யில் 318-நி. அர்ஜியும எழுதிக்கொண்டிருக்கிறேன்.

அப்பால் வாலாதநல்லூர் கிராமத்தார் ஷை வாய்க்காலை வெட்டி தூத்துப்போட்டதாக பிருசில்கண்டபடி என்னுடனேயும வந்து சொல்லிக்கொண்டார்கள். நானும் போய பார்த்தேன் வாய்க்காலை யிடித்திருந்தபடியினாலே அதற்கு பேஜி௸திரேட்டு தறப்பில் ரூ 0-8-0-அபராதமும் விதித்து இனிஅந்த ஜோலிக்குப்போகாமல் இருக்கும்படிக்கும தாக்கீது செய்திருக்கிறேன்.

ஷை வாய்க்காலில் வைகநல்லூர் கிராமத்தார் பொத்து விட்டிருந்ததை அசூர் உத்திரவுப்படி மூடியிருக்கிறதேயல்லாமல் வேறில்லை வாய்க்கால்களில் சராகமாய் ஜலம் வந்து வைகநல்லூர் கிராமத்துக்கும் கீழ்முகம் கிராமத்துக்கும் சராகமாய் பாய்ந்து வருகிறது.

இது சங்கதியைக்குறித்து பிராதுக்காரர்கள் சமுகத்தில் பிராது குடுத்தபடியே மேஸ்தர் ஆன்ச்லோ துரையவர்கள் சமுகத்தில் பெட்டீஷன் குடுத்ததுக்குரிப்போர்ட்டு செய்யும்படி இண்டார்சு உத்திரவு வந்தபிரகாரம் நடந்த சங்கதி அறிக்கை செய்திருக்கிறேன். பெட்டீஷனும் அனுப்பியிருக்கிறேன்.

1840-௵ ஜனவரி௴ 25௳, குளித்தலை.	(ஒப்பம்.)	குப்பய்யர், தாசில்தார்.

No. 15.

1840-௵ ஏப்பிரல்௴ 17௳ யுள்ள 108-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் ஆர்தர்பூவி ஆன்சலோ துரையவர்கள் சமுகத்துக்கு.

முசிரி தாலூகா ஆ. தாசில்தார் வரதராவு மிகவும் வணக்கத்துடனே சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

யென்னவென்றால் ஷை தாலூகா ஒருவந்தூர் கிராமத்துக்கு சேலம் ஜில்லா மொகவனூர் கழிவு ஜலம் வளக்கமாய் வந்து பாய்கிறது அப்படிக்கு மாமூலாய் வந்து பாயப்பட்ட கழிவு ஜலத்தை ஷை மொகவனூர் கிராமத்தார் சருகமாய் விடாமல் காவேரியில் வெட்டி விடுகிறதும் தவிர கழிவு இரங்கப்பட்ட முகதுவாரத்தில் சிறிது கவுறுகளை முன்னாலே அளித்துப்போட்டும களிவு யெறங்காமல் இருக்கும்படியாய் முகதுவாரத்துக்கு சமீபத்திலிருக்கிற நிலங்களில் விஸ்திரிச்சு வாழை சாகுபடி செய்திருக்கிறதுனாலே களிவு ஜலம் விஸ்தரித்து யெறஙகாமல் சொல்பமாய் வந்துகொண்டிருக்கிறது. அப்படிக்கு வரப்பட்ட களிவு ஜலத்தையும் சராகமாய விடாமல் யிருக்குறதுனாலே ஷை ஒருவந்தூர் கிராமத்துக்கு அடிக்கடி ஜலத்தட்டு நேரிட்டு அதனாலே சாகுபடியான தாளடி பயிர்கள் காச்சல் குடுத்துயிருக்குறதென்றும் ஷை மகஜணம் காறசோன் ரிப்போர்ட்டுமெசட்டு சொண்டதின்பேரில் ஷை இலாகா நாமக்கல் தாலூகா தாசில்தாருக்கு ஷை மொகவனூர் கிராமத்தாருக்கு தாக்கீதுசெய்து கழிவ ஜலம் மாமூல்படிக்கி தாராளமாய விடும்படிக்கு 4-தடவை கடிதாசிகள் எழுதி அனுப்பிவிச்சதற்கு அந்தப்படி கழிவு ஜலம் விடும்படி தாக்கீது செய்திருக்கிறதாய் கடுதாசிகள் மட்டும் எழுதியனுப்பிவிச்சி யிருக்கிறாரோ தவிர அந்தப்படி ஜலம் வந்து பாய்கிறதில்லை. பின்னும ஷை மொகவனூர் கிராமத்தார் கழிவு வாய்க்கால் வறப்பட்டயிடத்தில இருபக்கமும் வாழை சாகுபடி செய்திருப்பதினாலே அதில் விஸ்திரிச்சு ஜலம்வந்தால வாழை அழுகிப்போகுமென்று அதற்கு மேற்காலே தானே ஜலத்தை காவேரியில் அவாள் எல்லையில்தானே அடிக்கடி வெட்டிவிடுகிறதும் கழிவு ஜலம் தாராளமாய் விடாமல் குந்தகப்படுத்திக்கொண்டு வருகிறதுனாலே தாளடிபயிர்கள் காச்சல் குடுத்துயிருக்கிறது. நான் அது சங்கதியைக்குறித்து நாமக்கல் தாசில்தாருக்கு கடுதாசி எழுதி அவர் ஷை கிராமத்துக்கு தாககீதுசெய்த உடனே அப்போது கழிவு ஜலத்தை 4-நாளைக்கு மட்டும் அடைச்சு தாராளமாய் விடுகிறதும் அப்பால் விடாமல் குந்தகம்செய்து வருகிறார்கள் அப்படிக்குகுந்தகம்செய்து வறப்பட்டதை குறித்து மறுபடி ஷை தாசில்தாருக்கு கடுதாசி எழுதினால் அவர்கள் பார்த்து ஜாக்கிறதை செய்யாமல் ஷை மொகவனூர் கிராமத்தார் சொல்லப்பட்ட வார்த்தையைத்தானே மஞ்சூராய் எண்ணிக்கொண்டு ஜலம் சராகமாய் வந்து கொண்டிருக்கிறதென்று கடுதாசி எழுதியிருக்கிறார்.

ஆனால் தாளடி பயிர்கள், மா. 68-க்கு முப்பத்தஞ்சே முக்காலேவீச அரைவீசம் நிலம் மாத்திரம் பயிராயிருக்கிறதுகளுக்கு ஜலம் சமுர்த்தியாய் வந்து பாயாதவரையில் ஷை பயிர்கள் மடங்கலாக மாட்டாது அந்த கிராமத்துக்கு ஷை மொகவனூர் கழிவு ஜலம் வந்து பாயவேணுமே தவிர வேறை ஆத்து வாய்க்கால் குறம்பு பாச்சல் கிடையாது. ஷை மொகவனூர் கழிவு ஜலம் ஒருவந்தூருக்கு பாயவேண்டியதற்காக நஞ்சையில் கா. 12 நீர்க்கூலிக்காக விட்டுயிருக்கிறதும் தவிர சர்க்காரில் இருந்தும ஷை மொகவனூர் கிராமத்துக்கு நீர்க்கூலிக்காக வருஷம் 1-க்கு ரூ 24-8-0-வீதம் குடுத்து வருகிறதுனாலே ஷை கிராமத்துக்கு மொகவனூர் கிராமததார் கழிவு ஜலம மாமூல்படிக்கி தாராளமாய் விட்டுவரவேணும. அப்படிக்கில்லாமல் ஷை மொகவனூர் கிராமத்தார் கழிவு ஜலம் தாராளமாய் விடாமல் அடிக்கடி குந்தகம செய்துகொண்டு வருகிறதுனாலே ஒருவந்தூர் கிராமத்தில் சாகுபடியான தாளடி பயிர்களுக்கு சில தட்டுநேரிட்டு சாவி நேரிடும்போல யிருக்கிறது.

ஆகையால் ஒருவந்தூர் கிராமத்துக்கு மொகவனூர் கழிவு ஜலம் மாமூல் பிறகாரம தாராளமாய் விடும்படிக்கு நாமக்கல் தாலூகா தாசில்தாருக்கு கண்டிப்பாய் உத்திரவாகும்படி ஷை சேலம் ஜில்லா கலெக்ட்டர் துரையவர்களுக்கு லெட்டர் அனுப்பிவிக்கும்படியாய் உத்திரவாக வேண்டிய சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன.

1840-௵ ஏப்பிரல்௴ 17௳, மு. முசிரி.	(ஒப்பம்.) (மகாராஷ்டத்தில்)	வறதராவ், தாசில்தார்.

No. 16.

1840-௵ ஜனவரி௴ 27௳ யுள்ள 26-நி.

திருச்சினாப்பள்ளி சுபா கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் ஆர்த்தாமுனி ஆன்சலோ துரையவர்கள் சமுகத்துக்கு உடையார்பாளையம் தாலூகா தாசில் தாவீத்துப்பிள்ளை வணக்கமாய் எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் மதனக்குருச்சி அப்புபடையாச்சி கடந்தப்படையாச்சி யிரண்டுபேர் தங்களூர பெரியேரிக்கி வரப்பட்ட வரத்துவாரி ஜலத்தை வ ழுக்குருச்சி கிராமத்தார் துராகிருதமாய் கொண்டுபோகிறதாக கண்டு குடுத்த பெட்டீஷனில் பெட்டிஷன் சங்கதி விசாரித்து அறிவிக்கும்படி அக்டோபர்௴ 8௳யிலான 16-நி, யெண்டார்சு வந்தது,

அது காரியத்துக்கு உத்திரவுபடிக்கு பெட்டீஷன் சங்கதி விசாரணைசெய்ய பெட்டீஷனில்கண்டஎதிரிக்கும் சாட்சிக்கும் அழைத்துவர சம்மன் குடுத்ததில் சாட்சி அப்பச்சி உடயான் 1, ருமசாமிபடையாச்சி 1, பெரிய தம்பிபடையாச்சி 1, காரக்குருச்சி கணக்கு வெங்கிடசுப்பய்யன் 1, யெதிரி ராமசாமி அய்யங்கார் 1, அப்புபடையாச்சி 1, யிந்த 6 பேர் வந்தாஜருனார்கள். அவர்களை விசாரணைசெய்து வாங்கின வாக்குமூலம் 6, பெட்டீஷன் 1, ஆக 7-யும் இதில் அடக்கம் செய்திருக்கிறேன் சுலாவணியாக விசிதமாகும்.

ஷை வாக்குமூலங் களினாலே பார்க்கும்பொழுது காறக்குரிச்சி கிராமத்து வயலில் பெய்யப்பட்ட மழையில் வயலுக்கு அதிக ஜலம் உண்டான பிறகு மதனக்குரிச்சி யேரிக்கு தெக்கேயும் வாழக்குரிச்சி யேரிக்கி கீழ்பர கிரும ஏல்லையிலும ஆதியடி மடையெண்டு யிருப்பதில் வயலுக்குமேல் வறப்பட்டஜலத்தில் ஒரு கண்டருயமடைகொண்ட ஜலம் கிழக்கே பேயிக்கொண்டும் வந்ததாக தெரியவருகிறது அப்படிக்கிருக்க மதனக்குரிச்சி கிராம யேரிக்கி ஜலம்போக ஒட்டாமல் வாழக்குரிச்சி கிராமத்தார் யேரியால் ஷை மடவாய் வறையில் நூதனமாய் ஆழமாய் வாரி வெட்டிவந்து ஷை மடையையும் ஆழ அகலமாய் வெட்டிவிட்டதினாலே வயல்களில் பேயப்பட்ட ஜலம் முழுக்க மதனக்குரிச்சிக்கி போகுறதுக்குயில்லாமல் வாரிவழியாக வாழக்குரிச்சி யேரிக்கு ஜலம்போகுறதாகவும் சாட்சியினாலும் எதிரி குடுத்த வாக்குமூலத்தினாலே தானேயும் தெரியவருகிறது.

தகரூர் சொல்லப்பட்ட இடத்தை நான்போய் பார்த்தேன் மதனக்குருச்சி யேரிக்கு ஜலம்போகும் காறகுரிச்சி வயல் ஜலத்தை ஷை யேரிக்கு போக ஒட்டாமல் நூதனமாய் வாழக்குரிச்சி கிராமத்தார் வாரி ஆழமாக வெட்டி மடையும் ஒரு கெஜம் ஆழம் ஒரு கெஜத்துக்குமேல் அகலமும் யிருக்கும்படி வெட்டப்பட்டிருப்பதினாலே மழை நாளையில் உண்டாகும் ஜலம் மதனக்குரிச்சிக்கி வழக்கப்படிக்குப்போகுறதுக்குயில்லாமல் தவக்கப்பட்டு வாழக்குரிச்சி யேரிக்குததானே போகும்படியாக இருக்கிறது.

மதனக்குரிச்சி கிராமம் பெரியேரி பாச்சல் பாரி நஞ்சை புஞ்சைத்தோட்ட முளகாய் வகையரு சாகுபடி விஸ்தாரம் வாழக்குரிச்சிக்கு நஞ்சையே கிடையாது புஞ்சை முளகாய் சாகுபடியாகப்பட்ட கிராமம் வாழக்குரிச்சி கிராமத்தான் குடி பஸ்துயுள்ளவனானதினாலே ஜபர்தஸ்தியின்பேரில் வழக்கத்துக்கு விரோதமாக வாரிவெட்டி அதிக ஜலம் கொண்டுபோகிறதினாலே மதனக்குரிச்சி யேரிக்கி ஜலம்போக தவக்கமுண்டாகி வருகிறது.

ஆகையால் பாரி கிராமமாகிய நஞ்சை பெருத்த மதனக்குரிச்சி யேரிக்கி இரண்டு பங்கு ஜலம்போகும்படியாகவும் ஒரு பங்கு ஜலம் வாழக்குரிச்சி யேரிக்குப்போகும்படியாகவும் நிதானம்பார்த்து மடைவைத்து விடும்படியாகவும் விடப்பட்ட மடையின் நிதானத்துக்கு அதிக ஜலம் கொண்டுபோனால் பாரிச்சை நடக்கும்படியாகவும் அறிவித்து திட்டப்படுத்தும்படி உத்திரவானால் இரண்டு கிராமத்து ஏறிக்கும் குந்தகமில்லாமல் ஜலம்போய் சாகுபடியாகுமென்று காணப்படுகிறது சங்கதி தெரியலாவதாய் எழுதிக்கொண்டேன்.

1840-௵ ஜனவரி௴ 27௳,
ஜெயங்கொண்டசோழபுரம். } (ஒப்பம்.) தாவீதுப்பிள்ளை,
தாசில்தார்.

No. 17.

1844-௵ நவம்பர்௴ 12௳ யுள்ள 634-நி.

திருச்சினாப்பள்ளி சுபா வகையரு கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் ஆர்தர்பூவி ஆன்சலோ துரையவர்கள் சமுகத்துக்கு லாலுகெடி தாலூகா தாசில் புஜங்கராவு வணக்கத்துடனே சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

யென்னவென்றால் இஸ் அயனெஸ் நவாபுசாயபு அவர்கள் நாயர் எழுதிக்கொண்ட அர்ஜியை அனுப்பிவிட்டிருப்பதாயும் அதில்கண்ட கோமாகுடி கிராமத்து நத்தடுனாலாவில் அணையேத்தம வைக்குறதைக் குறித்து விசாரித்து அபிப்பிராயத்துடனே அறிக்கைசெய்யச்சொலலி ஜூன்௴ 7௳யில் பிறந்த 533-நி. சன்னது 8௳ சாதாரகியிருக்கப்பட்ட காரியத்துக்கு.

ஷை நத்தடுனாலா பாச்சல் கீழ்முகம் சங்கேந்தி நஞ்சை வெள்ளனூர் இந்த கிராமத்தாரை வறவழைத்து விசாரித்ததில் சங்கேந்தி மகா ஜனங்களில் ருமசுவாமி அய்யன் என்பவன் வருஷத்தில் ஒரு தடவை யிரண்டு தடவை கோமாகுடிக்கு அணையேத்தம் வைக்குறதினாலே குந்தகமில்லையென்று சொல்லி வாக்குமூலம் கொடுத்தான்.

மைத்தொரு மகாஜனம் அண்ணவய்யன் என்பவன் ஷை கோமாகுடிக்காக கட்டி யிருக்கப்பட்டமதகு பள்ளமாயும் நத்தடு நாலாவாக்காலில் மேடாயும இருப்பதினாலே ஷை குமுமி வழியாய் ஜலம்விடடால் குந்தகமாகுமென்று சொல்லி வாக்குமூலம் குடுத்தான்.

வெள்ளனூர் கிராமத்தான் ஷை குமுமி வழியாய் ஜலம்விட்டால் குந்தகம் சம்பவிக்குமென்றும் ஷை கோமாகுடிக்காக யேற்பட்டிருந்த வாய்க்கால் வழியாய் ஜலம்போனால் அதனாலே சமீபத்திலிருக்கிற தங்களுடைய தீர்வைப்பட்ட பூவாசி நிலத்துக்கு நீர் பிடியாகுமென்றும் ஷை கோமாகுடிக்கு நூதனமாய் குமிழி யேற்பட்டதே தவிர அது வழியாய் ஜலம்போனதில்லை யென்றும் ஷை குமிழி வழியாய் ஜலம்விடாமல் இருக்கும்படியாய் மாஜி தாசில் கோவிந்தராயர் பேரால் உத்திரவு வந்திருப்பதாயும் சொல்லி வாக்குமூலம் குடுத்தார்கள். *ஷை குமுமி சங்கதியைக்குறித்து முன்னாலே யென்ன நடந்திருக்கிறதென்று பார்த்ததில் ஷை கோமாகுடி கிராமத்துக்காக நத்தடு நாலாவில் சின்னதாய் குமுமி கட்டினால் குந்தகம் காணப்படயில்லையென்று மாஜி தாசில் சபாபதிபிள்ளை எழுதிக்கொண்ட அர்ஜிக்கு அருவிருந்து உத்திரவு வராமல் இருக்க உத்திரவன்னியில் ஷை கோமாகுடி கிராமத்தார் ஒரு கெஜ பள்ளத்தில் கருங்கல்லினால் குமுமி கட்டியிருப்பதாயும் அதினால் கீழ் முகத்துக்கு குந்தக வருமென்று காணப்படுவதாக மாஜி தாசில் கோவிந்தராயர் 1832-௵ ஜூலை௴ 21௳யில் அர்ஜி யெழுதிக்கொண்டதற்கு ஷை குமுமி வழியாய் ஜலம் கொண்டுபோகாமல் தாக்கீது செய்யச்சொல்லி சில விவறம்சண்டு ஷை ௵ ஆகஸ்டு௴ 8௳யில் 532-நி சன்னது சாதராகி இருக்கிறது

பிதவி ஷை கிராமத்துக்குப்போய் ஷை குமுமியையும் வெள்ளனூர் கிராமத்து பூவாசி நிலத்தையும் சுத்திப்பார்த்ததில் நத்தடு நாலாவாய்க்காலில் வெள்ளனூருக்கு மேல்புறமாய் 1-கெஜ பள்ளத்தில் ஒரு கணவாய் வைத்து கருங்கல்லினுல் குமுமி கட்டப்பட்டிருக்கிறது நாலே வாய்க்கால் நீரோடிக்குமுமியின நீர்மட்டம் தணிவாயிருக்கிறது.

வெள்ளனூர் பூவாசி நிலத்தில் நீர்ப்பிடியாகுமென்று சொல்லப்பட்டதை பார்க்குமிடத்தில் ஷை கோமாகுடி கிராமத்தான் ஷை குமுமி வழியாப் ஜலம் கொண்டுபோகிறதற்காக முன்னுலே ஒரு வாய்க்கால் வெட்டியிருக்கிறுன் ஷை வாய்க்காலுக்கு சமீபமாயிருக்கிற தரிசு மேட்டாங்காடு நிலங்களில் வருஷிக்கப்பட்ட மழை ஜலம் ஷை வாய்க்கால் வழியாய் கோமாகுடி யேரிவரையில் போகுறது. ஷை வாய்க்காலுக்கு கரை துரஸ்த்து யில்லாத்தனுலே ஷை மழை ஜலம் உபரியாய் வரும்போது அதற்கு சேந்தரணையான பூவாசி நிலங்களின்பேரில் ஒரு நாள் அல்லது ரெண்டு நாள் சொல்ப ஜலம் போகுறதாய் தெரிய வருகிறது.

அதைக்குறித்தும் ஷை குமுமி வழியாய் ஜலம்போனது உண்டாவென்றும் கோமாகுடி கிராமத்து குடிகளை கேட்டதில் வெகு நாளைக்கு முன்னே சாந்தாயி வாய்க்கால் என்று நத்தடு நாலாயில் வாய்க்கால் ஏற்பட்டு பாஞ்சு வந்ததாயும் அப்பால அது மேடிட்டுப்போனதையிட்டு சாந்தாயி வாய்க்காலே வெள்ளனூர் கிராமத்தானுக்கு பரிவர்த்தனைவிட்டு ரூ. 25-கிரயமும் குடுத்து அந்த கிராமத்து தரிசியில் கா. 2, கு. 55, நிலம் சாசனம் வாங்கி சர்க்கார் உத்திரவுப்படி 32-ஸ்லத்தில் குமுமி கட்டி ஜலம் கொண்டுபோனதாயும அப்பால் சர்க்கார் உத்திரவுப்படி நிருத்தலாகி யிருப்பதாயும் அந்த வாய்க்கால் வழியாய் ஜலம்போனுல் வெள்ளனூர் பூவாசி நிலத்துக்கு சேதமில்லையென்றும் சொல்லி வாக்குமூலம் கொடுத்தார்கள்.

அதைக்குரித்து வெள்ளனூர் கிராமத்தானை கேட்டதில் கோமாகுடியான் ஒரு சாண் அகலம் ஓசரத்தில் குமுமி கட்டிக்கொள்ளுகிறதாக கேட்டதனுலே சாசனம் பண்ணிக்குடுத்ததாகவும் அந்தப்படி கூடாமல் பெரிசாய் கட்டினதனுலே சம்மதி யில்லையென்றும் வாக்கு மூலத்தல் சொல்லியிருககிறுர்கள்.

இதின்பேரில் பார்க்கும்போது ஷை கோமாகுடி கிராமத்து பங்காளி வாய்க்காலில் தலவு யேற்பட்டு நஞ்சையும் யெறப்புமேடும 30-செய்யும் நத்தடு நாலா வாய்க்காலில் 150-செய்யும் இந்தபபடி பாச்சல் என்றும் ஷை நத்தடு நாலா வாய்க்காலின் வழியாய் ஜலம் போகாததனுலே நஞ்சை சாகுபடியாகிறதற்கில்லாமல் யிருப்பதாக தெரியவருகிறது.

ஆனுல் கோமாகுடி கிராமத்தான் கட்டியிருக்கிற குமுமி நீர்மட்டத்துக்கு பள்ளமாயும் ஷை வாய்க்கால் சொல்ப மேடாயும் இருப்பதனுலே ஷை குமுமியை திறந்துவிட்டால் அது வழியாய் உபரி ஜலம் போலேயும் கீழ் முகம் கிராமங்களுககு ஜலத்தட்டு நேரிடும்போலேயும் காணப்படுவதனுல் அந்தக்குமுமி வழியாய் ஜலம் கொண்டுபோகக்கூடாதென்று வெள்ளனூர் கிராமத்தான் சொல்லுகிறுன. ஷை கோமாகுடி வாய்க்கால் இருபுறமும் கரை உசத்தி பலப்படுத்தி குமுமியில் நீர்மட்டத்துக்கு அரைகெஜம் உயர்த்தி கணை வாயைக்குருக்கி ஜலத்தட்டு நேரிடும்போது மற்ற கிராமங்களுக்கு அணையேத்தம் வைக்குற ஒப்பந்தம் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை ஷை கோமாகுடி கிராமத்துக்கும் அணையேத்தம வைககுறதுனுலே குந்தகம நேரிடமாட்டாதென்று காணப்படுகிறது. மாரி நாளையில் மழை ஜலம் ஷை கோமாகுடி வாய்க்கால் வழியாய் போகலாமானுல் அந்தக்குமுமி வழியாய் ஜலம் விடவேணடியதில்லை யென்றும் முன்னுலே உத்திரவு சாதருயிருக்கிறது.

ஆகையால் ஷை சங்கதி விசாரணையில் யேற்பட்ட வாக்குமூலம் 4, அசல் பெட்டீஷன் 1, வெள்ளனூர் கிராமத்தான் கோமாகுடி கிருமத்தானுக்கு நிலம் சாசனம பண்ணிக்கொடுத்திருப்பதற்கு சாசனம் நகல 1, அசுர் சன்னது நகல் 2, ஆக தஸ்தாவேசு 8-ம் இதில் அடக்கமாய் அனுப்பிவிச்சிருக்கிறேன். சுலாவணியாகிறதனுலே விசிதமாகுமானதால் இது சங்கதி சித்தமரியவாவதாய் எழுதிக்கொண்டேன். உத்திரவு வருகிறபடி நடந்துகொள்ளுகிறேன்.

(ஒப்பம்.) எ. ஜவாபு நவிஸ். (ஒப்பம்.) புஜங்க ராவ்,
,, அன்னவயயங்கார். (மகராஷ்ட்டத்தில்) தாசில்தார்.

No. 18.

1844-ஸ்லு டிசம்பர்மீ 7உ யுள்ள 1149-நி.

திருச்சினுப்பள்ளி சுபா வகைரு கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் யெபி ஆன்சலோ துரையவாகள் சமுகத்துக்கு.

கோனுட்டு தாலூகா தாசில் சின்னசாமிபிள்ளை வணக்கமாய் சலாம்செய்து யெழுதிக்கொண்ட அர்ஜி

என்னவென்றுல் இந்த தாலூகா மாங்காணம் கிராமத்தார் திருவாதி தாலூகா சொக்குடிப்பட்டி யேரிக்கி ஜலம் வரப்பட்ட வாரியை குருக்கை அடைததிருககிறதாய் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் துரையவர்கள் பேருல் திருவாதி தாலூகா தாசில்தா எழுதிய அர்ஜிபில கண்ட சங்கதியை விசாரித்து அரிவிக்கும்படியாய் சில விவரம்கண்டு நாளது மீ 3உயில் பிறந்த 1561-நி. உத்திரவு சாதராச்சுது.

ஷை உத்திரவு வருகிறதற்கு முன்னமே தஞ்சாவூர் ஜில்லா டலாயத்துடனே ஒரு உத்தியோகஸ்தனை அனுப்பி பாத்து வரச்சொன்னதில் எந்த இடத்தில் வாரியை குருக்கை அடைச்சதாக சுறக்குடிப்பட்டி கிராமத்தார் சொல்லுகிறுர்களோ அந்த இடத்தில் மாமூலாய் கரையிருந்ததாகவும் சில வருஷத்துக்கு முன் ஒடப்பு சம்பவித்து சர்வேர் மேஸ்தர் கெயிறைவர்கள் 1252-ம் பசலியில் இஷ்டுமெண்டு பார்த்து சர்க்கார் மருமத்தின்பேரில் ஷை ஒடப்பை அடைத்து மஜபூத்து செய்யப்பட்டிருக்கிறதாகவும் தெரியவருகிறது.

இதே ஜாகாவில் சுறக்குடிப்பட்டி கிராமத்தார் மாமூலுக்கு விரோதமாய்ப்போன அற்பசிமீ த்தில் கரையை வெட்டி விட்டு ஜலம் கொண்டுபோனதாக மாங்காணம் கிராமத்தார் தாலூகாவில் பிருது செய்ததின்பேரில் முஜமுதார் பார்த்து ரிப்போர்ட்டு செய்த சங்கதியைக்குறித்து அஜூருக்கு தெரியப்படுத்தினதில் ஷை கரையை துராகிருதமாய் வெட்டினதற்காக மேஸ்திரேட்டு தரப்பில் விசாரணைசெய்து திட்டப்படி நடப்பிவிக்கச்சொல்லி நவம்பர்மீ 15உயில் பிறந்த 179-நி. உத்திரவுடனே அஜூரிலிருந்து வந்த சம்மன அனுப்பிவித்ததில் அவர்களில் ஒருவனாவது அகப்படவில்லையென்று வாறண்டு பிடித்த சேவுகன் ரிட்டர்ன் செய்திருக்கிறான்.

இது தவிர ஷை கரையை வெட்டிவிட்ட பேர்களைக்கொண்டு தானே மருபடி அடைக்கும்படியாய் ரிவின்யூ தரப்பில் 1523-நி. உத்திரவு சாதராகி யிருக்கிறது.

மேலும் ஷை காட்டுவாரியானது தெற்கு வடக்காய் தொண்டமானூர் சீமையில் வெகு தூரத்திலிருந்து மழைபேஞ்சால் ஜலம் வரப்பட்டதாயிருக்கிற ஒரு பெரிய வாரியாய் வருகிறது.

இதிலிருந்து தஞ்சாவூர் சீமை சுறக்குடிப்பட்டி கிராமத்து யேரிக்கி ஜலம்போக இத்துடனே வருகிற பிளானில்கண்ட 1, 2, 3 லக்கம் போடப்பட்டிருக்கிற 3-பக்கத்தில் தனியாய் பிரிவு பிரிஞ்சி போகிறதாயும் அப்பால் ஷை மாங்காணம் கிராமத்து யேரிக்கி ஜலம்போகப்பட்ட ஷை வாரிக்கரையில் ஒரு ஓடப்பு சம்பவித்து அந்த மார்க்கமாய் வாரி ஜலம் முழுவதும் சுறக்குடிப்பட்டி யேரிக்குத்திரும்பிப்போகும் படிக்கான சுயதுவாய் இருப்பதைப்பத்தி முன்னாலே சர்வேர் கெயின்றல் யெஸ்ட்டுமெண்டு பார்க்கப்பட்டு ஓடப்பு அடைத்திருக்கிற ஜாகாவைத்தானே தங்கள் யேரிக்கு ஜலம் வரப்பட்ட பிரிவாயி ஸ்தாபித்துக்கொள்ள வேணுமென்று சுறக்குடிப்பட்டி கிராமத்தார் ஏற்பட்டு கொண்டு இப்போது அந்த ஜாகாவில் 12-கெஜ நீளத்துக்கு வெட்டி விட்டிருக்கிறதாகவும் தெரியவருகிறது.

அப்படிக்கி அவர்கள் வெட்டி விட்டதும் அந்த வெட்டு வாயில் மாங்காணம் கிராமத்தார் மாமூல்படி கரைப்போட்டால் சுறக்குடிப்பட்டி கிராமத்தார் தூராடசேபனை செய்கிறதும் சரியாய் காணப்படயில்லை. ஷை சுறக்குடிப்பட்டி கிராமத்தார் துராகிருதமாய வெட்டி விட்டிருக்கிற ஜாகாவை உடனே அடைத்து பலப்படுத்தாவிட்டால் இந்த இலாகா ஷை மாங்காணம் கிராமத்து யேரிக்கி சுத்தமாய் ஜலம் வறமாட்டாதென்றும் அதினாலே சர்க்காருக்கு லுச்குசான் சமபவிக்குமமென்றும் தெரியவருகிறது.

ஷை வாரியில் இப்போது ஜலம் வரத்துயில்லை. மழைகாலத்தில் ஜலம் கொண்டுபோகப்பட்டதாகையால் இந்த தகரூர் ஜாகாவுக்கு முன்னுதாகவே சுறக்குடிபபட்டி கிராமத்தாருக்கு 3-பிரிவு யிருப்பதினால் அதில் ஜலம் வரத்துப்போராமல் போனால் இன்னம் கொஞ்சம் பள்ளமாய்வெட்டி விடவேண்டியதும் இப்போது வெட்டியிருக்கிற தகரூர் பட்டயிடத்தில் மாமூல்படி கரைப்போட்டு மஜபூது செய்யவேண்டியதும் ஞாயமாய் காணப்படுகிறது.

இதற்காக பிளான் 1, கர்ணன் வாக்குமூலம் 1, நாட்டுக்கர்ணன் ரிப்போர்ட்டு 1, திருவாதி தாலூகா தாசில்தார் அர்ஜி நகல் 1, ஆக நாலையும் இத்துடனே அனுப்பி யிருக்கிறதுமல்லாமல் தஞ்சாவூர் ஜில்லா டலாயத்தையும் சமுகத்துக்கு அனுப்பியிருக்கிறேன்.

1844-ஸ்ரீ டிசம்பர்மீ 7உ,
மு. திருச்சினாப்பள்ளி.

(ஒப்பம்.)

இ. சின்னசாமிபிள்ளை,
தாசில்தார்.

No. 19.

1847-ஸ்ரீ அக்டோபர்மீ 2உ யுள்ள 267.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆ. கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மே. உல்லியம் யெல்யாட் துரையவர்கள் சமுகத்துக்கு.

கோனாட்டு தாலூகா தாசில் புஜங்கராவு வணக்கமாய் சலாம்செய்து யெழுதிக்கொண்ட அர்ஜி.

மலைக்கோவில் மவுனத்தம்பிரான் கட்டளையைச்சேர்ந்த விட்டுக்கடடித் தாலூகா மேக்குடி கிராமத்துக்குடி பளனிமளவரான வகையறாப்பேர்கள் இந்த தாலூகா பஞ்சப்பூர் கிராமத்து குளத்துக்காக ஷை மேக்குடி கிராமத்து புஞ்சை நிலத்தில் போன ஸ்ரீபத்தில் நூதனமாய் வாரிவெட்டினதைக்குறித்து தாங்கள் ஆட்சேபித்ததின்பேரில் அதை நிருத்தப்பட்டிருக்க இப்போது அந்த வேலைக்காக இஞ்சினீர் துரையவர்கள் யெஸ்டிமெண்டு பார்த்தருக்கிறதாகவும் அந்தப்படி வேலை நடப்பிவித்தால் தங்கள் கிராமத்து புஞ்சை நிலங்களுக்கு நீர்ப்பிடியலும் சாகுபடி குந்தகமும் நேர்டுமென்று சில விவரம் கண்டு உசூரில் குடுத்த பிட்டீஷனில் இஞ்சினீர் துரை .... நடப்பி விக்குறதில் பிட்டீஷனர்களுக்கு நஷ்ட முண்டாக .... செய்யுமபடி 485-நி. இண்டார்சும் அதே யெனற 2-க்கு ஷை மவுனத்தம்பிரான் குடுத்த பிட்டீஷனில் 483-நி. இண்டார்சும சாதராகியிருக்கிறது மன்னியில் ஷை வேலை நடப்பி விப்யாத வரையில் ஷை பஞ்சப்பூர் யேரிக்கு போதுமான ஜலம் வராமல் சாகுபடி குந்தகம் சம்பவிக்குமென்றும் அதினாலே ஷை மேக்குடி கிராமத்தாருக்கு யாதொரு பாதகத்துக்கிடமிலலாமல் இருக்க வீணாய் ஆட்சேபிக்கிறார்கள் என்று ஷை பஞ்சப்பூர் குலாயமொய்தீன் சாயபு எழுதிக்கொண்ட பிடடீஷனில 495-வது நி. இண்டார்சு உத்திரவும் சாதராச்சுது.

அது காரியத்துக்கு இஞ்சினீர் துரையவர்கள் இஸ்டிமெண்டு பார்க்கும்போது பிதவியும் கூடப்போய் ஷை ஜாகாவை பார்த்திருக்கிறதில் ஷை மேக்குடி சரகத்து வழியாய் வரப்பட்ட வாரியை அடைத்து பஞ்சப்பூர் யேரிக்கி ஜலம் கொண்டுபோகவேண்டிய விஷயத்தைக்குறித்து பிருக்கு வருஷத்தில் தகரூர்பட்டயிடம் ஷை மேப்க்குடியைச்சேர்ந்த வெகுநாளைய புஞ்சை தரிசாயிருந்தபோதிலும் அது ஓழு வேலை சாகுபடிக்கு உபயோகப்படலாமென்கிற எண்ணத்தின்பேரில் இப்போது அதற்கு 280-கெஜ தூரத்திற்கு கிழக

கே ஷ்டி வாரி ஜலத்தை அணைபோட்டுத் தெக்கி ஒரு வாய்க்காலும் வெட்டி அது வழியாய் ஷ்டி பஞ்சப்பூர் யேரிக்கு ஜலம்கொண்டுபோகலா மென்று பார்த்து அதற்காக ரூ 25 ஷ்டி துரையவர்களால் இஸ்டிமெண்டு பார்க்கப்பட்டு அந்தப்படி வேலையை நடப்பிவிக்கும்படியாய் உசூர் 847-நி. உத்திரவு சாதரகி வருக்கிறது மன்னியில் அதற்காக விவரமான ஸ்கெச்சும் உசூர் மராமத்து டைபிரண்டாண்டு அனுப்பியிருக்கிரூர் அந்த யிடத்தில் சொல்பதூரம் ஷ்டி மேக்குடி கிராமத்து சரகத்தாயிருந்தபோதைக்கும் அது வெகு நாளாய் சாகுபடியாகாத தரிசாயி நககிறதே யல்லாது சாகுபடிக்கும் உபயோசமான நிலமாயிருக்கவில்லை.

ஷ்டி கிராமத்து குடிகளும் இனம்தாருகிய தம்பிரானும் ஆட்சேபிக்கப்பட்டதை பார்த்தால் தங்கள் கிராமத்து எல்லையில் வாய்க்கால் வெட்டி ஜலத்தை கொண்டுபோகக்கூடாதென்று வீணாய ஆட்சேபிக்கிரூர்களே யில்லாது இவர்களுக்கு யாதொரு பாதகமும் மயிருப்பதாய் தோணப்படவில்லை.

ஆகையால் ஷ்டி அசல் பிட்டீஷன் 3-ம் அனுப்பியிருக்கிறது மன்னியில் சூப்பிரண்டாண்டு அனுப்பிய ஸ்கெச்சுக்கு நகலும் அனுப்பியிருக்கிற சங்கதி சித்தமரியவாவதாய் எழுதிக்கொண்டேன.

1847-ஹு அக்டோபர்மீ 2உ, மு. திருசசினுப்பள்ளி. } (ஒப்பம்.) (மகாராஷ்டத்தில்.) புஜங்கராவு, தாசில்தார்.

No. 20.

1847-ஹு அக்டோடர்மீ 22உ புள்ள 801-நி.

திருச்சினுப்பள்ளி ஜில்லா ஆ- கலெக்ட்டராகிய மகா-ஈ-ஈ-ஸ்ரீ மேஸ்தர் உல்லியம் பெல்யாட் துரையவர்கள் சமுகத்துக்கு.

கோனுட்டு தாலூகா த சில் புஜங்கராவ் வணக்கமாய் சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

கூத்தப்பாரில் யிருக்கும் பட்டங்குளம் ருமபிள்ளை போர்ட்டில் குடுத்த பிட்டீஷனைக்குறித்து ஷ்டி ஜாகாவைபோய் பார்த்து விசாரித்து ரிப்போர்ட்டு செய்துகொள்ளுகிறதாய் 774-நி. அர்ஜி எழுதிக்கொண்டிருக்கிறதினால் விசிதமாயிருக்குமே.

அந்தப்படி நாளதுமீ 16உயில் பிதவி பிட்டீஷனர் சகிதமாயி ஷ்டி ஜாகாக்களைப்போய் சுத்திப்பார்த்து விசாரித்ததில் முதலாவது பட்டங்குள கிராமத்து புஞ்சைக்கு தேவராயனேரி நஞ்சை கழிவு ஜலம் வருகிறதை தன் கிராமத்து புஞ்சை நிலத்தின்பேரில் தஞ்சாவூர் சீமை ருயமுண்டான்பட்டி கிராமத்தார் மாமூலுக்கு விரோதமாய் வாய்க்கால் பிடித்துக்கொண்டு போகுறதாய் சொல்லப்பட்டதைக்குறித்து ஷ்டி தேவருயனேரி கழிவு ஜலம் பிட்டீஷனருடைய பட்டங்குளம் புஞ்சை நிலத்துக்கு வந்து பாய்குற வழக்கமென்றும் அப்படிககு பாய்ந்ததுபோக மீதியிருந்தால் அது ஷ்டி ராயமுண்டானபட்டி யேரிக்குப்போகுமென்றும் பிட்டீஷனர் ஷ்டி ஜலத்தை விடாமல் பாச்சிப்போட்டால் அந்த கிராமத்துக்கு போகமாட்டாதென்றும் இவன் அந்தப்படி பாச்சாததனுலே ஷ்டி ராயமுண்டானபட்டி கிராமத்தான் அவர்களுடைய யேரிக்கு வாய்க்கால் பிடித்துக்கொண்டுபோகிறர்களென்றும் இதற்கு 5-6-ஹுத்துக்கு முன்னே ஷ்டி ராயமுண்டான்பட்டி கிராமத்தான் துவாகுடி மஜரா ஏறயக்குறிச்சி பட்டியாரிடத்தில் யேரி ஜலத்தை விலைககு வாங்கி புதுசாய் வாய்க்கால் வெட்டி ஷ்டி பட்டங்குளம் யெல்லை வழியாய் ஷ்டி கிராமத்து யேரிக்கு கொண்டுபோனதாயும் அப்பால் அந்த வாய்க்கால் மூடப்படவில்லையென்றும் ஷ்டி கிராமத்து பட்டாமணியக்காரர்களால் தெரியவருகிறது மன்னியில் பிதவியினுடைய கண்பார்வையிலும் ஷ்டி அாயக்குறிச்சிப்பட்டி குளத்து ஜலத்தைக்கொண்டு போன வாய்க்காலும தேவராயனேரி நஞ்சைக்கழிவு ஜலமும் சேர்ந்து சின்னவாரிகளாய யேற்பட்டு அது வழியாய் ராயமுண்டானபட்டி யேரிககி ஜலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

இதின்பேரில் பார்க்கும்போது தேவருயனேரி நஞ்சை கழிவு ஜலத்தை பட்டங்குளம் புஞ்சை நிலத்துக்கு பிட்டீஷனர் பாச்சிக்கொள்ளாமல் விட்டுவிடுகிறதினுலே ஷ்டி ராயமுண்டான்பட்டியான் கொண்டு போகிறதாய் தெரியவருகிறபடியால் இனி அப்படிச்கு விடாமல் ஷ்டி ஜலத்தை மாமூல்படி பட்டங்குளம் பாச்சலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளும்படி பிட்டீஷனருக்கு தாக்கீது செய்திருக்கிறேன். ஆனால் அவன் அந்தப்படிக்கு பாச்சிக்கொள்ளப்பட்ட ஜலத்தை வாய்க்கால் வெட்டிக்கொண்டு போகாமலிருக்கும்படி அவர்களுக்கு தாக்கீது செய்யும்படியாய் சமுகத்திலிருந்து அந்த ஜில்லா கலெக்ட்டர் துரையவர்களுக்கு லெட்டர் அனுப்பும்படி உத்திரவாகவேண்டியதாய் காணப்படுகிறது.

2. அம்மனுப்பட்டிபுறம் போக்கு கழிவு நிலத்தில் முத்திவீறகிரிக்கண்டான் அனுமதியின்பேரில் வளயல்செட்டி ருமன் வகையரா பேர் ஓவடுமெண் யெடுத்து வளையல் வேலைசெய்குறதற்காக காச்சுகிறதுனுலே சர்க்காருக்கும் குடிகளுக்கும் நஷ்டத்துக்கிடமாகிறதாய் பிட்டீஷனில் கண்டிருக்கிற சங்கதி விசாரித்ததில் ஷ்டி ராமன்செட்டி என்குறவன் இப்பால் 4 5-ஹுத்துச்கு முன்னே யெறந்துபோனதாயும் ஷ்டி ஓவடுமண் வளயல் வேலைசெய்யப்பட்டவர்களும் வண்ணன்கள் சலவைக்காசவும் அந்த இடத்சில்நெடுநாளாய் எடுத்து வருகிறதாய் தெரிய வருகிறதே தவிர பிட்டீஷனர் சொல்லுகிறபடி அதினல் நஷ்டத்துக்கிடமிருக்கிறதாய் காணப்படவில்லை. இது சங்கதி விசாரணையில்யேற்பட்ட முத்திவீறக்கிளிச்கண்டான் வாக்குமூலம் 1, தேவராயனேரி வடமலை உடயான் ருமமளவிருன் வாக்குமூலம் 2, சணர்கு அப்பாபிள்ளை வாக்குமூலம் 1, ருமபிள்ளை போர்ட் பிட்டீஷன 1, ஆக தஸ்தாவேசும் 5-ம அனுப்பியிருக்கிறேன்.

1847-ஹு அக்டோபர்மீ 22உ, மு. கஸ்ப்பா, } (ஒப்பம்.) (மகாராஷ்டத்தில்) புஜங்க ராவ், தாசில்தார்,

No. 21.

1849-ஆ ஆகஸ்டுமீ 31வ யுள்ள 200-நி.

திருச்சினாப்பள்ளி சுபா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ-மேஸ்தர் எட்வார்ட் மால்ட்பி துரையவர்கள் சமுகத்துக்கு.

துறையூர் தாலூகா தாசில் வேலைபார்க்கிற வாலிகண்டபுரம் தாலூகா தாசில் குலாமுசேன் சாயபு மிருந்த வணக்கத்துடனே சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

என்னவென்றால் ஷை தாலூகா ஆலத்துடயான்பட்டி கிராமத்துக்கும் சேலம் ஜில்லா கிருமத்துக்கும் இருந்த அணைதகரார் சங்கதி சேலம் ஜில்லா கோர்ட்டில் பைசலானபிறகாரம் முன் அணையிருந்த இடத்தில் கெட்டிகட்டடம் கட்டவும் முன்னிருந்த ஓயரத்துக்கு அதிகமாகாமல் இருக்கும்படி யேற்படுத்தவும் நாமக்கல் தாலூகா தாசில்தார் அந்த ஜாகாவுக்கு வருகிறதாகவும் துறையூர் தாலூகா தாசில்தாரும் வரவேணுமென்றும் ஷை ஜில்லா கலெக்டர் துரையவர்களுடைய லெட்டர் வந்திருப்பதாகவும் பிதவியையும் போய் ஷை நாமக்கல் தாசில்தாருடன் கூடயிருந்து விசாரணைசெய்து நடந்த சங்கதியை தஸ்தாவேஜிகளுடன் அறிக்கைசெய்யும்படி சூலைமீ 27வ யுள்ள 223-நி உத்திரவு சாதராச்சுது.

உத்திரவுப்படி 25வ க்குள்ளாக இருசாலனுப்பிவித்து போட்டு 26வ பிரயாணமாகும் தருணத்தில் நாமக்கல் தாசில்தார் சிறிது சர்க்கார் வேலை ஜரூராய் நேரிட்டிருப்பதாகவும் அதுக்காக 2 நாள் தாலூகாவில் யிருக்கவேணுமென்றும் 28வ வந்தால் தானும் வந்துசேருவதாயும் யாதாஸ்து எழுதி அனுப்பினர். அந்தப்படியே 28வ புறப்பட்டு ஷை ஜாகாவுக்கு போனதில் நாமக்கல் தாலூகா தாசில்தாரும் அந்த ஜில்லா மருமத்து சூப்பிரிண்டெண்டாண்டும் வந்துசேர்ந்தார்கள்.

ஆலத்துடயான்பட்டியில் கிஷ்ணம்பட்டி மகாஜனம் குடிகளை தருவித்து விசாரணை செய்ததில் கல்லாத்துகோம்பையில் வடபுறத்தில் மண் அணையிருந்ததென்று காண்பித்தார்கள்.

முன்னாலே 53-ம் பசலியில் சேலம் ஜில்லா யிலாகா தார்களால் கட்டப்பட்டிருந்த கல் அணையைக்குறித்து இந்த இலாகா ஆலத்துடயாம்பட்டி பாலகிஷ்ணம்பட்டி மகாஜனம் குடிகள் வழக்காடி இரண்டு சுபா கலெக்டர் துரையவர்களும் இஞ்சினீர் துரையவர்களும் வந்து கண்பார்த்து அந்த இடத்தில் கல் அணை கட்டக்கூடாதென்று யிடித்துப்போட்டிருக்கிறதாய் தெறியவருகிற ஜாகாத்தான் மண் அணையிருந்த இடமென்றும் ஷை சேலம் ஜில்லா கோர்ட்டில் பிறந்த தீர்ப்பில் மண் அணையிருந்தயிடத்தில் கல் அணை கட்டிக்கொள்ளும்படி கண்டிருக்கிறதென்றும் முன் கட்டப்பட்டு யிடிபட்டிருக்கிற ஜாகாவில் மறுபடியும் இப்போது 22-கிஜ நீளத்துக்கும் 4-கிஜ அகலத்துக்கும் ½-கிஜ ஓயரத்துக்கும் கல் அணை கட்டி ஷை தாசில்தாரும் சூப்பிரிண்டாண்டும் இஸ்டிமெண்டு யேற்படுத்திக்கொண்டு போயிருக்கிறார்கள்.

ஆலத்துடயான்பட்டி பாலகிஷ்ணம்பட்டி மகாஜனம் குடிகள் முன் மண் அணை யிருந்ததாக காண்பித்த யெடத்துக்கு தென்புறம் 100-கிஜ நீளத்துக்கு அப்பால் இப்போது சேலம் ஜில்லாதார்கள் இஸ்டிமெண்டு பார்த்த இடம் யிருக்கிறது. ஆலத்துடயான்பட்டி பாலகிஷ்ணம்பட்டி குடிகள் காண்பிவித்தயிடத்தில் மண் அணை ஆஜரில்லாத போனபோதிலும் அணைபோல குண்டாங்கல்லுகள் வைத்திருக்கிறதும் தவிர ஜலமும் தேங்கி வயல்களுக்கு பாஞ்சுவருகிறது.

சேலம ஜில்லாதார்கள் இஸ்டிமெண்டு பார்த்தயிடத்தில் கல் அணை கட்டி யிடிபட்டிருக்கிறதாய் தெரியவருகிறது.

இதைக்குறித்து ஆலத்துடயான்பட்டி பாலகிருஷணம்பட்டி மகாஜனம் குடிகள் முன்னாலே கட்டப்பட்டு இடிபட்டிருக்கிற யெடத்தில் மறுபடியும் இப்போது அணைகட்டினால் தங்கள் 2-கிராமத்திலும் சாகுபடியாகப்பட்ட 6000-ரூ பேரிஜ உள்ள நஞ்சை நிலத்துக்கு ஜலம் வராமல் சுத்தமாய் சாகுபடியாகமாட்டாதென்று இன்னும் சில விவரமுங்கண்டு வாக்குமூலம் குடுத்திருக்கிறார்கள். நாமக்கல் தாசில்தாரும் சூப்பிரிண்டாண்டும் கல்லாத்துகோம்பை நஞ்சைக்கு ஜலம் வறத்துயில்லாததினால் முக்கியமாய் கல்லணை கட்ட முயர்ச்சி சொன்னதைப்பற்றி ஷை கல்லாத்துக்கோம்பையில நஞ்சை சாகுபடி செய்யப்பட்ட செல்லபெருமாபிள்ளை என்பவனை விசாரணை செய்ததில் ஷை கல்லாத்து கோம்பையையே 350-ரூ பேரிஜ் உள்ள நஞ்சை சாகுபடியாகுதென்றும் அதில்தான 160-ரூ பேரிஜ் உள்ள நஞ்சை நிலத்தை சாகுபடி செய்து வருகிறதாகவும் ஷை கோம்பைக்கு முதல் தலவு குறம்புவத்து ஜலத்தட்டுயில்லாமல் பஞ்சு மீதி ஜலம் இந்த இலாகா போட்டாபாளையம் யேறிக்கி போயிக்கொண்டுவருகிறதாகவும் இப்போது முன்கட்டப்பட்டு யிடிபட்டிருக்கிற யெடத்தில் மறுபடியும் கல் அணை கட்டினால் ஜலம் தேங்கி கோம்பை நஞ்சை நிலங்களில் மணக்கால் அடித்து சேதமாகுமென்றும் அந்த யிடத்தில் கல் அணைகட்டவேண்டிய அவசாமில்லையென்றும் சில விவரம்கண்டு வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்.

கல்லாத்து கோம்பைக்காக அணைகட்டவேண்டிய அவசரமே யிருந்தால் அந்த கிருமத்து குடிகள் அல்லவோ வழக்காடவேணும்.

அப்படிக்கில்லாமல் அந்த கிருமத்து கணக்கு கிஷ்ணய்யன் என்பவன் மட்டும் வழக்காடுகிறதை பார்த்தால் ஆலத்துடயான்பட்டி பாலகிருஷ்ணம்பட்டி மகாஜனம் குடிகள் கொடுத்திருக்கிற வாக்குமூலத்தில் கண்டிருக்கிறபடி உருதிசெய்ய யெடமாயிருக்கிறது.

கல்லாத்துக்கோம்பை கணக்கு கிஷ்ணய்யன் யெனபவன் முன்னாலே இந்த அணைசங்கதியைக்குறி சிலபேர்க த்து சேலம் ஜில்லா சபாடிநேட்டு கோர்ட்டில் பிருதுசெய்ததில் ஷை கோம்பை குடிகளிலும் ளை வாதியாய் தாக்கல்செய்துயிருந்ததாகவும் அப்பால் அந்தக்குடிகளுக்குத்தெரிந்து தாங்கள் அந்த பிருதுக்கு உள்படவில்லையென்றும் தங்களுக்கு ஜலத்தட்டு யில்லாததனால் இந்த பிருது செய்யவேண்டிய அவசாமில்லையென்றும் 1845-ஆ ஆகஸ்டுமீ 11வ யில் ஷை கோர்ட்டில் ஒரு மனுகொடுத்து அவர்களை வாதியில் தாக்கல்செய்யாமல் ஷை கோர்ட்டாரால் தள்ளப்பட்டு யிருக்கிறதாயும் தெரியவருகிறது.

இத்தியாதிகாரணங்களை எல்லாம் பிதவி ஆலோசித்து பார்க்குமளவில் ஷை கோம்பை கணக்கு கிஷ்ணய்யன் என்பவனால் இந்த வியாஜயம் உண்டாயிருக்கிறதாய் தோணுகிறதும்தவிற ஷை கல் அணை கட்டுவதில் இந்த இலாகா ஆலத்துடயான்பட்டி பாலகிருஷ்ணம்பட்டி இந்த 2-கிராமங்களில் நஞ்சை சாகுபடியாகப்பட்ட நிலங்கள் சாகுபடியாகாமல் சர்க்கார் பேரீஜ நஷ்டமாகுமென்றும் காணப்படுகிறது.

ஆகையால் விசாரணையில் வாங்கலான வாக்குமூலம் 2-ம் இதில் அடக்கமாய் சமுகத்துக்கு அனுப்பிவித்திருக்கிற சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன். உத்திரவு வருகிறபடி நடந்து கொள்கிறேன்.

1849-ஆ ஆகஸ்டுமீ 31வ,
மு. சோபனபுறம்.

(ஒப்பம்.)

குலாமுசேன்,
தாசில்தார்.

No. 22.

1851-ஹு செப்டம்பர் ௴ 1௳ யுள்ள 777-நி.

திருச்சினாப்பள்ளி ஸுபா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் ஜான்டர்ட் துரையவர்கள் சமுகத்துக்கு கோனாட்டு தாலூகா தாசில் கிருஷ்ணராவ் வணக்கமாய் சலாம செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

அழுந்தூர் கிராமத்து குடி ராமன் அம்பலகாரன் வகையரா பேர்கள் ஷை கிராமத்து பெரியகுளத்துக்கு ஜலம வரப்பட்ட வரத்து வாரியில் தொண்டமான் இலாகா பச்சைக்குடியைச்சேர்ந்த குள்ளம்பட்டியிலிருக்கும் தொளிநாயக்கன் வகையரா பேர்கள் நூதனமாய் குளம் உண்டுபண்ணி ஷை வாரிகளைத் தேக்கியிருக்கிறதாயும அதினால் ஷை குளத்துக்கு ஜலம வராமல் சாகுபடி குந்தகத்துக்கு யேதுவாயிருக்கிறதென்றும உசூரில் குடுத்த பிட்டிஷனில் ஷை ஜாகாவை கண்பார்த்து விசாரித்து வழக்கத்தையும் கண்டு ரிபோர்ட்டு செய்யும்படி நாளது ஹூ-த்திய 237-நி. இண்டார்சு உத்திரவு சாதராச்சுது.

அந்தப்படி பிதவி ஷை ஜாகாவை கண்பார்த்ததில் ஷை அழுந்தூர் பெரியகுளத்துக்கு தொலையிலிருந்து பெலமாய் மூன்று வாரிகள் வந்துகொண்டிருந்ததில் ஷை பச்சைக்குடி ஸரகத்தில ஷை வாரிகளை தேக்கி நஞ்சை சாகுபடிக்காக புதிசாய் 4 குளங்கள் உண்டுபண்ணப் பட்டிருக்கிறது. அதில் ஒரு வாரியை மூடி குளம் கட்டினவன் கெங்கா நாயக்கனென்றும மைத்தொரு வாரியை அடைத்துக் குளம் போட்டவன் தொந்தி நாயக்கன் என்றும் இன்னொரு வாரியை கொண்டம நாயக்கன் என்பவன் ஒரு ஜாகாவிலும், குள்ளமநாயக்கன் ஒரு ஜாகாவிலும் தடுத்துக் குளம் போட்டிருக்கிறதாயும ஷை அழுந்தூர் குடிகள் சொல்லுகிறார்கள்.

ஷை வாரிகளைத்தவிர அழுந்தூர் குளத்துக்கு ஜலம் வர வேறே பலமான வாரியிருக்கிறதாய் தெரியவரவில்லை. அவர்கள் புதிசாய உண்டுபண்ணியிருக்கிற குளங்கள் ரொம்பி மீதியாகுற ஜலமும் சமீபத்தில் விழப்பட்ட மேடு காட்டு ஜலமும் ஷை அழுந்தூர் குளத்துக்கு வரவேண்டியதாயும் அது போதுமானதாயிராதென்றும் காணப்படுகிறது.

ஷை அழுந்தூர் குளத்தின் நஞ்சை ஆயக்கட்டு பாச்சல் அயன் காணி 107 குழி 73½-க்கு தீர்வை ரூ-288-5-0 பிராக்கில் காணி 79, குழி முப்பத்தாறே வீசம் சாகுபடியாகி ரூ-229-1-0 பேரீஜ கூடுதலாகி மைத்த காணி 26, குழி 43-ம குளத்துக்கு போதுமான ஜலம் வராததினாலேயே பிராக்கில் தரிசாய் இருந்திருக்கிறதாயும் இதைத்தவிர ஷை குளப்பாச்சலில் நவாபிலாக தார்களுக்கு காணி 50,குழி எண்பத்துமூனறையே அரைக்கால் மானியமிருக்கிறதாயும் தெரியவருகிறது. வாரிகள் தாராளமாய் வந்துகொண்டிருக்கும்போதே குளத்துக்குத் தகுந்த ஜலம வராதிருப்பதாலும் இப்போது ஷை மூன்று வாரிகளையும் குறுக்கே தேக்கி புதிசாய் குளம் கட்டியிருக்கிற மூலமாய் ஷை அழுந்தூர் குளத்துக்கு மெத்த ஜல குர்த்தகம சம்பவிக்கும்படியாயுமிருக்கிறது. ஆகையால் அப்படிக்கி மாமூலுக்கு விரோதமாய் போட்டிருக்கிற ஷை குளங்களை யெடுத்து போடவேண்டியதைக்குறித்து மதுரை பொலிட்டிக்கல் ஏஜண்டு துரையவர்களுக்கு லெட்டருக்கு உத்திரவாகவேண்டியதாய் காணப்படுகிற சங்கதி சித்தமறியலாவதாய் யெழுதிக்கொண்டேன். அசல் பெட்டிஷன 1, ஷை வாரியடைத்து குளம கட்டியிருக்கிற ஸதிதி கண்டு தயார் செய்த பிளான் 1, இது ரெண்டும இதில் அடக்கமாய் அனுப்பியிருக்கிறேன்.

1851-ஹு ஸப்டம்பர் ௴ 1௳, }
மு. திருச்சினாப்பள்ளி. }

(ஒப்பம்) கிருஷ்ண ராவ்,
(மகாராஷ்டத்தில்) தாசில்தார்.

No. 23.

1852-ஹு அக்டோபர் ௴ 24௳ யுள்ள 203-நி.

திருச்சினாப்பள்ளி ஸுபா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் ஜான்பர்ட் துரையவர்களுக்கு துரையூர் தாலூகா தாசில் புஜங்கராவு வணக்கத்துடனே ஸலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

முசிரி தாலூகா சித்தாம்பூர் கிராமத்துக் குடி பழனியாண்டி முத்திரியன வகயராப் பேர் ஷை கிராமத்து யேரிக்கி நெய்வேலி ஏரி கடை ஜலமும் காட்டுவாரி மழை ஜலமும்வரும் படி வாய்க்கால்வெட்டி சலிங்கல் கட்டியிருக்கப்பட்டதில் நெய்வேலி கிராமத்தார் ஏறி கொண்ட ஜலப்போக மற்ற மீதி ஜலத்தை மின்னணைபோட்டு மறித்து அய்யாத்தில் தள்ளிவிட்டிருக்கிறதாயும ஏறிக்கு ஜலம வராமல் சாகுபடியான பயிர் காஞ்சு போகுறதாக அசூரில் குடுத்த பிட்டிஷன் அனுப்பி யிருக்கிறதாயும் அதில்கண்ட ஜாகாவை சுதாவாய் போய் கண்பார்த்து நெய்வேலி கிராமத்தார் அப்படி முன்னணை போட்டிருக்கிறது நிஜமா, என்னத்துக்காக அந்த அணை போட்டிருக்கிறார்கள் அதினாலே சித்தாம்பூர் ஏறிக்கி ஜலமபோக குந்தகமுண்டா, விசாரித்து உடனே அறிவிக்கும்படி நாளது ௴ 20௳-யில் பிறந்த 381 நி. உத்திரவு 22௳ வந்து சேர்ந்தது.

அதிகாரியத்துக்கு உத்திரவுப்படிக்கி உடனே பிறப்பட்டு நெய்வேலி கிராமத்துக்கு வந்து பிட்டிஷனர்களையும தருவித்துக்கொண்டு ஷை கலிங்கல் வாய்க்கால் தலவுமுதல் சுத்தப் பார்த்ததில் நெய்வேலி கிராமத்தார் வாய்க்காலில முன்னணை போடவுமில்லை வாய்க்கால் ஜலத்தை மறித்து அய்யாத்தில் தள்ளிவிடவுமில்லை. திணணக்கொணம் கலிங்கலிலிருந்து நெய்வேலி கிராமத்து ஏறிக்கி ஜலம வரப்பட்ட வாய்க்காலில் கலிங்கலுக்கு ஸமீபத்திலே வெள்ளத்தினாலே 15 நாளைக்கு முன யெக்கலடித்து வாய்க்கால் தூந்து போய் ஜலம் வராமல் அய்யாத்தில் மல்லாந்து போய்க்கொண்டிருந்தது. அப்பால் ஷை வாய்க்கால் திண்டுபறித்து வாய்க்காலில் ஜலம் வந்து நெய்வேலி கிராமத்து யேறிக்கி விழுகிறதும் தவிற ஷை யேரி கடகால் ஜலம சித்தாம்பூர் யேரிக்கி தாராளமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

அப்படி அணை போடாமலிருக்க அணைபோட்டு ஜலத்தை மறித்து தள்ளிவிட்டதாக பிட்டிஷன் குடுத்ததைக்குறித்து பிட்டிஷனர்களை கேட்டதில் நெய்வேலி கிராமத்தார் முன்னணை போட்டதும் ஜலத்தை மறித்து தள்ளிவிட்டதும் தாங்கள் பார்க்கயில்லையென்றும் அதற்கு ருசுவில்லையென்றும் ஷை யேரிக்கி கழிவு வடிவு ஜலம் 15 நாளைக்கு முன்னே வராமல் இருந்ததைப்பத்தி தாங்கள் வாய்க்கால் தலவை போய் பார்த்ததில் வெள்ளத்தினாலே திண்டு அடித்து வாய்க்காலில் ஜலம யேறாமல் மல்லாந்து ஜலம் போனதினாலே திண்டு விழுந்தயிருந்ததை முனனணை போட்டதாக பிட்டிஷன் கொடுத்ததாயும் இப்போது நெய்வேலி யேறி கடகால் ஜலம் தாராளமாய் சித்தாம்பூர் யேறிக்கி போகிறதாயும் அந்த சித்தாம்பூர் ஏரியில் 2-மாஸத்து ஜலம் ரொம்பியிருக்கிறதாயும் சாகுபடியாயிருக்கிற நஞ்சை பயிர்களுக்குகுந்தகமில்லாமல் ஜலம் பாஞ்சு வருகிறதாய் சொல்லி வாக்குமூலம் குடுத்ததும் தவிற அந்த சித்தாம்பூர் கிராமத்து முன்சீப் பட்டாமணியக்காரர்களும் ஷை யேறியில் 2௴ த்து ஜலம் ரொம்பி யிருக்கிறதாயும் நெய்வேலி யேறி கடைகால் ஜலம் தாராளமாய் வேறு போக்குயில்லாமல் சித்தாம்பூர் யேறிக்கி வந்துகொண்டிருக்கிறதாயும் சாகுபடியாயிருக்கிற நஞ்சைப்பயிர்களுக்கு குந்தகமன்னியில ஜலம் பாஞ்சு வருகிறதாயும் வாக்குமூலம் குடுத்தார்கள்.

சித்தாம்பூர் கிராமத்து யேறிக்கி நெய்வேலி யேரி கடைசால் ஜலம் வேறே யிடத்துக்கு போக்குயில்லாமல் தாராளமாய் போய்க்கொண்டிருக்கிறது. சாகுபடியாயிருக்கிற நஞ்சை நிலத்துக்கும் குந்தகமில்லாமல் யேரியில் 2மூ த்து ஜலம் வந்து ஸராகமாய் பாஞ்சுவருகிறதாய் தெரியவருகிறது.

நெய்வேலி கிராமத்தார் அணை போடாமல் இருக்க ஷை சித்தாம்பூர் குடி பழனியாண்டி முத்திரியன் வகையரு பேர் முன்ன அணை போட்டு ஜலத்தை மறிச்சு தள்ளி விட்டதுபோல் வீண் பொய்யான ஸங்கதியாய் பிட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகையால் இதுசங்கதி விசாரணையில் வாங்கின வாக்குமூலம் 3, அசல் பிட்டிஷன் 1, ஆக 4-ம் இதில் அடக்கமாய் அனுப்பியிருக்கிறேன். இதுசங்கதி விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன்.

18..2-ஷு அக்டோபர்மீ 24உ. } (ஒப்பம்) மு. சவுரிராஜய்யங்கார் மு. (ஒப்பம்) புஜங்காராவ்,
மு. நெயிவேலி. } (மகாராஷ்டத்தில்) தாசில்தார்.

No. 24.

1853-ஷு பிப்பிரவரிமீ 12உ-புள்ள 96 நி.

திருச்சினாப்பள்ளி சுபா கலெக்டராகிய மகா-ள-ள-ஸ்ரீ மேஸ்டர் ஜான்பர்ட் துரையவர்கள் சமுகத்துக்கு.

கோனாடு தாலூகா தாசில் கிருஷ்ணராவ் வணக்கமாய் சலாம்செய்து யெழுதிக்கொண்ட அர்ஜி.

அரியமங்கலம் கிராமத்திய குடி முத்துக்கருப்பபிள்ளை வகையருப்பேர் அசூரில் குடுத்த பெட்டிஷனில் தங்களுடைய நஞ்சை காணி 20-க்கு பாயப்பட்ட மாமூல் வாய்க்காலின் தலவுக்குறம்பை பனயக்குருச்சி கலுவப்பிள்ளை அளித்துப்போட்டதாய் கண்டிருப்பதைக்குறித்த விசாரித்து ஷை ஜாகாவையும் பார்த்து நிஜமாகயிருந்தால் மாமூல்படிக்கு வெட்டிவைத்து அறிக்கை செய்யும்படியாய் போன வருஷம் செப்டம்பர் மீ 25உலான 850-நி. உத்திரவு சாதராச்சுது.

அதைக்குறித்து ஷை அறியமங்கலம் கிராமத்து பட்டா மணியகாரன் கர்ணன் சாவல்காறன் வெட்டியானையும் விசாரணை செய்ததில் ஷை அரியமங்கலம் நிலத்தின பாச்சலுக்காக பனையக்குருச்சி வாய்க்காலிலிருந்து பிரிவாகி வந்துகொண்டிருந்த வாய்க்காலின் தலவில் ஷை கலுவப்பிள்ளை போன ஷு சித்திரை மாசத்தில் தூத்து அடுத்த அவனுடைய பனையக்குருச்சி நாத்தங்கால் கட்டளை நிலத்துடனே சேத்திருக்கிறதாய் சொல்லுகிறார்கள்.

யெதிரி பனையக்குருச்சிக்குடி கலுவப்பிள்ளையையும் ஷை கிராமத்து பட்டேசார் வெட்டியான் முதலானபேரையும் விசாரணை செய்ததில் அப்படிக்கி ஷை வாய்க்கால் கொரம்பு யிருந்ததுமில்லே. அதை தூக்கவுமில்லையென்று சொல்லுகிறார்கள்.

ஆனால் ஷை அரியமங்கலம் கிராமத்திய காணி 16 நிலத்துக்குப்பாயப்பட்ட வாய்க்காலுக்கு ரெட்டை வாய்க்காலிலிருந்து பிரிவாகப்பட்ட பனையக்குருச்சி வாய்க்காலில் தலைவிலிருந்து அந்தத்தலையை பனையக்குருச்சி கலுவப்பிள்ளை அளிச்சுப்போட்டதாக அரியமங்கலம் கிராமத்தார் சொல்லுகிற ஜாகாவை நான் கண் பார்த்ததில் ஷை 11-காணிக்குப்பாயபட்ட வாய்க்காலுக்குத்தலவில்லாமல் கலுவப்பிள்ளை நிலத்துக்கு கிழக்கு மாத்திரம் வாய்க்கால் போகுறது. அந்த வாய்க்காலுக்கு ஷை பனையக்குருச்சி வாய்க்காலில் தலைவிலிருந்து அந்த பாச்சல் நிலஙகளுக்கு ஜலம பாயவேணுமே யல்லாத்து தலவில் தலவுயில்லாமல் யிருக்கமாட்டாது.

ஷை கலுவபிள்ளை என்பவன் நிலத்தில் வாய்க்கால் உருவு யெவ்வளவும் யில்லே. ஷை அரியமங்கலம் வாய்க்காலுக்கு கழிவுஜலம் போய் ஷை வாய்க்கால் பாச்சல் நிலங்களுக்கு ஜலம்டாய்குறதாக பனையக்குருச்சி கிராமத்தார் சொல்லுகிறார்கள் அந்த வாய்க்கால் முக்கியமாய் பாச்சல் வாய்க்காலே தவிர வடிவாய்க்காலல்லா. பாச்சல் வாய்க்காலுக்கு வாய்க்காலில் தலவு யிருந்தேயிருக்கவேணும். மேலும் மாரி நாளையில் ஷை வாய்க்காலில் கழிவு ஜலம் போய் பாஞ்சபோதலும் கோடைநாளையில் கழிவு ஜலம்பாயமாட்டாது. இந்திய தி காரணங்களினாலே பார்க்கும்போது கலுவப்பிள்ளையினுடைய நிலத்தில் முன் வாய்க்கால் இருந்து நாளடவில் நஞ்சை வயலுடனே சேத்து சாகுபடி செய்திருக்கிறதாககாணப்படுகிறது.

ஷை வாய்க்கால் தலவு அரியமங்கலம் கிராமத்தார்க்கு யெட்டாக்கையாயிருப்பதினாலே ஷை கிராமத்தார் அடிக்கடி பாராமல் பேபந்தாயிருந்ததினாலே அந்த வாய்க்கால் தலைவு அளிபட காறணமானதாகக் காணப்படுகிறது. ஷை வாய்க்கால் சேதது கொண்டதாய் சொல்லப்பட்ட கலுவப்பிள்ளையினுடைய நிலம் அளந்துபார்த்து ஜாஸ்தியிருப்பதும் யில்லாததும் அறியலாமென்றால் நீராறம்பம் கிராமங்களில் கட்டளைகள் எல்லாம் கிட்டப்படி சரியாயிராமல் ஜாஸ்தியாயும் கம்மியாயும் யிருக்கிறபடியினாலே அந்த அளவின்பேரில் நிர்தாரிக்கத்தக்கதாயிருக்கவில்லே.

ஆகையால் ஷை அரியமங்கலம் வாய்க்காலுக்கு தலவில்லாமல் இருப்பதனாலேயும் ஷை கலுவப்பிள்ளை நிலத்தின்பேரில் தலவிருக்கவேண்டியதே தவிர வேறேபக்கத்தில் தலவிருக்கத்தக்கதாய் இருக்கிறதினாலேயும் கர்ணன் முத்துவீறமுத்திரியன் வெட்டியான் இனியாகி இவர்கள் ஷை வாய்க்கால் தலவு கலுவப்பிள்ளை என்பவன் வயலுடனே சேத்துக்கொண்டிருப்பதாக ருசு சொல்லுவதினாலேயும் பனையக்குருச்சி கிராமத்தார் சொல்லுவது நம்பத்தகாததாயிருப்பதினாலேயும் வாய்க்கால் ஆஜரில்லாதிருக்கிற 85-கெஜம் நிகளம் 5-கெஜ அகலத்துக்கு ஷை கலுவப்பிள்ளை நிலத்தில் ஷை வாய்க்காலுக்குத் தலவு வெட்டிவைத்து ஜலம் பாயவேண்டியது யுக்தமாய் காணப்படுகிறதாகையால் அந்தப்படி வாய்க்கால் வெட்டிவைக்கவேணுமென்று தான் பைசல் செய்திருக்கிறேன். சமுகத்தில் இந்த பைசல் மஞ்சூரான பிறகு அந்தப்படி நிறைவேத்தி வைக்குற சங்கதி சித்தமரியலாவதாக யெழுதிக்கொண்டேன விசாரணையில் யேர்ப்பட்ட தஸ்தாவெஜிகள் பேரீஸ்துடனே இதில் அடக்கம்செய்து அனுப்பியிருக்கிறேன். சித்தமறியவேண்டியது.

(ஒப்பம்.) கிருஷ்ணராவ்,
(மகாராஷ்டத்தில்.) தாசில்தார்.

No. 25.

1854-௵ பிப்பிரவரி௴ 9௳ யுள்ள 17-நி.

திருச்சிறுப்பள்ளி சுபா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ பேஸ்தர் ஜான்பர்ட் துரையவர்கள் சமுகத்துக்கு.

துறையூர் தாலூகா தாசில் கிருஷணருவ் வணக்கத்துடன் சலாமசெய்து யெழுதிக்கொண்ட அர்ஜி.

விசுவ மாள் சமுத்திரம் பாலகிஷ்ணம்பட்டி கிராமத்தார்களுக்கு ச பவித்திருந்த அட்டார் ஜலதகரூர் விஷயத்தில் முன உத்திரவுப்படி நிரவேத்தாத்துனுலே அடிக்கடி பெட்டிஷனர்கள அசூரில் புகாரா செய்ய இடமாகிறதாயு மஉடனே முன் உத்திரவுபடி நிறைவேத்தி அறிக்கைசெய்யுப்படியாயும் விசுவம்மாள் சமுத்திரம் கிராமத்தார் கொடுத்த பிட்டிஷன் சகிதமாய் நாளது௴ 1௳யில் பிறந்த 47-நி. உத்திரவு சாதராச்சுது. ஷை தண்ணிர் தகரூர் சங்கதியைக்குறித்து வந்த பிட்டிஷன் சங்கதியை விசாரித்து 7-8, கலெக்டர் துரையவர்களுக்கு அறிவித்ததில் விசுவம்மாள் சமுத்திரம் கிராமததுக்கு போதுமான ஜலம் விட்டு மற்ற ஜலத்தை மழைபினுலே சம்பவித்த ஒடப்புக்கு முன் ஷை ஜாகா எவ்வித ஸ்திதயிலிருந்ததோ அந்தப்படி வைத்து பழயாத்தில் ஒடப்பு யெடுத்துப்போட்டதை அடைத்து சிராப் ஜலம் போகு படி ஜக்கிரதை செப்யும்படி அக்டோபர்௴ 29௳யில் 152-நி. உத்திரவு சாதராய் அந்த உததிரவுபடி நிரவேத்தும்படி தாக்கீது அனுப்பப்பட்டு யிருந்ததும் தவிர.

அப்பால் சமுகத்திலிருந்து நவம்டர்௴ 28௳யில் சாதரான 572 நி. உத்திரவில் ஷை யிரண்டு கிராம கணக்கர் கொடுத்த வாக்குமூலம் அனுப்பியிருக்கிறதை பார்த்துக்கொண்டு ரெண்டு கணக்கனையும் வைத்து உத்திரவில் கண்டிருக்கிறபடி அந்த ஒடப்பு ஜாகா பிசல்காத்து மழைக்கு முன்னே எவ்விதம யிருந்ததோ அதே மேறைக்கி இருக்கும்படி அடைப்பிவித்து அறிவிக்கும்படி கண்டிருந்தபடியினுலே அந்தப்படி நிரவேத்தும்படி ஷை இரண்டு வாககுமூலங்கள் சகிதமாய் அந்த உத்திரவை அனுசரித்து பேஷ்காருக்கு தாக்கீது அனுப்பியிருந்ததில் பேஷ்கார் ஷை ஒடப்பை அடச்சியிருக்கிறதாய் சில விவரம்கண்டு ரிப்போர்ட்டுசெய்திருககிறுன அந்த ரிப்போர்ட்டு நக்கல் 1, கணக்கன் வாக்குமூலம் 2, ஆக 3-ம் இதிலடக்கமாய் அனுப்பியிருக்கிறேன்.

இது சங்கதி சித்தமரியலாவதாய் யெழுதிக்சொண்டேன்.

(ஒப்பம்.) சவுரிராஜமய்யங்கரார் ஜ. (ஒப்பம்.) (மகாராஷ்டத்தில்.) கிருஷ்ணருவ், தாசில்தார்.

No. 26

1858-௵ மார்ச்சு௴ 17௳ யுள்ள 109-நி.

திருச்சிறுப்பள்ளி சுபா ஏட் அசிஸ்டாண்டு கலெக்ட்டருகிய மகா-ா-ா-ஸ்ரீ-மேஸ்தர்-டப்ளியூ-ஷிஷிம்துரையவர்கள் சமுகத்துககு.

கோனுடு தாலூகா தாசில் வெங்கிடசாமி நாயக்கர் மிகவும் வணக்கமாய் சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

இலுப்பூர் கிராமத்து பட்டாமணியமும் எடயப்பட்டி கிராமத்து குடியுமான கந்தசாமிபிள்ளை என்பவன் ஷை எடயப்பட்டியைச்சேர்ந்த வன்னிகுளம் நஞ்சைக்கி இலுப்பூர் கிராமத்து சித்திரைகுளத்துப் பாசனமாகிய நவாபு பேகம்சாயபு பள்ளிவாசல் மானியம் நஞ்சை காணி 37-அயன் காணி 19-ஆக காணி 56-ல் அறயே அறக்கால் வரிசை மடங்களுய் மைத்த பயிர்களும் கதிருப் இருக்க ஷை குளத்திலிருக்கிற ஜலத்தை மேல்கண்ட வன்னிக்குளத்து நஞ்சைக்கி ஷை பேகம் சாமானிய குத்தகை அகிலாண்டம்பிள்ளை கூட்டாளி வெங்கிடாசல நாயக்கன் விடுகிறதில்லையென்று அறக்கத்து செய்வதாய் சமுகத்தில் குடுத்த பிடிஷனில் தரியாபத்துசெய்து அறிக்கைசெயயும்படி பிப்ரவரி௴ 6௳ யிலான 35-நி. இண்டார்சு உத்திரவு சாதருச்சுது.

பிட்டிஷனில் கண்ட சித்திரைக்குளத்து ஜலம் யெடயப்பட்டி வன்னிக்குளத்து நஞ்சைக்கு பாயுறதுண்டாவென்று இலுப்பூர் எடயப்பட்டி இந்த இரண்டு கிராமத்து கர்ணனையும் விசாரித்ததில் ஷை குளத்து ஜலம் வன்னிக்குளத்துக்கு பாயுகுறதில்லையென்றும் சித்திரைகுளத்துஜலம் நவாபு பேகம்சாயபு பள்ளிவாசல் மானியம் காணி 37-அயன் காணி 19-ஆக காணி 56-க்கும் பாய்ந்து வருகிறதென்றும் 51-ம பசலியல் சித்திரகுளத்து மராமத்துக்காக சர்க்காரில் ரூ 20-க்கு திட்டம் யேற்பட்டு 10-ரூ க்கு வேலை நடந்து நவாப் யேஜண்டு ஷை குளம் பேகம்சாயபு கம்பத்தை சேர்ந்ததென்றும் சர்க்காரில் மராமத்து நடப்பிவிக்கக்கூடாதென்றும் பிருதகுடுத்து விசாரணையாகி வேலைநடந்த துகை ரூ 10-ம் ஷை யேஜண்டிடத்தில் வசூல்செய்யும்படி உத்திரவு சதராகி அந்தபபடி வசூலாகி சர்க்காருக்கு செல்லயிருக்கிறதும் தவிர அதுமுதல் ஷை யேஜண்டே ஷை குளத்தை வருஷா வருஷம் ரிபேர்செய்து வருகிறதாயும் தெரிய வருகிறது.

பிட்டிஷனில் கண்டபடி ஷை குளத்து ஜலம் வன்னிக்குளத்து நஞ்சைக்கி பாயிறவழக்கமில்லையென்று தெரியவருகிறதாகயால் பிட்டிஷன் வகையரு தஸ்தவேஜு 3-ம் இதில் அடக்கம் செய்திருக்கிற சங்கதி விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

(ஒப்பம்) வெங்கிடசாமி நாயக்கர், தாசில்தார்.

No. 27.

1859-ஸு மார்ச்சுமீ 4உ யுள்ள 61-நி.

திருச்சிராப்பள்ளி ஜில்லா கலெக்டராவர்களாகிய மகா-ா-ா-ஸ்ரீ ஜான்பர்ட் துரையவர்களுக்கு அரியலூர் தாலூகா தாசில்தார் தம்புசாமி பிள்ளை ஸலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

ஓசளூர் கிராமத்து பட்டாமணியம் சுப்பராய பிள்ளை வகையராப்பேர் தங்கள் கிராமத்து ஆத்துவாய்க்காலில் தாங்கள் நெடுநாளாய்ப் பாச்சிவரப்பட்ட கண்டிகை மடைகளை அத்தியூர் கிராமத்தார்கள் அடைத்துப் போட்டதுமன்றியில் மாமூலுக்கு விரோதமாய் அவர்கள் யேத்தம் வைத்து ஜலத்தை எறைத்துக்கொள்ளுகிறதாக சில விவரங்களாய்க் கொடுத்த பிட்டிஷனை அனுப்பியிருக்கிறதாகவும் ஷை ஜாகாவை பார்வையிட்டு 5 தினத்தில் அறிவிக்கும்படிக்கும் பிப்ரவரிமீ 3உ யுள்ள 37-நி. உத்திரவும்.

அத்தியூர் கிராமத்து யேரிக்கி ஜலம் போகப்பட்ட ஆத்துவாய்க்காலில் ஓசளூர் கிராமத்தார்கள் கரையை வெட்டியும் குருக்கே அடைத்தும் வருகிறதாகவும் அதனாலே ஷை வாய்க்காலுக்கு இல்டிமெண்டு யேற்படுத்துவதில் உபயோகமில்லை யென்றும் அசிஸ்டாண்டு ஓவர்சீா மெர்கலுக்கு எழுதியதின்பேரில் அந்த கிராமத்தாருக்கு சிட்சை செய்யவேணுமென்று யெக்ஸிகூயூடிவ் இஞ்சினீர் ரீகடஸ் துரையவர்கள் லெட்டர் எழுதியிருப்பதாகவும் அதைக்குறித்தும் ஷை ஜாகாவை பார்த்து விசாரித்து அறிவிக்கும்படிக்கும் பிப்பிறவரிமீ 4உ யுள்ள 42-நி. உத்திரவும் சாதராகியிருக்கிறது.

அதைப்பத்தி நான் ஷை கிராமங்களுக்குப்போய் உபய கிராமத்தார்களையும் வைத்துக்கொண்டு ஷை வாய்க்கால்களை கண்பார்த்து ஷை கிராமத்தார்களையும் விசாரணை செய்ததில் ஓசளூர் கிராமத்தான் தன் கிராமத்து வாய்க்காலில் கண்டிகை மடைகளை அத்தியூர் கிராமத்தார்கள் அடைக்கவுமில்லை அவர்கள் யேத்தம் வைத்து பாச்சிக்கொண்டதுமில்லை யென்றும் ஆனால் தன் கிராமத்தின்பேரில் அத்தியூர் கிராமத்து யேரிக்கி ஜலம்போகப்பட்ட ஆத்துவாய்க்காலும் சிற்மத்தூர் கிராமத்துக்கு யேரிக்கி ஜலம்போகப்பட்ட ஆத்துவாய்க்காலும் போகிறதினாலே அந்த வாய்க்கால் சரகத்தில் இருக்கப்பட்ட தன்கிராமத்திய சில நஞ்சை நிலங்களுக்கு ஷை வாய்க்கால்களினாலேயே ஜலம்பாய்ச்சு வருவதாகவும் அவ்விதமாகவே தன்கிராமத்து யேரிக்கி ஜலம்வரப்பட்ட ஆத்துவாய்க்கால் வாலிகண்டபுரம் தாலூகா கழனிவாசல் பென்னகோணம் வகையரா கிராமங்களின்பேரில் வருகிறதில் அந்த கிராமத்தாருக்கும் வழக்கமாய் பாச்சிவருகிறதாக அப்படியிருக்க இப்போது அத்தியூர் கிராமத்தான் மட்டும் அவன் கிராமத்து வாய்க்கால் ஜலத்தை தன கிராம நிலங்களுக்குப் பாச்சாமல் தடுத்துப்போடவேணுமென்று யெத்தனப் பட்டிருப்பதாகவும் அப்படி தடுத்துப்போட்டால் ஷை அத்தியூர் கிராமத்து வாய்க்கால் பாச்சலில் யேற்பட்டிருக்கிற தன கிராமத்து நிலங்களுக்கு ஜலம்பாய வேறே மார்க்கமில்லை யென்றும் அதற்காகத்தான் பிட்டிஷன் செய்துகொண்டதாகவும் சொல்லுகிறார்கள்.

அத்தியூர் கிராமத்தான் மேல்க்கண்டபடி தன்கிராமத்து வாய்க்காலில் ஓசளூர் கிராமத்திய சில நிலங்களுக்கு வெகுநாளாய் பாச்சல் யேற்பட்டிருப்பது நிஜந்தான் யென்றும் ஆனால் மாமூலாய் 3 ஜாகாவில் கண்டிகை மடையும் ஒருஜாகாவில் ஒரு யேத்தமும் யேற்பட்டிருக்க இப்போது நாலைந்து வருஷகாலமாய் ஓசளூர் கிராமத்தான் இனனம் உபரியாய் 2 ஜாகாவில் கண்டிகைமடை வெட்டிவிட்டுக் கொண்டிருப்பதுமல்லாமல் 5, 6-மாசத்துக்கு முன் இன்னம் சிலயிடத்தில் ஓசளூர் கிராமத்துக்குடிகள் வாய்க்கால் கரையைவெட்டி ஜலத்தை பாச்சிக்கொண்டதாகவும் சொல்லுகிறான.

நான் ஷை வாய்க்கால் கரைகளை பார்த்ததில் அத்தியூர் வாய்க்காலில் ஓசளூர் கிராமத்திய சில நிலங்களின் பாச்சலுக்காக 5 ஜாகாவில் கண்டிகைமடை உண்டாகியிருப்பதுடன் மைத்தொரு ஜாகாவில் ஒரு யேத்தமும் யிருக்கிறது. அதில் 3 கண்டிகை மடையும் ஒரு யேத்தமும் வெகுநாளாய் மாமூலாய் ஏற்பட்டிருப்பதாக அத்தியூர் கிராமத்தான் ஒப்புக்கொள்ளுகிறான, 2 கண்டிகை மடைமட்டும் இப்பால் உண்டாக்கிகொண்டிருப்பதாக ஆட்சேபித்தபோதிலும் இந்த 2-கண்டிகை மடையினால் இப்பால் ஜலம் பாச்சிவருகிறதாய் சொல்லப்பட்ட நிலங்களுக்கும் முன்னாலே மாமூலாய் இருக்கிறதாய ஒப்புக்கொள்ளுகிற கண்டிகை மடை 3-னாலேயே பாஞ்சுவந்ததாகச் சொல்லுவதனாலேயும் 2-கண்டிகை மடைமட்டும் உபரியாய் வைத்திருக்கிறதாய் ஆட்சேபித்தபோதிலும் அதின் பாச்சல்நிலம் ஷை வாய்க்கால் ஆசருவிலேயே பாச்சல் யேற்பட்டிருப்பதாகச் சொல்லுவதனாலேயும் உபரியென்று சொல்லுகிற 2-கண்டிகைமடை நாலைந்து வருஷகாலமாய் யேற்பட்டிருப்பதாக அத்தியூர் கிராமத்தானும் 40 வருஷகாலமா யிருப்பதாய் ஓசளூர் கிராமத்தானும் சொல்லுவதாலும் ஷை வாய்க்காலில் ஜலம் தாராளமாய் வருகிறகாலத்தில் அந்த ஜலத்தைக்கொண்டும் ஜலமில்லாத காலத்தில் ஓசளூர் கிராமத்து ஏரி ஜலத்தை ஷை வாய்க்கால் வழியாகவே கொண்டுவந்தும் ஷை நிலங்களுக்கு பாச்சிக்கொள்ள வேண்டியதாயும் ஷை வாய்க்காலைத்தவிர வேறேமார்க்கமில்லையென்று உபய கிராமத்தார்களும் ஒப்புக்கொள்வதாலும் ஷை கண்டிகை மடைகளை தடுத்துப் போடுவது யுகதமாய் காணப்படவில்லை.

ஆனால் 5, 6மீ-த்துக்கு முன் இன்னம் சிலயிடத்தில் ஷை வாய்க்கால் கரையை ஓசளூர் கிராமத்தான் வெட்டினதாய்ச் சொல்லுவதை பார்த்ததில் 4 இடத்தில் வாய்க்கால் கரையை வெட்டி மூடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஓசளூர் கிராமத்தானை கேட்டதில் நவம்பர்மீ த்திய வெள்ளத்தில் தானே உடைப்பு யெடுத்துக்கொண்டு தங்களுடைய நிலத்தில் அடித்துப்போட்டதாக சொல்லுகிறார்கள் ஓசளூர் கிராமத்து குடிகள் இன்னான் வெட்டினான் யென்று தெரியாதென்றும் அதற்கு சாட்சிகளுமில்லை யென்றும் அத்தியூர் கிராமத்தான் சொல்லுவதனாலும், 5, 6 மாதகாலமாகிவிட்டதாலும் விசாரணையில் நிஜம் ருஜுவாகவில்லை. ஷை வாய்க்காலில் மாமூலாய் யேற்பட்டிருக்கிற கண்டிகை மடைகளைத் தவிற மைத்த ஜாகாக்களில் வாய்க்கால் கரையை வெட்டி சேதப்படுத்தாமல் இருக்கும்படி ஓசளூர் கிராமத்தாருக்கு கண்டிப்பாய் தாக்கீது செய்திருக்கிறேன். விசாரணையில் ஏற்பட்ட வாக்குமூலம் 4-ம் இதில் அடக்கம் செய்திருக்கிறேன். சந்ததி விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன். ஷை தஸ்தவேஜிகளுக்கு பேரீஸ்தும் அனுப்பியிருக்கிறேன்.

(ஒப்பம்) தம்புசாமி பிள்ளை,

மு. கீழப்பழூவூர். தாசில்தார்,

No 28.

1859-ஞு ஆகஸ்டுமீ 17உ யுள்ள 549-நி.

திருச்சிநாப்பள்ளி ஜில்லா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் ஜான்பர்ட் துரையவர்களுக்கு உடையார்பாளையம் தாலூகா இன்சார்ஜ தாசில் நாராயணய்யன் சலாம் செய்து எழுதிககொண்ட அர்ஜி.

இந்த தாலூகா மோவூர் முட்டம் கிராம மகாஜனம் சுப்பிரமணிய்யன் வகயறாப்பேர்கள் வாய்க்கால் தகறார் ஸங்கதியைப்பற்றி கொடுத்த பிட்டிஷனை மாஜி தாசில்தார் விசாரணைசெய்து யேற்பட்ட தஸ்தாவேஜிகளுடனே சமுகத்துக்கு ஜாஹேர் செய்துகொண்டதற்கு ஷை மோவூர்முட்டம் கிராமத்துக்கும் மன்னார்குடி துக்குடி சேமாம்புலியூர் குணவாலை வகயறா கிராமத்துக்கும் இருக்கிற தகறாரைப்பத்தி ஷை தகறார் ஜாகாவுக்குப்போய் அனுபோகம் தெரிந்த அக்கம் பக்கம் கிராமத்தார்களையும் கர்ணன் பட்டாதார்களையும் கூட வைத்துக்கொண்டு உபய தாசில்தாரும் யிருந்து செம்மையாய் விசாரணைசெய்து மருபடியும் தகறாருக்கு யெடான்னியில் பயிசல்செய்து தஸ்தாவேஜிகள் ஸகிதமாய் அறிக்கை செய்யும்படியாயும் ஒருவேளை பஞ்சாயத்து ஏற்படுத்தி பயிசல் செய்யவேண்டியது அவசியமாயிருந்தால் கிரமப்படி இரண்டு கட்சிக்காரர்களிடத்திலும் முச்சலிக்கா வாங்கிக்கொண்டு பைசல் செய்துகொடுக்கும்படியாயும சில விவரம்கண்டு 1858-ஞு நவம்பர்மீ 2உ யில் மாஜி தாசில்தார் பேரால் சாதரான 609-நி. உத்திரவுக்கு ஜவாபாகாமல் பாக்கியிருக்கிறதாக தெரியவந்ததின்பேரில் இதைப்பத்தி யென்ன நடவடிக்கை நடந்திருக்கிறதென்று விசாரித்ததில் ஷை தகறாரை பயிசல்செய்து தெரியப்படுத்தும்படியாய் ஷை உத்திரவுக்கு நகலுடன மாஜி தாசில்தாரால் தாலூக்கு மஜகூர் முஜமுதாருக்கு யாதாஸ்து கொடுக்கப்பட்டு அதற்காக ஷை முஜமுதார் மன்னார்குடித்துக்குடி சிரஸ்ததாருடன் கூடயிருந்து நடத்திய அமுலைக்குறித்து ஜவாபயாதாஸ்து வந்திருக்கிறதாக தெரியவந்ததின் பேரில் ஷை முஜமுதாருடைய யாதாஸ்தை பிதவி பார்த்ததில் உத்திரவில் கண்டபடி தகறார்ப்படுகிற கிராமத்தார்களிடத்தில் யாதொரு தஸ்தாவேஜிகளை வங்கிக்கொண்டு பயிசல் செய்ததாக காணப்படாத்தினாலே அபூர்ணஸத்தியிலிருக்கிறதென்றும் தஸ்தாவேஜிகள் ஸகிதமாய் தெரியப்படுத்தும்படியாயும் மருபடியும் ஷையாருக்கு பிதவியால் பதில் எழுதியிருந்ததில் அதற்காக அவர் எழுதிய யாதாஸ்து 1, இதற்கு முன மாஜி தாசில்தார பேரால் எழுதிய யாதாஸ்து 1, அத்துடன் வந்த இஞ்சினீர் துரையவர்களால் கிராமத்தாருக்கு குடுத்த உத்திரவுக்கு நகல 1, பிதவி பேரல் இப்பால் இந்த தாலூகா மோவூர் முட்டம் தயன் சேவுகன் எழுதிக்கொண்ட ரிபோர்ட்டு 2 ஆக 5-ம் பேரினதுடன் சமுகத்திய சுலாவணிக்க க இதில் அடக்கம செய்து அனுப்பியிருக்கிறேன். சுலாவணியாகிறதால், மன்னார்குடிதுக்குடி சேமாம்புலியூர் கிராமத்தார் இஞ்சினீர் துரையவர்களுடைய உத்திரவின்படி ஜலம்பாசிக்கொளளுகிறதாக சொல்லுவதைக்குறித்து அவர்கள் ஆஜர்செய்த ஷை இஞ்சினீர் துரையவர்களுடைய உத்திரவின் நகலை பிதவி பார்த்ததில் வழக்கமிருந்தால பாச்சிக்கொள்ளலாமென்று கண்டிருக்கிறதே தவிர வேறே ஒன்றும காணவில்லை.

ஷை தகறாரை விசாரணையின்பேரில் பைசல் செய்துகொள்ளுகிற விஷயத்திலும் பஞ்சாயத்து மூலமாய் பயிசல் செய்துகொள்ளுகிற விஷயத்திலும் இந்த தாலூகா மோவூர்முட்டம கிராமத்தார் சம்மதிக்கிறார்கள் யென்றும் மன்னார்குடிதுக்குடி சேமாம்புலியூர் குணவாலை வகயறா கிராமத்தார் சம்மதமில்லை என்று சொல்லுகிறத கவுல் அர்தப்படி வாக்குமூலம் கேட்டால் தாங்கள் கொடுக்கமாட்டோமென்றும் அந்தத்துக்குடி தாசில்தார் கேட்டால் கொடுப்போமென்றும் சொல்லுகிறதும் தவிர ஷை சேமாம்புலியூருக்கு மேற்கு குணவாலை வகயறா 5 கிராமத்தார் மோவூர்முட்டம் கிராமத்துக்குப்பாய்கிற வாய்க்காலின் இருபுறத்திலும் பூவரிசி பேய்க்கரு பு வகயறா வைத்து வாய்க்காலை குறுக்கியிருக்கிறதுமல்லாமல் மேலபுளியம்பட்டு கிராமத்திய சரகத்தில் கிஷ்ணரெட்டி யென்பவன் ஷை வாய்க்காலில் குறுக்கே சர்க்கார் உத்திரவன்னியில் செங்கல்லாலே மேன்பாலம் கட்டியிருப்பதனாலே சராகமாய் ஜலம் வருகிறதில்லையென்று இதுமுதலான விவரங்களை இந்த தாலூகா முஜமுதாருடன் கூடயிருந்து பைசல் செய்ய வந்திருந்த மன்னார்குடித்துக்குடி சிரஸ்தாராால் ஷை துக்குடி தாசில்தாருக்கு ஷை வாய்க்காலை குறுக்கியும் குறுக்கே மேன்பாலம் கட்டியும் தண்டை செய்கிற ஷை குணவாலை வகயறா கிராமத்தாருக்கு சிட்சை நடப்பிக்கவேணுமென்றும் அவர்கள் வாய்க்காலில் பூவரிசை வகயறா வைத்திருக்கிறதையும் மேன்பாலம் கட்டியிருப்பதையும் யெடுத்து துரஸ்து செய்யவேணுமென்றும் யாதாஸ்து எழுதியிருக்கிறதாகவும் விளங்கப்படுகிறது. அதைப்பற்றி யாதொரு அமுல் நடத்தயதாய் அந்த துக்குடி தாசில்தாருடைய ஜவாபு முதலானதொன்றும் வறப்படயில்லை.

ஷை சேமாம்புலியூர் குணவாலை வகயறா கிராமத்தார் செய்கிறது அனியாயமில்லாமலிருந்தால் அவர்கள் வாக்குமூலம் கொடுக்கலாம் இல்லாவிட்டால் பஞ்சாயத்து முதலானதால பயிசல் செய்ய சம்மதிக்கலாம், அப்படிக்கில்லாமல் ஒருவிதத்திலும் பயிசல் செய்ய சம்மதிக்காமல் இருக்கிறபடியினாலேயே அவர்கள் செய்கிறது அனியாயமென்று காணப்படுகிறபடியினாலே அதை கூலங்கிஷமாய் விசாரணை செய்து பயிசல் செய்யவேண்டியதற்கா ஷை கிராமத்துக்கு பிதவி போகிறதாய நிச்சயித்து மன்னார்குடி துக்குடி தாசில்தாரை வரும்படிக்கும் அப்படி வருகிற தேதியை தெரியப்படுத்தும்படிக்கும் ஷை யாருக்கு நாளதுமீ 10உ யில் யாதாஸ்து அனுப்பியும் நாளதுவரையில் ஜவாப்பு வராததனாலே மருபடியும் யாதாஸ்து அனுப்பியிருக்கிறேன். ஜவாபபு வந்தவுடனே ஷை தகறார ஜாகாவுக்குபோய் உபய தாசில்தாருமாயிருந்து தகறாரை பயிசல் செய்து பின்னாலே சமுகத்துக்கு ஜாஹேர் செய்துகொள்ளுகிற சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாக யெழுதிக்கொண்டேன்.

வேணும் சலாம்.

1859-ஞு ஆகஸ்டுமீ 17உ.
மு. ஜெயங்கொண்டசோழபுரம்.

(ஒப்பம்) நாறணய்யன்,
இன்சார்ஜ தாசில்.

No. 29.

1860-ஞு ஜனவரிமீ 18உ யுள்ள 17-நி.

திருச்சிநாப்பள்ளி ஜில்லா கலெக்டராகிய மக-ா-ா-ஸ்ரீ-மேஸ்தர்-ஜான்-பர்ட்துரையவர்கள் சமுகத்துக்கு.

துறையூர் தாலூகா முஜமுதார நாராயணசாமி நாயக்கர் சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

எலந்தப்பட்டி பட்டாமணியம் சிதம்பறரெட்டி வகைராப்பேர் களத்தூர் யேறிக்குப்போகிற காட்டுவாரியில் அணைபோட்டு ஜலம் பாச்சிவருகிறதை களத்தூர் கிராமத்தார் துராகிருதமாய் தடங்கல் செய்கிறதாக குடுத்த பிட்டிஷன் சங்கதி அறிவிக்கும்படி 58-ஞு பிப்ரவரிமீ 1உ யுள்ள 63-நி. இண்டார்சு உத்திரவும் அதைக்குறித்தே களத்தூர் மகாஜன குடிகள் ஷை வாரியில் துராகிருதமாய் அணைபோட்டு ஜலம் கொண்டுபோகிறதாக கொடுத்தபிட்டிஷன் சங்கதி அறிவிக்கும்படி 58-ஞு மார்ச்சுமீ 29உ யுள்ள 108-நி. இ. உத்திரவும் வந்தது.

அதைக்குறித்து விசாரணைசெய்து ஷை ஜாகாவையும் பார்த்து யேற்பட்ட வார்குமூலம் கணக்கு பிளான் வகைரு 17-ம் பேரிஸ்துடன் இதில் அடக்கமாய் அனுப்பியிருக்கிறேன் சுளாவணியாகிறதினாலே விசிதமாகும்.

ஷை களத்தூர் யேறிக்கி வரப்பட்ட வாரியில் யெலந்தப்பட்டி கிராமத்தார் 23-அணையும் களத்தூர் கிராமத்தார் 3-அணையும் போட்டிருக்கிறார்கள். அதில் யெலந்தாபட்டியில் நாள்ப்பட 17-அணையும் களத்தூரில் 10. 15-வருஷத்துக்கு முன் 3-அணையும் போட்டு தோட்டநிலங்களுக்கு ஜலம் பாஞ்சுவருகிறதாயும் இப்பால் 64-ம் பசலி முதல் எலந்தாப்பட்டி, அடைக்கம்பட்டி குடிகள் புதுக்கேணி தோட்டம் வகையறுவுக்கு 11-அணைபோட்டு வாரிஜலத்தை தேக்கி பாச்சிக்கொள்ளுகிறதாக தெரியவருகிறது. எல்லந்தாப்பட்டி அணைகளை யாரும் வெட்டினதாக பிட்டிஷனில் குறித்தபடி காணப்படவில்லை.

ஒரு கிருமத்து யேறிக்கு வரப்பட்ட வரத்துவாய்க்காலில் எலந்தாப்பட்டியார் நேர்ந்தபடி அணைபோட்டு சேணி ஆஜராவுள்ள தோட்டநிலங்களுக்கு ஜலம் பாச்சுவது கிரமமானதாக யிருக்கயில்லை ஆகிலும் 17-அணை எலந்தாப்பட்டியிலும் 3-அணை களத்தூரிலும் நெடுநாளாய்ப்போட்டு ஜலம் பாச்சிவருகிறதாயும் அகற்த காணி 1-க்கு குடிகளுக்கு அணா 12, மகாஜனங்களுக்கு அணா 6-வீதம் நீர்க்கூலி யேற்பட்டாயிருக்கிறதாயும் அதுகள்னாலே ஷை யேறிக்கு வரப்பட்ட ஜலம் தடுக்கப்படவில்லையென்றும தெரியவருகிறதினாலே அந்த அணைகளையிட்டு குந்தகமாயிருக்கிறதாக காணப்படவில்லை.

ஆனால் 64-ம் பசலி முதல் புதுக்கேணிவெட்டி சல்விஸ்தீரவைக்கு சாகுபடி செய்யப்பட்ட நிலத்துக்கு புதுசாய் போட்டிருக்கிற 11-அணைகளினாலே ஷை வாரியில் ஜலம் சராகமாய் வராமல் குந்தகம் சம்பவிக்குமென்று காணப்படுகிறதும் தவிர அணை பாச்சல் நிலங்களுக்கு நீர்கூலி அணா 12 வீதம் யேற்பட்டிருக்கிறதாயும் தெரியவருகிறது. 56-வருஷத்தில் பிறந்த இஸ்தியார்படிக்கி யேற்படவேண்டிய நீர்கூலி சமர்த்திபெற்ற சொல்பமாய் நீர்கூலி யேற்படுத்தவேண்டியதென்னவென்று சர்ணன்களை கேட்டதில் சவால்பட்டி உத்திரவின்பேரில் அந்தப்படி தாக்கல்செய்திருக்கிறதாக சொல்லுகிறார்கள்.

அந்த சவால்பட்டி பதிவு இவிடத்தில்லதினாலே அசூரில் இருக்கிற சவால்பட்டி உத்திரவை பார்வையிட்டு இப்போது யேற்பட்டிருக்கிற நீர்கூலி சரியெனபதும் ஷை இஸ்தியார்படிக்கி ஜாஸ்திநீர்கூலி தாக்கல் செய்யவேணுமென்பதும் சமுகத்திய யுக்தானுசாரம் உத்திரவாகவேண்டியிருக்கிறதும் தவிர 64-ம் பசலி முதல் புதிசாய் போட்டிருக்கிற பிளானில்கண்ட 1-நி. முதல் 10-நி. வரை அணை 10, 26-நி. அணை 1, ஆக 11-அணைகளையும் எடுத்துப்போட வேண்டியதாய் காணப்படுகிறது.

ஷை அணைகளை யெடுக்காதவரையில் அந்த ஜாகாவில் இன்னம் விஸ்தாரமாய் அணைகள் உண்டாகயேதுவாயு அதினாலே களத்தூர் யேறி வாய்க்காலுக்கு ஜல வர ஆடங்கமயும் காணபடுகிறது. ஆகையால் 64-ம் பசலிமுதல் போடப்பட்டிருக்கிற 11-புது அணைகளை யெடுத்துப்போடும்படி உத்திரவாகவேண்டியதாயிருக்கிற சங்கதி விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன்.

(ஒப்பம்) மு. இராமசாமி அய்யங்கார்.

(ஒப்பம்) ச-நாருயணசாமி நாயக்கர்.

முஜாம்தார்.

No. 30.

1860 வருஷம் மார்ச்சுமீ 31வ யுள்ள 107-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் ஜான்பர்ட் துரையவர்கள் சமுகத்துக்கு.

துறையூர் தாலூகா தாசில் அப்பாபிள்ளை சலாம்செய்து யெழுதிக்கொண்ட அர்ஜி.

இந்த தாலூகா மாரூடி கிருமமுனசிபு முத்துறெட்டி வகையருப்பேர்கள் தங்கள் கிராமத்துக்கு பாயப்பட்ட வெடன் கலிங்கல் வாய்க்கால் ஜலத்தை முறைவீதப்பிரகாரம் பாச்சிக்கொள்ளு பம மூன்டயிசலாயிருக்க உப்பிலியபுரம் கோவிந்தறெட்டி வகையருப்பேர் அந்தப்படி பாச்சவொட்டாமல் தடங்கல செய்கிறதாய் உசூரில் கொடுத்த பிட்டிஷனை அனுப்பியிருப்பதாயும் நடந்திருக்கிற விவரத்தை அறிவிக்கும்படி மார்ச்சுமீ 29வயுள்ள 117-நி. உத்திரவு சாதராச்சுது.

அது காரியத்துக்கு இந்த ஜலதகரார் சங்கதியைக்குறித்து பிட்டிஷனர்கள் தாலூகாவில் பிராதுகுடுத்ததின்பேரில் விசாரித்து அறிவிக்கும்படி பேஷ்காருக்கு உத்திரவு அனுப்பினதில் அவன அந்த ஜாகாவையும் பார்வையிட்டு விசாரணைசெய்து பிளான் வகையரா தஸ்தாவேஜிகளுடன ரிப்போர்ட்டு செய்தான்.

அந்த ரிப்போர்ட்டு வகையரு தஸ்தாவேசுகளை பார்வையிட்டதில் தைமீ 3வ பூவாடைஆறு பமுதல் தனிசையாத்துவேடன் கலிங்கல் ஜலம் 30-நாளிகை தண்ணீர் மாரூடி கிராமத்திய ஏறிக்கும் 60-நாளிகை தண்ணீர் உப்பிலியபுறம் கிராமத்திய நஞ்சை நிலங்களின் பாச்சலுக்கும் போகிறதென்றும் அந்த வழக்கப்படி உப்பிலியபுறம் கிராமத்தார் மாரூடி யேறிக்கி ஜலம் விடாமல் யிருந்ததில பேஷ்கார 30-நாளிகை ஜலம் ஒரு நாள் பிப்பிரவரிமீ 25வயில் திருப்பிவிட்டதில் மருபடியும ஜலம் விடாமல் உப்பிலியபுரம் கிராமத்தார் அடைத்துவிடும் விசாரணைக்கு ஆஜராகாமல் ஷை யூர் கோவிந்த றெட்டி வகையருப்பேர் சேவகனை உடாயத்ததாயும் தெரியவந்து ஆஜரான ஷை பேர்வழிகளை விசாரணைசெய்ததில் தாங்கள் உடாயத்ததில்லையென்றும் ஷை கலிங்கல் ஜலம பூவாடை முதல் யேரிக்குப்போகிற தில்லையென்றும யேறியில் ஜலம் வத்திப்போனப்பிறகு 30-நாளிகை ஜலம் யேரிக்கும் 60-நாளிகை ஜலம் உப்பிலியபுரம் நஞ்சை பாச்சலுக்கும் போகுறவழக்கப்படி போகுறதாகவும் வாககுமூலம கொடுத்திருக்கிறார்கள்.

இதைப்பற்றி மாஜிதாசில்தாரால் டைசல் செய்யப்பட்டிருக்கிறதாய் தெரியவந்ததின்பேரில் ரிகார்டை பார்வையிட்டதில் ஷை வேடன் கலிங்கல் வாய்க்கால் ஜலம் மாரி நாளையில் பகல் ஜலம் உப்பிலியபுரம நஞ்சைக்கும் ராத்திரி ஜலம் மாராடி யேரிக்கும போகுறதென்றும பூவாடை ஆம் மான தைமீ 3வ முதல் ஒரு பங்கு 30-நாளிகை ஜலம் மாரூடி யேரிக்கு ரெண்டுபங்கு 60-நாளிகை ஜலம் உப்பிலியபுரம நஞ்சைக்கும் மாமூல் பிறகாரம் வீதப்படிக்கி பாச்சிவரும்படியாய் திட்டப்படுத்தியும் கிராமத்தாருக்கு தாக்கீது அனுப்பி மாஜி தாசில்தார் புஜங்கராவ் 1852-வருஷம் மார்ச்சுமீ 11வயில் முடிவான 91-நி. அர்ஜி யெழுதியிருக்கிறதாயும அந்தப்பயிசலுக்கு விரோதமாய் உப்பிலியபுரம கிராமத்தார், இவ்வருஷத்தில்

ஜலம் விடாமல் வீண் ஆட்சேபம் செய்ததையும் தெரியவருகிறது. அது சரியல்லவானதால் மாஜி தாசில்தாருல் சொல்லியிருக்கிற விவரப்பிரகாரம் பைசல் செய்திருக்கிறபடியினாலே ஷை வேடன் கலிங்கல் வாய்க்கால் ஜலம் மாரி நாளையில் பகல் தண்ணி உப்பிலியபுறத்தார் நஞ்சைக்கும் ருத்திரி தண்ணியை மாருடி யேரிக்கு பாய்ச்சிக்கொள்ளும் படி தைமீ 3உ பூவாடை முதல் ஒருபங்கு 30-நாழிகை ஜலம் மாருடி யேரிக்கு போகும்படியும் 2-பங்கு 60-நாழிகை ஜலம் உப்பிலியபுரம் நஞ்சைக்கு பாய்ச்சிக்கொள்ளும்படியும் உபயகிர மத்தார்களுக்கும் அறிவித்து கண்டிப்பாய் தாகீது செய்து திட்டப்படுத்தியிருக்கிறேன்.

ஆகையால் அசல் பிட்டிஷன் வகையரு விசாரணையில் யேற்பட்ட தஸ்தாவேசிகள் 19-ம் பேரீஸ்துடன இதில் அடக்கமாய் அனுப்பியிருக்கிற சங்கதி சித்தமரியலாவதாய் யெழுதிக்கொண்டேன்.

(ஒப்பம்.) மு. ராமசாமி அய்யங்கார். (ஒப்பம்.) அய்யாபிள்ளை,
தாசில்தார்.

No. 31.

1861-ளு ஜனவரிமீ 7உ யுள்ள 5-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லாவின் ஜனரல் டிப்டி கலெக்டராகிய மகா-ரா-ரா-ஸ்ரீ பிள்ளையவர்கள் சுந்தரம் பிள்ளையவர்கள் சமுகத்துக்கு.

உடையார்பாளையம் தாலூகா தாசில் காதிர்சாகேப் சலாம்செய்து யெழுதிக்கொண்ட அர்ஜி.

இந்த தாலூகா வடுகபாளையம் மதிறைசுப்பன் இராமபிள்ளை இவர்கள் சங்களுடைய யேரி நீர்பிடிக்காலில் குளத்தூர் வெட்டிகருத்தான் வகையருப்பேர்கள் நூதனமாய் கரைப்போட்டிருப்பதாய் சில விவரம் கண்டு கலெக்டர் துரையவர்கள் இடத்தில் கொடுத்த இரண்டு பிட்டிஷனைபற்றி விசாரணை செய்து அறிக்கை செய்யும்படியாய் 240-நி. உத்திரவும் இதே சங்கதியாய் ஷை குளத்தூர் வெட்டிக்கருத்தான் வகைருப்பேர்கள் கலெக்டர் துரையவர்களிடத்தில் கொடுத்த பிட்டிஷனுக்காக என்ன நடந்திருக்கிறதென்றும் தஸ்தாவேஜிகளுடனே அறிக்கைசெய்யும்படியாய் 361-நி உத்திரவும் சாதராகியிருப்பதற்கு ஜவாப ஆகாமல் பாக்கியில் இருக்கிறதைக்குறித்து என்ன நடந்திருக்கிறதென்று விசாரித்ததில்.

சமுகத்திய 240-நி. உத்திரவு கிடைத்தவுடனே மாஜிதாசில் தம்பிசாமிபிள்ளை அந்தஜாகாவைப்பார்த்ததில் பிட்டிஷனர் வடுகபாளையம் மொட்டயமுட்பன் வகையருப்பேர்களுடைய யேரிக்கிவரப்பட்ட வாத்துவாரியில் யெதிரியான மைத்தொரு பிட்டிஷனர் குளத்தூர் வெட்டிமரிசருத்தான் வகையருப்பேர்கள் துராகிருதமாய் பிரவேசித்தது அக்கிரமமென்றுகாணப்பட்டதினாலேயும் யெடுப்பட்டுப்போன அரியலூர் தாலூகா மாஜீ தாசில் அய்யாப்பிள்ளை நாளையில் இதே சங்கதியாய் பிட்டிஷனர் வடுகபாளையம் ருமபிள்ளை வகையருப்பேர்கள் பிராது கொடுத்து விசாரணையின்பேரில் துராகிருதம் செய்ய எதிரி வெட்டியார்களுக்கு அபராதம் விதித்து தீர்மானம் செய்திருப்பதினாலேயும் அந்த தீர்மானத்தை அனுசரித்து பிட்டிஷனர் யேரிக்கி வடக்கே யிருந்து வரப்பட்ட வாத்துவாரிக்கி குந்தகமில்லாமல் மேல்பரம் கடைசியில் 6-கோல் விட்டு யெதிரி வெட்டியார்களை கரைப்போட்டு கொள்ளும்படிக்கும் அடைத்திருந்தவரத்துவாரியை எதிரிகளை தரந்துவிட்டு ஷை வாரிக்குக்கிழக்கே கரைவளைத்துக்கொள்ளும்படிக்கும் திட்டம்செய்து அந்தப்படி நிரவேத்தும்படியாய் அந்த இலாகா பேஷ்காருக்கு சென்ற டிசம்பர்மீ 17உயில் ஷை தம்பசாமிபிள்ளையால் தாக்கீது கொடுத்திருக்கிறதாகவும் ஷை வெட்டியாரகள் ஆதாரமற்ற வீண் பிட்டிஷன் கொடுத்திருக்கிறதாயும் தெரியவருகிறது.

ஆகையால் சமுகத்திய 240-வது 361-வது நி. உத்திரவின் வந்த அசல் பிட்டிஷன் 3, தாசில் அய்யாபிள்ளையால் தீர்மானம் செய்யலான அசல் ரிஜிஸ்டர் தீர்மானத்து நகல் 1. தம்புசாமிபிள்ளையால் கொடுத்த பைசல் தாகீதுக்கு நகல் 1, ஆக 5-ம் பேரிலதுப்படி இதிலடக்கச்செய்து அனுப்பியிருக்கிறேன். சித்தமரியவேண்டியது.

வேணும் சலாம்.

மு. வெங்கிட சுப்பய்யர் குமாஸ்தா. (ஒப்பம்.) காதிர்சா,
தாசில்தார்.

No. 32.

1862-ளு ஏப்பிரல்மீ 26உ யுள்ள 133-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டராகிய எ. இ. ஆர். மக்டானல் துரையவர்கள் சமுகத்துக்கு.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில் வெங்கிடசாமி நாயக்கர் எழுதிக்கொண்ட அர்ஜி.

இஸ் அயினிஸ் அஜிறத் நவாபுசாயபு அவர்கள் நாயபெதர்ஜி மகம்மது சைதுகான்சாயபு அசூருக்கு யெழுதிக்கொண்ட அர்ஜியை அனுப்பியிருப்பதாயும் அதில் அஜரத்சவால்பேகம்சாயபு அவர்கள் சத்திரத்தைச்சேர்ந்த ஜாகீர் பாகனூர் கிராமத்தின் யேரிக்கி முகம்மது மஜித்ஜாகீர் பெரிய நாயகன் சத்திரம் கிராமத்தில் இருந்து வரப்பட்ட ஒரு பெரியவாரியை கொட்டப்பட்டு இனாம்தார் மன்னுமியா வகையரு பேர்கள் அடைத்து புதிசாய் கரைப்போட்டிருப்பதினாலே நஞ்சை நிலங்கள் சாகுபடியாகவும் தர்மசிலவு நடக்கவும் குந்தக நேரிடுமென்றும் கண்டிருக்கிறபடியால் அந்த ஸ்தலத்தை பார்வையிட்டு விசாரணை செய்து அறிவிக்கும்படி பிப்பிரவரிமீ 10உயிலான 66-நி. உத்திரவும் ஷை மன்னுமியா தன் சொந்தச் சிலவினால் உண்டுபண்ணியிருக்கிற குட்டையை நவாப் இலாகா ஏஜெண்டு யெடுத்துப்போட எண்ணங்கொண்டிருப்பதாய் சில விவரம்கண்டு அசூரில் கொடுத்த பிட்டிஷன் பார்வைக்கும் ரிப்போர்ட்டுக்கும் மார்ச்சுமீ 31உயில் 15-நி-லான இண்டார்சு உத்திரவும் சாதராகியிருக்கிறது.

அது காரியத்துக்கு நாளது மீ 10உயில் பிரவி ஷெ பாகனூர் கிராமத்துக்குப்போய் நாஜிமகம்மது சைதுகான்சாயபு மன்னுமியா பாகனூர் கிராம கர்ணன் பட்டாமணியக்காரன் குடிகள் சகிதமாயிருந்து மன்னுமியா பாகனூர் வாரியை அடைத்து குட்டைபோட்டு இருப்பதையும் ஷெ வாரியையும் பார்வையிட்டு அளந்ததில் பாகனூர் ஏரிக்கி ஜலம் வரத்துள்ள பாரியான வாரியை அடைக்கப்பட்டு தென்வடலில் 368-செஜ நீளத்துக்கு திண்டுக்கல் ரஸ்தாவைமோதி ஒன்னரை செஜ உயர முதல் அரை செஜ உயரம் வரையில் கரைபோட்டு குட்டை தேக்கப்பட்டிருக்கிறது அந்தகுட்டைக்குள் கரையோரத்தில் வாரியிருப்பது அளவில் அகலம் செஜம் 6-ம ஷெ கரைக்கி அடுத்த வெளிப்புறத்தில் வாரியின் அகலம் 7-செஜமும் அதற்கப்பால் ஷெ வாரி பாகனூர்யேரிக்குப்போய்ச் சேருகிற வரையில் சில இடத்தில அகலம் செஜம் 6, 7, 12, 14, இந்தப்படி யிருக்கிறது. ஷெ குட்டைக்குள் பட்டுப்போன வாரி தவிர பாகனூர் யேரிக்கித் தெற்கே யிருந்தும் இரண்டு வாரி வருகிறது.

அந்த யேரிக்கி ஜலம் வரத்துள்ள வாரி முதலானதைப்பற்றி பாகனூர் பட்டாமணியம் ஆண்டியம்பலகாரன் 1, கருப்புடையான் 1, லட்சுமணஉடையான் 1. கணக்கு சுப்பனுசாரி 1, குட்டப்பட்டு சவுரிமுத்துஉடயான் 1, யெதிரியும் பிட்டீஷனருமான மன்னுமியா 1, இவர்களை விசாரணைசெய்து யேற்பட்ட தஸ்தாவேஜிகளைப்பார்த்ததில் பாகனூர் யேரிக்கி ஜலம் வரத்துள்ள வாரி 3, அதில் இரண்டு வாரி தெற்கேயிருந்து ஒரு வாரி வடக்கேயிருந்தும் வருகிறது. அதில் வடபுறம் வாரிவழியாய் நல்ல தண்ணிராய் 4 மூ த்திய ஜலமும் தென்புறம் இரண்டு வாரி வழியாய் களர்தண்ணியாய் இரண்டு மூ த்திய ஜலமும் வருவதைத் தவிர மேடுகாடுகளில் வருஷிக்கப்பட்ட மழை ஜலமும் பறவலில் வருவதாயும் அப்படிக்கு வரப்பட்டதில் அதிக ஜலமும் நல்ல தண்ணிராயும் வரத்துள்ள பிறபலமான வாரியைத்தான் நாளது ஷ ஜனவரிமீ முதல் மன்னுமியா அடைத்து குட்டை உண்டுபண்ணியிருப்பதாயும குட்டப்பட்டு கிராமத்தைச்சேர்ந்த முத்துக்குளத்துக்கு திண்டுக்கல் ரஸ்தா ஓரமாய் போகப்பட்ட வாரியைக்கூட மன்னுமியா அடைத்ததை சவுரிமுத்துடயான் வெட்டிப்போட்டதாகவும் ஷெ பிறபலமான வாரி தடைப்பட்டுப்போனால பாகனூரில் நஞ்சை 100-காணிக்கி மேல்பட்டு சாகுபடியாகும் நிலத்தின பாச்சலுக்கு குடிகளுக்கும் குந்தகமும் நவாபு இலாகாதார்கள் நடப்பிவிக்கும் தர்மத்துக்கு குறைவும் நேரிடுமென்று தெரியவருகிறது யெதிரி மன்னுமியா தான் எந்தவாரியை அடைத்து குளம்போட்டேனே அந்தவாரியின ஜலம இதற்குமுன் பாகனூர் யேரிக்கே போயிசகொண்டிருந்ததாயும் ஒப்புக்கொள்ளுகிறான். அந்த வாரி அடைத்ததை வெட்டிப்போடவேண்டியது கிரமமாக யிருப்பதை அவனுக்கு தெரிவித்ததில் சர்க்காரில் கொடுக்கிற உத்திரவு பிரகாரம் நடக்கிறதாய் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்.

இது சங்கதியில் யேற்பட்ட அசல் பிட்டீஷன் வகையரு தஸ்தாவேஜுகள் 10, பிளான் 1, ஆக 11-ம் இந்த அர்ஜியில அடக்கமாக அனுப்பியிருக்கிறேன் களாவணியாகி 1-நி. பிளானை பார்வையிடுவதினால் விசிதமாகும்.

ஷெ பிளானில் கண்டபடியே அடையாள வாரியை மன்னுமியா அடைத்திருப்பதையும், பி. அடையாளத்திலிருக்கிற திண்டுக்கல் ரஸ்தா பக்கவாய்க்கால் வாரித்தடுத்திருப்பதையும் வெட்டிபோடவேண்டியதாகவும் அந்தபிரகாரம் செய்யாதவரையில் பாகனூர் யேரிக்கி மாமூல்படி ஜலம்போகாமல்சாகுபடி குந்தகமும் குடிகளுக்கும் நவாப் இலாகாதார்களுக்கும நஷ்டமும் சம்பவிக்க யேதுவாயிருப்பதும தவிர சர்க்கார் மராமத்துள்ள திண்டுக்கல் ரஸ்தாவில் மழைப்பிரவாக ஜலம் விஸ்தரித்து பிறண்டு அதினால் ஷெ ரஸ்தா யெடுப்பட்டுப்போகதக்கதாயும் இருக்கிறது.

ஆகையால் அப்படிக்கொத்த சூந்தகநேரிடாமல் இருக்கவேண்டியதின் பொருட்டு மன்னுமியாவைக்கொண்டு 11-நி. லக்கம்போட்ட தஸ்தாவேஜாகிய பிதவியால்தயார் செய்யலான பிளானிலேயே பி. அடையாள வாரி அடைத்திருப்பதை வெட்டிவைக்கும்படி உத்திரவாக வேண்டியதாக யிருக்கிற சங்கதி மாவதாய் யெழுதிக்கொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்.) யெ. வறதய்யங்கார் குமாஸ்தா.
(ஒப்பம்.) மு. சேஷகிரி வக்கீல்;
(ஒப்பம்.) வெங்கிடசாமி நாயக்கர் தாசில்தார்.

No. 33.

1858-ஷ மார்ச்சுமீ 2உ யுள்ள நி. 25.

திருச்சினாப்பள்ளி சுடா ஆ. கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ-மெஸ்தர்-யே-ஆ-ஹட்ச்சின்ஸ் துரையவர்கள் சமுகத்துக்கு.

மணப்பாறை தாலூகா தாசில்தார் வெங்கட்டராவ் மிகவும் வணக்கமாய் சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

இந்த தாலூகா செவலூர் கிருமம் குடி முதலிகாராவுத்தன் என்பவன ஷெ கிருமம் செவங்குளம் பெருகின உடனே வடகலிங்கிக்கி மேல்புறம மருகால்விட்டு தன்னுடைய ருசலிங்கசமுத்திரம் குளத்துக்கு மாமூலாய் தண்ணீர் போய்க்கொண்டிருந்ததை ஷெ கிரும முன்சீபு நாட்டாண்மை நல்லதம்பி கவுண்டன வகையறாபேர் இபபோது விடாமல் ஷெ கலிங்கியில் மருகால்விட்டு இனும் கிருமத்துக்கு உபயோகமாயிருக்கிற நிமித்தியமதான் குளத்துக்குச் சேர்ந்த நஞ்சைசாகுபடி யாகக்கூடாமல், 400 கல நெல் நஷ்டம் நேரிட்டிருப்பதாயும் தனக்குள்ள தண்ணீர் விஷயத்தைக்குறித்து அந்த கிருமத்தாருக்கும் தனக்கும் ஷெ குளத்துக்கு ஆதிபாத்தியஸ்தனான பொன்னய பிள்ளைக்கும முன நேரிட்ட தகராருக்காக பிறந்த ருஜிநாமாவின்படி தண்ணீரும ஷெ நஷ்டமும தனக்கு கிடைக்கவேண்டியதாய் நவம்டர்மீ 14உ யில் தாலூகாவில் பிட்டிஷன் கொடுத்தான.

அது காரியத்துக்காக வாதிதரப்பு சாட்சிகளில் சிலபேரை விசாரணைசெய்ததில் பிட்டிஷனில் கண்டபடி முன்திர்மானத்துக்கும் விரோதமாய் ஷெ நாட்டாண்மைக்காறன வகையருப்பேர் வாதியுடைய குளத்துக்கு போய்க்கொண்டிருந்த தண்ணீரை இப்போது விடாமலிருப்பதாயும் நவம்பர் மாசத்திய பெரிய வெள்ளத்தில் நூதன யெடத்தில்விட்ட மருகால் தண்ணீர் ஷெ வாய்க்காலில் விழுந்து ஒண்ணொருநாள் மட்டும் வாதியின குளத்துக்கு வந்ததில் குளம் பெருகவில்லையென்றும அந்த குளத்துக்கு இந்த வாய்க்காலைத்தவிற வேறே தண்ணீர் வறத்தில்லை யென்பதாயும் பூர்த்தியாய் ருஜுவாகிறது. இப்பால் நான்போய் தகரார் ஜாகாக்களை கண்பார்த்ததில் செவகுளம் வடக்கு கடக்கோப்பின் காறக்கட்டுக்குளவாய்க்கி 50-கிஜத்துக்கு மேற்கே ஷெ குளக்கறையில் வெகுநாளைக்குமுன் மண், தாழ்கள் ஸ்தாபிக்கப்பட்டும அதிலிருந்து பினச்சறை முதல் வாதியுடைய குளம்வரையில் வாய்க்கால் உண்டாகியும் இருக்கிறதும்தவிற ஷெ தூம்புகளை அடுத்து வாய்க்காலோறம் தண்ணீர் கீழ்புறத்தில் பிறண்டுபோகாமல் சிலதுரம் வரைக்கும கல்கட்டியுமிருக்கிறது.

D2·21192'N06
N06

ஷை சங்கதியைக்குறித்து ரிகார்டு சோதிப்பிவித்ததில் வாதி குளத்துக்கு தண்ணீர் கொண்டுபோக வேண்டியதையிட்டு ஷை கிராமத்தாருக்கும் ஷை பொன்னைய பிள்ளைக்கும் முன் தகரார் நேரிட்டு மத்தியஸ்தாள் முன்னுக்கு உபயவாதிகளும் தீர்மானித்துக்கொண்டபடி ஷை செவகுளம் பெருகின உடனே வாதியுடைய வாய்க்காலிடத்தில் மருகால்விட்டு பிரியாதியின் குளம் பூரா பெருகினதின்பேரில் ஷை செவகுளத்துக்கு அபாயம் வறத்தக்க மேல்வெள்ளங்கள் வந்தால் அத்தருணத்தில் ஷை காறக்கட்டு குளவாயில் மருகால் விடவேணுமென்றும் ராஜிநாமா பிறந்து உகூர் சயனுடனே 31-௵ நவம்பர்௴ 7உயுள்ள 13-வது நி. மதுரை ஜில்லா உகூர் உத்திரவு சகிதமாய் வந்த பிருதிகளில் ஒன்று ஷை கிராம நாட்டாண்மைக்காரன் வகையராவுக்கும் ஒன்று ஷை பொன்னைய பிள்ளைக்கும் குடுக்கலாயிருக்கிறதாகவும் தெரியவருகிறதற்கனுசரணையாய் பொன்னையபிள்ளை பெத்த ஷை அசல்பிருதியை பிரியாதி இப்போது ஆஜர் காணபிவித்து இருக்கிறான்.

ஷை பொன்னையபிள்ளை மகன் ரெத்தினம் பிள்ளையிடம் ஷை குளம் வகையராவை 1000-ரூ கிரயத்துக்கு வாங்கி அனுபவிக்கிற இந்த பிட்டிஷனர் பட்சத்தில் மேல்கண்ட நடவடிக்கைகள் யிருக்க யெதிரிகள் அதை அனுசரித்து நடவாமல் ஷை நவம்பர்௴த்தில் வந்த வெள்ளங்களால் ஷை செவக்குளம் பூராவாய் பெருகி பொருக்காத வெள்ளங்கள் வந்தசமயத்தில்கூட குளவாய்க்கு மேல்புற வாதிகோறிய யெடத்தின் 5-கிஜத்துக்கு சமீபம் குளக்கரையை நூதனமாய் வெட்டி மருகால்விட்டிருக்கிறதேயல்லாது வாதிகுளத்துக்காக தீர்மானிக்கப்பட்டிருக்கிற யெடத்தில் மருகால்விடவில்லை.

ஆனதினால் இப்போது ஷை யெடத்தை கண்பார்க்கும்போதும் செவக்குளத்தில் பூரா பெருக்கில்லாமல் முக்கால் குளத்துக்குள்பட்ட தண்ணீராய் இருப்பதிலும் ஷை குளவாயில் தண்ணீர் விழுகபோக்கு விட்டு மொண்டிப்பட்டி ஆறுவகையராவில் போகும்படி செய்தும் இருக்கிறார்கள். ஷை செவக்குளம் பெருகாமலும் அதில் புறவில் விஸ்தாரமாய் நஞ்சை சாகுபடியாகியும் சிலநாளாய் தகுந்த மழையில்லாமலும் யிருக்கையில் ஷை தண்ணீர் விடக்கூடாதென்றும் உடனே அடைத்துப்போடும்படிக்கும் ஷை முன்சிபு நல்லதம்பி கவுண்டனுக்கு நான் கண்டிப்பாய் தாக்கீது செய்திருக்கிறபடி அடைக்காமல் சிலநாளாய் ஷை குளவாய் தண்ணீர் போக்குவிட்டுக் கொண்டிருக்கிறதுந்தவிர மேல்குறித்த ராஜிநாமா பிறந்த விவரம் தனக்கு தெரியாதென்றும் ஷை வாய்க்கால் வாதியுடையதுதானென்றும் அதின் தலையிலிருக்கிற ஷை தாளக்கனமட்டும் செவக்குளம் நஞ்சைக்கு தண்ணீர் கொண்டுபோவதற்காகதான் வகையரா முன்வைத்ததென்றும் 25-௵த்துக்குள்ளாக அந்த வாய்க்கால் வழியாய் வாதிகுளத்துக்கு தண்ணீர் போனதில்லையென்றும் குளம்பெருக்கினால் ஷை குளவாயில் போக்குவிடுவதற்குப்பின்பு அதற்கப்பால் மேலாவில் மருகால் விடுகிறதென்று ஷை நாட்டாண்மைக்காரன் வகையரா யெதிரிகள் வாக்குமூலத்தில் சொல்லுகிறார்கள்.

இதுகளைக்குறித்து யோசிக்கும்வகையில் பிட்டிஷனருக்கும் எதிரிகளுக்கும் விரோதமிருப்பதாயும் அதையிட்டு ஷை முன்சிபுடைய சிறியதகப்பனை மாஜி முன்சிபு வகையரா மூலமாய் பிறந்து உகூர் சயமாயிருக்கிற ராஜிநாமாவுக்கும் மாமூலுக்கும் யித்தகணமாயிகளினறிவாசுக்கும் பேதவித்து மேல்சொல்லிபடி வாக்குமூலம் கொடுத்தும் ஷை கிராம புறவில்ச்சேர்ந்த 18-சொச்சம் நஞ்சை ஆயக்கட்டுள்ள பிரியாதியின் குளத்துக்கு ஜலம்விடாமல் அது நிமித்தியம் ஷை நிலங்கள் பூராவாய் நஞ்சை சாகுபடியாகாமல் பிரியாதிக்கு மாகூல் நஷ்டமும் சர்க்காருக்கு தீர்வை லுக்குசானும் நேரிட்டிருப்பதாயும் காணுகிறதுமல்லாமல் என்னுடைய உத்திரவின்படி குளவாயை ஷை நாட்டாண்மைக்காரன் அடைக்காமல் மாளிபம் வகையரா இதற கிராமகுளத்துக்கு அநுவழியாய் அதிகதண்ணீர் போக்குவிட்டிருக்கிறான். ஆனதால் ராஜிநாமா வகையராவின்படி பிரியாதியின் குளத்துக்கு இனிமேலாக தடங்கலன்னியில் தண்ணீர் விட்டு ஷை குளம் பெருகினதின்பேரில ஷை குளவாயில் தண்ணீர் விடும்படியாய் தீர்மானிக்கவேண்டியது நியாயமாய் காணுகிறபடியினாலே அந்தப்பிறகாரம் நிறவேத்தவேண்டிய காரியத்துக்கு சாதராகிற உத்திரவினபடி நடத்திக்கொள்ளுகிறேன.

அப்படிக்கு தண்ணீர் விட்டால தங்கள் சாகுபடி நிலங்களுக்கு குந்தகமிருப்பதாய் செவலூர் கிராமத்தின் சிலகுடிகளும் தங்கள் குளத்துக்கு குறைவு நேரிடுவதாக யெழுதி ப்படி கிராமத்தின் சிலகுடிகளும் விண்ணப்பம் வகையரா குடுத்திருப்பதில் செவக்குளம் பெருகி மருகால்போகும்போது விவாதயிடத்தில் மாமூல்படி போக்குவிடுவதினால் செவலூர் குடிகளுக்கு யாதொரு குந்தகமில்லாததும தவிற அதற்கு 6-மயில் தூறத்துக்கப்புறத்திலிருக்கிற மறவனூர் குளத்துக்கு ஷை மருகால் தண்ணீர் நேரேபோக வாய்க்கால் வகையரா இல்லை. இடை மொண்டிப்பட்டி ஆறு வகையராவில் விழுந்த பிறகு ஷை குளத்துக்கும் போகும். இதுக்கு வேறே குறிப்பான ஆறுவகையரா தகுந்தவறத்துகள் யிருக்கிறதுமன்றி ஷை ராஜலிங்க சமுத்திரத்தின் மருகால் தண்ணீர் அதற்கு சமீபத்திலிருக்கப்பட்ட ஷை மொண்டிப்பட்டி ஆற்றில்தானே விழுந்தும ஷை குளத்துக்குப் போகிறது.

இவ்வித நடவடிக்கையாயிருக்க அனேககுடிகளுள்ள ஷை இரண்டு கிராமத்தில் இந்த சொல்பகுடிகள் மட்டும் ஷை முன்சிபு நாட்டாண்மைகாரனுக்கு உடந்தையாய் ஷை விண்ணப்பம் வகையரா குடுத்திருப்பதாய் காணுகிறதே தவிர வேறில்லை.

மேல்கண்ட ராஜிநாமாபடிக்கும் பிறக்குவரை அனுபோகப்பிறகாரமும் ஷை ராஜலிங்கசமுத்திர குளத்துக்கு தண்ணீர் விடவேண்டியது கிறமமாயிருக்கிறதாகையால் விசாரணையில் யேற்பட்ட தஸ்தாவேஜுகளை பேரிட்டதுனே இதில் அடக்கமசெய்திருக்கிறேன். சுலாவணியாக விசிதமாகும்.

(ஒப்பம்) வெங்கிட்டராவ்,
(மஹாராஷ்டத்தில்) தாசில்தார்.

No. 34.

1859௵ ஆகஸ்டு௴ 20உயுள்ள 554-நெ

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மேஸ்தர் ஜான் பர்ட் துரையவர்கள் சமுகத்துக்கு.

உடையார்பாளையம் தாலூகா இன்சார்ஜ் தாசில் நாரணய்யர் சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

இந்த தாலூகா புத்தூர் கிராமத்துக்குடி ஷண்முகப்பிள்ளை யென்பவன் ஷை கிராமத்து பெரியேரியிலிருந்து நஞ்சை நிலங்களுக்கு ஆர்க்காடு சுபா வடக்குப்புத்தூர் கிராமத்து புஞ்சை நிலத்தின் வழியாய் நெடுங்காலமாக பாயப்பட்ட வாய்க்காலை கிராம முன்சிப் தில்லைநாயகம் பிள்ளை யென்பவன் அழித்து சாகுபடி செய்து கள்ளிமேட்டு வழியாய் நூதனமாக ஒரு வாய்க்கால்வெட்டி யிருக்கிறதாகவும் அதினால் ஷை நிலங்களின் சாகுபடிக்கு ஜலம் வர குந்தகமாயிருக்கிறதாகவும் சில விவரம் கண்டு சமுகத்தில் கொடுத்த பிட்டிஷனை அனுப்பியிருக்கிறதாகவும் ஷை தகரார் ஜாகாவுக்கு பிதவியை குத்தாய்ப்போய் கண் பார்த்து நடந்திருக்கிற ஸ்திதியை அறிக்கைசெய்யும்படியாயும் நாளது௴ 8உயில் பிறந்த நெ 439-வது உத்திரவுடன் பிட்டிஷனும் வந்தது.

சமுகத்திய உத்திரவுப்பிறகாறம் பிதவி ஷை கிருமத்துக்குப்போய் தகரூர்ப்படுகிற ஜாகாவை கண் பார்த்ததில் ஷை கிருமத்து பெரியேரியிலிருந்து நஞ்சை நிலங்களுக்கு பாயப்பட்ட வாய்க்காலை யெதிரி கிருமமுனசீபு தில்லைநாயகம்பிள்ளை யென்பவன் அடைத்து தூத்துயிருந்ததைப்பற்றி ஷையானை வறவழித்து விசாரணைசெய்ததில் ஷை கிருமத்துப் பெரியேரியிலிருந்து நஞ்சை நிலங்களுக்கு பாயப்பட்ட வாய்க்கால் போகப்பட்ட மார்க்கத்தில் ஆர்க்காடு சுபா வடச்குப்புத்தூர் எல்லையில் தனக்கு புஞ்சை குழி—50 நிலமிருந்ததை நஞ்சை சாகுபடிக்காக பிராக்கு வருஷத்தில் கோளார் செய்து வருகையில் ஷை வாய்க்கால் ஷை புஞ்சை நிலத்தின்பேரில் 50-கெஜ நீளத்துக்கும் 2-கெஜ அகலத்துக்கும் 1-கெஜ ஆளத்துக்கும் இதற்கு முன்னமே வெட்டப்பட்டிருந்ததாலும் அதினால் ஷை நிலம் நஞ்சை சாகுபடிக்கு யெடஞ்சலாயிருந்ததைப்பற்றி அதை வெட்டி தன்னுடைய நிலத்துடன் சேர்த்துக்கொண்டதாகவும் அப்போது பிட்டிஷனர் வகையரு பேர்களாவது ஷை கிருமத்து பட்டாமணியகாரர் முதலான மைத்த குடிகளாவது ஆட்சேபிக்கவில்லையென்றும் இப்போது அந்த வாய்க்கால் வழியாய் தான் நஞ்சை நிலங்களுக்கு ஜலம் பாய்ச்சிக்கொள்ளவேணுமென்று பிட்டிஷனர் வகையரு சொல்லுகிறபடியினாலே மாமூல்பபிறகாரம் ஷை வாய்க்காலில் ஜலம ஸருகமாய் போகும்படி வெட்டிக்கொடுக்கிறதாகவும அதில் இனிமேல் பிரவேசிக்கிறதில்லையென்றும் சொல்லி வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்.

ஷை வாக்குமூலத்துடன் அசல் பிட்டிஷனையும் இதில் அடக்கம் செய்து அனுப்பியிருக்கிறேன். சுலாவணியாக விசிதமாகும்.

ஷை யெதிரி முன்சீப் தில்லைநாயகம்பிள்ளை யென்பவன் இந்த தாலூகா புத்தூர் கிருமத்தில் குடியிருக்கப்பட்டவனாகவும் அவனுடைய ஷை நிலம் ஆர்க்காடு சுபா வடக்கு புத்தூர் யெல்லையாகவும் இருக்கிறதும் தவிற ஷை வடக்கு புத்தூர் கிருமமும் இந்த புத்தூர் கிருமமும் சேர்ந்தரணையாயும் நிலங்களெல்லாம் திடிகலப்பாகவும் இருக்கிறதே தவிர வேறில்லை.

ஆகிலும் ஷை தில்லைநாயகம் பிள்ளை யென்பவன் முன்னேப்பந்தம் ஜலம் ஸராகமாய் போகும்படியாய் பழய வாய்க்காலைவெட்டி துரஸ்துசெய்து கொடுக்கிறதாக சொன்னான். அதை பிதவி நம்பாமல் உடனே அவனுடைய ஆள்களைக்கொண்டு ஷை வாய்க்காலை முன்யிருந்த மாமூல்யிடத்தில் வெட்டிவித்து துரஸ்செய்து இருக்கிற சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாக யெழுதிக்கொண்டேன்.

வேணும் சலாம்

(ஒப்பம்) நாறணய்யர்,
இன்சாஜ தாசில்.

No. 35.

1860ளு ஜுன்மீ 16உ யுள்ள 211-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆ-கலெக்ட்டராகிய மகா-ா-ா-ஸ்ரீ மெஸ்தர் எ-இ-ஆர். மக்டானல் துறையவர்கள் சமுகத்துக்கு.

• துறையூர் தாலூகா தாசில் அய்யாபிள்ளை சலாம்செய்து எழுதிக்கொண்ட அர்ஜி.

இந்த தாலூகா வயிரிசெட்டிபாளையம் கிராமத்திலிருக்கும் நாகி ரெட்டி கிஷ்ண ரெட்டியும், கொப்பம்பட்டி நல்லாயம்மாள் வகையருப்பேர்களும் தழுகையாத்து பெறியாண்டவன்கோவில அணைவாய்க்காலைப்பற்றி தகரார்ப்பட்டு உசூர் விசாரணைக்குவந்திருந்தவர்கள் இருகட்சிக்காரர்களும் பிறமாணத்தின் பேரில் ஓரசல்செய்துக் கொள்ளுவதாய் கேட்டுக்கொண்டதால் பேர்வழிகளை அனுப்பியிருப்பதாயும் சிலமத்தியஸ்தர்களையும் கூடவயித்துபயிசல்செய்து அறிவிக்கும்படி டிப்டி மேஜிஸ்திரேட்டா ராபின்ஸின் 59ளு டிசம்பர்மீ 30உயுள்ள 11¼-வது நி உத்திரவுசாதருயிருக்கிறது. அதைக்குறித்து மாஜிதாசில்தார் ஷையிருகட்சிகாரர்களையும் ஷைவாய்க்கால் பாச்சல்காரர்களையும் அவர்கள்கோரப்பட்ட சிலமத்தியஸ்தர்களையும் கூட்டிவந்தாஜர்செய்யும்படி ஷைகிராமத்தயன்சேவுகனுக்கு ரூபு ரூபில் தாக்கிதுசெய்து அனுப்பியிருந்ததாய்தெரியவந்ததும் தவிற பிதவி ஜனவரிமீத்தில் இந்த தாலூகாவுக்கு வந்ததின் பிறகு ஷையார்களை கூட்டிவரும்படி 2-தடவை தயன்சேவுகனுக்கு தாக்கீது அனுபபியிருந்ததில் ஷைவாதி கிஷ்ணரெட்டி குளிர்காச்சல்வந்து ரொமபசீக்காயிருப்பதாய் தயன்சேவுகன் தெரியப்படுததிவந்ததும் தவிற ஏப்பிறல்மீ 25உயில் கொப்பம்பட்டிக்கு சவாரிபோயிருந்தபோதும ஷை தயன்சேவுகனை ரூபு ரூபில் கேட்டதிலும் அப்பவும் ஷைகிஷ்ண ரெட்டி சீக்காகவேயிருப்பதாய் தெரியபபடுத்தினதினாலே கொஞ்சம் லெகுவானவுடனே அவர்களை கூட்டிவரும்படியாய் உத்திரவுகொடுத்திருந்தேன. பிறகு ஷைகிஷ்ணரெட்டி ஆஜராகாமல் யிருந்தாலும் முன்பயிசல் உத்திரவுபடிக்கி வாய்க்கால் வெட்டிவயிக்கவேணுமென்று மேமீத்தில் சமுகத்தில் குடுத்த பிட்டிஷனைக்குறித்து ரிவினியூ தரப்பில் முன் உத்திரவுப்படிக்கி நிரவேத்தி வயித்து தெரியப்படுத்தும்படியாய் மேமீ 14உயுள்ள 204-நி. உத்திரவு 16உயில் சாதரானபடியினாலே முன்உத்திரவுப்படிக்கி உடனே வெட்டிவயித்து தெரியப்படுத்தும்படி பேஷ்காருக்குதாக்கீது அனுப்பியிருந்ததும் தவிற மறுபடியும் தாக்கீதுடனே சேவுகனை அனுப்பியிருந்ததில் பேஷ்கார் அந்த ஜாகாவுக்குப்போய் உத்திரவை யெதிரிகளுக்கும் அறிவித்து ஷை வாய்க்கால் (ஏ) அடையாளம் முதல் (பி) அடையாளம் வரையில் 168-கெஜ தூரம தூத்ததை வெட்டிவைத்து ஷை வாய்க்கால்வழியாய் ஜலம்திருப்பிவிட்டு தோட்டம் காணி 2-9-6 நிலத்துக்கு பாச்சியிருப்பதாயும் அதற்காக ஷை கிஷ்ணரெட்டியிடம் வாங்கினரசீதுடன் நாளது தேதியில 155-நி. ரிபோர்ட்டுசெய்திருப்பதினாலே அந்த ரிபோர்ட்டு 1, ரசீது 1, 204-நி. இண்டார்சு பிட்டிஷன் 1, ஷைகொப்பம்பட்டி நாராயணரெட்டி வகையருபேர்சமுகத்திற்கெழுதிக்கொண்டு சாதரான 234-நி. இண்டார்சு பிட்டிஷன் 1, ஆக 4-ம் இதிலடக்கமாய் அனுப்பியிருக்கிறேன.

ஆகையால் சமுசத்திய உத்திரவுபடி நிறைவேற்றியிருக்கிற சங்கதி சித்தமறியலாவதாய் யெழுதிக்கொண்டேன்.

மு.—வாலீசபுறம். (ஒப்பம்) அய்யாபிள்ளை, தாசில்.

No. 36.

1863-௵ செப்டெம்பர்௴ 19௳ யுள்ள 383-நி.

திருச்சினப்பள்ளி ஜில்லா ஆக்ட்டிங்கு கலெக்டருகிய மேஸ்தர்-ஏ-ஜெ-வாலவுஸ் துரையவர்கள் சமுகத்துக்கு.

குளித்தலை தாலூகா தாசில்தார் தம்பிசாமி பிள்ளை எழுதிக்கொண்ட அர்ஜி.

1861-௵ டிசம்பர்௴ 21௳ யுள்ள 579-நி. உத்திரவில்கண்ட பழயகோட்டை கிராமத்து கருங்குளத்துக்கு ஜலம வரப்பட்ட பொன்னையாத்தில் அருளாயக்கவுண்டன், சாந்தப்பன் வகையருப்பேர்கள் அணைபோட்டு ஜலம் கொண்டுபோகுற ஜாகாவை சப்மாஜிஸ்திரேட்டைக்கொண்டு பார்வையிட்டு அவருல் வேண்டும் விசாரணைகளையம் நடத்தி உததிரவில் குறித்த ஒவ்வொரு பாயிண்டுகளுக்கும சவால்ஜவாப்புடன் வரவழிக்கலான யாதாஸ்தும் அதிலடங்கிய தஸ்தாவேஜுகள் 45-ம் அதுவிஷயமாய் 56 ௵ ஜுன்௴ 17௳ 30௳ யில் மதுரை சுபா சப் அசூரிலிருந்து சாதரான 127, 174-இந்த இரண்டு நி. அசல் உத்திரவுகளையும் சமுகத்தின் பார்வைக்காக இதில் அடக்கமாய் அனுப்பியிருககிறேன்.

தஸ்தாவேஜுகளினலே பார்க்கும்போது முகவனூர் அருளப்பகவுண்டன் வகையருப் பேர்களுடைய ஆத்துப்பாசனமான நிலத்துக்கு ஷை பொன்னையாத்திலிருந்து ஜலம்போன சிகஸ்தாயிருநத வாய்க்காலை துரஸ்துசெய்துகொள்ளும்படி 56-௵ ஜுன்௴ 17௳ யுள்ள 127-நி. உத்திரவும் செக்கணம் சாந்தப்பன் சொந்த சிலவுனல் 54-ம் பசலி முதல் உண்டுபண்ணின குளத்துக்கு ஷை ஆத்திலிருந்து வாய்க்கால்வெட்டி ஆத்தில் அணையில்லாமல் ஜலமகொண்டுபோகுறதில் கருங்குளத்துக்கு ஜலம்போக தட்டில்லையென்றும ஷை கிராமத்தார் செய்யும் தகரூர் ஒப்புக்கொள்ளத் தக்கதில்லையென்றும் ஷை ௵ ஜுன்௴ 30௳ யுள்ள 174-நி. உத்திரவும் வறப்பட்டிருககிறதாகவும் நூதனமாய் வெட்டினவாய்க்கால் அல்லவென்றும் ஷை வாய்க்கால் பக்கங்களில் கிருப்ஞலாவது கல்லுனலாவது அணைபோட்டிருக்கவில்லை யெனறும், அருநீர் வருங்காலத்தில் மணலில் பள்ளமாய் பரித்து அதில்தேங்கின ஜலம் ஷை வாய்க்கவில்அவாள் நிலங்களுக்காக கொண்டுபோகிறதில் ஒருவருக்கும் யெடஞ்சலில்லையென்றும் ஷை பொன்னையாத்து ஜலம கருங்கொளம் தாண்டி கிழக்கே செட்டியபட்டி வேங்கங்குரிச்சி இந்த கிருமத்து யேறிசளுக்கும் தட்டில்லாமல் போய்க்கொண்டிருக்கிறதாகவும் தெறியவருகிறது.

ஷை கருங்குளத்துக்கு கிழக்கேயிருக்கிற கிராமத்து யேறிசளுக்கு ஷை பொன்னையாத்து ஜலம் தட்டில்லாமல் போய்க்கொண்டிருக்கையில் மத்தியவிருக்கிற கருங்குளத்துககு ஜலத்தட்டுண்டாகுமென்று நினைக்க ஆஸ்பதமில்லாததாக இருக்கிறதாகையால் இது சங்கதி விசிதமாவதாக எழுதிக்கொண்டேன். உத்திரவு வருகிறபடி நடந்துகொள்ளுகிறேன்.

(ஒப்பம்.) ஒ-நா-புருஷோத்தமய்யங்கார்.

தங்கள்விதேயன்,

(ஒப்பம்.) தம்பிசாமி,

தசில்தார்.

No. 37.

1865-௵ நவம்பர்௴ 28௳ யுள்ள 451-நி.

திருச்சினப்பள்ளி ஜில்லா கலெக்டருகிய ஏ-இ-ஆர்-மக்டானல் துரையவர்கள் சமுகத்துக்கு.

திருச்சினப்பள்ளி தாலூகா தாசில்தார் பட்டாபிரும் பிள்ளை யெழுதிக்கொண்ட அர்ஜி.

சென்ற அக்டோபர்௴ 7௳ யிலான 386-வது நி. உத்திரவில்கண்ட உடையார்பாளையம் தாலூசா கண்டருதித்தியம் கிருமத்துக்கு வழக்கப்படி ஜலம் பாயப்பட்டதை இந்த தாலூகா வரகாலூர் வகையரு கிராமத்தார் தடுக்காமல் இருக்கும்படி திட்டம்செய்யச்சொல்லி அந்த இலாகா ரிவினியூ இனஸ்பெக்டர் கிருஷ்ணய்யங்காருக்கு தாக்கீது அனுப்பி திட்டமசெய்திருந்ததில் மாமூல்படி ஜலம் பாயத்தக்கதாக திட்டம்செய்திருப்பதாய் ஷை இன்ஸ்பெக்டர் எழுதிய ரிபோர்ட்டு 1, அத்துடன் வந்த பிளான் 1, உத்திரவுடன வந்த பிட்டிஷன் 1, ஆக தஸ்தாவேஜி 3-யும் இநத அர்ஜியில் அடக்கமாக அனுப்பியிருக்கிற சங்கதி விசிதமாவதாக எழுதிக்கொண்டேன்.

(ஒப்பம்) வரதய்யங்கார் குமாஸ்தா.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) T. PATTABIHIRAM.

Tahsildar.

38.

1866-௵ ஜெனவரி௴ 31௳ யுள்ள 29-நி.

திருச்சினப்பள்ளி ஜில்லா கலெக்ட்டருகிய ஏ-இ-ஆர்-மக்டானல் துரையவர்கள் சமுகத்துக்கு.

திருச்சினப்பள்ளி தாலூகா தாசில்தார் பட்டாபிபிரும் பிள்ளை யெழுதிக்கொண்ட அர்ஜி.

எலந்தவாய்த்தலை வாய்க்காலாசரு கம்பரசம்பேட்டை வகையரு கிராமங்களின ரயித்துகள் புதுவாத்தலையிலிருந்து ஷை யெலந்தவாத்தலைக்கி குறாபு கட்டும்படி அவர்களுக்கு அடிக்கடி அறிவித்தும் அந்தப்படி நடக்கவில்லையென்றும் புதுவாத்தலையிலிருந்து யெலந்தவாத்தலைக்கி ஜலம் சப்ளைசெய்ய யேதோ பாத்தியமிருப்பதாய் அவர்கள் எண்ணியிருப்பதாக எக்சிகியூடிவ் இஞ்சினீர் துரையவர்கள் லெட்டர் எழுதியிருப்பதாயும் மாமூலாய் நடந்திருக்கிற சங்கதிகளையும் விசாரித்து அறிவிக்கும்படி நாளது௴ 18௳ யிலான 17-நி. உத்திரவு சாதராயிருக்கிறது.

அதைக்குறித்து கம்பரசம்பேட்டை பட்டா மானிம் அப்யாவய்யன் 1, மகாஜனம் சுப்பய்யன 1, முத்தரசநல்லூர் கணக்கு குமாஸ்தா பிரத்தியகூமய்யன் 1, முன்சிபு ரங்கய்யன் 1, குடிநல்லுபிள்ளை 1, அல்லூர் மகாஜனம சகஸ்திரநாமய்யர் 1, முன்சிபு பட்டாமணியம் யெக்யமய்யன 1, பழுவூர் மகாஜனம் வெங்கிட்டருயமய்யன் 1, இவர்களை விசாரணைசெய்து யேற்பட்ட வாக்குமூலம் 8, கம்பரசம்பேட்டை பட்டாமணியம் அய்யாவய்யன் தாக்கல்செய்த தஸ்தாவேஜிகள் 7, அதுகளின் பேரிஸ்து 1, யெலந்தவாத்தலை வாய்க்கால் ஜலவிஷயத்தில் மிராசுதாருக்குள் உண்டான தகரூர் விஷயத்தைப்பற்றி பிதவி எக்சிகூடிவ் இஞ்சினீர் துரையவர்களை கேட்டிருந்ததற்காக அதற்கு ஜவாப்பாய் ஷை துரையவர்கள் எழுதிய மிமோ அத்துடன் வந்த பிளான் 1, ஆக தஸ்தாவேஜிகள் 18-யும் பேரிஸ்து பிரகாரம் இந்த அர்ஜியில் அடக்கமாய் அனுப்பியிருக்கிறேன்.

ஷெ தஸ்தாவேஜிகளில் கண்டபிறகாரம் முதலாவது யெலந்தவாத்தலை வாய்க்காலானது ஆதியில் அல்லூர் 1, பழுவூர் 1, முத்தரசநல்லூர் 1, முருங்கப்பேட்டை 1, கூடலூர் 1, கம்பரசம்பேட்டை 1, மல்லாச்சிபுரம் 9, இந்த யெழு கிருமத்துக்கு பாச்சல் திட்டம் யென்றும் அதில் அல்லூர் 1, முத்தரசநல்லூரைச்சேர்ந்த கணவனூர 1, இந்த கிராமம் மேட்டுநிலமானதால் அதற்கு பாச்சல் சவுக்கியமில்லாதநிமித்தியம் அவ்வித குந்தகம் நிவாரணமாகும்பொருட்டு 1244-ம் பசலிக்கு 1834-௵ த்தில் கோணவாத்தலை என்கிற புதுவாத்தலை வாய்க்காலை சர்க்காரில் நூதனமாக வெட்டப்பட்டிருக்கிறதாயும் அந்த வாய்க்கால் ஜலம் அல்லூர் வகையறுவுக்கு பாய்ந்து வநததாகவும் அப்பால் 1844-௵ த்தில் யெலந்தவாத்தலை குறம்பு தலப்பில் காவேறி நீரோடி ஆழங்கால்பட்டு அந்தககாரணத்தால் ஷெ வாய்க்காலில் ஜலம் வருமல் கம்பரசம்பேட்டை வகையறு கிராமங்களுக்கு ஜலம் பாயவில்லையென்றும் அப்படிக்கொத்த குந்தகம் நிவாரணமாகும்பொருட்டு மேலேகண்ட 7-கிருமத்திய ஆள்களைக்கொண்டு சற்காரில் நல்லயேலையுடன் இருந்த புதுவாய்த்தலை குறம்பை அடைத்தும் அந்த யெழு கிராமத்தாருடைய சமாதானத்தினபேரில் அல்லூர் மேட்டு நிலத்துக்கு விடப்பட்ட அறை அடி ஜலம்போக மீதிஜலத்தை மூன்றுக பாகித்து இறண்டு பங்குஜலம் அல்லூர் 1, பழுவூர் 1, முத்தரசநல்லூர் 1, கூடலூர் 1, இந்த 4-கிருமங்களுக்கும் ஒரு பங்கு ஜலம் முருங்கப்பேட்டை 1, கம்பரசம்பேட்டை 1, மல்லாச்சிபுரம் 1, இந்த 3-கிராமங்களுக்கும் பாச்சிக்கொள்ளுகிறதென்று கரூர் செய்யலாகி அதற்காக 1844-௵ டிசம்பர்௴ 5௳ யில் முச்சிலிக்கா யேற்பட்டும் அதில் யெலந்தவாய்த்தலை வாக்காலில் ஜலத்தட்டு நேரும்போது கடியக்குரிச்சி சரகத்தில் யேற்படுத்தியிருக்கிற கண்டறைவழியாய் கம்பரசம்பேட்டை வகையறு கிராமத்தார் ஜலம்கொண்டுபோகிறதென்று ஷபசலாகி ஷெ கண்டறைக்கி வடபுறமிருக்கிற முத்தரசநல்லூர் வாய்க்காலில் மாத்திறல் மேன்பாலம் போட்டு அதின்வழியாய் சூப்பிரிண்டாண்டு சுப்பாநாயக்கர் கம்பரசம்பேட்டை வகையறுவுக்கு ஜலம்விட்டதாயும் அதற்கு 4 வது வருஷத்தில் ஷெ மேன்பாலத்தை நிருத்தி முத்தரசநல்லூர் வாய்க்கால் நீரோடியில் கிழ்ப்போக்கிகட்டி அந்த கிழ்போக்கி வழியாய் சம்பரசம்பேட்டை வகையறு வாய்க்காலில் ஜலம் போவதாயும் புதுவாத்தலை ஜலமானது 1844-௵ த்தில் கம்பரசம்பேட்டை முதலான கிருமங்களின் பாச்சலுக்கு உபயோகப்பட ஆரம்பமாகி அதுமுதல் அந்தப்படி ஜலம் வருவதாகவும் தெரியவருகிறது.

இரண்டாவது. புதுவாத்தலை வாய்க்கால் உண்டானபிறகு யெலந்தவாத்தலை வாக்கால்ஜலம் அல்லூர் கிராமபாச்சலுக்கு சம்மந்தப்படாமல் மைத்த 6-கிருமங்களுக்கு பாச்சல்யென்றும் ஷெ யெலந்தவாத்தலை குறம்புக்கு அந்த 6-கிருமத்தாரும் ஆள்களை அனுப்பி குறம்படைப்பது வழக்கமென்றும் இப்பால் 4-வருஷமாக யெலந்தவாத்தலை குறம்பு யேல்வு சுத்தபாப தப்பியும் வாய்க்கால் மேடிட்டும் போன நிமித்தியம் அந்தக்குறம்பு அடைக்கப்பட வில்லையென்பதாயும் ஷெ யெலந்தவாத்தலை வாய்க்காலானது தலப்பு மதகுக்கு கிழக்கு இரண்டு வாய்க்காலாக பிரிவினை யேற்பட்டு இருப்பதில் கரூர் ரஸ்தா ஓரமிருக்கிற வடபுறம் வாய்க்காலானது கம்பரசம்பேட்டை 1, மல்லாச்சிபுறம் 1, முருங்கபேட்டை 1, இந்த 3-கிருமங்களுக்கும் அதின் தென்புறமிருக்கிற வாய்க்காலானது முத்தரசநல்லூர் 1, பழுவூர் 1, கூடலூர் 1, இந்த 3-கிராமங்களுக்கும் பாச்சலென்பதாயும் வெளிப்படுகிறது.

மூன்றுவது. புதுவாய்தலை வாய்க்காலாசறுவில் முத்தரசநல்லூரிலுள்ள பூமிக்கி ஷெ வாய்க்காலில் வரும் ஜலம் போராத நிமித்தியம அருந்தல் காலங்களில் அந்தகிருமத்தா கம்பரசம்பேட்டை வகையறுவுக்கு புறிவினையாகி போகப்பட்ட வாய்க்கால் ஜலத்தை முத்தரசநலலூர் சரகம் மண்டபம் தோப்புக்கு கிழ்புறம் ஊருக்குபோகிற மார்க்கத்தில் வாய்க்கால் கரையை வெட்டி முத்தரசநல்லூர் நிலத்துக்கு சுமார் 15-வருஷமாக கொணடுபோவதாயும் அதை கம்பரசம்பேட்டை கிருமத்தார் அப்போதைக்கப்போது அடைத்துப்போடுவத யும அது விஷயத்தில் உடயகிராமத்தாருக்கும் விவாதமுண்டாகி மாஜி தாசில்தாரிடம் அறிக்கையானதற்காக அந்தப்படி கரையை வெட்டக்கூடாதென்று 1863-௵ த்தில் உத்திரவு பிறந்திருப்பதாயும் தெறியவருகிறது.

நாலாவது. மேல்கண்டபடி கரையை வெட்டி முத்தரசநல்லூரார் ஜலம் கொண்டுபோக சர்க்கார் மூலமாக ஆதாரம் காணப்படவில்லை. அவர்களுக்குண்டாகிற ஜலத்தட்டு நிமித்தம் திசர்கிராமத்தார் வாய்க்கால் ஜலத்தில் பிறவேசிப்பதாயுமிருக்கிறது.

5. யெலந்தவாத்தலை வாய்க்காலில் பிறிவாசப்பட்ட இரண்டுவாய்க்காலில் கம்பரசம்பேட்டை வகையறு வாய்க்காலை ஷெ கிராமத்தார் சர்க்காரில் இஷ்டமெண்டு யேற்பட்டு வேலையாகவேண்டியதை எதிர்பாராமல் அப்போதைக்கப்போ சொந்த சிலவில் வெட்டிவருகிறதாகவும் முத்தரசநல்லூர் முதலான கிராமங்களின் வாய்க்காலை அந்த கிருமத்தார் சர்க்காரில் வழக்கப்படி வேலைநடக்குமென்று நினைத்திருந்து வேலை நடவாமல் போனதின்பேரில் தாங்கள் சொந்தத்தில்கூட வெட்டுவேலை நடப்பிவிக்காமல் வாய்க்கால் ஸ்வரூபம் மாறி நீரோடி மேடிட்டுபோயிருக்கிறது. அப்படிக்கொத்த வாய்க்காலை பார்வையிட்டநான் சொந்தசிலவிலாவது ஷெ வாய்க்காலை வெட்டும்படி முத்தரசநல்லூர் கிராமத்தாருக்குச்சொன்னதில் அவர்கள் யேத்துக்கொண்டு ஒரு சேவுகனை கொடுக்கவேணுமென்று கேட்டுக்கொண்டபடி அவர்களுக்கு சேவுகனை கொடுத்திருந்தும் அவர்கள்வெட்டாமல் கம்பரசம்பேட்டை வாய்க்கால் ஜலத்தை மேல்கண்டபடி முத்தரசநல்லூர் சரகத்தில் வெட்டிக்கொண்டு போவதில்தானே யிச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

6. இஞ்சினியர் துரையவர்களுடைய மிமோவின் தாத்பரியத்தைக் கண்டு முத்தரசநல்லூர் கிராமத்தாருக்கு தாக்கீது அனுப்பியிருந்ததில் அவர்கள் கம்பரசம்பேட்டை வகையறுவுக்கு புதுவாய்த்தலை வாய்க்காலிலிருந்து போகபபட்ட ஜலத்தை ஷெ உத்திரவின் தாத்பரியப்படிக்கி அடைத்துப்போட்டார்கள். பிரகு கம்பரசம்பேட்டை கிராமத்தார் ஆஜராகி தங்கள் கிராமத்துக்கு ஜலத்தட்டு உண்டாகாமல் இருக்கும்பொருட்டு சர்க்கார் தரப்பில் கண்டறையும் கிழ்போக்கியும் கட்டி புதுவாய்தலை ஜலம்விட்டு அந்தப்படி 1844-௵ முதல் பாய்ந்துவந்ததை நிருத்திப்போட்ட நிமித்தம் நஞ்சை நிலங்களுக்கு ஜலமே யில்லாமல் அதிக காச்சலாக யிருப்பதாயும் நஞ்சை நிலங்களையும் வாய்க்காலையும் பார்வையிட்டு மாமூல் பிறகாரம் ஜலம்பாய உத்திரவுசெய்யவேண்டியதாய் தெறிவித்துக்கொண்டார்கள். அதின நிஜமறிய பிதவிபோய் பார்வையிட்டதில் கம்பரசம்பேட்டை வகையருப்பயிர்கள் அதிக காச்சல்குடித்து வாய்க்கால் நீரோடியில் ஜலம் வரத்தேயில்லாமலும் ஷெ கிராமங்களுக்கு மாமூலாய் வந்துகொண்டிருந்த ஜலம்கூட புதுவாய்த்தலை வாய்க்காலில் போய்கொண்டிருந்ததனாலும் கம்பரசம்பேட்டை கிராமத்தார் ஆஜர்செய்த தஸ்தாவேஜுகளை பார்வையிட்டதில் முதலாவது கலத்தில்கண்ட அல்லூர் வகையறு 7-கிராமத்தாருடைய சமாதானத்தினபேரில் புதுவாய்த்தலை வாய்க்கால் ஜலத்தை 3-பங்கு செய்து இரண்டு பங்கு அல்லூர் முத்தரசநல்லூர் பழுவூர் கூடலூருக்கும் ஒரு பங்கு ஜலம் முருங்கப்பேட்டை கம்பரசம்பேட்டை மல்லாச்சிபுறம் இந்த மூன்று கிராமங்களுக்கும் பாச்சிக்கொள்ளுகிறதென்று பரிஷ்காரமாய் தஸ்தாவேஜி யேற்பட்டிருந்தபடியாலும் இஞ்சினியர் துரையவர்கள் அனுப்பிய மிமோவில் வாடிக்கையாய் 25-௵ காலமாக வாடிக்கையாய் ஜலம் போய்க்கொண்டிருந்த கண்டறையை வடிமதகென்று எண்ணி அதை முத்தரசநல்லூரார் இஷ்டப்படி அடைக்கவும் திறந்துகொள்ளவும் கூடுமென்று சொல்லப்பட்டிருந்தாலும் அதுமாமூல்

அனுசரியாமலே கொடுத்த வெரும் தாத்பரியமென்று அந்த மிமோவிலேயே கண்டிருந்ததனாலும் கம்பரசம்பேட்டை வகையரா கிராமங்கள் கடப்பாச்சலுள்ளதாயும் அதிககாச்சலாகவுமிருந்ததையிட்டு உபயதாப்பில் சமாதானத்தின்பேரில் யேற்பட்டிருந்த நடவடிக்கைகளையும் மாமூலையும் அனுசரித்து வழங்கப்பிரகாரம் கம்பரசம்பேட்டை வகையராவுக்கு ஜலம் பாயும்படி திறந்துவிட்டு அந்தப்படி பாய்ந்துவருகிறது. யெலந்தவாய்த்தலை குறம்பு ஜலமானது ஷெ வாய்க்காலில் சுத்தமாய் வரத்தேயில்லாததனால் அந்த குறம்பு கட்டும்படிக்கும் அதற்கு வழங்கப்படி ஆள்களை அனுப்பும்படிக்கும் அல்லூர் தவிர மைத்த 6-கிராமத்தாருக்கும் திட்டப்படுத்தி குறம்படைக்க பிரயத்தினப்பட்டதில் வாய்க்கால் வெட்டில்லாமல் அதிகமேடாகவும் காவேரி நீரோடி பள்ளமாகவும் இருப்பதையிட்டு இரண்டு மூன்று தடவை அடைத்தும் அடைப்பு பிடிபடவில்லையென்று தெரியவந்திருக்கிறது. கம்பரசம்பேட்டை மல்லாச்சிபுரம் கடப்பாச்சலுள்ளதாயும் முத்தரசநல்லூருக்கு ஜலசவுகரியம் போதாமையாயுமிருக்கிறதாக தெரியவருகிறபடியால் கம்பரசம்பேட்டை வாய்க்காலில் போகுற ஜலத்தை முத்தரசநல்லூர் சரகத்தில் ஷெ கிராமத்தார் வெட்டிக்கொண்டுபோவது கிராம விரோதமாகவும் அந்தப்படி அவர்களை ஜலம் கொண்டுபோக விட்டுவிட்டால் கம்பரசம்பேட்டை வகையரா கடைப்பாச்சலுக்கு ஜலத்தட்டு உண்டாகத்தக்கதாயும் இருக்கிறது. அவ்விதருந்தங்களை நிவாரணம் செய்யும்பொருட்டு நல்ல யேல்வையுடனிருக்கிற புதுவாய்த்தலை குறம்பு தலைபுவாய்க்காலை இஞ்சினீர் இலாகாதார்களைக்கொண்டு அகலப்படுத்தியும் எல்லா கிராமங்களுக்கும் பாயும்படி வாய்க்காலில் பூரணமாய் ஜலம் வரும்படியாக தகுந்த மராமத்தும் ஒவ்வொரு கிராமத்துக்கு தட்டன்னியில் வேண்டியஜலம் பாயும்படி ஒவ்வொரு கிராம பிரிவு சரகத்திலும் மதகுகட்டியும் பரிஷ்காரப்படுத்திப்போட்டால் யாதொரு விவாதத்துக்கு இடமன்னியில் எல்லா கிராமங்களுக்கும் கிரமமாக ஜலம் பாயலாமென்று காணப்படுகிறது.

யெலந்தவாய்த்தலை வாய்க்கால் தலைப்புக்கு கீழ்ப்புறம் காவேரியின் நீரோடியில் கட்டைகட்டிப்போட்டால் ஆழங்காலாயிருக்கிற நீரோடியில் மணலடித்து குறம்பு யேல்வை உண்டாகுமென்று அப்பால் குறம்படைத்தால் யெலந்தவாய்த்தலை வாக்காலில் ஜலம் வருமென்றும் இஞ்ஜினியர் துரையவர்கள் ரூபரூபில் சொல்லியுமிருக்கிறார்கள்.

ஆகையால் இந்தசங்கதி விசிதமாவதாக எழுதிக்கொண்டேன். தஸ்தாவேஜிகளை யெல்லாம் பார்வையிட்டானதின்பேரில் வாக்மூலம் 8-தவிர மைத்த நடவடிக்கைகளை வாபஸ்செய்யும்படி உத்திரவாகவேணும் சித்தமறியவேண்டியது.

தங்கள் விதேயன்.

(ஒப்பம்) மு. வறதய்யங்கார், குமாஸ்தா. } T. PATTABHIRAM. Tahsildar

—— ——

No. 39.

1866-ஹ டிசம்பர்மீ 31உ யுள்ள 586-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டராகிய ஜார்ஜு பான்பூறி துரையவர்கள் சமூகத்துக்கு.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தார் பட்டாபிராம் பிள்ளை யெழுதிக்கொண்ட அர்ஜி.

பூவாளூர் தேவஸ்தானத்தைச்சேர்ந்த அனந்தனூர் கிராமத்திய நஞ்சை நிலத்துக்கு அருந்தல்காலத்தில் ஜலம் பாச்சவும் மாடாடுகளின் குடிதண்ணீருக்கு உபயோகமாகவும் இருக்கிற குட்டைஜலத்தை மருதூர் வாசுதேவநாடான் அவனுடைய நஞ்சை நிலத்துக்கு கொண்டுபோய் நஞ்சைசெய்திருக்கிறதாக குடுத்த பிட்டிஷனைப்பத்தி விசாரித்தும் ரிவினியூ இன்ஸ்பெக்டரைக்கொண்டு ஜாகாவைப்பார்வையிட்டு நடவடிக்கையின் விவரங்கண்டு உசூருக்கு யெழுதிக்கொண்ட 408-வது நி. அர்ஜியின்பேரில் சாதராகியிருக்கிற செப்டெம்பர்மீ 19உ யுள்ள 423-நி. உத்தரவில் உப்பாத்தின் கழிவில் போகப்பட்ட ஜலத்தை எதிரி வாசுதேவநாடான் உபயோகப்படுத்தி அவன் நிலத்தை நஞ்சை செய்வதில் குந்தகம் காணப்படவில்லையென்றும் அந்தப்படி செய்வதில் ஆட்சேபம் உண்டாயெனபதைப்பற்றி விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படிககும் கண்டிருக்கிறது.

அதைப்பத்தி அறிவிக்கும்படி ரிவினியூ இன்ஸ்பெக்டர் சுந்தரமய்யருக்கு உத்திரவு அனுப்பினதில் அவர் மேல்கண்ட குட்டையானது ரொம்பவும் சின்னதென்றும் அந்த குட்டையில் விழப்பட்ட ஜலம் மழைகாலத்திலும் பிரவாககாலத்திலும் மாத்திரம் கழிவாகுமேதவிர மைத்தகாலத்தில் கழிவாகமாட்டாதென்றும் யெதிரி வாசுதேவநாடான் புஞ்சைநிலத்தை நஞ்சைசெய்வதில் அந்தபூமிக்கி ஷெ ஜலத்தைத்தவிர வேறை ஆதாரமில்லையென்றும் நஞ்சைப்பயிருக்கு எப்போதும் ஜலம் வேண்டியதானதால் குட்டை ஜலத்தை அடிக்கடி திறக்கவும் அதினால் சச்சரவுக்கு ஆதாரமும் அனந்தனூர் நஞ்சை பாச்சலுக்கு குந்தகமும் உண்டாகுமானதால் அந்த ஜலம் அனந்தனூர் நஞ்சைக்கு உபயோகமாக வேண்டியதாயும் வாசுதேவநாடாவான் அவனுடைய பூமியை செட்டில்மெண்டு பயிசலில் யேற்பட்டபடி புஞ்சைசாகுபடியாகவேண்டியதாகவும் ரிபோர்ட்டு செய்திருக்கிறபடியால் அந்த ரிபோர்ட்டை இதில் அடக்கமாக அனுப்பியிருக்கிறேன்.

ஆகையால் வாசுதேவநாடாவான் அவனுடைய நிலத்தை செட்டில்மெண்டு பைசல்படி புஞ்சைசெய்துகொள்ளவேண்டியது கிரமமேதவிர அனந்தனூர் தண்ணீர் விஷயத்தில் பிரவேசிப்பது யுக்தமாய் தோற்றப்படவில்லை. முன் எழுதப்பட்டிருக்கிற 408-நி. அர்ஜியில் கண்டமேரைக்கி வாசுதேவநாடாவான் நிலம் புஞ்சையில் தாக்கலாகவேண்டியதைக்குறித்து உத்திரவு சாதராகவேண்டியிருக்கிற சங்கதி விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) மு. வறதய்யங்கார், குமாஸ்தா. } T. PATTABHIRAM, Tahsildar.

No. 40.

1868-ஞூ மார்ச்சுமீ 13௳ யுள்ள 157-நி.

திச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்டரவர்களாகிய முகம்மது ஈசப்சாயபு அவர்கள் சமுகத்துக்கு.

பெறம்பலூர் தாலூகா தாசில்தார் வெங்கிடசாமி நாயக்கர் எழுதிககொண்ட அர்ஜி.

தேவையூர் ரூமசாமிகோனன் வகையரு பேர்கள் தேவையூர் கிராமத்தின் யேறிக்கும் மஜரு ரஞ்சின்செடி கிருமத்தின யேறிக்கு ஜலம் வரப்பட்ட ஆத்துகலிங்கலுக்கு முன்பாகப் பிர மதேசம் குன்னம் படயாச்சி வகையரு பேர்கள் நூதனமாய் கலிங்கலும் நிலைகளும் கட்டியிருக்கிறதாயும் அதனாலே தங்கள்கிருமத்து கலிங்கல் பாச்சலுக்கு குந்தகமென்றும் அசூரில் குடுத்த பிட்டிஷன செட்டில் செய்யும்படியாய் சென்ற பிப்ரவரிமீ 3௳ யுள்ள 32-நி. இண்டார்சு வரப்பட்டிருக்கிறது.

அதுகாரியத்துக்கு இதைப்பத்தி பிதவிமுன்பாகவும் ஒரு மனு கொடுத்திருந்தான் அதை கிருமநவுகர்களுக்கு ரிபாசெய்திருந்து அதைபபத்தி வாலிகண்டபுறம் கானன் பட்டேதாரும் பிரம்மதேசம் கர்ணனும் யெழுதின ரிபோர்ட்டு 2, அத்துடன் வந்த கணக்கு 1, பிதவி முன்பாக பிறமதேச கர்ணனிடத்தில் வாகின வாக்குமூலம் 1, அசல்பிட்டிஷன் 1, மனுவு 1, ஆக 6-யும் இதல் அடக்கமாய் அனுப்பிவித்திருக்கிறேன்.

பிரம்மதேசம் கிருமத்துக்சாக கோனேரியாத்தில்புருதனமாய் யேர்பட்டிருந்த ஒரு சிகிஸ்து கலிங்கல் ஜாகாவில் இப்போ 4 வருஷத்துக்கு முன் ஒருகலிங்கல் கட்டி வாய்க்காலும் வெட்டி அதனவழியாய் ஆத்து ஜலம் வருகிறதாயும் பின்னுக்கு நஞ்சை சாகுபடியாசல மென்றும் பிறகிருதத்தில் புஞ்சை நிலங்களுக்கு பஞ்சு நீர்கூலி யேற்பட்டுவருகிறதாகவும் ஷெ கோனேரி ஆற்றில் அனேகம் கலிங்கல் யேறபட்டிருப்பதினாலே ஒரு கலிங்கலினாலே மைத்தொரு கலிங்கலுக்கு யாதொருகுந்தகமில்லையென்றும் நிலைகள் 10 வருஷமாய யேற்பட்டு வருகிறதாகவும் நூதனமல்லவென்றும் தெரியவருகிறதாகையால் பிட்டிஷனருடைய தாவா மாச்சரியத்தைப்பத்தினதாக காணப்படுகிறது.

ஷெ பிறமதேசம் கிருமத்துக்காக யேற்பட்டிருக்கிற கலிங்கல் பிட்டிஷனர்கள் சொல்லும் கலிங்கலுக்கு 5-மயில் தூரத்துக்கப்பால் யேற்பட்டிருக்கிறபோது அதினால் தங்கள் கலிங்கலுக்கு குந்தகமென்று சொல்லியிருப்பது வீணாதாக யிருக்கிறது.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) மு. அனந்தய்யர் கு. (ஒப்பம்) வெங்கிடசாமி நாயக்கர்,
தாசில்தார்.

No. 41

1868-ஞூ ஆகஸ்டு மீ 25௳ யுள்ள 463-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜெனரல் டிப்டி கலெக்டரவர்களாகிய முகம்மது ஈசப்சாயபு அவர்கள் சமுகத்துக்கு.

பெறம்பலூர் தாலூகா தாசில்தார் வெங்கிடசாமி நாயக்கர் யெழுதிக்கொண்ட அர்ஜி.

கலிங்கல் தகராறைக்குறித்து தேவையூர் ராமசாமிகோனன் வகையருப் பேர்களுடைய பிட்டிஷனைப்பத்தி மார்ச்சுமீ 13௳ யுள்ள 157-நி. அர்ஜி எழுதிக்கொண்டதற்கு ரிவினியூ இன்ஸ்பெக்டரை அனுப்பி அந்த ஜாகாவை பார்வையிடும்படியாகச் செய்து ரிபோர்ட்டு செய்யும்படியாய் ஷெ மாசம் 16௳ யுள்ள 141-நி. உத்திரவு வறப்பட்டிருக்கிற காரியத்துக்கு.

பிதவிகுத்தாய் அந்த ஜாகாக்களை போய் பார்த்தேன் பிறமதேசம் கிராமத்துக்காக மாதேவி எல்லையில் புருதனமாய் ஒரு கலிங்கல் யேற்பட்டிருந்து அதினால் சிலபாச்சலுமுண்டாயிருந்தத கமாசேல் கிருமத்தானும் அடுத்த வாலிகண்டபுறம் கிருமத்தானும் சொல்லுகிறதுமன்னியில் யென் பார்வையிலும் அவர்கள் சொல்லுகிறபடி வெகுகாலத்துக்குமுன் கோனேரி ஆத்தில் ஒரு கலிங்கல் யேற்பட்டிருந்து அது உடைந்து ஜீரணமாய் போய்விட்டதாக பிரத்தியட்சமாய் தெரியவருகிறது.

இப்போ அதற்கு கிழக்கே சமீபத்தில் ஒரு கலிங்கல்கட்டி வாய்க்காலும் பிடித்து சில புஞ்சை நிலங்களை நஞ்சை சாகுபடிசெய்து வருகிறதாயு 10-ஏக்கர் வரையில் நீற்கூலி யேற்பட்டு வருகிறதாயு இந்த கலிங்கல் முதலான வேலைக்கு ஆரம்பித்து 5, 6 ஞூ மாயிருப்பதில் சிலா சிலாவாய் வேலைநடந்துவந்திருப்பதாயும் பழய அந்கலிங்கல்கூட சில நிலங்களுக்கு நஞ்சைத்தறம் தீர்வை யேற்பட்டு வந்திருக்கிறதென்றும் பிட்டிஷனர்கள் சொல்லுகிறபடி நூதனமாய் யேற்பட்ட கலிங்கல் அல்லவென்றும் இந்த கலிங்கலினாலே இசற்கு, 4, 5-மயில் கிழக்கேயிருக்கிற தேவையூர் கலிங்கலுக்கு இடைஞ்சலென்று சொல்லப்பட்டது வீண்முகாந்திரமென்றும் தெரியவருகிறதாகையால் உத்திரவுப்படி தயார்செய்த நகஷா 1, வாலிகண்டபுறம் மாதேவி பட்டாதாரிடத்தில் வாங்கின வாக்குமூலம் 2, ஆக 3-யும் இதில் அடக்கமாய் அனுப்பிவித்திருக்கிறேன் யேதோபொருமையினாலே குடுத்த பிட்டிஷனைக்காணப்படுகிற சங்கதி விசிதமாகுதாய் எழுதிக்கொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) மு. வெங்கிடசுப்பய்யன், குமாஸ்தா. (ஒப்பம்) வெங்கிடசாமி நாயுக்கர்,
தாசில்தார்.

No. 42.

1868 ஹூ ஆகஸ்டுமீ 29உ யுள்ள நி. 186.

திருச்சிநாப்பள்ளி ஜில்லா ஆ. ்ய. அசிஸ்டாண்டு கலெக்ட்டர் மே. சி-டபிளியூ-டபிளியூ, மார்ட்டின் துரையவர்கள் சமுகத்துக்கு.

குளித்தலை தாலூகா ஆ. தாசில்தார் கிருஷ்ணய்யர் எழுதிக்கொண்ட அர்ஜி.

நான் மணப்பாறைக்கி சவாரி போகு போது தொப்பம்பட்டியிலிருக்கும் யாளிக்கவுண்டன் என்பவன் ஷெ கிராமத்தில் அகத்திநீர்கொளமென்கிற தன்னுடைய ஏறிக்கி ஜலம் வரப்பட்ட வறத்துவாரியில் எடுபட்டிருக்கிற ஒடப்புகளை வீரமலை ஜமீன்தார் பெரியோக்க பெனுயக்கர் அடைக்கக்கூடாதென்று தடுப்பதாகவும் அதினால் அகத்திநீர்கொளத்துக்கு சரியாய் ஜலம் வருமலும் அதின் அஜரு நஞ்சை நிலங்கள் பூருசாகுபடியாகாமலும் நஷ்டப்பட்டுக்கொண்டு வருவதாய் அறிவித்து மனுவும் கொடுத்தான்.

அந்த ஜாகாவை செட்டில்மெண்டு ரிஜிஸ்தர், பிளான யிதுகளை வைத்துக்கொண்டு பார்வையிட்டு ஷெ ஜாகா ஸ்திதி தெரியும்படியாய் பிளான் தயார்செய்தும் விசாரணை செய்தும் யேற்பட்ட தஸ்தவேஜிகளை பேரிஸ்தில்கண்ட விவரப்படி இத்துடன் அனுப்பயிருக்கிறேன்.

பிளானில் (ஏ) அடையாளம் போடப்பட்டிருக்கிற 633-நி. தொப்பம்பட்டி யேறியின் கடைக்காலிலிருந்தும (பி) அடையாளமுள்ள வாறிலிருந்து 481-நி. வாறிப்புறம்போக்கு நிலத்திலும் 466-நி. மந்தைபுறம்போக்கிலும் 465-நி சிலட்டர் புஞ்சை தரிசியிலும் 513-நி. நஞ்சை தரிசியிலும் 462-நி. மந்தையிலும் 251-நி. புஞ்சை நிலத்திலும் வந்து அதற்கு கிழக்கே (சி) அடையாளமுள்ள 255-நி. அகத்திநீர்கொளத்தில் சேருகிறது.

செட்டில்மெண்டு பிளானில் அந்த வாரி 465-நி. (சி) லட்டருக்கு மேற்கு 466-நி. வயிலும் 513-நி. ருக்குமகிழக்கு 251-நி. ரிலும மார்க்காகிமத்தியிலிருக்கிற 465, 518-இந்த நி. களில்மட்டும் மார்க்காகாமல் விட்டுப்போய் அதற்கு பதலாய் 465-நி. நிலத்தின தெற்கோறத்தில் வாறியின் சிலபாகமட்டும் மார்க்கு செய்யப்பட்டு அதற்கு தென்கிழக்கிலிருக்கிற 459-நி. நத்தம பிறம்போக்கில் கொண்டுவந்து சேர்த்து அதற்கு கிழக்கு 462-நி. ரிலும 251-நி. தெற்கோறத்திலும் அடையாளம் செய்து 255-நி. யேறிக்கி கொணடுவந்து சேர்த்திருக்கிறது.

அந்த யிடத்தில் வாரியிருக்கவுமில்லை, இதற்குமுன் வாறியிருந்த குறிப்புகளுமில்லை, அந்த இடத்தில் ஜலம் ஓடும்படியான ஸ்திதியாகவுமில்லை ஊர்நத்தமாயும் சாகுபடி செய்யப்பட்ட புஞ்சை நிலங்களாகவும் இருக்கிறது ஆனதினாலே அது பிளானில் பிசகாய் மார்க்காகிப்போயிருக்கிறது.

பிளானில் (டி) அடையாளம் போடப்பட்டிருக்கிற 465-நி. சி. லட்டர் தரிசுநிலத்தில் 2-இடத்திலும் 513-நி. 2, 3-நஞ்சை தரிசு நிலத்தில் ஒரு யிடத்திலும் இந்தப்படி 3 ஒடப்புகள் யெடுபட்டு வாறியில் பூருஜல வந்தால் மட்டும் ஒடப்புவாயில் போய்விடுகிறதுபோக சுவல்பமாக ஜலம் வாறிவழியாய் கிழக்கயிருக்கிற (சி) அடையாளமுள்ள ஏறிக்கி போகத்தக்கதாயும் பிரவாகமன்னியில சுவல்பமாய் வரப்பட்ட ஜலம் ஷெ ஒடப்புகளில் போகத்தக்கதாயுமிருக்கிறதுந்தவிற நான் பார்வையிட்டபோது வாறியில் சொல்பமாய் வந்தஜலமும் ஒடப்புவாயில் போய்க்கொண்டிருந்தது.

465-நி. சி. லட்டரில் யெடுபட்டிருக்கிற ஒடப்பு பாச்சல் வாய்க்காலென்றும் வடபுறமிருக்கிற ஜமீன்தாருடைய நஞ்சை நிலங்களுக்கு பாச்சிவருவதாகவும ஜமீன்தார் காரியஸ்தன் சொல்லுகிறான, என்னுடைய கண்பார்வையில் ஷெ 465-நி. நிலத்தில் ஒடப்பாயிப்போகுற வாய்க்காலுக்கு ஜமீன்தார் காரியஸ்தன் சொலலப்பட்ட வடபுறமிருக்கிற நஞ்சை நிலம 1-கஜ $\frac{3}{4}$-கஜம் மேட்டிலிருக்கிறது. இந்த ஒடப்பு வாய்க்கால் ஜலம் பாயத்தக்கதாயிருக்கவில்லை டாஞ்சகுறிப்புகளுமில்லை.

ஜமீன்தார் காரியஸ்தனுலொருத்தணைபோட்டு பாச்சிக்கொளளுவதாக சொல்லப்பட்டிருக்கிறதில் அட்படிக்குத்தணை போட்ட குறிப்புகளுமில்லை.

ஷெ மேட்டு நஞ்சை நிலங்களுக்கு 633-நி. தொப்பம்பட்டி யேறிஜலம் பாச்சலென்றும் அந்தப்படி பாச்சல்வாரி கணக்கும் யேற்பட்டிருப்பதாகவும் வியக்தமாய் தெரியவருகிறதுந்தவற பிரத்தியட்சமாய் ஷெ தொப்பம்பட்டி யேரிஜலம் பாஞ்சிக்கொண்டுவருகிறது.

பின்னும் ஷெ ஒடப்புவாய் பள்ளத்தாவாயும் முகனையாயுமிருப்பதினாலே ஆனங்கால் வீணாக யிடமன்னியில் அடியில் கருங்கல்கட்டின குறிப்புகளுமிருக்கிறது தவிற ஷெ ஒடப்புவாய்க்கி கிழ்பக்கத்தில் ஜலம்போகிறவாரி பிரத்தியட்சமாய் இருப்பதினாலே ஷெ ஒடப்புவாயை பாச்சல்வாய்க்கால் என்று ஜமீன்தார் காரியஸ்தன் சொல்லுவது உண்மையாயிருக்கவில்லை.

ஷெ வாரி அதற்கு கிழ்புற 513-நி. நிலத்தில் போவதன்னியில் அதற்கு வடபுறம் கரையுமிருக்கிறது. ஷெ 513, 465-நி. ரிலிருக்கிற வாரியும் கரையும் செட்டில்மெண்டுக்குமுன புறம்போக்கில் சழிவாயிருந்ததாகவும இப்போது தலவுமுதல் வாரியிருக்கிற ஜாகா 481, 466-இந்த நி. ர்கள்வனா பிரம்போக்கில் சழிவாயிருப்பதாகவும 465, 513-இந்த நி. ர்கள் சழிவாகாமல் ஷெ 465-நி தருசிலும் 513-நி ரில் வாரிஉள்பட யேக்கர் 12 20-க்கு ஜமீன்தார் பெயருல் பட்டாவும் யேற்பட்டுப்போ யிருக்கிறதென்றும் ஷெ 513-நி. நிலம சாகுபடியாகாமல் யெப்போதும் தரிசாகவே யிருக்கிறதாயும், செட்டில்மெண்டுமபோது ஷெ 513-நிரில் வறப்பட்ட வாரியை பிறம்போக்கில் கழிக்கவேணுமென்று சொல்ல தப்பிப்போச்சுதென்றும் கர்ணன் செல்லுகிறான்.

என்னுடைய பார்வையிலும் ஷெ 513-நி. நிலம் மேடுபள்ளமாய் சாகுபடியாகப்பட்ட நிலமாயிருக்கவில்லை,

ஷெ வாரியினாலேயே (சி) அடையாளமுள்ள 255-நி. ரிலிருக்கிற அகத்திநீர்கொளத்துக்கு ஜலம்வரத் சென்று அதைத்தவிர வேறே வாரியில்லையென்றும் தெறியவருகிறது ஷெ யேறியின ஆசராவில் ரூ. 159-15-0 தீர்வையுள்ள யேக்கர் 63-96 க்கு பிட்டிஷனர் பெயருல் நஞ்சைக்கு பட்டாயேற்பட்டிருக்கிறது.

ஷெ கொளத்துக்கு வரப்பட்டவாரியில் ஒடப்புபோயிருப்பதினாலே கொளத்துக்கு பூருவாய் ஜலம் வந்து சேராமலும் அதின திட்ட நிலங்கள் பூருவாய் நஞ்சைசாகுபடியாகாமலும் பிட்டிஷனர் நஷ்டப்படுவதாக கர்ணன வாக்குமூலத்தில் சொல்லுகிறான்.

465-நி. ஒடப்புவாய் நிலம் புஞ்சை தரிசாயிருப்பதினாலே அதை ஜமீன்தார் அடைக்கக்கூடதென்று சொல்லுகிறதுக்கு யாதொரு நிமுத்தியமுமில்லை, ஷெ வாரி உள்பட 513-நி. நிலத்துக்கு தன்பெயருல் பட்டா யேற்பட்டிருக்கிறதெனகிற காறணத்தினாலே அதில் எடுபட்டிருக்கிற ஒடப்பை பிட்டிஷனர் உகயரு அடைக்கப்போனால் கூடாதென்று ஜமீன்தார் காரியஸ்தன் சொல்லவும் அதைப்பத்தி பிருது வந்து விசாரணைகாலத்தில் தனக்கு பாத்தியமிருப்பதுபோல் சொல்லி குற்றத்திலிருந்து தப்பிவிச்சிக்கொள்ளவும் யிடமாயிருக்கிறதுந்தவிற கலகத்துக்கு ஆஸ்பதமாயுமிருக்கிறது.

அப்படி பட்டா யேற்பட்டிருந்தாலும் அந்த நிலத்தில் நாளது வரையில் வாரிமுதலானது எவ்வித ஸ்திதியிலிருந்ததோ அந்தஸ்திதிப்படி யிருக்கவேண்டியதும் அதில் பட்டா பெத்த யெனவழி பிரவேசித்து யாதொரு காரியமும் செய்யாமல் இருக்கவேண்டியதும் கிரமமாயிருக்கிறது.

ஷை 513-நி. ல் வாறியும் அதின் கறையுமிருக்கிற ஸ்திதிப்படிக்கி அளந்ததில் யேக்கர் 2-3-ம் 465-நி. சிலட்டர் நிலத்தை அளந்ததில் யேக்கர் 1-7-ம் ஆகிறதினாலே அதுகளுக்கு கணக்கு தயார்செய்து இத்துடன் அனுப்பியிருக்கிறது.

ஷை ஜமீன்தார் செய்துகொண்டிருக்கிற அர்ஜியில் பிட்டிஷனருடைய அகத்திநீர்கொளமும் அதின் ஆஜரு நிலங்களும் தன்முன்னோர்கள் நாள்முதல் தமக்கு பாத்தியமென்றும் ஷை நிலங்களுக்கு பிட்டிஷனர் எவ்விதமாகவோ பட்டாசெய்துகொண்டு விட்டதாகவும் 465-நி. சிலட்டரும் தரிசு நிலத்தின் ஓடப்புவாயண்டையில் தன்முன்னோர்களால் கட்டப்பட்ட கல் அணைகள் இருப்பதாயும் ஷை வாறியின் கரையில் தன்னுடைய களம் குலுப்பை முனியப்பசுவாமிகோவில் முதலானதிருப்பதாயும் ஷை 465, 513-இந்த நி. களில் செட்டில்மெண்டு பிளானில் வாறியேறபடவில்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஷை வாரி அகத்திநீர்கொளத்துக்கு வரப்பட்டதென்று ஜமீன்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தே தவிற வாறியேறபடவில்லையென்று சொல்லப்படவில்லை. ஷை அகத்திநீர்கொளத்தின் ஆசரு நஞ்சை நிலங்களுக்கு பிட்டிஷனர் பெயரால் நெடுங்காலமாய் பட்டாயேற்பட்டு வந்திருக்கிறதாய் தெரியவருகிறது அந்த நஞ்சை நிலத்தை தன இஷ்டப்படி பிட்டிஷனர் விடமாட்டேனென்று சொல்லுகிறார் என்கிற அடத்துனாலேயும் தான ஷை கொளத்தின் ஆஜரா நஞ்சை நிலங்களை ஆக்கிறமிக்க வேணுமென்கிற எண்ணங்கொண்டும் ஷை ஓடப்புவாய் ஜலம் தன்னுடைய நஞ்சை நிலங்களுக்கு பாச்சல்போல சொல்லப்படடிருக்கிறதேதவிற வேரில்லை, அப்படி நிலம் விடாவிட்டால் அதைப்பற்றி கிரமமான தாவாசெய்யாமல் மேல் கண்டபடி சொல்லுவது விணனதாக யிருக்கிறது. கோவில்முதலானதிருப்பதாக சொல்லப்பட்ட ஸ்தலம் 465-நி. ல் வாரியின் தெனபுறம் மேட்டிலிருக்கிறது அதுகளுக்கு இந்த ஓடப்பு அடைப்பதனாலே யாதொரு ஆட்சேபனையும் காணப்படவில்லை.

செட்டில்மெண்டு பிளானில் இப்போது வாரியிருக்கிற ஸ்திதிப்படிக்கி 465, 513-இந்த நி. களில் மாற்கு செய்யப்படாமல் விட்டுப்போயிருக்கிறதினாலே ஷை வாரியின் ஓடப்பு விஷயத்தில் ஜமீன்தாரும் அவரிடகாரியஸ்தனும் மாமூலுக்கும் அனுபோகத்துக்கும் இப்போதிருக்கிற ஸ்திதிக்கும் விரோதமாய் துற்வளக்கு சொல்ல விடமாயிருக்கிறது.

நாளதுமீ 20உ சாயந்திரம் மணப்பாறைக்குப் போகும்போது மருபடியும் ஷை வாரிமுதலானதை பார்வையிட்டதில் ஜமீன்தார் அனுபவத்திலிருக்கிற தொப்பமபட்டி யேரிஜலம் அதின் ஆஜரா நிலங்களுக்குபாஞ்சு சாகுபடியாகிக்கொண்டுவருகிறது பிட்டிஷனர் சொல்லப்பட்ட அகத்திநீர்கொளத்தில் சாகுபடிக்குபபோதுமான ஜலமில்லாமலிருக்கிறது.

ஆனையால் ஷை வாரியும் அதன்கரையும் 513-நி. ல் யேக்கர் 2-3-ம் 465-நி. சிலட்டரில் யேக்கர் 1-7-ம் ஆக யேக்கர் 3-10-ம் சேர்ந்துபோயிருப்பதை கிரமப்படி லட்டர் கொடுத்து புறம்போக்கில தாக்சல்செய்து ஷை 513-நி. ல் யேக்கர் 2-3 க்கு தீர்வை 5-10 யும் பெரியோகமபனாயக்கர் பட்டாவில்கழித்துப்போட்டு அந்த ஓடப்புகளை அடைத்துக்கொள்ளும்படி பிட்டிஷனருக்கும் அதுவிஷயத்தில் தடைசெய்யக்கூடாதென்று பெரியோகமப நாயக்கருக்கும் உத்திரவுசெய்ய வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் சங்கதி மனுசெய்துகொண்டேன்,

ஷை தொப்பமபட்டி கிராமத்திய செட்டிலமெண்டு பிளானையும் பார்வைக்காக இத்துடனே அனுப்பியிருக்கிறேன முடிவானபிறகு வாபஸ்செய்ய கேட்டுக்கொள்ளுகிறேன,

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) கிருஷணய்யர்,

தாசில்தார்,

No. 43.

1868-ஸ்ரீ டிசம்பர்மீ 23உ யுள்ள நி. 717.

திருச்சிநாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்ட்டரவர்களாகிய முகம்மது ஈசப் சாஹெப் அவர்கள சமுகத்துக்கு.

பெரம்பலூர் தாலூகா தாசில்தார வெங்கிடசாமி நாயக்கர் யெழுதிக்கொண்ட அர்ஜி.

சிருகணம்பூர கிராமத்து குடி பட்டகாத்த உடையான் கலெக்ட்டர் துரையவர்களிடத்தில் அப்பீல்செய்துகொண்டிருக்கிற மூலமாய் 476 நி. ரிலிருக்கிற குட்டையின் கடைஜலம் வடிய பிளானில வேறேமார்க்கமிருக்கிறதாக தெரியவருகிறதாயும் அப்படியிருக்க 514-நி. நிலத்தின்பேரில் வடியவேணுமென்று சொல்வதற்கு காரணமென்னவென்றும் அப்பில் பிரதிவாதி அந்த நிலத்தை சாகுபடிக்கு ஒப்புக்கொள்ளவேண்டியதென்னவென்றும் இனனம் ஷை குட்டை ஜாகாவில என்னென்னவகை மறங்கள் யாருடைய அனுபோகத்திலிருக்கிறது அதற்கு தீர்வை யேற்பட்டிருக்கிறதாவென்றும் ஷை துரையவர்களுடைய லெட்டரில சேழ்க்கப்பட்டிருப்பதினாலே தகுந்த ஒரு உத்தியோகஸ்தனை அனுப்பி பரிசோதனை செய்வித்து பிளான்சகிதமாய் தொடப்படுத்தும்படியாக நாளது மீ 1உ யுள்ள 548-நி. உத்திரவுவரப்பட்டிருக்கிறது.

அதுகாரியத்துக்கு பஸ்ட்டு கிளாஸ் ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர ஸ்ரீனிவாசய்யங்காரை அனுப்பி பார்க்கச்சொல்லியிருந்தபிரகாரம் அவர்பார்த்தெழுதிய ரிபோர்ட்டு 1, அத்துடன் வந்தபிளான் 1, உத்திரவுடன வந்திருந்த மாஜி தர்ட்கிளாஸ் ரிவினியூ இனஸ்பெக்ட்டருடைய ரிபோர்ட்டு 1, நக்ஷா 1, ஆக 4-யும் இதில் அடக்கமாய் அனுப்பியிருக்குறேன்.

ஷை 476-நி. குட்டையின் வடகிழக்கு மூலையிலிருந்து வடக்குமுகமாய் குடிதண்ணீர் குளத்துக்குப்போக ஒருமார்க்கமிருக்கிறதாக தெரியவருவதாய் உத்திரவில் கண்டிருப்பதைபத்தி சோதனைக்குப்போயிருந்த பஸ்ட்டு கிளாஸ் ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர் அந்த மார்க்கம தண்ணி சாயக்கால் அல்லவென்றும் அது அவருடைய பிளானில் காட்டியிருக்கிறபடி சிருகண்பூரிலிருந்து குளக்காநத்தம் முதலான இடங்களுக்குப்போகப்பட்ட ரஸ்தாவென்றும் அந்த ரஸ்தா 510-நி. குடிதண்ணீர் யேரிக்கரையினபேரில் 520 நி, அத்துவரையில் யேற்பட்டுவந்து அப்பால் தெற்குமுகமாய் பூமிமட்டத்தில 476-நி புறம்போக்கு குட்டை வகிகிழக்கு மூலை கறைதாழ்வ்வரையிலபோய் அப்பால கிழக்கே திரும்பி தெற்கே போகப்பட்டதென்றும் அந்த மார்க்கத்தில ஷை 476-நி. குட்டை ஜலத்தை வடியவிடலாமென்றால் அவிடத்தில் ஷை யேறிக்கறை

1¾-கிஜம் ஓயமமிருப்பதோடு நலல கெர்ப்பமாயிருக்கிற ஜாகாவானபடியினலே யேரி அடியோடே படுங்கிக்கொண்டு போய்விடுமென்றும் ஒருபோதும் அவடத்தில விடக்கூடாதென்றும் இதுவனாயில போன நிலலையென்றும் 514-நி. நிலத்தின் பேரிலபரவலாய் வடிந்துவந்தபடி இப்பவும் வடியவேணுமென்றும் வேறே மார்க்கமில்லேயென்று சொல்லுகிறதுந் தவிற ஷெ 476-நி. குட்டைபுறம்போக்கா யேற்பட்டிருந்த போதிலும் அப்பீல பிரதிவாதியினுடைய அனுபோகமென்றும் அந்தக்குட்டை ஜாகாவில் தீர்வைக்கு யோக்கியமிலலாத சில வெள்வேல கருவேல முதலான மரங்களை வைத்து விருத்திசெய்திருக்கிறதாகவும் அவருடைய ரிபோர்ட்டினலை தெரியவருகிறது.

அப்படிக்கிருந்தால் அப்பீல பிரதிவாதி ஷெ 514-நி. நிலத்தை ச குபடிக்கு ஒப்புக்கொள்ள வேண்டியகாரணமென்று உத்திரவில கேழ்க்கப்பட்டிருக்கிற விஷயத்தில் சாகுபடிசெய்ய வேணுமென்கிற யெண்ணமாய் அவன் கேட்டுக்கொள்ளவுமிலலே அதற்காக அவனுக்கு கொடுக்கும்படியாய் தங்கள் உத்திரவு வந்திருக்கவுமிலலே முக்கியமாய் யிதனலை சாகுபடி செய்தால தனனுடைய குட்டைஜலம் வடிய யெடஞ்சல உண்டாகுமென்கிற கருத்தாய் தான் ஷெ நிலத்தை தரிசாய்வைத்து வடிகாலுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு அந்த நிலத்தின் தீர்வையை சர்க்காருக்கு உத்திரிக்கிறதாக மனுகொடுத்து கேட்டுக்கொண்டிருக்கிற பிறகாரம் முன் 375-நி. உத்திரவிலும் நமூதாயிருக்கிறது அந்தப்படி அவனிடத்தில் முச்சிலிக்காவும் வாங்கப்பட்டிருக்கிறது. அதை பார்வைக்காக இதிலடக்கமாய் அனுப்பிருக்கிறேன்.

முடிவான உத்திரவு வந்தபிறகும் அப்பீல்வாதி ஷெ நிலத்தில் அக்கிறமமாய் பிரவேசத்ததைக்குறித்து ஷெ கிராம நவக்காரர்கள் யெழுதியிருந்த ரிபோர்ட்டையும் இதில் அகிக்கமாய் அனுப்பியிருக்கிறேன் அப்பீல் பரிசிலனை முடிந்தபின ஷெ முச்சிலிக்காவையும் ரிபோர்ட்டையும் வாபசு செய்யும்படியாய் உத்திரவாகவேண்டிய சங்கதி விசிதமாவதாய் எழுதிக்கெண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) வெங்கிடசாமி நாயக்கா,
தாசிலதார்.

No. 44.

1869-ளு ஜனவரிமீ 9உ யுள்ள 6-நி.

திருச்சினப்பள்ளி ஜில்லா கலெக்டரவர்களாகிய ஜார்ஜ் பானபிரி துரையவர்கள் சமுகத்துக்கு.

திருச்சினப்பள்ளி தாலூகா தாசில்தார் பட்டாபிராம பிள்ளை யெழுதிக்கொண்ட அர்ஜி.

தஞ்சாவூர் தாலூகா நெடுங்குளம் சுரோத்திரியம் மிராசு ஹரிராயர் யேஜண்டு ஆதியய்யன் கிரய சாசன லகிதமாய் கொடுத்த பிட்டிஷனை அனுப்பியிருப்பதாகவும் அதில்கண்ட கிளியூர் கிராமத்தாரிடம் கிளிவாய்க்காலில் அவர்களுக்குண்டான 3-நாள் பாச்சல் முறையை பிட்டிஷனர் கிரயத்துக்கு வாங்கியிருப்பதாக சொல்லப்பட்ட ஸங்கதியைப்பத்தி விசாரித்து சில விவரம் தெரியப்படுத்தும்படி 1867ளு ஏப்பிரல்மீ 8உ யிலான 156-நி. உத்திரவு சாதருகியிருக்கிறது.

அதைப்பற்றி கிளியூர் கிராம கர்ணனையும் பிட்டிஷனுடன் வந்து கிரய சாசனத்தில் கையெழுத்து வைத்தவர்களான ஷெ கிராமத்திய முன்சீபு பட்டாமணியம முதலான சில குடிகளையும் தருவித்து விசாரணை செய்ததில் 10, 15- வருஷத்துக்கு முன் கிளிவாய்க்கால் ஜலம் கிளியூர் கிராமத்துக்கு பாய்ந்துவந்ததாகவும் அப்பால் அந்த கிராமத்துக்கு பாயப்பட்ட வாய்க்காலில் எக்கலடித்து மேடிட்டுப் போனதினலே சர்க்காரில் கொவனையில் இருந்து புதிசாய் வாய்க்கால் வெட்டிவைத்து அதின் வழியாய் அதுமுதல் ஜலம் பாய்ந்துகொண்டு வருகிறதாகவும் தெரியவருகிறது.

ஷெ கிளிவாய்க்காலின் ஜலம் கிளியூர் கிராமத்து பாச்சலுக்கு உபயோகப்பட்டுக் கொண்டிருந்தபோது பிறவாககாலத்தில் மட்டும் அந்த கிராமம் உள்பட ஷெ கிளிவாய்க்கால் பாச்சலின் துரோபஸ்து கிராமங்களுக்கும் ஸமர்த்தியாய் ஜலம் பாயும் என்றும், அருந்தல் காலத்தில் ஷெ கிளிவாய்க்கால் பாச்சலின் எல்லா கிராமங்களுக்கும் ஸமமாய் ஜலம் பாயவேண்டியதற்காக மொறைவீதம் யேற்பட்டிருந்ததில் ஷெ கிளியூர் கிராமத்துக்கு மூன்று நாளய மொறை யேற்பட்டிருந்ததென்றும், கிளிவாய்க்காலின் ஜலம் தங்கள் கிராமத்துக்கு பாய உபயோகமில்லாமல் மேல்கண்டபடி வாய்க்கால் மேடிட்டும் வேறை வாய்க்கால் யேற்பட்டும் போயிருப்பதில் அந்தப் பழய வாய்க்காலை பிட்டிஷனர் ஹரிராயர் தான தகையை சிலவு செய்து வெட்டிப் போடுவதாகவும் அதின் வழியாய் வரும் ஜலம் தன்னுடைய சுரோத்திரியம் நெடுங்குளம் கிராமத்துக்கு பாச்சிக்கொள்ளும்படி செய்யவேணுமென்றும் சொனனதாகவும் அந்தப்படி பழய வாய்க்காலை வெட்டினல் தங்கள் கிராமத்திய சுவல்பமான நஞ்சைத் தரிசு நிலங்களும் சாகுபடியாகும்படியாய் இருந்ததைவிட்டு பழய வாய்க்கால் சர்க்காரைச்சேர்ந்ததாயிருந்ததாலும் அந்த வாய்க்கால் வழியாய் கிளிவாய்க்கால் ஜலம் பாச்சிக்கொள்ள தங்களுக்கு பாத்தியமிருப்பதாக நினைத்து அந்த பாத்தியதையையும் மேல்கண்ட பிரகாரம் மூன்று நாளைய மூறையையும் 1867-ளு மார்ச்சுமீ 2உ யில் ரூ. 200-க்கு பிட்டிஷனருக்கு சாசனம் செய்திருப்பதாகவும் கிருமத்தார் சொல்லுகிருர்கள்.

இப்பேர்ப்பட்ட விஷயங்கள் எல்லாம் இஞ்சினீர் இலாகாதார்களாலும் ரிவினியூ இலாகாதார்களாலும் ஜாகா முதலானதுகளை பார்வையிடப்பட்டு பயிசலாகவேண்டிய பாபத்தாக இருக்கிறது. அப்படிக்கிருக்கும்போது சாசனம் செய்ய கிராமத்தார்களுக்கும் அதை வாங்க பிட்டிஷனருக்கும் பாத்தியமில்லை. அவர்கள் அந்தப்படி செய்துகொண்டிருப்பதினலே அவர்களுக்கு இல்லாத பாத்தியமுண்டாகவும், ரிவினியூ டிபார்ட்டுமெண்டாரும், இஞ்சினீர் இலாகாதார்களும் ஜாகா முதலானது பார்த்து எந்தந்த சமயத்தில் யெவ்விதமான வேலைகள் நடத்தவேணுமோ அதற்குத் தடையாகவுமாட்டாது.

ஆகையால் விசாரணையில் யேற்பட்ட கர்ணன் வாக்குமூலம் 1, குடிகள் முச்சலிக்கா 1, சாசனம் 1, அசல் பிட்டிஷன் 1, ஆக தஸ்தாவேஜிகள் 4-யும் இதில் அடக்கமாயனுப்பியிருக்கிற சங்கதி சித்தமறியலாவதாய் யெழுதிக்கொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) மு வறதய்யங்கார்,
குமாஸ்தா.

(ஒப்பம்) டி. பட்டாபிராம் பிள்ளை,
தாசில்தார்.

No. 45.

1869-ஞு யேப்பிரல்மீ 19உ யுள்ள 49-தி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டர் ஜீ. பான்பரி துரையவர்கள் ஸமுகத்துக்கு.

குளித்தலை தாலூகா ஆ. தாசில்தார் கிஷ்ணய்யர் எழுதிக்கொண்ட அர்ஜி.

கிஷ்ணராயபுரம் சித்தலவாய் கிராம மகாஜனம் குடிகளான சாமியய்யன் முத்துக்குமாரசாமி முதலி வகையருப்பேர்கள் கிஷ்ணராயபுரம் நாட்டுவாய்க்காலில் திருக்காம்புலியூர் கிராம சரகத்தில் குருக்கே கட்டப்பட்டிருக்கிற அணை நடுவே யிருக்கிற தாம்போக்கியை திருக்காம்புலியூர் கிராமத்தார் அடைத்து ஜலம் கொண்டுபோவதாய் நாளது பசலி பட்டா பட்டுவாடாவும்போது சமுகத்தில் தெரிவித்துக்கொண்டு என்னிடம் கொடுத்த பிட்டிஷனபேரிலும் ஷை பிட்டிஷனுக்கு கவுண்டராய் திருக்காம்புலியூர் கிராமத்திய மிராசு சீதாபதி அய்யன் கொடுத்த பிட்டிஷனபேரிலும் சமுகத்திய உத்திரவுப்படி நான் ஷை கிராமத்தார்களையும் மத்தியஸ்தாளான அக்கம் பக்கம் கிராமத்தார்களில் மகாதானபுரம் செல்லமய்யன், கட்டளை அருணாசல முதலி, வதியம் வீரப்ப முதலி, பிள்ளைபாளையம் கிஷ்ணய்யங்கார், மருதூர் சீனிவாசய்யன் இந்த 5-பேர்களையும் வைத்துக்கொண்டு கொரம்பு தலைப்புமுதல் ஷை வாய்க்காலையும் பாச்சல் நிலங்களையும் அணை முச்லானதையும் கண் பார்வையிட்டு ஷை ஜாகாக்களின ஸ்திதிக்காக பிளான் தயார் செய்தும் முக்கியமானவர்களை விசாரணை செய்தும் ஏற்பட்ட தஸ்தாவேஜுகளை பேரீஸ்து தாக்கலாப்படி இத்துடனே அனுப்பியிருக்கிறது.

பிளானில் (ஏ) அடையாம் போடப்பட்டிருக்கிற காவேரியாறு, (பி) அடையாளம் போடப்பட்டிருக்கிற கொரம்புத் தலைவிலிருந்து கிஷ்ணராயபுரம் நாட்டுவாய்க்கால பிறிவாகி வருகிறது. (சி) அடையாளமுள்ள இடத்தில் ஷை வாய்க்கால் தலப்பு மதகிருக்கிறது. (டி) அடையாளமுள்ள இடததில் ஒரு பழய பாலமிருக்கிறது. (இ) அடையாளமுள்ள இடத்தில் ர்யிலவே லயன் குருககிட்டு ஒரு பாலமும, (எப்) அடையாளத்தில் கரூர் ரோட் பாலமுமிருக்கிறது.

அதற்கு கீழ்புறம் திருக்காம்புலியூர் ஸரகத்தில் (ஜி) அடையாளமுள்ள அணை கட்டப்பட்டு ஷை அணைக்கு நடுவே தாமபோக்கி வழியாய் (எச்சு) அடையாளமுள்ள கிஷ்ணராயபுரம் வகையரு வாய்க்கால் $\frac{3}{4}$ கிஜ பள்ளத்தில் போகிறது. ஷை அணைக்கு மேல்புறம் தெனபக்கத்தில் (ஐ) அடையாளமுள்ள காட்டுவாய்க்கால் பிறிந்து $\frac{3}{4}$ கிஜ ஒயரத்தில் போகிறது. ஷை வாய்க்காலிலிருந்து சுமார் 100 கிஜத்துக்கு கிழக்காலே (ஜெ) அடயாளமுள்ள திருக்காம்புலியூர் இருபு நிலங்களின் பாச்சலான வாலான் வாய்க்கால் பிறிவாகிப்போகிறது. (எச்சு) அடையாளமுள்ள வாய்க்காலிலிருந்து (கே) அடையாளமுள்ள சித்திலவாய் கிராமத்து பாச்சல் வாய்க்காலும் (எல்) அடையாளமுள்ள கிஷ்ணராயபுரம் கிராமத்து பாச்சல் வாய்க்காலும் (எம்) அடையாளமுள்ள படுகை வாய்க்காலும் பிரிவாகிப் போகறது.

(ஜெ) அடயாளமுள்ள திருக்காம்புலியூர் வாலான் வாய்க்கால் பாசன இருபு திட்டம் ஏகர் - 83 நிலங்களில் சுமார் 60 ஏகர் வரையில் ஷை வாலான் கவர் வாய்க்கால் ஜலத்தையும் வடககிலோரத்திலிருக்கிற சுமார் 20 ஏகர் நிலத்துக்கு (எல்) அடையாளமுள்ள சித்தலவாய் வாய்க்காலிலிருந்து மடை வெட்டி அந்த வாய்க்கால் ஜலத்தையும் பாச்சப்பட்டு ஷை 83 - ஏகர் நிலத்திலிருந்த கோடக்கார் பயிர்களும் பூரா மகசூல் அருவடைக்கு வந்திருக்கிறது.

(கெ) அடையாளமுள்ள சித்தலவாய் கிராமத்திய பாச்சல் வாய்க்கால் ஆசராவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த 2-வது போகம் நிலங்களிலிருந்த பயிர்களிலு (எல்) அடையாளமுள்ள கிஷ்ணராயபுரம் வாய்க்கால் பாச்சல் 2-வது போகம் நிலங்களில் சாகுபடியாயிருந்த கோடக்கார் பயிர்களிலும் இளசாயிருந்த சுமார் 200 - ஏகர் வரையிலுள்ள பயிர்கள் ஜலமில்லாமல் சுத்தமாய் காய்ந்துபோயும் கதிர் வாங்கின பயிர்மட்டும் 3-ல் ஒருபாகம், 4-ல் ஒருபாகம் மகசூல் அருவடைக்கு வரத்தக்கதாயுமிருக்கிறது.

கிஷ்ணராயபுரம் சித்திலவாய் கிராமத்தாரான பஞ்சுவாத்தியார் சாமியப்யன் வகருக்கள் (ஜி) அடையாளமுள்ள அணையின் தாம்போக்கியில் திருக்காம்புலியூர் கிராமததார் மார்கழிமீ கழித்த பிறகும் மாமூலுக்கு விரோதமாய் மோதுவைத்து ராப்பகலாய் ஜலத்தை தேக்கி அவனுடைய (ஜெ) அடயாளமுள்ள வாலான் கவுர்வாய்க்கால் இருபு நிலங்களுக்கு கொணடுபோய் பாச்சிவருவதாகவும் அந்தப்படி செய்ததனாலே (எச்சு) அடையாளமுள்ள வாய்க்காலில் சுத்தமாய் ஜலம் வராமலும் (கெ, எல்) அடையாளமுள்ள சித்தலவாய் கிருஷ்ணராயபுரம் வாய்க்கால் பாச்சல் இருபூ நிலங்களுக்கு ஜலம் வந்து பாயாமலும் தாளடிப்பயிர்கள் சாவியாய் போயிருப்பதாகவும் கொரம்பாளை வீதத்தினபேரிலாவது இருபூநிலங்களின் தாமாஷாவின் பேரிலாவது அலலது தீர்வை தொகையின் பேரிலாவது அருந்தல்காலமான தைமீ முதல் வைய்யாசிமீ வரையில் மொறை போட்டுப்பாச்சிக்கொள்ள உத்திரவாக வேணுமென்றும் சொன்னார்கள்.

திருக்காம்புலியூர் மசாஜனம் சீதாபதி அய்யன் வகயருக்கள் ஷை (ஜி) அடையாளமுள்ள அணையின் தாம்போக்கியில் கோடகாலம் பிறந்த பிறகும் இராப்பகலாய் மோதுவைத்து தேக்கி ஜலம் கொண்டுபோகிற வழக்கம்மன்றும் மொறை போட்டுக்கொள்ள தனக்கு சம்மதமில்லையென்றும் சொன்னார்கள்.

வருஷாவருஷம் ஆடிமீ முதல் மார்கழிமீ வரையில் மாரிகாலத்தில் வாய்ககாலில் வரப்பட்ட ஜலத்தை அணையில் மோதுவைத்து தேக்கி பாச்சிக்கொள்வதைப்பற்றி ஷை கிஷ்ணராயபுரம் சித்தலவாய் கிராமத்தார்களுக்கு யாதொரு விவாதமுமில்லை.

தைமீ முதல் கிஷணராயபுரம், சித்தலவாய், திருச்காம்புலியூர் இந்த 3 கிராமத்தார்களும் அந்தந்த கிராமத்தார்க்ளுக்கு யேற்பட்டிருக்கிற நிலையாள்களையும பண்ணைமுட்டு ஆள்களையும் அனுப்பி வீதாசாரமாய் கொரமபுத்தலவில் வேலை செய்வித்து வாய்க்காலில் கொண்டுவரபட்ட்ட ஜலத்தை முதலிலிருக்கிற திருக்காம்புலியூர் கிராமத்தான் (ஜி) அடையாளமுள்ள அணையில் இராப்பகலாய் மோதுவைத்து அடைத்து ஜலத்தை தேக்கிக்கொண்டு போவதனாலே தங்களுக்கு சுத்தமாய் ஜலம் வரவில்லையென்று கிஷ்ணராயபுரம் கிராமத்தானும் சித்தலவாய் கிராமத்தானும் விவாதப்படுகிறார்கள்.

ஷை (ஜி) அடையாளமுள்ள அணையின் தாம்போக்கிக்கி மேல்புறம் ஒன்னரை அடி ஜலத்துக்கு மேல்பட்டு வந்தால் (ஐ) அடையாளமுள்ள வாய்க்காலில ஜலம் ஏரத்தக்கதாயிருக்கிறது. ஒன்னரை அடிக்குள்பட்டு வந்தால் ஷை அணையின் தாம்போக்கி வழியாய் (எச்சு) அடையாளமுள்ள வாய்க்காலில் எல்லா ஜலமும் போகத்தக்கதாயிருக்கிறது.

மோது வைத்தடைக்காவிட்டால் திருக்காம்புலியூர் கிராமத்து வாய்க்காலில் போகக்கூடாததாகவும் இராப்பகலாய் மோதுவைதது தேக்கினால் கிஷ்ணராயபுரம் வகையரு பாச்சலுக்கு ஜலம் வர சாத்தியமில்லாமலும் இருப்பதனாலே கோடைசாலமான தைமீ முதல் வைய்யாசிமீ வரையில் சுவலப்பமாய் வரப்பட்ட ஜலத்தை ஷை திருக்காம்புலியூர் கிராமத்தானும் கிஷ்ணராயபுரம், சித்தலவாய் கிராமத்தானும் அந்தந்த கிராமத்துக்குள்ளதை மொறைவீதம் ஏற்படுத்திச்கொண்டு பாச்சுவது நலமாயிருக்கிறது.

அப்படி மொறை யேற்படுத்துவதை கிஷ்ணராயபுரம் கிராமத்திலிருந்து நிலையாள் 8, சித்தலவாய் கிராமத்திலிருந்து நிலையாள் 4, திருக்காம்புலியூர் கிராமத்திலிருந்து நிலையாள் 3, ஆக 15-ல் திருக்காம்புலியூர் கிராமத்தானுக்கு 5-ல் ஒரு பாகமாகிறது.

இருபூ திட்ட ஏகரின்பேரில் பார்த்தால் சித்தலவாய் கிராமம் இருபூ ஏகர் 240, கிஷ்ணராயபுரம் இருபூ ஏகர் 330, திருக்காம்புலியூர் இருபூ ஏகர் 83, ஆக ஏகர் 653-க்கு திருக்காம்புலியூர் கிராமத்துக்கு 7-ல் ஒரு பாகமாகிறது. பேரிஜுன்பேரில் பார்த்தால் 8-ல ஒரு பாகமாகிறது.

திருக்காம்புலியூர் கிராமத்திய நிலங்களுக்கு தேக்கி மேட்டில் ஏரி ஜலம் பாயவேண்டியதிருப்பதினாலும் கிஷ்ணராயபுரம், சித்தலவாய் கிராமத்திய இருபூ நிலங்கள் கிழக்கே 2-மயில் தூரமாயிருப்பதால் அதுவரையில் போய் இட்டேரி பாயவேண்டியிருப்பதினாலும் ஷெ 3-கிராமத்திய இருபூ நிலங்களின் பாச்சலின் சாதக பாதகத்தை யோசித்து கோடைகாலத்தில் வாய்க்காலில் வரப்பட்ட ஜலத்தில் ஒரு நாள் திருக்காம்புலியூர் கிராமத்தானும் 3-நாள் சித்தலவாய், கிஷ்ணராயபுரம் கிராமத்தானும் மொறை நிஷ்கரிஷை செய்து பாச்சிக்கொள்ளவேணுமென்று மத்தியஸ்தாள் சொன்னதின்பேரில் அந்தப்படி கிஷ்ணராயபுரம், சித்தலவாய் கிராமத்தார் தங்களுக்கு வந்தமட்டும் போதுமென்று ஒப்புக்கொண்டார்கள். திருக்காம்புலியூர் கிராமத்தான் ஒப்புக்கொள்ளவில்லை. வேறே பஞ்சாயத்தாரை கோறிக்கொள்ள சம்மதமாவென்று கேட்டதில அந்தப்படி சம்மதமில்லையென்றும் சொல்லிப்போட்டான்.

கடைசியில் தன் கிராமத்துக்கு ஒரு நாளும் கிஷ்ணராயபுரம் சித்தலவாய் இரண்டு கிராமங்களுக்கு ஒரு நாளுமாக மொறை போட்டுக்கொள்ள ஸம்மதமென்று சொன்னான்.

திருக்காம்புலியூர் இருபூ திட்டம் ஏகர் 83-ல் 60 ஏகர் நிலத்துக்கு வாலான் வாய்க்கால் ஜலத்தையும் வடபக்கத்திலிருக்கிற சுமார் 20 ஏகர் நிலத்துக்கு சித்தலவாய் வாய்க்காலிலிருந்து மடை வெட்டி ஷெ வாய்க்கால் ஜலத்தையும் பாச்சவருகிறதாக தெரியவருகிறது.

கிஷ்ணராயபுரம் இருபூ ஏகர் 330, சித்தலவாய் இருபூ ஏகர் 240, திருக்காம்புலியூரான் சித்தலவாய் வாய்க்காலிலிருந்து அக்கிரமமாய் பாச்சிக்கொள்ளுகிற ஏகர் 20, ஆக (பத்து ஏகர் குறைய) அறுநூறு ஏகர் ஆகிறதினாலே திருக்காம்புலியூர் கிராமத்தின் இருபூ 60-ஏகருக்கு கிஷ்ணராயபுரம், சித்தலவாய் கிராமத்தின இருபூ நிலங்கள் 1-க்கு 10-பங்கு ஜாஸ்தியாயிருக்கிறது.

இப்படியிருக்கிறபதில் ஷெ திருக்காம்புலியூர் சீதாபதி அய்யன் வகையறாக்கள் தங்களுடைய 60-ஏகருக்கும் கிஷ்ணராயபுரம், சித்தலவாய் இந்த வாய்க்கால் பாச்சல் 600-ஏகருக்கும் சமமாய தலா ஒரு நாள் வீதம் மொறை போட்டுக்கொடுக்க வேணுமென்று சொல்வது தகாத காரியமாயும் மொறை என்கிற ஏற்பாடு உண்டாகக்கூடாதென்கிற எண்ணங்கொண்டு சொன்ன சொலலாகவும் தோற்றுகிறது.

பின்னும் ஷெ (ஜி) அடையாளமுள்ள அணைக்கி சமீபத்தில் திருக்காம்புலியூர் கிராமத்தான் குடியிருப்பதினாலே மொறை போட்டுக்கொண்டுவிட்டால் வாய்க்காலை தன இஷ்டப்படி நினைத்தபோதெல்லாம் அடைத்துக்கொள்ள ஸாத்தியப்படாதென்றும் நினைத்து மொறை போட சம்மதப்படாமலிருக்கிறதாக தோற்றுகிறது.

நாளது ஷெ-த்தில் கிஷ்ணராயபுரம் நாட்டுவாய்க்கால் கொரம்பு ஆழங்கால்பட்டு கிஷ்ணராயபுரம் வகையரா 3-கிராமத்தார்களும் சேர்ந்து தென்னங்குத்தினை முதலானது வைத்துக் கொரம்பு அடைத்து ஜலம் திருப்பினதில் வாய்க்காலில் சுவல்ப ஜலம் வந்து அந்த ஜலத்தை முதலிலிருக்கிற திருக்காம்புலியூர் கிராமத்தான (ஜி) அடையாளமுள்ள அணையில் குறுக்கே மோது வைத்துத் தேக்கிக்கொள்ளுகிறதும் அதற்கு கிழக்கு ஒண்ணரை, இரண்டு மைல் தூரத்திலிருக்கிற கிஷ்ணராயபுரம் கிராமத்தான மேற்கே போய் மோதையடுக்கிறதும், அதை திருக்காம்புலியூர் கிராமத்தான் தடுக்கிறதும் இப்படிக்காய சச்சரவுபட்டுக்கொண்டு திருக்காம்புலியூர் கிராமத்தான் ஆள்கட்டினாலும் திரவியபலத்தினாலும் ஷெ தாமபோக்கி வழியாய் போகவேண்டிய உள்ள ஜலத்தை கிஷ்ணராயபுரம் சித்தலவாய் கிராமத்தார் கொண்டுவர சக்தியில்லாமல் போய்விட்டதாய் பலபேர்களாலே சொல்ல தெரியவந்திருக்கிறது.

கிஷ்ணராயபுரம் கிராமத்தார் பிளானில் கண்டிருக்கிற (ஜி) அடையாளமுள்ள அணையை யெடுத்துப் போடவேணுமென்றும் மாஜி கலெக்டர் மெ. பிரேஜர் துரையவர்களிடத்தில் தெரியப்படுத்திக்கொண்டு சூப்பிரிண்டண்டிங் இஞ்சினீர் துரையவர்களுக்கு லட்டர் யெழுதப்பட்டிருந்ததில் ஷெ இஞ்சினீர் துரையவர்கள் ஷெ அணையையும் வாய்க்காலையும் வந்து பார்வையிட்டு அந்த அணை யெடுக்ககூடாதென்றும் ஆனால் திருக்காம்புலியூர் கிராமத்தான் எவ்வளவு ஜலம் நியாயமாய் கொண்டுபோகவேணுமோ அவ்வளவுக்கு மேல் கொண்டுபோகாமல் பார்த்துக்கொள்ளவேணுமென்றும் சூப்பிரண்டண்டிங் இஞ்சினீர் துரையவர்கள் 1864-ஷு ஜூலைமீ 24உயுள்ள 307-நீ லட்டர் யெழுதியிருக்கிறதாகவும் திருக்காம்புலியூர் கிராமத்தான் ஷெ அணையிலிருந்து ஜாஸ்தி ஜலம் கொண்டுபோகாமல் 3-கிராமங்களுக்கும் சரியாய் ஜலம் பாயும்படி ஜாக்கிறதைசெய்யவேணுமென்று மாஜி கலெக்டர் மேஸ்தர் மக்டானல் துரையவர்களுடைய ஷெ வருஷம் ஆகஸ்டுமீ 14உயுள்ள 116நீ உத்தரவு மாஜி தாசில்தார் பெயரால் சாதராகியிருக்கிறதாகவும் தெரியவருகிறது. அதன்பேரில் யாதொரு நிஷ்கரிஷையும் ஏற்பட்டிருக்கிறதாக தெரியவில்லை.

கிஷ்ணராயபுரம், சித்தலவாய் கிராமத்தார் மொறைவீதம் ஏற்படுத்திக் கொடுத்ததின்பேரில் வாலான் சாகுபடி செய்ய கொரம்பு அடைத்து ஜலம் கொண்டுவர வேணுமென்று சொல்லுகிறார்கள்.

மத்தியஸ்தர்கள் சொல்லியபடி மொறை யேற்படுத்தவேண்டியது விகிதமாய் தோற்றுவதினாலே அறைநாள் மொறை திருக்காம்புலியூர் கிராமத்தானும் ஒன்னரைநாள் முறை கிஷ்ணராயபுரம், சித்தலவாய் கிராமத்தானும் வீதம் யேற்படுத்திக்கொண்டு ஜலம் பாச்சிக்கொள்ளத்தக்கதாகவும் திருக்காம்புலியூர் கிராமத்தான் சித்தலவாய் கிராம வாய்க்கால் ஜலத்தை மடைவெட்டி பாச்சிக்கொள்ளக்கூடாதென்றும் உத்தரவாகவேணும். ஷெ இருகட்சிக்காரர்களும் பின்னிட்டு விவாதப்படாமல் இருக்கிறதற்காக அந்தந்த கிராமத்துக்கு எவ்வளவு ஜலம் வேண்டியதோ அதற்கு தக்கபடி இப்போதிருக்கிற அணைக்கு மேல்புறத்தில் நீர்மட்டம் பார்த்து கட்டவேண்டியதைக்குறித்து சூப்பிரண்டெண்டிங் இஞ்சினீர் துரையவர்களுக்கு லட்டராகவேணும்.

கிஷ்ணராயபுரம் நாட்டுவாய்க்கால் தலைவுமுதல் (சி) அடையாளமுள்ள தலப்பு மதகுவரையில் சிலவிடத்தில் பாறையாயும் சிலவிடத்தில் சுக்கான் சரளையாயும் சிலவிடத்தில் அங்கங்கே வாய்க்காலில் ஜலம் தாராளமாய் ஓட்டமில்லாமல் மேடாயுமிருப்பதினாலே அதுகளை வெட்டி யெடுக்கவேண்டியது அவசியமாக தோற்றுகிறது.

ஷெ கிஷ்ணராயபுரம் நாட்டுவாய்க்கால் கொரம்பாள் தட்டியில் ரூ-69 வசூலாயிருக்கிறது. அந்த தொகை ஷெ வெட்டுவேலைக்கு போதாததாயிருப்பதினாலே சர்க்கார் தரப்பில் இஸ்டிமெண்டு போட்டு வேலை நடப்பிவிக்க வேண்டியதைக் குறித்தும் லட்டர் ஆகவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன. ஆகையால் சங்கதி மனு செய்துகொண்டேன்.

தங்கள் விதேயன்
(ஒப்பம்) கிஷ்ணய்யர்,
ஆ. தாசில்தார்.

No. 46.

1870-ளு நவம்பர்மீ 15உ 437-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆ. கலெக்டருகிய டபிளியூ-மெக்-ஷேடல் துரையவர்கள் சமுகத்துக்கு.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தார் தி-பட்டாபிராம பிள்ளை யெழுதிக்கொண்ட அர்ஜி.

தச்சங்குறிச்சி கிராமத்தக்குடி தீராருடையான யென்பவன் தன்னுடைய சொந்த குட்டைஜலத்தை மருதைஉடையான் வகையரா சேதப்படுத்தியிருக்கிற முதலான சங்கதியாய் உசூரில் கொடுத்த பிட்டிஷனின்பேரில் ரிபோர்ட்டு செய்யும்படியாய் ஏப்பிரல்மீ 2உயிலான 217-நி. இண்டார்சு உத்திரவும் ஷை யான் மறுபடியும் அதே சங்கதியாய் கொடுத்த பிட்டிஷனின்பேரில் ஷை உத்தரவை அனுசரித்து அனுப்பியிருக்கிறதாக மேமீ 17உ யிலான 303-நி. இண்டார்சு உத்திரவும் இந்தப்படி இரண்டு இண்டார்சு உத்திரவுகள் சாதருயிருக்கிறதில்

பிட்டிஷனர் தீராருடையான் விவாதப்படுகிற குட்டைக்கு சின்னசிட்டுளியென்றுபேர். அது சுமார் 10-டிசமல் விஸ்தீரணம் உள்ளது. அந்த நிலம் சர்வையில் சேரவில்லை. சர்வைக்கு முன் பழய அடங்கல் 1224-நி. ரில் சிட்டுளிக்குட்டை யென்பதாக புறம்போக்கில் வஜாவாகியிருக்கிற 3-காணி நிலத்தில் சேர்ந்ததென்பதாக தெரியவருகிறது ஷை குட்டையின் ஆஜராவில பிட்டிஷனர் தீராருடையான் பேரால் 1276-ம் பசலிவரை புஞ்சை தீர்வை யேற்பட்ட 1193-நி. புஞ்சை டிசமல் 48-நிலத்தையும் மைத்தோரு மருதைஉடையான் யென்பவன் 1418-நி. புஞ்சை தரிசு டிசமல் 23-நிலத்தையும் 1277-ம் பசலியில் நஞ்சை சாகுபடி செய்ததில் அதற்கு நஞ்சை தீர்வை யேற்பட்டிருக்கிறதாக தெரியவருகிறது. அவ்வித குட்டை ஜலம் தான் பாச்சிக்கொள்வது மேல்கண்ட பிட்டிஷனர் தடுப்பட்டதாகவும் தன்னை பாச்சிக்கொள்ளும்படி உத்திரவாகவேணுமென்றும் மருதைஉடையான் யென்பவன் தாலூகாவில் பிட்டிஷன குடுத்தான். அதைப்பத்தி விசாரித்து தெரியப்படுத்தும்படி இந்த இலாகா ரிவினியூ இனஸ்பெக்டர் கிஷ்ணய்யருக்கு தாக்கீது அனுப்பியிருந்ததில் அவர் விசாரித்து யெழுதியிருக்கிற ரிப்பார்ட்டில் ஷை குட்டை ஆஜராவில் ஷை மருதைஉடையானும் உசூரில் பிட்டிஷன் குடுத்திருக்கிற தீராருடையானும் நஞ்சை சாகுபடி செய்திருப்பதினாலே அவ்விருவர்களும் ஜலம் பாச்சிக்கொள்ளும்படி உத்தரவாகவேணுமென்றும் மருதைஉடையானுக்கு ஜலம் விடமாட்டேனென்று யெதிரியான உசூர் பிட்டிஷனர் தீராருடையான ஆட்சேபிக்கப்பட்டது அக்கிரமமாயிருக்கிறதென்றும் சொல்லியிருந்ததனாலே மாமூல்படி இருவரையும் ஜலம் பாச்சிக்கொள்ளும்படி திட்டப்படுத்தச்சொல்லி தாக்கீது அனுப்பி பயிசல் செய்யப்பட்டிருக்கிறது.

பிட்டிஷனர் ஷை குளம் தன்னுடைய சொந்தமென்பதற்காக தஸ்தவேஜுகளிருக்கிறதாக சொல்லி இப்போது ஆஜர்செய்த 2-யெக்ஸ்திராக்ட்டுகளை பார்வையிட்டதில் பிட்டிஷனர் தீராருடையான் ஷை குட்டை கரையை ஷை மருதைஉடையான் 1, வைத்திஉடையான் 1, இவர்கள் வெட்டி சேதம்செய்ததாக லால்குடி சப்மாஜிஸ்திரேட்டில் பிராது கொடுத்து விசாரணையில் கெடுதிகுத்தம் ருசுவான 2-வது காவலாளி வைத்திஉடையானுக்கு ரூ 5-அபராதம் விதித்தது 1867-ளு டிசம்பர்மீ 6உ யில் கியாலண்டர் 268-நி. ரில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு பிறகு ஷை மருதஉடையான் ஷை குட்டையின பாத்தியம்ஸ்தாபிக்கவேணுமென்பதாக பெரம்பலூர் வகையரா முனசிப்கோர்ட்டில் வியாச்சியம் செய்ததில் சாட்சிகளால் வாதிகளுடைய தாவா ருசுவாகமல் சர்க்கார் குட்டையென்கிற காரணத்தினாலே 1868-ளு த்திய 325-நி. ரில் வியாச்சியத்தை தள்ளுபடிசெய்து 2-ம் பிரதிவாதியான பிட்டிஷனருக்குண்டான செலவுதுகை குடுக்கும்படி தீர்ப்பாயிருக்கிறது.

அந்த 2-தஸ்தவேஜிகளினாலே பிட்டிஷனர் சொல்லுகிறபடி ஷை குட்டை அவன் சொந்தமென்பதாக யேற்படவில்லை அந்தக்குட்டை சர்க்கார் புறம்போக்கில் வஜாவானதாகயிருக்கிறது. ஷை குட்டை நிலத்துக்கு ஒருவரும் தீர்வைசெலுத்தி வரவுமில்லை. அதற்கு பட்டா யேற்பட்டிருக்கவுமில்லை. ஷை குட்டை ஆஜராவில் பிட்டிஷனருக்கு 48-டிசமலும் அவனுடைய எதிரியான மருதைஉடையானுக்கு 25-டிசமலும் நஞ்சை தீர்வை யேற்பட்ட நிலங்கள் இருக்கிறது அந்த 2-நி. நிலமும் 1277-ம் பசலியில் நஞ்சை கூழுக்கு வந்திருக்கிறதேதவிர அதற்கு முன் நஞ்சைதீர்வை யேற்படவில்லை. அப்படியிருப்பதினாலே தான் ஏதோ ஷை குட்டைக்கு மராமத்து செய்திருப்பதுபோலவும் அது தனக்கு சொந்தம்போலவும் பிட்டிஷனர் பாத்தியம பாராட்டுவது உபயோகமத்ததாகவும் ஷை குட்டை ஆஜராவில நஞ்சை தீர்வை யேற்பட்ட மேலே கண்ட இருவர்களும் ஜலம்பாச்சிக்கொண்டு வரவேண்டியது கிரமமாகவும் காணப்படுகிறது.

ஆகையால விசாரணையில யேற்பட்ட வாக்குமூலம வகையரா தஸ்தவேஜிகள் 13-யும் பேரிஸ்து தாக்கலாபடி இந்த அர்ஜியில அடக்கமாய் அனுப்பியிருக்கிறேன். பார்வையிட்டானதின்பேரில கோர்ட்டு தீர்ப்புநகல 1, கியாலண்டர் எக்ஸ்திராக்ட்டு 1, ஆக 2-யும ஆஜர்செய்த பிட்டிஷனருக்கு கொடுக்கவேண்டியதற்காக வாப்ஸ் அனுப்பும்படி உத்திரவாகவேண்டியதா யிருக்கிற சங்கதி சித்தமரியலாவதாக எழுதிக்கொண்டேன்.

(ஒப்பம்) மு. வறதய்யங்கார் குமாஸ்தா,

தங்கள் விதேயன்,

(Signed) T. PATTABHIRAM,
Tahsildar.

No 47.

1871-ளு மேமீ 30உயுள்ள 79-நீ,
பெரம்பலூர்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆ. கலெக்டர் மே. W. S. ஒயிட்சயிட் துரையவர்கள் சமுகத்துக்கு.

பெரம்பலூர் தாலூகா தாசில்தார் வெங்கிடசாமி நாயக்கர் யெழுதிக்கொண்ட அர்ஜி.

சழுதாழை கிராமத்திலிருக்கும் நல்லமுத்து உடயான் வகையராப்பேர்கள் ஷை கிராமத்தில் தங்களுடைய நஞ்சை 30-காணி ஆயக்கட்டு யேற்பட்டிருக்கிற நிலங்களுக்கு பாசனமான வாய்க்காலில் முன்சீபு செங்கமலை உடையான் கொண்டம்கட்டி வாய்க்காலை தூத்து அவனுடைய புஞ்சை நிலங்களுக்கு ஜலம் பாச்சி வருவதனாலே அமேஷா நஞ்சை நிலங்கள் நஞ்சைப்பயிர் சாகுபடியாகாமல் புஞ்சைப்பயிர் சாகுபடியாகி வருவதாயும் புஞ்சை நிலங்களுக்கு ஜலம் பாச்சாமலிருக்கும்படி உத்திரவாகவேணுமென்றும் ஸமுகம் ஆபீசில் குடுத்த பிட்டிஷனில ரிபோர்ட்டு செய்யும்படியாய் மார்ச்சுமீ 23உயுள்ள 39நீ- இண்டார்சு ஸாதருயிருக்கிறதும் தவிர இதைப்பத்தியே ஷை பிட்டிஷனர்கள் பிதவிமுன்பாகவும ஒரு மனு கொடுத்தான்.

பிதவி ஷெ நஞ்சை நிலங்கள் புஞ்சை சாகுபடியாகி வருவதையும் வாய்க்காலில் கொண்டம் கட்டியிருப்பதையும் கண் பார்வையிட வேண்டியதற்காக அந்த கிறாமத்துக்குப்போய் பிட்டிஷனர் முதலானவர்களை கூடவைத்துக்கொண்டு ஷெ ஜாகாக்களை பார்வையிட்டு ஜாகா விவரம் தெரியும்படி தயார் செய்யலான ஸ்கெச்சு-1, கொண்டங்களின் பெயர்கள்கண்ட ஜாப்தா-1, விசாரணையில் ஏற்படடவாக்கு மூலம்-2, அசல் பிட்டிஷன்-1, மனு-1, ஆக 6டும் இதில் அடக்கமாய் அனுப்பியிருக்கிறேன்.

கர்ணன் நல்லமுத்து நோட்டத்தின் வாக்குமூலத்தில் ஷெ தழுதாழை கிறாமத்துக்கு நஞ்சையில் 50-ஏகர் நிலம் ஆயக்கட்டு யேற்பட்டிருக்கிறதாயும் அந்த நிலங்களுக்கு அருபாவூர் யேறி கடையிலிருந்தும் வேறே காட்டோடை முதலானதுகளிலிருந்தும ஜலம் வந்து பாயும்படியாய் கர்னாடகத்தில் ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டும் மராமத்து நடந்து ஷெ 50-ஏகர் நிலங்களும் சாகுபடியாகி வந்திருக்கிறதும தவிர மராமத்துவேலை இஞ்சினீர் டிபார்டமெண்டில் சேர்ந்தபின்பு ஷெ வாய்க்காலுக்கு மராமத்து நடக்காமல் போனபோதிலும திட்டப்படி சாகுபடியானதாகவும் அந்த வாய்க்காலில் அதிக ஜலம் போக்குக்காக ஷெ வாய்க்கால் யேற்பட்ட பொது கட்டலான வீறன் ஒடப்பு யென்கிற ஒரு கொண்டத்தைத்தவிர வேறே கொண்டங்கள் கிடையாதென்றும் இப்பால் ஷெ வாய்க்காலின் பககங்களிலுள்ள புஞ்சை நிலங்களுக்கு பட்டாப்பெத்தவர்கள் அந்த நிலங்களில் நஞ்சை சாகுபடிசெய்ய நூதனமாய் 11-கொண்டங்கள் வரையில் கட்டி அதின் வழியாய் வாய்க்கால் ஜலங்களை புஞ்சை நிலங்களுக்கு பாச்சி வருவதினாலே அமேஷா நஞ்சை நிலங்களுக்கு ஜலக்குறைவு நேர்ட்டு புஞ்சையில் சாகுபடியாகி வருவதாயும ஷெ 11-கொண்டங்களில் முன்சீபு செங்கமலே உடையானுடையவும நாட்டுமுத்து திம்மிரெட்டியினுடையவும் இரண்டு கொண்டங்களின ஆஜரூவைக்கொண்டு அவர்களுடைய 606, 630, 477 இம்மூன்று நெம்பர் நிலங்களேயும 75-ம் பசலியில் நஞ்சை சாகுபடி செய்ததைபபற்றிதான் சவால்பட்டி கொடுத்ததின்பேரில் அந்த நெம்பர்களை நஞ்சை கூயில் தாக்கல் செய்துக்கொள்ளும்படி கலெக்ட்டர் துரையவர்களுடைய உத்திரவாகி அந்தப்படி யேற்பட்டிருப்பதாகவும அந்த இரண்டு கொண்டங்களும் ஆதியில் ஏற்படட ஒரு கொண்டமும போக பாக்கி 9 கொண்டங்கள் இப்பால் சமீபத்தில் யேற்பட்டதாகவும் சொல்லுகிறான்.

முன்சீபை கேட்டதில் ஷெ 12-கொண்டங்களும் நூதனமாய் கட்டினதல்லவென்றும் வெகுநாளானதாகவும அதினால் புஞ்சை நிலங்களும் சாகுபடியாகி அப்போதைக்கப்போ நீற்கூலி யேற்பட்டு வந்திருப்பதாகவு ஆனால் நூதனமாய் ஷெ வாய்க்காலில் கட்டப்பட்டிருக்கிற கொண்டங்களின்வழியாய் புஞ்சை நிலங்களுக்கு ஜலம பாய்வதினாலே நஞ்சை நிலங்களுக்கு ஜலம் இட்டேறாமல் இருப்பதாகவும் எழுதி வைத்திருக்கிறான். நீற்கூலி யேற்பட்டதாக இவன் சொல்வதைத்தவிர வேறே கணக்காதாரங்கள் இருப்பதாக தெரியவரவில்லை.

பிதவி அந்த ஜாகாவை பார்வையிட்டதில் ஷெ வாய்க்கால் அருப்பாவூர் யேறிகடையிலிருந்து உற்பத்தியாகி அதில் அந்த யேறி ஜலமும மைத்த காட்டோடைகளின் ஜலமும வரும்படியானதாய் இருப்பதும் தவிர அதில் அதிக ஜலம போக்குக்காக கட்டப்பட்டிருக்கிற வீரன் ஒடப்பு கொண்டம் ஒன்றுமாத்திரம் வெகுநாளைக்கு முன் கட்டினதாகயிருக்கிறது. மைத்த 11 கொண்டங்களும் இப்பால் கட்டினதாக காணப்படுகிறதேதவிர ஆதியில் யேற்பட்டதல்ல. அதில் செங்கமலே உடையான் நாட்டுமுத்து திம்மிரெட்டி இவர்களுடைய 3 நீ˘ நிலங்கள் 75-ம பசலியில் நஞ்சையில் யேற்பட்டிருக்கிறதற்கு பாசனமான இரண்டு கொண்டங்கள்போக மைத்த 9-கொண்டங்களின் பக்கத்திலுள்ள நிலங்கள் புஞ்சையாகவேயிருக்கிறது. ஷெ வாய்க்காலில் இந்த கோடைநாள்களில் கூட இரண்டுஅடி ஜலம் போகிறதில் அந்த ஜலத்தை ஷெ புஞ்சை நிலக்காரர்கள் அவர்களுடைய நிலங்களுக்கு ஷெ கொண்டங்களின் வழியாய் பாச்சி வருவதினாலே ஷெ 50-ஏகர் நஞ்சைநிலங்கள் இருக்கிறவிடத்துக்கு ஷெ வாய்க்கால் ஜலம் இட்டேறாமல் போகவு பட்டாப்பெத்தவர்கள் நஞ்சைநிலத்தில் புஞ்சைபயிர் சாகுபடி செய்துகொண்டு நஞ்சை தீர்வை செலுத்தி நஷ்டமடையவும் காரணமாகிறதேதவிர ஷெ ஜலத்தை புஞ்சை நிலங்களுக்கு பாச்சாமல் விட்டுவிட்டால் திட்ட நஞ்சை நிலங்கள் நஞ்சையாகவே சாகுபடியாகி வருவதற்கு யெவ்வளவும் தடையில்லை. ஆகையால் அந்த புது கொண்டங்களை சாபாய் எடுத்துப்போடும்படியாயும் வாய்க்கால் ஜலத்தை ஷெ புஞ்சை நிலங்களுக்கு பாச்சாமல் இருக்கும்படியாயும் உத்திரவாகவேணும். ஷெ புது திருத்து நஞ்சை 3 நீ˘ நிலங்களுக்கு கேணி ஆஜரூங்கள் இருக்கிறது. அது விஷயத்தில் ஸாதருகிற உத்திரவின்படி நடந்துகொள்ளுகிற சங்கதி விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன்.

(ஒப்பம்) மு. கோபாலய்யங்கார் ஆ. த.   தங்கள் விதேயன்.

(ஒப்பம்) இ. வெங்கிடசாமி னாயக்கர்,
தாசில்தார்.

No. 48.

1873-ஹ் அக்டோபர்மீ˘ 20உ-யுளள 659-நீ.

முசிறி தாலூகா தாசில்தாரிடத்திலிருந்து.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆ. ஏ. அ. கலெகட்டர் அவர்கள் சமுகத்துக்கு.

சுரோத்திரியம் காரப்புடயான்பட்டி கிராமத்துக்கு நீற்கூலி யேற்பட்ட விஷயத்தில் ஷெ கிராமம் சுரோத்திரியம்தார் துரையூர் சிவப்பிரகாசபண்டார சந்நதிகள் ஆட்சேபித்துக்கொடுத்த பிட்டிஷனைக் குறித்து அறிக்கை செய்துகொண்டதற்கு ஷெ கிராமத்திய நிலத்துக்கு பாய்ந்துவருகிற வாய்க்காலை ஷெ கிராமத்தார்கள் யெவ்வளவு காலமாய் உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் ஷெ வாய்க்கால் கவர்ன்மெண்டார் உத்திரவின்பேரில் எவ்வளவு காலத்துக்கு முன் நீற்கூலி யேற்பட்ட நிலங்கள் பழய கணககுகளில் தாக்கலா யேற்பட்டிருந்ததா இல்லையா என்கிற விவரம கண்டு ரிப்போர்ட்டு செய்யும்படி சென்ற மார்ச்சுமீ˘ 1உ யிலான 110-வது நீ. சனனது சாதராச்சுது.

நாளது பசலி ஜமாபந்திபட்டா பட்டுவாடாசெய்ய உப்பிலியபுரத்துக்கு சவாரி போயிருந்தகாலத்தில் பிதவி குத்தாயி ஷெ சுரோத்திரியம காரப்புடயான்பட்டி வாய்க்கால் முதலான ஜாகாக்களை கண்பார்வையிட்டு விசாரித்து நிஜம் தெரிந்துகொண்டேன்.

தஞ்சையாத்திலிருந்து ஒரு வாய்க்கால் உண்டாகி அந்த வாய்க்கால் காரப்புடையான்பட்டி கிராமத்துக்குப்போய் ஷை கிராமத்திய நிலங்களுக்கு பாசனமாய் வருகிறது. ஷை வாய்க்காலானது வெகு காலத்துக்கு முன் சுரோத்திரியதாரனால் வெட்டப்பட்டு அதன் வழியாய் வரப்பட்ட ஜலத்தை அந்த கிராமத்திய நிலங்களுக்கு பாசனமாயிவருகிறது. ஷை வாய்க்கால் உண்டாகி குறைந்த பட்சம் 90, 100-வருஷ காலமிருக்குமென்றும் அதை ஆதியில் உண்டாக்கின காலத்திலாவது, அதின் பிறகு மத்திய காலங்களிலாவது சர்க்காருடைய செலவினால் யாதொரு வேலையும் நடத்தப்படவில்லை யென்றும் ஷை வாய்க்கால் உண்டாக்கின காலத்தில் சர்க்கார் உத்திரவின்பேரில் வெட்டவேணுமென்கிற ரூல் யேற்பட்டிருக்காத்தினாலே சுரோத்திரியதாரனாலேயே உண்டாக்கிக்கொள்ளப்பட்டதென்றும் அது முதல் இதுவரையில் ஷை வாய்க்கால் ஜல விஷயத்தில் சர்க்காருடைய ஆட்சேபமாவது பிரவேசமாவது இல்லையென்றும் ஷை கிராமம் பூர்வத்தில் துறையூர் ஜமீன்தாருக்கு பாத்தியமாயிருந்ததை அவர் இதற்கு 131-வருஷத்துக்கு முன் ... .. 665-வருஷத்துக்கு ருத்ரோகாரி-வருஷ சித்திரைமீ .. ... தங்களுக்கு தானம் செய்யப்பட்டு தாம்பிரப்பட்டயம் கொடுக்கப்பட்டதென்றும் பிறகு யாதொரு வரியிறையில்லாதிருக்கவேண்டியதின் பொருட்டு கும்பினி ஜப்திகாலத்தில சுரோத்திரியம் செய்யப்பட்டதென்றும் ஷை ஜலம் பாச்சலுள்ள தோட்ட நிலங்கள் ஆதியில் தானம் கொடுபட்ட காலம் முதலாகவே யிருப்பு சாகுபடியாகி வருவதாயும் பழய கணக்குகளிலும் யிருப்பு வென்று யேற்பட்டிருப்பதாயும் தெரிய வருகிறது. தாம்பிர சாசனத்தின நக்கலை பார்வையிட்டதில் ஷை கிராமத்தை நஞ்சை புஞ்சை ஜலம் வகையறாக்கள் சகிதமாய் குடுக்கப்பட்டிருக்கிறதாக கண்டிருக்கிறது.

முடிவில் இருப்பு தீர்வை யேற்பட்ட நிலத்திற்கு சர்க்கார் மராமத்தில்லாத ஷை வாய்க்கால் ஜலம் கும்பினி ஜப்திக்கு முன் முதல் உபயோகப்பட்டு வருகிற விஷயத்துக்கு நீர்க்கூலி விதிப்பது யுக்தமாய் காணப்படவில்லை. இதினபேரில் சமுகத்திய யுக்தானுசாரம் உத்திரவாகவேணும்.

ஆகையால் இதைக்குறித்து ஷை சுரோத்தியதார் எழுதிய யாதாஸ்து 2, அத்துடன் வந்த தாம்பரசாசன நக்கல் 1, ஆக 3-யும் இதில் அடக்கமாய் சமுகத்துக்கு அனுப்பிவிச்சிருக்கிற சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் யெழுதிக்கொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) மு. அரங்கய்யங்கார். கு. (ஒப்பம்.) சேதுராவு,

தாசில்தார்.

No. 49.

1874-வரு அக்டோபர்மீ 22உ யுள்ள 591-நி.

முசிரி தாலூகா தாசில்தாரிடத்திலிருந்து.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆ. ஏ. அ. கலெக்டரவர்களுக்கு.

தேவஸ்தானம் இனம் சௌப்பனூர் கிராமத்தியகுடி ஆண்டிமுத்திரியன் குப்பமுத்திரியன் இவர்களின வக்கீல் மேஸ்தர் ஸாலிஸ்பரி எனபவர் ஷை கிராமத்தில் பிடீஷனர்களுடைய தோட்ட நிலங்களுக்கு கலிங்கல் வாய்க்கால் ஜலத்தை மாமூல்படி பாச்சினதை மகாஜனம் குருசாமிய்யன வகையரு பேர்கள் தடங்கல் செய்து யிருப்பதாக கொடுத்த பிடிஷன்பேரில் இதைப்பத்தி ரிப்போர்ட்டு செய்யும்படி சென்ற யேப்பிறல்மீ 13உயிலான 126-நி. இண்டார்சுமெண்டு 1, ஷை யூர் மகாஜனம் திருக்காமைய்யன் அருந்தல காலத்தில் கேணி ஆஜரு தோட்ட நிலங்களுக்கு ஷை கலிங்கல் வாய்க்கால் ஜலத்தை பாச்சுகுற வழக்கமில்லையென்று கொடுத்த பிடிஷன்பேரில் ரிப்போர்ட்டு செய்யும்படி ஷை மாசம் 18உயிலான 133-வது நீ- இண்டார்சுமெண்டு 1. இந்தப்படி வந்திருக்கிறது.

இது சங்கதியைப்பற்றி துறையூர் பிற்கா ஆ. டிப்டி தாசில்தார் விசாரணை செய்தெழுதிய யாதாஸ்து வகையரு தஸ்தாவேஜிகள் 13-ம் பேறீஸ்துடன் இதிலடக்கம் செய்திருக்கிறேன். பிட்டிஷனர் ஆண்டிமுத்திரியன் குப்பமுத்திரியன் இவர்கள் ஷை விவாத வாய்க்கால் ஜலத்தை தன் வகைரூக்களுடைய கேணி ஆஜரு உள்ள தோட்ட நிலங்களுக்கு யெப்போதும் பாய்கிற வழக்க முண்டென்றும அந்த வழக்கப்படி சென்ற தைமீ 3உயில் ஜலம் பாயும்போது ஷை யூர் மகாஜனம் குருசாமி அய்யன் வகையருப்பேர்கள் தடுத்து பாச்சல் வாய்க்காலை அடைத்துப்போட்டதினாலே அதன் பிறகு ஷை வாய்க்கால் ஜலம் தங்கள் நிலங்களுக்கு பாயவில்லையென்றும் இதற்காக தங்களில் ஆண்டிமுத்திரியன் ஏ. ஆ. மே. ஆபீசில் கொடுத்து துறையூர் சப்-மே. ஆபீசுக்கு அனுப்பின பிட்டிஷனைப்பற்றி ஷை யார் விசாரணை செய்து அநேருக்கு ரிப்போர்ட்டு செய்ததாயும் அதற்கு முடிவு தெரியவில்லை யென்பதற்காக அதே சங்கதியைப்பற்றி மறுபடி ரிவினியூ தரப்பில் தாங்கள் பிட்டிஷன் கொடுத்ததாகவும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

மற்றொரு பிட்டிஷனர் திருக்காமைய்யன் ஷை ஜல தகராறைப்பற்றி ஆண்டிமுத்திரியன் மே. தரப்பில கொடுத்த பிரியாது தள்ளுபடியாகியிருந்தும் மறுபடியும் அதே சங்கதிக்காக அவன் வகையருப்பிட்டிஷன் கொடுத்ததினாலே தானும் பிட்டிஷன் கொடுத்ததாயும் அந்தப் பிட்டிஷனைப்பற்றி தனக்கு யாதொரு தாவாவும் இல்லை யென்றும் அதைக்குறித்து விசாரிக்கவேண்டியதில்லை யென்றும வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்.

மகாஜனம் குருசாமி அய்யன் வெங்குசாமி அய்யன் இவர்கள் அய்யாற்று கலிங்கல் வாய்க்கால் ஜலம் பிறவாககாலத்தில் யெதேஷ்டமாய் வரும்போது வாறப்பற்று நஞ்சை நிலங்களுக்கும் கேணி ஆஜரா உள்ள தோட்ட நிலங்களுக்கும் பாய்கிறதுண்டென்றும் அருந்தல் காலத்தில் வாறப்பற்று நஞ்சை நிலங்களுக்குமட்டும் ஷை வாய்க்கால் ஜலம் பாய்குறதே தவிர தோட்ட நிலங்களுக்கு ஷை ஜலம பாய்கிற வழக்கமில்லையென்றும் ஷை ஆண்டிமுத்திரியன வகையருப்பேர் சொல்லுகிறபடி தைமீ 3உயில் ஷை வாய்க்கால் ஜலத்தை அவர்களுடைய தோட்ட நிலங்களுக்கு பாச்சினதும தாங்கள் தடுத்ததும் இல்லையென்றும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

கிராம கர்ணம் சுப்பிறமணிய நோட்டம் ஷை கலிங்கல் வாய்க்கால் ஜலத்தை ஷை கிராமத்திய சமுஷ்டி நஞ்சைக்கும் தோட்ட நிலங்களுக்கும் பாஞ்சுவருகிற வழக்கமென்றும அந்தப்படி சென்ற தைமீத்திலும் எப்போதும்போல மாமூல்படிக்கி அவர்கள் வீதப்படி மடையடைத்து நஞ்சைக்கும் தோட்டத்துக்கும் ஜலம் பாச்சியிருப்பதாயும பிட்டிஷனர் சொல்லுகிறபடி மகா ஜனங்கள் நூதனமாய் கரைப்போட்டு ஜலத்தை அடைத்ததில்லையென்றும் அதற்கு முன்னும் பிட்டிஷனர் வகையரு குடிகளும் மகாஜனங்களும் பங்குவீதப்படி யவாளவாள் நிலங்களுக்கு முறைப்போட்டுக்கொண்டு இருவரும் ஜலம பாச்சி வந்திருக்கிறார்கள் என்றும் வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறான்.

டிப்டி தாசில்தார் யாதாஸ்தில் கர்ணன் வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதற்கு யுக்தானுசாரமாய் நஞ்சை தோட்டம் எல்லா நிலங்களுக்கும் ஷை கலிங்கல் வாய்க்கால் ஜலத்தை பாச்சிவந்திருப்பதாய் தெரியவருவதாய் கண்டுயிருக்கிறார்.

இதுகளின்பேரில் யோசிப்பதில் ஷை வாய்க்கால் ஜலம் கேணி இறைப்பு தோட்ட நிலங்களுக்கு எப்போதும் பாய்ந்து வந்திருக்கலாமென்றும் இப்பால் ஷை மகாஜனங்களும் குடிகளும் துயிதப்பட்டுக்கொண்டு இருப்பதனாலே தோட்ட நிலங்களுக்கருந்தல் காலத்தில் ஜலம் விடக்கூடாதென்று மகாஜனங்கள் எண்ணங்கொண்டு இப்போது தாவா சொல்லுவதாய் காணப்படுகிறது.

முடிவில் ஷை கிராமம் சர்க்கார் விசாரணையில் சேர்ந்த அயன் கிராமமாயிருமல் தேவஸ்தானம் இனாமைச்சேர்ந்த பூரா இனாம் கிராமமாக யிருக்கிறது. ஷை கிராமத்திய குடிகளும் மகாஜனங்களும் அருந்தல் காலத்தில் முறைப்பாட்டுக்கொண்டு பாச்சப்பட்ட விஷயத்தில் விவாதப்படுவதாயிருக்கிறது.

ஆகையால் இது சங்கதி சித்தத்துக்கு விசிதமாவதாய் எழுதிக்கொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்.) மு. அரங்கய்யங்கார். கு. (Signed) R. KANDASWAMI,
Tahsildar.

No. 50.

1875ஸ்ரீ பிப்ரவரிமீ 23உயுள்ள 120நீ
மு. ஜெயங்கொண்ட சோழபுரம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜெனரல் டிப்டி கலெக்டரவர்கள் சமுகத்துக்கு.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தார் அர்ஜி.

அயன் அமந்தாபாத் கிராமத்தினுடைய புறம்போக்கு யேரி ஜலத்தை அரியலூர் இஸ்திமிரு கைரல்லாபாத் கிராமத்தில் பாச்சின நிலங்களுக்கு 78-ம் பசலிமுதல் 80-ம் பசலிவரையில் உள்ள நீர்க்கூலியை வசூல்செய்து தாக்கல் செய்துகொண்டு அந்த வகை கணக்குக்கு நகல் அனுப்புவதுக்கும் கல்லாறு யென்பது எந்த இடத்தில் உற்பத்தி எங்கேபோய் முடிவாகிறது மத்தியிலே ஜலமானது எந்தவிடத்திலுண்டாகிறது. இஸ்திமிரு சுரோத்திரியம் எத்தனை கிராமங்களுக்கு பாயுகிறது அயன் ஆனந்தபுரம் கிராமத்தில் ஷை கல்லாறு ஜல ஆஜருவினாலே யெப்போது எவ்வளவு நிலத்துக்கு நஞ்சைதீர்வை யேற்பட்டிருக்கிறது மைத்த இஸ்திமிரு சுரோத்திரியம் கிராமங்களில் எதுமுதல் பாயுகிறது, அந்த கிராமங்களுக்கு ஏற்பட்டிருக்கிற நஞ்சை தோட்டம் நிலங்களுக்கு பாயுகிறதா அல்லது யெதற்கு பாயுகிறது இதுகளைக்குறித்து விவரமாய் அறிக்கைசெய்யும்படிக்கும் 71-ஸ்ரீ அக்டோபர்மீ 14உயுள்ள சமுகத்தன் 412-நீ உத்தரவு சாதருகிறது.

இதைப்பத்தி ரிவினியூ இனிஸ்பெக்டர்கள் பார்வையிட்டனுப்பிய கணக்கு வகைரு நடவடிக்கைகளையும் முந்திய ரிக்கார்டுகளையும் பார்வையிட்டேன். ஷை அமந்தாபாத் யேரி ஜலத்தினாலே கைறல்லாபாத் கிராமத்தில் 1278-ம் பசலியில் ஏகர் 19·42-ம், 79-ம் பசலியில் ஏகர் 18·1-ம், 80-ம் பசலியில் ஏகர் 20·65-ம் பாய்ந்திருப்பதற்காக பயிர் தினிசின்பேறிலுள்ள ரேட்டின்படி ரூ. 252—1—0 நீர்க்கூலி தீர்வைக்கிமஜி சிறஸ்தேதார் சுப்பிறமணியபிள்ளையால் கணக்கேற்பட்டு அதல் ரூ. 216–5—6, 72-ஸ்ரீ ஏப்பரல்மீ 19உயில் தாலூகா கஜானாவில செல்லாயிருக்கிறது.

இந்த ஜாகாக்களை பாஜி சிரஸ்தேதார் சுப்பிறமணிய பிள்ளை பார்வையிட்டு தயார் செய்தகணக்குகளை வைத்து தனிக்கி செய்ததில் ஷை அமந்தாபாத் ஏரிஜலம் பாய்ந்தமட்டிலும் யேற்பட்டிருக்கிற நீர்க்கூலி தீர்வை ரூ. 252—1—0 யேற்படுத்தியிருப்பது சரியாகவே யிருக்கிறது.

ஷை சிறஸ்தேதார் கணக்கில் கல்லாறு பாச்சலையும் சொந்த யேரிப்பாச்சலையும் சிரிதுகள் சேர்த்திருந்தார். அதுகளை 412-நீ உத்திரவை அனுசரித்து வஜா செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகைக்கி தயாரான கணக்குக்கு நகல் ஒன்று இத்துடன அனுப்பிவித்திருக்கிறேன்.

அதில்கண்ட ஷை நீர்க்கூலி தொகையில் மேல்கண்டபடி வசூலாகிவிட்ட ரூ-216—5—6 போக ரூ-35—11—6 பாக்கியிருக்கிறது. அது அரியலூர் சின்ன ஜமீன்தார் முத்துவெங்கடப்ப மழவராய நயினார்பேரிலுள்ள பாக்கியென்றும் அவருக்கு அசையும் பொருள் ஒன்றுமில்லையென்றும் பாபருய்போய் விட்டதாகவும் ஷை நீர்க்கூலி யேற்பட்ட இஸ்திமிரு கைரலாபாத் கிராமத்தில் கணக்கில் கண்ட நிலங்களுக்கு அவர் பேரால் பட்டா யேற்பட்டிருக்கிறதென்றும் ஆனால் ஷை நிலங்கள் ஷையூர் பட்டாமணியம் பள்ளி கூடத்துடயானிடம் ரூ-600-க்கு ஒத்தியாயிருப்பதாகவும் முன்னே ஜலம் பாச்சினது ஷை ஜமீனதார் யென்று ஒத்திக்காரன் பாச்சவில்லையென்றும் அந்த நிலமும 81-ம் பசலிமுதல் நாளதுவரை சாகுபடியாகவில்லையென்றும் தரிசாயிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆனதால் ஷை பாக்கியை வசூல்செய்ய ஷை சின்ன ஜமீன்தாருக்கு யாதொரு அசையும்பொருளாஸ்திகளில்லையென்று தெரியவருவதோடு நிலத்தில் மாசூல் உற்பத்தியில்லாமலும் தரிசாய் இருக்கிறதாய் விலங்குகிறது. நிலத்தை ஜப்திசெய்ய யேற்பாடு செய்குறேன்.

மேலும் ஷை அமந்தாபாத் புறம்போக்கு யேரி சென்ற 81-ம் பசலி நவம்பர்மீத்தில் ஒடப்பெடுத்துப்போய்விட்டதாயும் அந்த ஒடப்பு இன்னம் அடைக்கப்படவில்லையென்றும அதினால் ஷை 81-ம் பசலி முதல் ஷை இஸ்திமிரு கைரல்லாபாத் கிராமத்தின் நிலங்களுக்கு ஜலம் பாய மார்க்கமில்லையென்றும் நீர்கூலி யேற்படுத்த யேதுவில்லையென்றும் ஷை யேரிப்புற போக்காகமட்டும் யேற்பட்டிருக்கிறதேதவிர சர்க்கார் மராமத்து யெற்படடதல்லவென்றும் அதற்கு நஞ்சை ஆயக்கட்டும் கிடையாதென்றும் அது ஜனங்களுடைய குடி தண்ணீருக்கும் யோக்கியமில்லையென்றும் கால்நடைகளுக்கு ஜலம்குடிக்க இன்னம் வேறா யேரிகள் இருப்பதாகவும் ஷை அமந்தாபாத் யென்பது நத்த பாழ்யென்றும் பக்கத்தூர்களில் கால் நடைகள் மேய்ச்சலுக்கு வரும்போது அதில் ஜலமிருந்தால் குடிக்குமென்றும் அது எந்த ரஸ்தாவுக்கும் சமீபமில்லாததுனாலே போக்குவரத்து ஜனங்களுக்கும் உபயோகமில்லையென்றும அதின் ஒடப்பை அடைக்கவேணுமானால் ரூ-400-வரை செல்லும்படியாயிருப்பதாகவும் அமந்தாபாத் கர்ணனுடைய வாக்குமூலத்தினால் தெரியவருகிறது.

ஆனதால் ஷை யேரிப்பாச்சலைச் சேர்ந்ததல்லவென்றும் ஜன சௌக்கியத்திற்கும் உபயோகமில்லையென்றும் ஒடப்படைக்கவும் அதிக தொகை பிடிக்குமென்றும் தெரியவருவதினாலே இதைப்பற்றி யுக்தானுசாரம் உத்திரவாகவேணும்.

ரிவினியூ இன்ஸ்பெக்ட்டர்களால் ஷை கல்லாறு பார்வையிடப்பட்டதும் தவிர கீழப்பழுவூர் டிப்டி தாசில்தாருயிருந்த வீருசாமி பிள்ளையும் இந்த கல்லாறு உற்பத்திமுதலான ஜாகாக்களை போய் பார்வையிட்டு வேறொரு சேசில் யெழுதிய விவரத்தை நான் ஸமுகத்துக்கு 74-வருஷத்திய 711-வது நெம்பரில் அர்ஜி யெழுதியிருக்கிறேன். அந்த நடவடிக்கைகளாலே இதனடியில்கண்ட சங்கதிகள் வெளியாகிறது.

கல்லாறு எனகிற காட்டாறு அயன் கல்லைமோடு கிருமத்தின் யெல்கையில் உற்பத்தியாகி அயன் சாளயக்குறிச்சி பொய்யூர் இஸ்திமிரு மணக்குடி கிராம சரகம் வரை ஓடையாய் போய் அதற்கு தெற்கு இஸதிமிரு கல்லங்குரிச்சி யெல்லை முதல் இதற்கு கல்லாறென்று சொல்லப்படுகிறது. இந்த கல்லாறு சுரோத்திரியம் சிறுவனூர் கிரும சரஹத்தில் மருதையாத்தில் போய் சேருகிறது. இந்த கல்லாத்தில் மத்தியில் இஸ்திமிரு கைரலாபாத் கிருமத்தெல்கையில் ஊத்து உண்டாகிறது.

அந்த ஆத்தின் ஊத்து ஜலமானது இனிஸ்பெக்டர் அனந்தாசாரியாருடைய கணக்கில் கண்டபடி இஸ்திமிரு கைரலாபாத் கோனேரிருயபுரம், அஸ்தினபுரம், வெங்கிடகிஷ்ணபுறம், கிஷ்ணபுரம் இந்த 5-கிருமங்களில் யேற்பட்டிருக்கிற நஞ்சை தோட்டம் நிலங்களும் புஞ்சை நிலமும் உள்பட ஏகர் 53·59 நிலத்திற்கும் சுரோத்திரியம் குரிச்சி நத்தம் சிருவளூர் இந்த இரண்டு கிருமங்களில் நஞ்சை தோட்டம் நிலங்களும புஞ்சை நிலமும் உள்பட ஏசர் 27·8 நிலததறகும் பாய்ந்து வருகிறது.

அதில் இஸ்திமிரு அஸ்தினபுரம், கோனேரி ருயபுரம், வெங்கிடகிஷ்ணபுரம் சுரோத்திரியம் குறிச்சி நத்தம் சிருவளூர் இந்த கிருமங்களுக்கு நெடுநாளாகவும் இஸ்திமிரு கைராலாபாத் கிருமத்திற்கு 40-வருஷகாலமாயும், கிஷ்ணபுறம் கிருமத்துக்கு 5-வருஷகாலமாயும் ஷை ஜலம் பாச்சலாய் வருகிறதாக தெரியவருகிறது.

அயன் ஆனந்தபுரம் கிருமத்தில் 79-ம் பசலிமுதல் ஏகர் 7·90 நிலம் ஷை கல்லாறு பாச்சலினல் நஞ்சை 6-ம் தறம தீருவையும் 78-ம் பசலிமுதல் சிலாசிலாவாய் ஏகர் 5 சிலுவான நிலம நீர்க்கூலிக்கும வந்திருக்கிறது.

குருச்சி நத்தம் கிருமமும் சிருவளூர் கிருமமும் சுரோத்திரியமாக விருப்பதில் இதற்காக ஏற்பட்டிருக்கிற இனம ஜாகாக்களை பார்வையிடடதில் சிறுவனூர் கிரும மொத்தம ஏகர் 655·71, குருச்சி நத்தம் கிரும மொத்தம் ஏகர் 533 80 புஞ்சை ஹேட்டிலேயே தாக்கல் செய்திருக்கிறது. நஞ்சை அல்லது தோட்டக்கால் ஹெட்டுக்கு ஒன்றுமில்லை ஆகையினலே ஷை கிருமங்களில் நீண்டகாலமாய் ஜலம் பாய்கிறதாக தெரியவருகிறது. ஷை இரண்டு கிருமங்களிலும் உள்ள ஏசர் 27·8 நிலத்துக்கு இனம் பைசலாதிகாலம் முதல் நாளது பசலிவரை நீர்க்கூலி ஏற்படுத்தவேண்டியது கிறமமாக யெனக்கு தோணுது.

மைத்த இஸ்திமிரு கைறல்லாபாத், அஸ்தினபுறம், கோனேரிருயபுறம், வெங்கிடகிஷ்ணபுரம் இந்த 5-கிருமங்களிலும் ஷை கல்லாத்தினல் பாச்சலாகிற ஏக்கர் 53·59 நிலத்தைப்பற்றி கல்லாத்தன் பிரதானஊத்தானது இஸ்திமிரு கைரல்லாபாத் கிருமத்திலேயே உற்பத்தியாகி அந்த இலாகாவுக்குள்ளே நீர்க்கூலி அன்றியில் வெகுகாலமாய் பாச்சலாயிவந்திருக்கிற விஷயத்தை யோசித்து ஸமுகத்து யுக்தானுசாரம் உத்திரவாகவேணும்.

நடவடிக்கைகளை பேரிஸ்துப்படி அனுப்பிவித்திருக்கிற ஸங்கதி சித்தமறியலாவதாக அறிக்கைசெய்துகொண்டேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) முத்துகுமாரசாமி பிள்ளை,
தாசில்தார்.

No. 51.

1877-ஞு மார்ச்சிமீ 12உ யுள்ள 63-நி.

குளித்தலை தாலூகா தாசில்தாரிடமிருந்து.

திருச்சினப்பள்ளி ஜில்லா ஆ. ஏ. அ. கலெக்ட்டர் துறையவர்கள் சமுகத்துக்கு.

இந்த தாலூகாவுக்கு முதன்மையான பாச்சலுள்ள நாட்டு வாய்க்கால் தலைப்புக்கு தென்புறமாயிருக்கிற மகாதான புறத்தான் வாய்க்காலை லெவலுக்குக்கீழ $1\frac{1}{2}$-அடிக்குமேல் வெட்டி நாடவாய்க்காலுக்கு போகப்பட்ட ஜலத்தை தடுத்து மகாதானபுறம் வாய்க்காலுடன் தண்ணியை திருப்பிவிட்டு நாட்டு வாய்க்காலில் தண்ணீர் வறவொட்டாமல் அக்கிரமம்செய்த சங்கதியைக்கேள்விப்பட்டு ஷை கிராமத்துக்குச் சேவுகனை அனுப்பி அந்த நாட்டுவாய்க்கால் தலைப்பில் ஷை கிராமமுன்சிபு வகையறுவை அழைத்துவரும்படி திட்டம்செய்துபோட்டு நாட்டுவாய்க்காலால் பாயபபட்ட 30-கிராமங்களுக்கு தண்ணீர் பாயாமல் மிகவும் அக்கிரமம் செய்திருந்ததை நான் நேரிலபோய் பார்வையிட்டு ரயில்மார்க்கமாய் போகையில் மகாதானபுரம் முன்சிபை லாலாப்பேட்டை ரயிலவே ஸ்டேஷனில கண்டு என்கூட ரயிலேயேரி வரும்படி உத்திரவு செய்தேன. என்னுடை உத்திரவுப்படி சரியாய் என் கூட ஷை வாய்க்கால் தலைவுக்கு வராமல் இருந்து விட்டான். அப்போது அவ்விடத்தில் வந்திருந்த கலெக்டர் துரையவர்களை பார்த்துகொண்டு நான்போய் அந்தவாய்க்கால் தலைபடை பார்த்தவுடனே இந்த மகாதானபுறம் கிராமத்தார்கள் ஷை வாய்க்கால் ரொம்ப ஆளமாயும் மிகவும் அக்கிரமமாயும் துணிவுடன் வெட்டிக்கெடுதி செய்திருந்தது தெரியவந்தது. அப்போது எனக்குண்டான வருத்தத்தை பொருத்துக்கொண்டு அவர்கள் பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் 30-கிராமங்கள் வரையில் பாயப்பட்ட நாட்டுவாய்க்காலில் ஜலம்போகும்படிக்கும் மகாதானபுறத்து வாய்க்காலை சீர்ப்படுத்தி தண்ணியைத்திருப்பி விடும்படிக்கும் கொரம்பு மணியகாரன் வகையறுவுக்கு உத்திரவுசெய்துப்போட்டு கஸ்பாவுக்கு வந்துவிட்டேன். அதைப்பத்தி மகாதானபுறத்தார்கள் என்னை நேரில்வந்து கேட்டுக்கொண்டார்கள் உத்திரவு கொடுக்கிறதாய் சொனனேன். மறுபடியும் அவர்கள் சமுகத்தில் ஒரு பிட்டிஷனைக்கொடுத்துவிட்டு உடனேபோய் அந்த மகா

தானபுறத்து வாய்க்காலை யேறக்குறைய வெட்டி தண்ணியை அந்த வாய்க்காலில் கொண்டுபோய் விட்டதினாலே நாட்டுவாய்க்காலில் சுத்தமாய் தண்ணி வராமல் அந்த வாய்க்கால் பாய்ச்சலுள்ள எல்லா கிராமங்களிலும் தொண்டைக்கதிரும பயிருமாயிருந்தது காய்ந்துபோயிருப்பதும் தவிர லாலாப்பேட்டைக்கு கிழக்கே குடிதண்ணிகூட இலலாமல ஜனங்களும ஆடுமாடுகளும் பெரிய சங்கடத்தை அடைந்திருப்பதை முன்னிட்டு நாட்டு வாய்க்காலில் குளித்தலை சரகத்துக்கு மட்டும் 5, 6, கிணறுகள் வெட்டி ஜனங்கள் குடி தண்ணி யெடுக்கும்படி திட்டம் செய்திருக்கிறேன்.

ஒரு நாளும் நடவாத இவ்வளவு கெடுதி ஒரு மகாதானபுறத்து மகா ஜனங்களினாலேயும் முன்சீபுனாலேயும் நடந்திருக்கிறது. ஷை மகாதானபுறம் கிராமத்தார்கள் முன் அக்கிரமம் செய்ததுபோல மறுபடியும் அவர்கள் வாய்க்காலை தோண்டி நாட்டு வாய்க்காலில் தண்ணீர் வறவொட்டாமல கெடுதி செய்திருப்பதாக மணத்தட்டை முன்சீபும் ஷை கொரம்பு மணியகாரனும் யெழுதிய ரிப்போர்ட்டுகள் 2-யும இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அவைகளை சமுகத்தில் பார்வையிடுவதினால் அந்த மகாதானபுறம் கிராமத்தார்கள் செய்யும் அக்கிரமம இப்படிப்பட்டதென்று சித்தத்துக்கு விசிதமாகும்.

நானும் எனக்கிருக்கிற முக்கியமான ஜமாபந்தி வேலையையும் இதற வேலையையும் விட்டு இன்று சாயந்திரம 6-மணிக்கு கொரம்பு தலைப்புக்குப்போக நிச்சயித்திருக்கிறேன். போய் பார்வையிட்டு வேண்டிய அரேஞ்சுமெண்டுசெய்து அது விவரம்கண்டு மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஷை மகாதானபுறம் கிராமத்தார்கள் சமுகத்தில் கொடுத்த பிட்டிஷனையும வாபஸ் அனுப்பியிருக்கிற சங்கதி மனுசெய்துகொண்டேன்.

தங்கள் விதேயன்,

(Signed.) M. SAMBAMURTHY IYER,
Tahsildar.

No. 52.

1879-ஞு அக்டோபர்மீ 9வ யுள்ள 748.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்ட்டரவர்கள் சமுகத்துக்கு.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தார் அர்ஜி.

குலமாணிக்கம் சூசைசேர்வைகாரன் தன் நிலத்தின் மத்தியில் போகுற வாய்க்காலை ஒரு பக்கமாய் விடவேணுமென்று சமுகத்தில் கொடுத்த பிடிஷன் 322-நெ-ல் கீழப்பழுவூர் டிப்டி தாசில்தாருக்கு ரிப்ராகி அவர் விசாரித்து யெழுதிய யாதாஸ்து வகையரு நடவடிக்கைகளை பார்த்தேன்.

ஷை குலமாணிக்கம் கிராமத்தில் கணக்கர்களுக்கு சில நிலம் மானியமாய் யேற்படடிருந்தது ஊழியம் டைசபோதி காலத்தில் அந்த நிலங்கள் தீர்வையேற்பட்டு கர்ணங்கள் பேரால் பட்டா யேற்பட்டுபோச்சுது. அதில சர்வை 164-நெ- கர்ணன் பாக்கிய பிள்ளை பேரால் பட்டா யேற்பட்ட டிஸ்மல 56, அநந்தராமய்யன்பேரால் பட்டாயேற்பட்ட டிஸ்மல் 56-ஆக 1-12 நிலம இந்த பிட்டிஷனர் தகப்பன் சாமிமுத்து சேர்வை 3-ம வருஷத்திலும் போன வருஷத்திலும் கிரயத்துக்கு வாங்கியிருக்கிறான். அப்படி அவன் வாங்கியிருக்கிற நிலத்தின் மத்தியில் விசாரணை அடுக்கில் சேந்திருக்கிற நக்ஷாவில சிகப்பு பென்சலால் A. B. C. அடையாளம்போட்டிருக்கிற வாய்க்கால் ஒன்று யேற்பட்டு அதின் வழியாய் 2.22 அமேஷ் நஞ்சை நிலங்களுக்கு ஜலம் பாய்ந்துகொண்டிருந்தது. பிட்டிஷனர் தகப்பன் இந்த நிலத்தை கிரயத்துக்கு வாங்கின பிறகு அவனும் அவனுடைய மைத்தொரு மகனான ராயப்பன்சேர்வையும் அதில் மேடாயிருந்த நிலத்தை சம பூமியாக்கையில் இந்த A. B. C. அடையாளமிட்ட வாய்க்காலையும் நெறவிப்போட்டு A. D. C. அடையாளமிட்ட வாய்க்காலை நூதனமாய் செய்துவிட்டார்கள்.

அப்படி மாமூல்வாய்க்காலை கெடுதி செய்ததைபபற்றி இனியாசி என்பவனால் இ. பி. கோ. 430-வது பிரிவுப்படி கிழப்பழுவூர் 2-வது கி. மேஜிஸ்திரேட்டாரிடம் பிராது செய்யப்பட்டு குற்றம் ருசுவானதினாலே இந்த பிடிஷனர் தகப்பனுக்கும் சகோதரனுக்கும அபராதம விதிக்கப்பட்டு மாமூல் வாய்க்காலை விட்டுவிடும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வாய்க்காலை தான் இப்போது ஒதுக்கிவிடவேணுமென்று பிட்டிஷனர் அபேட்சிக்கிறான். இந்த பிட்டிஷன் வந்ததின் பிறகு ஷை ஜாகாவை பார்வையிட்டதில A. B. C. அடையாள வாய்க்காலும் A. D. C. அடையாள வாய்க்காலுமிருந்தது. அதின் வழியாய் ஜலம் போய்க்கொண்டிருந்ததாகவும் A. D, C. அடையாள வாய்க்காலை வைத்துக்கொள்ளும்படி யெதிரிக்கு சொல்லிப்பார்த்ததில் அவன் அதற்கு சம்மதிக்காமல் மாமூல் வாய்க்கால் வழியாகவே ஜலம் போகவேணுமென்று சொலவதாக ஸ்தலத்தை பார்வையிட்டு விசாரித்த டிப்டி தாசிலதார் சொல்லுகிறார். இதினால் அவர்கள் ராஜியாய்போக இஷ்டமுள்ளவர்களாய் காணப்படவில்லை.

முடிவில் A. B. C அடையாளவாய்க்காலினாலே பிட்டிஷனருக்கு இடஞ்சலிருப்பது எதார்த்தமானதென்றும் A. D. C. வாய்க்கால் வழியாய் ஜலம்போவதினாலே யெதிரிகளுக்கு யாதொரு குறைவுமில்லையென்றும் ஆனால் அவர்கள் A. B. C. வாய்க்கால் தான் இருக்கவேணுமென்று அடத்தினால் சொல்லுகிறதாகவும் தஸ்தாவேசுகளினால் எனக்கு தோற்றுகிறது.

விசாரணை நடவடிக்கைகளுடன் டிப்டி தாசிலதார் யெழுதிய 369-நெ யாதாஸ்து 1, அதினடக்கம் பேரிஸ்தில் கண்டபடி தஸ்தாவேசுகள் 6, இதுகளை இத்துடன் அனுப்பியிருக்கிற சங்கதி சித்தமறியலாவதாய் அறிக்கைசெய்துகொண்டேன்.

தங்கள் விதேயன்,

(Signed.) S. RAMACHANDRA ROW.
Ag. Tahsildar.

No. 53.

1878௵ ஜூலை௴ 3உயுள்ள 423நெ.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்டரவர்கள் சமுகத்துக்கு.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தார் அர்ஜி.

சண்டிருதித்தம் தர்மராஜய்யன் வகயரா சில குடிகள் ஷை கிராமத்தெல்லையில் ஜனங்களுடையவும் ஆடுமாடுகளுடையவும் குடிதண்ணீருக்கு உபயோகமாகவிருக்கிற பூவோடையென்னும் ஏறியின் தண்ணீர் பாசகாலில் போய் விடுவதைப்பத்தி சப இஞ்சினீர் அவர்கள் பார்த்து உத்தரவு செய்தபடி தாங்கள் கரை போட்டுக்கொண்டிருப்பதல் அந்தக்கரையை யெடுத்துவிடவேணுமென்று மறுபடியும் ஷை இஞ்சினீர் இலாகாதார்கள் அக்கிரமம் செய்து தங்கள்பேரில் மேஜிஸ்திரேட் தரப்பில் கேசு உண்டுபண்ணியிருக்கிற விவரங்களாய் சமுகத்தில் கொடுத்த பிட்டிஷன்களில் ரிப்போர்டு செய்யும்படியாய் மே௴ 10உயுள்ள 589, 14உயுள்ள 596 இந்த நெம்பர் இண்டார்ஸ் உத்தரவுகள் வந்திருக்கிறது.

தவிர ஷை குளத்தில் குடிகளால் போட்டகரையை எடுத்துவிடவேணுமென்று சப் இஞ்சினீர் அவர்கள் எழுதிய இயாதாஸ்தின்பேரில் என்ன நடவடிக்கை நடத்தப்பட்டிருக்கிறதென்றும் ஷை பூ ஓடை ஏறியானது சர்க்கார் பாச்சல் ஏறியா அல்லது குடிகளுடைய சொந்தக் குட்டையாயென்றும், சர்க்கார் ஏறியானால் அதற்கு என்ன ஆதாரமிருக்கிறதென்று ரிகார்டுகளை பார்வையிட்டு அதின் விருத்தாந்தத்தையும் இஞ்சினீர் அவர்களுக்கும் ஷை கிராமக்குடிகளுக்கும் இப்பால் உண்டாயிருக்கிற விவாதத்தைக்குறித்தும் பூர்த்தியாய் ரிபோர்டு செய்யும்படிக்கும் மே௴ 13உயுள்ள சமுகத்தின் 321-நெ உத்தரவும் வந்திருக்கிறது.

இது பூ ஓடையென்றும் யேறி முதலான ஸ்தலங்களை நான் நேரில் பார்வையிட்டு வேண்டிய விசாரணை செய்ததுருப்பதுமல்லாமல் பழய நடவடிக்கைகளையும் பார்வையிட்டேன் ஷை யேறி வகையரா ஸ்தலங்களை காட்டத்தக்க நக்ஷா ஒன்றும் இத்துடன் சேர்த்திருக்கிறேன்.

ஷை கிராமத்தில் சர்வை 207-நெ பி. லட்டரில் ஏகர் 14·84 நிலம் குளம் புறம்போக்கென்று செட்டில்மெண்டு ரிஜிஸ்தரில் கழிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் பிறஸ்தாபத்திலிருக்கும் பூவோடையேரி இதை ஆதியில் வெகு காலத்துக்குமுந்தி குடிகள் சொந்தத்தில் உண்டு பண்ணினதென்று ஷை கிராமக்குடிகள் சொல்லுகிறார்கள். அப்படி அவர்களால் உண்டு பண்ணப்பட்டதென்றாவது அல்லது சர்க்கார் தரப்பில் யேற்படுத்தப்பட்டதென்றாவது உருதியாய் சொல்ல ரிகார்டு மூலமான ஆதாரங்கள் ஒன்றும் அகப்படவில்லை. ஆனாலும் இந்த யேரிப்புறம்போக்கல் யேற்பட்டிருக்கிறதினாலே சர்க்காருக்கு சம்மந்தப்பட்டதென்பதில் சந்தேகமில்லை.

இந்த பூவோடை யேரியின் கீழ் தனியாய் நஞ்சை வகையரா யெந்த நிலங்களாவது யெவ்வளவாவது ஆயக்கட்டில் யேற்பட்டிருக்கிறதாகவாகிலும் இப்பொழுது யேற்பட்டிருப்பதாகவாகிலும் தாலூகா ரிகார்டிலிருந்து அகப்பட்ட 1260-பசலி முதல் 77-ம் பசலி வரையிலுள்ள பாச்சலவாரி கணக்குகளாலாவது இப்பால் யேற்பட்டிருக்கும் அவ்வகை கணக்குகளாலாவது தெரியவரவில்லை. செட்டில்மெண்டு பைசலுக்கு முந்தி ஷை பூவோடை யேரி யிறைப்புனல் சொல்ப நிலங்கள் புஞ்சை வகையரா பயிர்கள் சாகுபடியானதாக குடிகள் சொல்லுகிறார்கள். அப்படிப்பாச்சப்பட்ட நிலங்களுக்கு நீர்கூலி யேற்படுத்தப்பட்டு வந்ததோ அல்லது யென்ன வகையில் யேற்பட்டுவந்ததோ அவ்வகைக்கி தாலூகா ரிகார்டிலாவது கிராம கர்ணனிடமாவது யாதொரு ரிகார்டுகளும் யில்லையென்று தெரியவருகிறது. அல்லாமல் ஷை யேரியின் கீழ் நக்ஷாவில் காட்டிய சர்வை 181, 173, இந்த நெ. ஸ்தலங்களுக்குறிய ஏகர் 6·70-நிலத்துக்கு சர்வே பிளானில் நஞ்சை கலர்கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அந்த யேரியின் கீழ் நஞ்சையில் யேற்பட்டதென்று சொல்ல யாதொரு கணக்காதாரமும் தென்படவில்லை. முன்னே ஷை யேரி பிறப்புநல் தோட்டக்காலாக சாகுபடியாகிவந்த ஸ்தலமாயிருக்கலாமென்று ஊகிக்க கூடியதாயிருக்கிறது.

ஷை கிராமத்திலிருக்கிற பெரிய யேரி ஒன்றுதான நஞ்சை ஆயக்கட்டில் தாக்கலாய் வருவதாக கணக்குகளால் யேற்படுகிறது. இதன் கீழ் இப்பொழுது ரூ 2601-14-0 தீர்வையுள்ள யேகர் 561·65 நிலம் தீட்டமயேற்பட்டிருக்கிறது. இந்த யேரிக்கு நந்தையார் பிராஜெக்டிலிருந்து 1268-ம்பசலியில் வாய்க்கால் உண்டாகி அதிக பாச்சல் யேற்பட்டு வருவதாகவும் கணக்குகளில் துலங்குகிறது. இந்த யேரியில் 5-பாச்சல் மதகுகள் யேற்பட்டிருக்கிறது. இதில் ஒன்று சுரோத்திரியம் திருப்பூவாடி கிராமத்தின் பாச்சலுக்காக யேற்பட்டவாய்க்கால். அந்த வாய்க்காலிலிருந்து நக்ஷாவில் காட்டியபடி 1866-௵த்தில் பூவோடை பிறிவென்று ஒரு கிளைவாய்க்கால் உண்டாகி ஷை பூவோடை யேறிக்கி வந்த அந்த யேரியின் கரையில் ஒரு மதகு கட்டப்பட்டு அதின் மார்க்கமாய் ஷை சண்டிராதித்தம் எல்லையில் தண்ணீர் பாசனமாய் வருகிறது. இந்தப்பாச்சலினும் இப்பொழுது ரூ 417-2-0 தீர்வையுள்ள யேகர் 89.59 நிலம் நஞ்சை சாகுபடியாய் வருவதோடு நீர் கூலி வகையில் ரூ 56-1-0 யேற்பட்டிருக்கிறது. இதற்காக தனியாய் ஒரு ஸ்டேட்டுமெண்டு இந்த கேசி னடுக்கில் சேர்த்திருக்கிறேன்.

இவ்விதமாய் ஷை பூவோடை யேரிக்கு வாய்க்கால் யேற்பட்ட 11-வருஷகாலமாய் ஷை வாய்க்கால் தண்ணீர் ஷை யேரியில் நிறைந்து அதிலிருந்து மதகு வழியாய் மேல்கண்ட நிலங்களுக்கு பாச்சலாய் வருவதாக தெரியவருகிறது. யென்னுடைய பார்வையிலும் அப்படியே யிருக்கிறது. இந்த வாய்க்கால் வருவதற்கு முன் இந்த பூவோடை யேரிக்கி யேவரு வரத்துகள் உண்டாயிருந்திருக்கலாம். அப்படிப்பட்ட பெரிய வரத்துகள் இப்பொழுதும் ஒன்று மிருக்கவில்லை. சுத்தவும் அநேகமாய் நஞ்சை சாகுபடியும் புஞ்சை சாகுபடியும் இப்பால் உண்டாகியிருக்கிறது. அந்த நஞ்சை கழிசல் தண்ணீரும் புஞ்சை சாகுபடி நிலங்களில் பெய்யும் மழைதண்ணீரும் வருகிற மிக சொல்பமான சிறிய வரத்துகள் இருக்கிற குறிப்புகள் தெரிகிறது. முன்பிருந்த பெரியவரத்துகள் சாகுபடியாகி விட்டதினால் அடைக்கப்பட்டு போயிருக்கலாமென்று நினைக்க கூடியதாயிருக்கிறது. இந்த யேரியின் ஸ்திதி இவ்வளவுதான. இதைப்பற்றி இப்பால் நடந்திருக்கிற சங்கதிகளின் சரித்திரத்தை அடியில் கண்டிருக்கிறேன்.

பிறஸ்தாப பூவோடை யேறி குடிதண்ணீருக்கு உபயோகப்பட்டதென்றும் அதின்பேரில் இஞ்சினீர் டிபார்ட்டுமெண்டாரால் பாச்சல்வாய்க்கால் உண்டுபண்ணப்பட்டதால் ஜலமெல்லாம் வெளிப்பட்டுப்போய்விடுவதாகவும் அதனால் குடிதண்ணீருக்கு கஷ்டம் சம்பவிப்பதனால் கரைபோட்டுக்கொள்ளும்படி உத்திரவாகவேணுமென்றும் ஷையூர் கூத்தன் செம்பனபடையாச்சி வகையரா குடிகள் ஆக்டிங் கலெக்டர் துரையவர்களிடம் கொடுத்த 975-நெ. பிட்டிஷன் அவர்களுடைய 77-௵ ஜூலை 5-நெ. உத்திரவுடன் என்னுடைய பைசலுக்கு ரிபராயிருந்தது. இதை நான கீழப்பழூர் பிறகா டிப்டி தாசில்தாருடைய ரிசிலனைக்காக அனுப்பியிருந்தேன. அதின்பேரில் அவர் ஸ்தலத்தைப்பார்த்தும் விசாரித்தும் ஷை குளத்துக்குள் சேறப்பட்ட இஞ்சினீர் இலாகாதார்களால் வெட்டப்பட்டிருக்கும் வாய்க்காலுக்கும் கொளத்துக்கும் கரைமுதலான ஹத்துக்கள் ஒன்றும் கிடையாதென்றும் இந்த ஷகதியில் வாய்க்காலில் வருகிற ஜலமும் யேறியில் கட்டுகிற ஜலமும் சேர்ந்து மதகுவழியாய் பாச்சலூருக்கு போய்விடுவதாகவும் அதினால் வாய்க்காலில் ஜலம் வரத்தில்லாத காலத்தில் அவ்வூர் ஜனங்களுக்கும் கால்நடைகளுக்கும் ஜலகஷ்டமுண்டாவதும் இரண்டு மயில் தூரமுள்ள கொள்ளிடம் தண்ணீருக்குப்போவதும் வாஸ்தவமென்றும் அவ்வூரில்

பிரஸ்தாப குளத்தைத்தவிர ஜலாதாரம் வேறே கிடையாதென்றும் ஆகையினலே யேரியில் கட்டும் ஜலம் யேறியில் தங்கும்படிக்கும் வாய்க்கால் ஜலம் யேரியில் கலக்காமல் பாச்சலுக்குப் போகு படிக்கும் பிரஸ்தாப வாய்க்காலுக்கு தென்புறமாக கரைபோட்டுக்கொள்ளும்படிக்காவது அல்லது ஷை வாய்க்காலை முரிச்சி வெட்டி வேருமார்க்கமாய் விடும்படிக்காவது செய்யவேணுமாய் நடவடிக்கைகளுடன் ஜவாப்யாதாஸ்து யெழுதினர். அதின்பேரில் இந்த அர்சத்தை இஞ்சினீர் இலாகாதார்களால் பார்வையிடச்செய்து அவர்களுடைய அபிப்பிராயத்தின்பேரில் ஒருவித யேற்பாடு செய்யவேண்டியிருப்பதாய் நான் அபிப்பிராயப்பட்டு டிப்டி தாசில்தார் அனுப்பிய பிட்டிஷன வகையரு 5-நடவடிக்கைகளுடன் சென்ற 77-ஞு ஜூனமீ 25உ யில் சமுகத்துக்கு 436-நி. அர்ஜி எழுதிக்கொண்டிருக்கிறேன்.

பிறகிருத விசாரணைக்கி ஷை அர்ஜியுடன் அனுப்பிய 5-தஸ்தாவேஜிகளும் வேண்டியிருந்ததினலே அதை அனுப்பும்படி உத்திரவாகவேணுமாய் நாளதுமீ 14உ யுள்ள 341-நி. அர்ஜி யெழுதிக்கொண்டதில ஷை தஸ்தாவேஜிகளை 77-ஞு த்திய 432-நி. லெட்டருடன சப் இஞ்சினீர் அவர்களிடத்திற்கு அனுப்பியிருப்பதாயும் அதுகளை என்னிடம் கொடுக்கும்படி ஷை சப் இஞ்சினீரவர்களுக்கு நாளது ஞு த்திய 307-நி. லெட்டர் அனுப்பியிருப்பதாகவும் நாளதுமீ 16உ யுள்ள சமுகத்தின 340-நி. உத்திரவு கிடைத்தது. ஷை தஸ்தாவேஜிகளை கொடுக்கவேணுமென்று நான சப இஞ்சினீரவர்களை நேரில்கேட்டேன. அந்த தஸ்தாவேஜிகள் பிரகிருதம் அகப்பட வில்லையென்றும், இன்னவிடத்திற்கு அனுப்பபட்டதென்றும சொல்லக்கூடவில்லையென்றும் ஆதலால் அதை அலலாமலே கேஸை முடிககும்படிக்கும், இனி அகப்பட்டால் அனுப்புவதாயும் ஷை ஆபீஸ் எட் அச்சவுண்டாண்டு நாளதுமீ 20உ யில் எழுதியிருக்கிறர். ஆதலால் அந்த நடவடிக்கைகளை நான் இப்போ இந்த கேசுடன் சோத்து பாக்கக்கூடாமல போயிருக்கிறது.

இந்த ஸ்திதியில் ஷை சங்கதி இஞ்சினீர் இலாகாதார்களுடைய விசாரணைக்கு வரப்பட்டிருப்பதினலே ஷை ஏரி உள்வாயிலிருக்கிற வாய்க்காலை வடபுறமாய் வெட்டி விடவேணுமென்று ஷையூர் குடி மேல் ஆனைப்பட்டியாச்சி வகயரூப் போகள் ஸப் இஞ்சினீர் அவர்களிடம் சென்ற பெப்பிறவரிமீ 27உ மனு கொடுத்திருக்கிறர்கள். அதின்பேரில் அவர்கள் ஷை ஜாகாவை பார்வையிட்டு குடிகள் கோருகிறபடி ஒரு கரைபோட்டுக்கொள்ளும்படி உத்திரவு கொடுத்திருக்கிறர்கள். அதை அனுஸரித்து ஷை குடிகள் நக்ஷாவில் காட்டியிருக்கிற பிரகாரம் பூவோடை யேரியில் வாய்க்காலுக்கு தென்புறமும் பஞ்சவர்ண லயன் மாதிரியாக சென்ற மார்ச்சுமீ 1உ யில் சராசரி சுமார் $\frac{3}{4}$ கிஜ உயரத்துக்கு கழமேல் நிகளத்தில் ஒரு மண்கரைபோட்டிருக்கிறர்கள். இதன்பேரில் ஷை பூவோடை யேரி வாய்க்கால் பாச்சலுள்ள கண்டிராதித்தம் புரவடை திருமழவாடி குடிகள் ஷை கரை போட்டிருப்பதினல் பாச்சலுக்கு குந்தகம் நேரிடுமென்று ஆட்சேபித்து ஷை சப் இஞ்சினீர் அவர்களிடம் மார்ச்சுமீ 4உ யில் விண்ணப்பம கொடுத்திருக்கிறர்கள். பிறகு அந்தக் கரையை யெடுத்துவிடும்படி ஸப் இஞ்சினீர் அவர்களால ஷை கண்டிராதித்தம் குடிகளுக்கு முன்செய்த உத்திரவை ரத்துசெய்து மறுபடியும் உத்திரவு பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்திரவுக்கு குடிகள உட்படவில்லை. பிறகு ஷை இரண்டு விண்ணப்பங்களையும் எனனிடத்திறகு அனுப்பியிருப்பதாயும் ஷை குளம் குடிதண்ணீருக்காக யேற்பட்டதா அல்லது பாச்சலுக்காக ஏற்பட்டதா என்பதைப்பத்தி விசாரணை செய்து பாசனத்தைச் சேர்ந்ததென்று வெளியானல கண்டிராதித்தம் கிராமத்தாரால் போடப்பட்டிருக்கிற கரையை உடனே யெடுப்பிவிக்கும்படி செய்யவேணுமென்று ஷை சப் இஞ்சினீர் அவர்கள் மார்ச்சுமீ 6உ யில் எனக்கு 69-நி. யாதாஸ்து எழுதினார்கள். இதைக்குறித்து விசாரித்தது கரை போட்டது அக்கிரமமாயிருந்தால் அதை யெடுத்துவிட தகுந்த யேற்பாடு செய்யும்பொருட்டு ஷை யாதாஸ்து வகயராக்களை டிப்டி தாசில்தாருக்கு பிர்வர்டு செய்திருக்கிறேன். அவர் ஷை ஸ்தலத்தை நாளதுமீ 3உ காலமே 7-மணிக்கு பார்வையிட்டார். அப்போ ஓவர்சியர் முதலான இஞ்சினீர் இலாகாதார்களும கண்டராதித்தம் கிராமத்தின் தலைவாகளான குடிகளும் கூடயிருந்தார்கள். ஷை நூதன கரையினலே பாச்சலுக்கு குந்தக்கமென்றும் அதை யெடுத்துவிடவேணுமென்றும் இஞ்சினீர் இலாகாதார்களால் சொல்லப்பட்டதில ஷை கரை போட்டதில் சங்களுக்கு சிலவாய நஷ்டப்பட்டிருப்பதினலே இப்பொழுது யெடுக்க தங்களால் முடியாதென்று இஞ்சினீர் இலாகா மனுஷ்யாள யெடுத்துப்போடுவதில் தங்களுக்கு ஆட்சேபமில்லையென்றும் ஷை கண்டிராதித்தம் குடிகளும் சொன்னதாகவும் உபயத்திராளுடைய ஸமாதானத்தின்பேரில் அந்தப்படி செய்வதில் தனக்காட்சேபமில்லையென்றும டிப்டி தாசில்தார் சொல்லி வந்துவிட்டதாகவும் அப்பால இஞ்சினீர் இலாகா மனுஷ்யாள் ஷை கரையை யெடுத்ததில் கண்டிராதித்தம குடிகள் சுமார் 200 பேர்வரை வந்து தடுத்து அடித்து துன்பமுண்டுபண்ணினதாக 29 பேர்கள் பேரில் குத்தஞ்சாட்டி இஞ்சினீர் இலாகாதார்களால் யாதாஸ்து எழுதப்பட்டிருப்பதாகவும அதின்பேரில் ஷை குத்தத்தை கிரமப்படி கிரிமினல் தாப்பில் யெடுத்துக்கொண்டு விசாரித்து வருவதாகவும ஷை டிப்டி தாசில்தார் ஸமுகத்துக்கு நாளதுமீ 15உ யில் 54-நி. அர்ஜி யெழுதியிருப்பதாயும் அந்த அர்ஜி நகல் ஸகிதம எனக்கு ஜவாப் யாதாஸ்து யெழுதியிருக்கிறர் இவ்வளவுதான் இதுவரை நடந்திருக்கிற விர்த்தாந்தம்.

முடிவில் கண்டிராதித்தம குடிகள் கோடைகாலத்தில் குடிதண்ணீருக்கு மார்க்கமில்லாமல் போனதினலே இப்போது போட்டிருக்கிற கரையை எடுக்கமாட்டோமென்று சொல்லி ஆட்சேபிக்கிறர்கள் இப்படி கரைபோட்டதினல் பாச்சலுக்கு குந்தகமாகுமென்றும் அதை எடுத்துவிட வேணுமென்றும் ஸப் இஞ்சினீர் அவர்கள் சொல்லுகிறர்கள்.

ஷை கிராமத்தெல்லையை நான் பார்த்திருக்கிறேன். மழைகாலத்திலும் பாச்சல் வாய்க்கால்களில் தண்ணீர் வந்துகொண்டிருக்கும்போதும் ஜனங்களுக்கும், ஆடு மாடுகளுக்கும் குடிதண்ணீருக்கு குறைவில்லை. அப்பொழுது பிரஸ்தாப கொளத்தில் பூர்த்தியாய் ஜலம நிற்கிறபடியால் உபயோகப்படுத்திக்கொள்ளுகிறர்கள். வாய்க்கால் ஜலம் நின்றுபோனல் குளத்தில் இபபொழுதுள்ள ஸ்திதியில் தண்ணீர் தங்கியிருக்க மார்க்கமில்லை. குடிதண்ணீருக்கு இதைத்தவிற அவ்வூரில் வேறு ஆதாரங்கள் ஒன்றும கிடையாது. அந்த நிணத்தல் குடிகள் கொள்ளிடத்திற்குப்போய் கஷ்டப்படுவது வாஸ்தவம்தான். இந்த ஸ்திதியை நான் பிரகிருதம் நேரில் பார்த்திருக்கிறேன.

இஞ்சினீர் இலாகாதார்கள் சொல்லுகிறபடி கரை போட்டிருப்பதினல் வாய்க்கால் ஜலவரத்து அருந்தலாயிருக்கிற காலத்தில் பாச்சலுக்கு குந்தக்கமாகுமென்றும் காணுகுறது. மேற்சொலலியபடி வாய்க்காலில் ஜலம் வரும்போது பிரஸ்தாப ஏறியில் வேண்டிய ஜலத்தை ரொப்பிவைத்திக்கொண்டு கீழ்புறம் கரையிலிருக்கிற மதகு வழியாய் நஞ்சை நிலங்களுக்கு பாச்சிக்கொண்டு வருகிறதினலே சாகுபடிக்கு இப்போது சௌகரியமாய் இருக்கிறது. விவாத கரை ஸ்தாபிக்கப்படுகிறபட்சத்தில் இந்த சௌகரியம நீங்கிவிடும். அதுனல் சாகுபடிக்கு குந்தகப்படுமென்பதிலும் சந்தேகமில்லை.

ஆதலால இதைப்பற்றி யுக்தானுசாரம் உத்திரவாக வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நடவடிக்கைகளை பேரீஸ்து தாக்கலாப்படி இத்துடன் அனுப்பிவித்திருக்கிற சங்கதி சித்தமறிபலாவதாக அறிக்கை செய்துகொண்டேன்.

தங்கள் விதேயன்

(Sd). S. RAMACHANDRA ROW,
Ag. Tahsildar.

ORDERS RELATING TO WATER DISPUTES.

No. 1.

1826-௵ டிசம்பர்௴ 22௳ யுள்ள 149-நெ.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தாருக்கு.

யென்னவென்றால் ஷை தாலூகாவைச்சேர்ந்த மேல வாளாடி கிருமத்தானுக்கும் புதுக்குடி கிருமத்தானுக்கும் பொதுவிலிருக்கபட்ட வாய்க்காலில் முறைவீதம் ஜலம் பாச்சிக்கொள்ளவேண்டியதில் மூனு எரு பங்குக்காரனாகிய புதுக்குடி கிராமத்துப் புரிவு வாய்க்கால் தலவிலும் மேலவாளாடி கிராமத்து வாய்க்காலிலும் கல்கட்டாய் சோனைகளை கட்டி முறைப்படிக்கி மேலவாளாடி கிராமத்தார் புதுக்குடி சோனையில் பலகையைக்கொண்டு முட்டடப்பாய் அடைத்து 60 நாளிகை பாச்சிக்கொள்ளவேணும். ஆனால் மேல வாளாடி வாய்க்கால் மேடானதினால் ஜலம் தேங்கிப் போகவேண்டியதற்கு தாமிஷம் செல்லுமாகையால் அதற்காக $7\frac{1}{2}$ நாழிகை உபறியாய் சேர்த்து $67\frac{1}{2}$ நாழிகை ஷை கிராமத்தார் அந்தப்படி பாச்சிக்கொள்ளும்படியாகவும் புதுக்குடி கிராமத்தார் மேலெழுதியபடியே மேலவாளாடி வாய்க்கால் சோனையில் பலகையைக்கொண்டு முட்டடப்பாய் அடைத்து $22\frac{1}{2}$ நாழிகை ஜலம் பாச்சிக் கொள்ளும்படியாகவும், மத்தியஸ்தாள் தீர்மானித்திருக்கிறதாக நீர் எழுதிய 94-நெ. அர்ஜி வந்தது. அதுகாரியத்துக்கு அந்த தீர்மானம் சரியாயிருப்பதினாலே அந்தப்படிக்கு கல்லு சோனைகளை கட்டி முட்டடப்பாய் யடைத்து மேலெழுதிய நிபந்தனைப்படிக்கி யிரண்டு கிராமத்தாருக்கும் ஜலம் பாச்சிக்கொள்ளும்படி திட்டம் செய்து நடந்த ஸங்கதி அசூருக்கு ரிபோர்ட்டு செய்கிறதுமல்லாமல் இதற்கு விரோதமாய் எந்த கிராமத்தார் தடைசெய்கிறார்களோ அவர்களை தெண்டனைக்காக அசூருக்கு அனுப்பவும்.

1826-௵ டிஸம்பர்௴ 22௳,
மு. முசிரி.

No. 2.

1828-௵ அக்டோபர்௴ 30௳ யுள்ள 220-நெ.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தாருக்கு.

யென்னவென்றால் தொறக்குடி கிருமத்து யேறிக்கு ஜலம் வருகிறதற்காக தொண்டமானார் சீர்மை கிளிமங்கலம் கிராமத்து சரகத்தில் வாய்க்கால் வெட்டவேண்டிய ஸங்கதியைக்குறித்து ஷை கிராமத்தார் தகரார் பண்ணுமலிருக்க வேண்டியதற்காக றெசிடெண்டு துறையவர்களுக்கு லெட்டர் யெழுதி யிருந்ததின்பேரில் ஷை இலாகா சறகில் ஷை துரையவர்கள் பேரால் யெழுதின அர்ஜியை லெட்டருடனே ஷை துரையவர்கள் அனுப்பினதை பார்க்கும்போது தொறக்குடி கிராமத்துக்காகக் கிளிமங்கலம் கிராமத்து சரகத்தில் வாய்க்கால் வெட்டிக் கொள்ளலாமென்றும் இந்த யிலாகாதார் மனுஷாள் போய் வாய்க்கால் வெட்டினால் தடங்கல் செய்யாமலும் கூடயிருந்து வெட்டிவிக்கும்படியாயும் தன் இலாகாதார்களுக்கு உத்திரவு கொடுத்திருக்கிறதாக யெழுதி யிருக்கிறபடியினாலே முன்னுத்திரவுப்படி ஷை வாய்க்காலை வெட்டி வைத்து ஜாக்கிருதை செய்யவும்.

1828-௵ அக்டோபர்௴ 30௳,
மு. திருப்பட்டூர்.

No. 3.

1839-௵ நவம்பர்௴ 1௳ யுள்ள 370-நெ.

குளித்தலை தாலூகா தாசில்தாருக்கு தாக்கிது.

என்னவென்றால் ஷை தாலூகா முதலைப்பட்டி கிராமத்து யேறிக்கி ஜலம் வறப்பட்ட வறத்துவாரியை இனாம் சேப்பிளாப்பட்டி கிராமத்தார் 4 5 வருஷமாய் அடைத்துக் கொண்டுபோகிறதாக முஜமுதார் விசாரித்து வாங்கிய வாக்குமூலங்கள் சகிதமாய் எழுதிய 272 நெ. அர்ஜி 1, அந்த ஸங்கதி முன் தரியாபத்தாகி இருக்கிறதாக இனாம்தார் மனுஷன் கொடுத்த பிட்டிஷனின்பேரில் மருபடி நீர் எழுதிய 294-நெ. அர்ஜியில் முன் யிது சங்கதியைக்குறித்து விசாரணையாகி 1831-௵ மார்ச்சு௴ 12௳ 121-நெ. யெழுதி யிருக்கிறதாக கண்டிருக்கிற அர்ஜி 1, ஆக 2 அர்ஜியும் வந்தது.

ஷை அர்ஜிகளை பார்த்ததில் முன் மாஜி தாசில்தார் 1831-௵ த்தில் எழுதிய அர்ஜியிலடக்கமாயிருக்கிற நாட்டுக்கணக்கன் அர்ஜியிலே தானே 5, 6 வருஷமாய் இனாம் கிராமத்தான் வாரியை அடைத்ததாக கண்டிருக்கிறதும் தவிற அர்ஜியில் வாரி வழியாய் வறப்பட்ட தண்ணீர் சேப்பிளாப்பட்டி கிராமத்து யேறிக்கி வந்து ரொம்பி கடைவழியாய் முதலைப்பட்டி கிராமத்துக்கு வருகிறதென்றும் சேப்பிளாப்பட்டி கிராமத்து யேறியும் கலிங்கலும் வெகு நாளாயிருக்கிறதென்றும் கண்டிருக்கிறது.

இதனாலே பார்க்கும்போது வாரி ஜலம் இனாம் சேப்பிளாப்பட்டி கிராமத்து யேறிக்கி வந்து ரொம்பி கடைகால் வழியாய் முதலைப்பட்டி கிராமத்து யேறிக்கி தண்ணீர் வருகிற வழக்கமா யிருக்கிறதாக முன் அர்ஜியினாலே தெரியவருகிறபடியினாலே இதுவரையில் எவ்விதமாய் நடந்து வந்ததோ அந்தப்படிக்கு நடந்து வரும்படியாயும் மாமூலுக்கு விரோதமாய் நடக்காமல் இருக்கும்படியாயும் ஜாக்கிருதை செய்யவும்

1839-௵ நவம்பர்௴ 1௳,
மு. திருச்சினாப்பள்ளி.

No. 4.

1839-௵ டிசம்பர் ௴ 5௳ யுள்ள 841-நீ.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தாருக்கு.

என்னவென்றால் ஷை தாலூகா மணிகண்டம் கிராமத்து பெரிய குளத்துக்கு வரப்பட்ட வாரியை நாகமங்கலம் கிராமத்தார் அடைத்து ஜலம் கொண்டுபோகுறதினாலே மணிகண்டம் கிராமத்து குளத்துக்கு ஜலம் வராமல் குந்தக்கமாய் இருக்கிறதாய் ஷை கிராம மகாஜனம் நல்லய்யன் பிறுது குடுத்த ஸங்கதியைக்குறித்து நீர் விசாரணை பண்ணி தஸ்தவேஜுகள் ஸகிதமாய் எழுதிய 659-நீ. அர்ஜி வந்தது.

அதுகாரியத்துக்கு உம்முடைய அர்ஜி வகையறா தஸ்தவேஜுகள்னாலே பார்க்கும்போது ஷை வாரி ரொம்பவும் விஸ்தீரணமாயிருக்கிறதாகவும் அதில் நாகமங்கலம் கிராமத்தார் அணை போட்டு ஜலம் கொண்டுபோகுறது மாமூலாயிருக்கிறதாகவும் அப்படி மணிகண்டம் கிராமத்துக்கு மேற்கே மூணு நாழிகை வழி தூரத்தில் சொல்பமாய் அணை போட்டு ஜலம் கொண்டு போகுறதினாலே மணிகண்டம கிராமத்துக்கு யாதொரு குந்தகமுமில்லை யென்று காணப்படுகிறபடியினாலே உத்திரவு செய்கிறதாவது.

மேல் எழுதியபடி ஷை வாரியில் நாகமங்கலம் கிராமத்தார் அணை போட்டு ஜலம் கொண்டு போகுற விஷயத்தில் வெகுநாளா யிதுவரையில் நடந்து வந்த வழக்கப்படி நடக்கும்படியாயும் மாமூலுக்கு விரோதமாய் ஒன்றும் செய்யாமலிருக்கும்படியாயும மணிகண்டம் கிராமத்து யேறிக்கி தேவையான ஜலம் வறப்பட்டதை தடுக்காமல் இருக்கும்படியாயும் பந்தோபஸ்து செய்யவும். அறியவும்.

1839-௵ டிஸம்பர் ௴ 5௳, }
மு. திருச்சினாப்பள்ளி. }

No. 5.

1843-௵ ஜுலை ௴ 13௳ யுள்ள 258-நி.

முசிரி தாலூகா தாசில்தாருக்கு உத்திரவு.

என்னவென்றால் ஷை தாலூகா ஓரவந்தூர் கிராமத்துக்கு சேலம் ஜில்லா மொகவனூர் கிராமத்தார் தண்ணீர் விடாமல் குமுக்கப்படுத்திவருகிற விஷயத்தில் ஷை ஓரவந்தூர் கிராமத்தாருக்கு வெகுநாளாய் இருக்கப்பட்ட பிராது சங்கதி ரிப்போர்ட்டு உத்திரவுப்படிக்கி விசாரித்து பைசல் செய்யவேண்டியிருப்பதினாலே உமக்குத்திரவு செய்திருக்கிறதாவது.

ஷை ஓரவந்தூர் கிராமத்தாரிடத்தில் அவர்களுக்கிருக்கப்பட்ட பிறுது சங்கதியை விசாரித்து விவரமாய் ஒரு பிட்டிஷன் யெழுதி வாங்கிக்கோள்ளவேணும்.

அதில் ஷை ஓரவந்தூர் கிராமத்து நிலம் இவ்வளவென்றும் அந்த நிலத்துக்கு எந்தெந்த வாய்க்கால் ஜலம் எவ்விதமாய் பாய்ந்துவருகிற மாமூல்யென்றும் ஷை நஞ்சை நிலம் இன்னின்ன பக்கத்தில் இருக்கிறதென்றும் ஷை வாய்க்கால் வறப்பட்ட சாகத்து இன்ன கிராமத்தை சேர்ந்ததென்றும் மொகவனூர் கிராமத்தான் தண்ணீர் விடாமல் யெவ்விதமாய் குந்தகப்படுத்துகிறார்களென்றும் அதினாலே நேரிட்ட நஷ்டம் இன்னவென்றும் தபசீல்வார் விவரமும் அதில் கண்டிருக்கவேணும்.

அந்த பிட்டிஷனில் ஷை ஓரவந்தூர் கிராமத்து துரோபஸ்து மகா ஜனகுடிகளும் கையெழுத்து வைத்துக்கொடுக்கவேணும். அந்தப்படி பிட்டிஷன் யெழுதிவாங்கிக்கொண்டு அதை அகுருக்கு அனுப்பவும்.

அந்தப்படி பிட்டிஷன் வாங்கியனுப்ப ஒருவேளை சரிபபடாமல் இருக்குமேயாகில் ஷை குடிகள் அவர்கள் தறப்பில் ஒரு வக்கீல் நேமிக்கவேணும்.

அந்த வக்கீல்பேரால் யெழுதிக்கொடுக்கப்பட்ட வக்காலத்து நாமாவில் துரோபஸ்து மகாஜனம் குடிகளும் கையெழுத்து வைத்திருக்கவேணும்.

அந்தப்படி வக்காலத்துபெத்து வரப்பட்ட வக்கீலிடத்தில் மேலேகண்ட விவரப்படிக்கி பிறுது யெழுதிவாங்கிக்கொண்டு அந்தப்பிறுதை அகுருக்கு அனுப்பவும.

1843-௵ ஜுலை ௴ 13௳, } (ஒப்பம்.) எ. மு. கிஷ்ணராவ் அ. ஜ.
மு. திருச்சினாப்பள்ளி. } ,, ப. ம. ஸ்ரீனிவாசராவ் அ. ஜ.

(Seal.) ஆன்சலோ துரையவர்கள் ஸயன்முகர்.

No. 6.

1846-௵ டிசம்பர் ௴ 21௳ யுள்ள 1354-நி.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

ஷை தாலூகா மாங்காணம் கிராமத்துயேறிக்கி ஜலம் வறப்பட்ட வறத்துவாரியில் தஞ்சாவூர் சீமை சொறக்குடிப்பட்டி கடையக்குடி கிராமத்தான நூதனமாய் கவுர்கள்வெட்டி ஜலம் கொண்டுபோகுறதினாலே மாங்காணம்யேறிக்கி ஜலம் வராமல் குந்தகப்பட்டிருப்பதாய் நீர் செப்டம்பர் ௴ 30௳ அகுருக்கு அர்ஜி யெழுதினதின்பேரில் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் துரையவர்களுக்கு லெட்டர் யெழுதியிருந்ததில் இஞ்சினீர் துரையவர்கள் ஷை ஜாகாவைப்பார்த்து மாங்காணம் கிராமத்துயேறிக்கி ஜலம்வரப்பட்ட வரத்து வாரியில் சொறக்குடிபட்டி வகையறா கிரமத்தார்கவுர்கள் வெட்டி ஜலம்கொண்டுபோகிறது அநியாயமென்றும் அதினாலே மாங்காணம்யேரிக்கி ஜலம் வராமலிருக்கிறதும் நிஜம்தானென்றும் ஷை கவுறுகள் வெட்டியிருக்கிறதை அடைத்து கனாமஜபூது செய்ய இஷ்டிமேண்டு பார்த்திருக்கிறதாகவும சொறக்குடிபட்டி வகையறா கிரமத்தார் மாமூலாயிருக்கிற கவுர்கள் வழியாய் ஜலம்கொண்டுபோகவேணுமென்றும் தெரியப்படுத்தியிருக்கிறபடி மராமத்துசெய்யவேண்டியதைககுறித்து திருவாதி தாலூகா தாசில்தாருக்கு உத்திரவு அனுப்பியிருக்கிறதாக ஜவாபு லெட்டர் யெழுதியிருக்கிறபடியினாலே அந்த லெட்டருடன் வந்த ஷை உத்திரவுக்கு நகலுக்கு நகலும் பிளானும் இத்துடன் அனுப்பியிருக்கிறது.

ஷை மராமத்து செய்யப்பட்டது திருவாதி தாலூகாவில் சேர்ந்ததாயிருந்தபோதிலும் வேலை நடக்க வேண்டிய விவரமெல்லாம் உம்முடைய தாலூகா அரசங்குடி வட்டம் கார்கூனிடத்தில் தெரியப்படுத்தியிருக்கிறதாக இஞ்சினீர் துரையவர்களுடைய லெட்டரில் கண்டிருப்பதினாலே வேலை நடக்கும்போது விவரம்தெரியவேண்டியிருந்தால் ஷை கார்கூன்போய் தெரியப்படுத்தி இஞ்சினீர் துரையவர்கள் சொல்லியிருக்கிற விவரப்பிரகாரம் சரியாய் வேலை நடப்பிவிக்கும்படியாய் ஒத்தாசைசெய்யச்சொல்லி கார்கூனுக்கு தாக்கீது அனுப்பி திட்டம் செய்யவும். ஷை பிளானை மறுபடி வாப்ஸ் அவருக்கு அனுப்பவும். இனி சொறக்குடிப்பட்டி வகையரா கிராமத்தார் யாதொரு துருகிருதம் செய்யாமலிருக்கும்படியாயும் மேலகண்ட தீர்மானத்துக்கு விரோதமாய் யெப்பவும் நடவாமல் யிருக்கும்படியாய் திருஷ்டிவைத்து பார்த்துவரும்படி கார்கூனுக்கு தாக்கீது அனுப்பி திட்டம் செய்யவும்.

1846-௵ டிசம்பர்௴ 21௳.
மு. திருச்சினாப்பள்ளி.

No. 7

1853-௵ நவம்பர்௴ 15௳ யுள்ள 1357.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தாருக்கு.

நவாப் இஸாமல்முலுக்கு பகதர் இலாகா அளுந்தூர் கிராமத்துயேறிக்கி ஜலம் வரப்பட்டவரத்துவாரியை மாமூலுக்கு விரோதமாய் செவந்தியாண்டி அம்பலகாரன் அடைத்திருக்கிறதாக முன் ஒருதபா தெரியப்படுத்திக்கொண்டதின்பேரில் அந்தப்படியாரும் அடைக்காமல் பந்தோபஸ்து செய்யும்படி உத்திரவாயிருக்க மறுபடியும் ஷை செவந்தியாண்டி அம்பலகாறன் அடைத்திருப்பதாயும் அதினாலே ஷை யேறிக்கி ஜலம்வரக்குந்தகப்பட்டு சாகுபடியாக அரக்கத்தாயிருக்கிறதாயும் ஷை வாரியை யாரும் குறுக்கே அடைக்காமல் இருக்கும்படி உத்திரவாகவேணுமென்றும் நவாப்சாயப் அவர்களுடைய யேஜண்டுகளின் நவாஸ்கான பகதர் அவருக்கு நாளது௴ 12௳ யுள்ள லெட்டர் யெழுதியிருக்கிறார்.

இது விஷயமாய் ஷை பேர் முன் ஒருதபா யெழுதிய லெட்டரின்பேரில் உமக்கு அனுப்பியிருந்த உத்திரவுக்காக நீர் யெழுதிய போன 52-௵ நவம்பர்௴ 8௳ யுள்ள 780-நி. அர்ஜியில் ஷை வரத்துவாரிகளை ஒருவரும் குறுக்கே அடைக்கவில்லையென்றும் இனிமேலும் சர்க்கார் உத்திரவுக்கு மீறியாரும் அடைக்காமல் இருக்கும்படி ஷை கிராமத்தாருக்கு தாக்கீது செய்திருக்கிறதாயும் சில விவரம் கண்டிருக்கிறீர் அல்லவா?

அப்படியிருக்க ஷை செவந்தியாண்டியம்பலகாறன் யென்பவன் மறுபடியும் ஷை வரத்துவாரியை உத்திரவுக்கு விரோதமாய் குறுக்கே அடைக்கவேண்டியதென்ன. தகுந்த உத்தியோகஸ்தனைக்கொண்டு கண் பார்வையிடும்படி செய்து அப்படிக்கி அடைத்திருக்கிறது நிஜமாயிருந்தால் உத்திரவுக்கு விரோதமாய் ஷை வாரியை அடைத்த தப்பிதத்துக்காக ஷை செவந்தியாண்டியம்பலகாறனிடத்தில் ரூ 1-அபராதம் வசூல்செய்து ஷிவாய் ஜமாதாக்கல் செய்கிறதுமல்லாமல் குறுக்கே அடைத்திருக்கிற கரையை உடனே வாபாய் எடுப்பிவித்துப்போட்டு தாராளமாய் ஜலம் யேறிக்குப்போகும்படி திட்டம்செய்து அது சங்கதி அவருக்கு ஜாஹெர் செய்கிறதும் தவிர இனி அந்த வாரியை யாராவது அடைத்தால் பாரிசிட்சை செய்யப்படுமென்று கண்டிப்பாய் தாக்கீதுசெய்து திட்டம்செய்யவும்.

1853-௵ நவம்பர்௴ 15௳,
மு. திருச்சினாப்பள்ளி.

(Signed.) J. BIRD.
Ag. Collector.

No. 8.

1853-௵ நவம்பர்௴ 28௳ யுள்ள 572 நி.

துறையூர் தாலூகா தாசில் கிஷ்ணராவுக்கு.

ஷை தாலூகா விசுவம்மாள் சமுத்திரம் கிராமத்து மகாஜனம் வேம்பய்யன் வகையராபேர்கள் தங்கள் கிராமத்துக்கும் பாலகிஷ்ணம்பட்டி கிராமத்துக்கும் தண்ணீர் தகராறு விஷயத்தில் குடுத்த பிட்டிஷனைக் குறித்தும் பாலகிஷணம்பட்டி மகா ஜனம் குப்புசாமி சாஸ்திரி வகையராப்பேர் தங்கள் கிராமத்துக்கு பாச்சலான அய்யாறு ஒடப்புப்போனதை அந்த ஒடப்புவாயி விசுவமமாள் சமுத்திரம் கிராமத்து மகா ஜனங்கள் தங்கள் கிராமத்துக்கு பாச்சலாறு என்று ஒடப்பு அடைக்கவொட்டாமல் தடங்கல் படுத்துகிறதாயி கொடுத்த பிட்டிஷனைக்குறித்தும் யெட் அசிஸ்டாண்டு கலெக்டர் துரையவர்களுடைய உத்திரவுப்படிக்கி விசாரணைசெய்து நீர் யெழுதிய போன அக்டோபர்௴ 10௳ யுள்ள 166-வது நி. அர்ஜியினபோல் பிசல்காத்து மழையினால் சம்பவித்திருக்கிற ஒடப்புக்கு முன ஷை ஜாகா யெவ்வித ஸ்திதியில் இருந்ததோ அந்தப்படி வைத்து ஆத்தில் ஜாஸ்திபாய் ஒடப்புயெடுத்துப்போகப்பட்டதை உபய கிராமத்து ஆள்களைக் கொண்டு அடைத்து சீராய் ஜலம்போகும்படி ஜாக்கிறதை செய்யச்சொல்லி போன அக்டோபர்௴ 29௳ யுள்ள 152-நி. உத்திரவு ஷை துரையவர்களால் அனுப்பப்பட்டிருக்கிறதல்லவா? அந்தப்படி நிறைவேத்தியாச்சுதா அது விவரம் உடனே அறிக்கை செய்யவும். இன்னம் அடைக்கப்படாமலிருந்தால் உபய கிராமத்து சர்க்கார் கணக்காகளையும் கூடவைத்துக்கொண்டும் உபய கிராமத்துஆள்களைக்கொண்டும் ஷை உத்திரவில் கண்டிருக்கிறபடி அந்த ஒடப்பு ஜாகா ஷை பிசல்காத்து மழைக்கு முன்னே எவ்விதமாயிருந்ததோ அந்த மேரைக்கு யிருக்கும்படியாய் அடைப்பிவித்து அது சங்கதி உடனே அவருக்கு ஜாஹேர் செய்யவும். ஷை இரண்டு கிராமத்து கணக்காகளுடைய அசல் வாக்குமூலங்களை உமமுடைய பார்வைக்காக இத்துடனே அனுப்பியிருக்கிறது. அதுகளை இதற்காக நீர் யெழுதும் ஜவாப் அர்ஜியுடன வாப்ஸ் அனுப்பிவிக்கவும்.

1853-௵ நவம்பர்௴ 28௳,
மு. திருச்சினாப்பள்ளி.

(ஒப்பம்.) மு. வெங்குவய்யன் ஜீ. ஐ.

No. 9.

1854-௵ நவம்பர்௴ 25௳ யுள்ள 512-நி.

துறையூர் தாலூகா தாசில் கிஷ்ணருவுக்கு.

விசுவம்மாள் சமுத்திரம் கிராமத்து மகாஜனம் சுப்பய்யன் என்பவன் தங்கள் கிராமத்துக்கும் பாலகிஷ்ணம்பட்டி கிராமத்துக்கும் தகரார் நேரிட்டிருந்த அய்யாத்துக்குறம்பு விஷயத்தில் பிறந்திருக்கிற உத்திரவுப்படி பேஷ்கார் சரியாய் நிறைவேத்தாததுனாலே தங்கள் கிராமத்துக்கு ஜலம் குந்தகமாயிருக்கிறதாக அசூரில் குடுத்த பிட்டிஷனைக்குறித்து முன் உத்திரவுகளின் தகவல்களைக்கண்டு சில விவரங்களாய் நீர் யெழுதிய நாளது௴ 19௳யுள்ள 303-நி. அர்ஜி வர்தது.

இதைப்பத்தி முன் நடந்திருக்கிற நடவடிக்கைகளையும் ஷை ஜாகாவைக்குறித்து உபய கிருமத்தாருக்கும் இப்பால் நேரிட்ட சச்சரவைப்பத்தி விசுவம்மாள் சமுத்திரம கிருமத்து மகாஜனம் சுப்பய்யனுக்கு ரூ 8 அபராதம் விதித்து யே. அ. மேஜிஸ்திரேட் துரையவர்களால் ஆகஸ்டு௴ 26௳யுள்ள 71-நி-ல் அனுப்பப்பட்டிருக்கிற தாக்கிதையும் நாம மருபடி செவ்வையாய் பார்வையிட்டதில் இது விஷயமாய் போன 53-௵ நவம்பர்௴ 28௳யில் நம்மால் பைசலான உத்திரவு அனுப்பப்பட்டு அந்தப்பிரகாறம் நிரவேறியும இருப்பதில் அதற்கு விரோதமாய் இப்போது வேறெயாதொரு உத்திரவும் செய்யவேண்டிய நிமித்தியம் இல்லாததுனாலே ஷை ஒடப்பு ஜாகா இப்போதுயிருக்கிறஸ்திதிப்படியே இருக்கவேணுமேயொழிய அதைக்குறித்து வேறே யாதொரு உத்திரவும் செய்யத்தகசதில்லை.

1854-௵ நவம்பர்௴ 25௳,
மு. திருச்சினாப்பள்ளி.

(ஒப்பம்.) மு. கிஷ்ணய்யன். ஜ.

No. 10.

1856-௵ பிப்ரவரி௴ 13௳ யுள்ள 208-நி.

குளித்தலை தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

இடயப்பட்டி கிருமத்துக்குடி முத்துநாயக்கன் என்பவன் புதுக்கோட்டை யிலாகா பெருமாநாடு தாலூகா சத்திரம் ஆலத்தூர் குறிச்சிப்பட்டி இந்த கிராமத்துக்குமகள் ஆலத்தூர் குளத்துக்கு ஜலம வரப்பட்ட காவாயை அடைத்து தன்னுடைய வணணவயல் வெளியங்குடி வறப்போறமாயி புதுவாய்க்கால் வெட்டியிருக்கிறதில் தன்னுடைய காணி 60-நிலத்தில் மணலை யெடுகலடித்து சேதம் நேரிடுகிறதாயிருக்கிறதாகவும் அதைக்குறித்து உமக்கு தெரியப்படுத்திக்கொண்டதில் நீரும் பெருமாநாடு தாசில்தாரும் போய்ப்பார்த்து மாமூல காவாயை துத்துவிடும்படி உத்திரவு கொடுத்திருந்தும் இது வரையில் தூக்காமலிருக்கிறதாகவும் இன்னம சிலவிவரம்கண்டு உசூரில் கொடுத்த பிட்டிஷனை இத்துடனே அனுப்பியிருக்கிறது.

அதில்கண்டிருக்கிற மேறைக்கி உபய தாசில்தார்களுமாய் பார்த்து செய்திருக்கிற தீர்மானப்பிறகாரம் யேன் இதுவரை நிறவேறயில்லை.

இதுசங்கதியைக்குறித்து நீர் மருபடியும் ஷை பெருமாநாடு தாசில்தாருக்கு யெழுதி முன தீர்மானப்படி புது காவாயை அடைத்துப்போடும்படிக்கும யெதாப்பிரகாறம் பழய காவாய் வழியாய் ஜலம்கொண்டுபோகும்படிக்கும் உடனே திட்டம்செய்து அந்தபடி அமுல் நிறவேறுன சங்கதிகண்டு அசூருக்குஜாஹேர் செய்யவும்.

1856-௵ பிப்ரவரி௴ 13௳,
முகாம், விராலிமலை.

No. 11,

1856-௵த்திய பிப்ரவரி௴ 27௳ யுள்ள 274நி.

கோனாடு தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

அளுந்தூர் மஜரு கும்பகுறிச்சி கிருமத்துக்குடி நாகநாடாவான் தான் சாகுபடிசெய்கிற பூலாங்குளத்துக்கு ஜலம் வறப்பட்ட வறத்துவாரியை குப்பாமுதலி வகையருப்பேர்கள் அடைத்து புதுகுளம் உண்டுபண்ணுகிறதாய் அசூரில் குடுத்த பிட்டிஷன் சங்கதியைக்குறித்து நீர் விசாரணை செய்து ஷை ஜாகாவைப் போய் பார்வையிட்டதில் ஷை பிட்டிஷனருடைய பூலாங்குளத்துக்கு அமேஷாவாய் போய்க்கொண்டிருந்த இரண்டுவாரிகளையும் யிறங்குடி செவள்குளத்து கடைப்போக்கையும் குருக்கை அடைத்து ஷை பூலான்குளத்துவாயில் 536-கிஜ தூரத்தில் தென்மேற்கில் இருக்கிற ஷை செவள்குளம் யேந்தலை ஒட்டினாப்போல் சுமார் ஒரு கெஜ ஒயரம் அகலத்தில் 448-கிஜ நிகளம் தென்வடலில் சுவல்பமாயி ஷை குப்பா முதலி கரைபோட்டிருக்கிறதாகவும் மேலேகண்ட வாரிகளைத்தவிற சுத்துக்கால்களில் இருக்கிற மேடுக்காட்டிலிருந்து ஷை பூலாங்குளத்துக்கு 4, 5-ஜாகாவில் ஜலம் வருகிற காவாய்களெல்லாம சுவல்ப அறச்சோடிகளே அல்லாது பலமான வறத்துவாரிகள் அல்லவென்றும் அதுகளிலும் இப்போது அடைத்திருக்கிற வாரிகளிலும் தாராளமாய் ஜலம்வந்து நெரம்பியும ஷை பூலாங்குளத்தின் ஆஜருவில் நஞ்சைகாணி-10 அமேஷாவாய் சாகுபடியாகிக்கொண்டு வந்திருக்க அதில் சில வாறிகளின் ஜலத்தைத்தேக்கி 25-காணி ஜாஸ்தி சாகுபடி செய்வதுபோல குப்பாமுதலி சொல்லுவது வீண்காரியமாயிருக்கிறதாகவும் 1855-௵ மே௴ 18௳யில் பிறந்திருக்கிற இஸ்தியார் நிபந்தனைக்கி விரோதமாயும் உத்திரவில்லாமலும் வாறியை அடைத்து ஷை குப்பாமுதலி போட்டிருக்கிற கறையை யெடுத்து செவள்குளத்து கடைப்போக்கு உள்பட ஷை வாரிகளை திறந்துவிட்டு பூலான்குளத்துக்கு வழக்கப்பிறகாறம் ஜலம் போகும்படி செய்யாதவரையில் பூலாங்குளத்துக்கு ஜலம் வரத்து மட்டுப்பட்டு மாமூல் நஞ்சை சாகுபடிக்கு குந்தகம் நேரிடும்படியாய் இருக்கிறதாகவும இப்படிக்கி செய்தது ஷை குப்பாமுதலிபேரில் தப்பிதமாயிருப்பதினாலே இதைக்குறித்த உத்திரவு வருகிறபடி நடந்துகொள்ளுகிறதாகவும் இன்னம் சில விவரங்கண்டு பிளான் வகையருதஸ்தாவேசுகளுடனே நீர் யெழுதிய நாளது௴ 22௳யுள்ள 139நி அர்ஜி வந்தது.

அது காரியத்துக்கு ஷை பிள்ளையும் அர்ஜி வகையரு தஸ்தாவேசுகளையும் பார்வையிட்டதில் பிளானில்கண்டபடிக்கி பிடிஷனருடைய பூலாங்குளத்துக்கு மாமூலாய் வந்துகொண்டிருந்த இரண்டுவாரிகளையும் ஷை குசவன குளத்து கடைப்போக்கு ஜலத்தையும் ஷை குப்பாமுதலி நூதனமாய் கறைபோட்டு அடைத்து தேக்கியிருக்கிறதாகவும் அதுனாலே ஷை பூலாங்குளத்துக்கு ஜலம் வற குந்தகமாயிருக்கிறதாயும் ஷை அளுந்தூர் கிருமக்குடிகள் முதலானபேர்கள் கொடுத்திருக்கிற மகசுறுநாமாவில் வெயக்தமாய் கண்டெழுதப்பட்டிருக்கிறதுமல்லாமல் ஷை யிறங்குடி பட்டாதார் மாறமரெட்டி யென்பவனும் அதை அனுசரித்து ஷை வாரியை அடைக்கப்பட்டிருக்கிறதாகவும் அதுனாலே பூலாங்குளத்துக்கு ஜலம்வர குந்தகமென்றும் அவன் வாக்குமூலத்தில சொல்லுகிறான். பேஷ்கார் எழுதிய ரிப்போர்ட்டில் ஷை பூலாங்குளத்துக்கு ஜலம் வறப்பட்டபடி பிறதானமான இரண்டுவாரிகளையும் குசவன்குளம் கடைப்போக்கு ஜலத்தையும் அடைத்து கறைபோட்டு குந்தகக்கப்படுத்திருக்கிறதாகவே வெகு தெளிவாய் கண்டிருக்கிறான் ஷை கிருமகர்ணனும் அதற்கு அனுசரித்தே ஷை செவள்குளம் கடைபோக்கையும மேடு காடு இரண்டு வாரியையும் கறைபோட்டு மறிக்கப்பட்டிருக்கிறதாக சொல்லுகிறதும் தவிற பட்டாதார் தொப்பிரெட்டி குடி சவுரிமுத்துடையான் வகையறாட்பேர்களும் ஷை புதுகறைக்குள் தேங்கியிருக்கிற ஷை வாறிகளினுடையவும் செவள்குளத்து கடைபோக்கினுடையவும் ஜலம் ஷை பூலாங்குளத்துக்கு போயிக்கொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்கள் ஷை கிரும பட்டாதார் நல்லமனுயக்கன் ஷை வாரிகள் இருந்ததில்லையென்று சொன்னபோதிலும ஷை குசவனகுளத்து கடைபோக்கி ஜலமும் புதுகறை போடுகிறதற்குமுன் அவடம் மேடுகாடுகளில் வருகிற ஜலமும் ஷை பூலாங்குளத்துக்கே போய்க்கொண்டிருப்பதாகவே சொல்லுகிறான். ஷை எதிரி குப்பமுதலி உடமிடம கொடுத்தபிருதிலும் வாக்குமூலத்திலும் தன்னுடைய கிறய சாசனத்துக்குள்பட்ட நிலத்தில் தன்னுடைய குசவன குளத்தைஒட்டி கறைவளர்த்து போட்டிருக்கிறதாக சொன்னபோதிலும் ஷை குசவனகுளம் கழிவுஜலம் ஷை பூலாங்குளத்துக்கு போயிக்கொண்டிருந்ததாகவே வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறான். ஷை குப்பமுதலியினுடைய கிறயசாசனத்தில் காணி குழி காணமல் மொத்தமாய் நாங்கெல்லை மட்டும் கண்டிருக்கிறதுமல்லாமல் மேலேகண்ட சதுரத்தில் காணி-120 இருக்கிறதாகவும் அதில் நஞ்சை காணி-3 சொச்சமும், புஞ்சை-7 சொச்சமும சாகுபடியென்றும் மைத்த நிலம் நெயகிலும் அனுதி தறிசுயென்றும் கிருமகணக்கன் வாக்குமூலத்தில் சொல்லுகிறான். அப்படிக்கு அனுதி தறிசாய் ஒருவருக்கும பாத்தியமில்லாமலிருக்கிறதை விற்கவும அதை வாங்கவும் ஒரு பாத்தியம் காணபடவில்லை. ஒருநாளும் சாகுபடியில்லாத அனுதி தறிசு கிறயத்துக்கு வாங்கினதாக சொல்லுவது ஒவ்வாதகாரியமாயிருக்கிறது. அது யெப்படிக்காயிருந்தபோதிலும் அமேஷாவாய் ஒரு குளத்துக்கு போசப்பட்ட வாறி முதலானதை தடைசெய்ய யாருக்கும பாத்தியமில்லை. முடிவில் எல்லா தஸ்தவேஜுகளினாலேயும் பிளானில் கண்டப்பிறகாரம் ஷை பூலாங்குளத்துக்கு மாமூலாய் வந்துகொண்டிருந்த பிறதானமான இரண்டுவாறிகளையும் செவள்குளம் கடைபோக்கையும் அடைத்து ஷை குப்பாமுதலி புதுக்கறை போட்டிருக்கிறதாக பறிஷ்காரமாய் தெரியவருகிறதுமல்லாமல் நீர் போய் பார்வையிட்டதிலும அந்தப்பிறகாரம் அடைத்திருக்கிறதாயும் அதுனாலே பூலாங்குளத்துக்கு ஜலம் வற குந்தகமாயிருக்கிறதாயும் உம்முடைய அர்ஜியில் தெளிவாய் சொல்லியிருக்கிறீர். இத்திய திகாரணங்களினாலே மாமூலாய் ஷை பூலாங்குளத்துக்கு போயிக்கொண்டிருந்ததாக வெக்தமாய் தெறியவந்திருக்கிற ஷை வாரிகளையும செவள்குளம் கடைபோக்கையும் ஷை குப்பாமுதலி நூதனமாய் கறைபோட்டு அடைத்திருக்கிறது மிகவும் அக்கிறமமாயும் 55௵ மேமீ 18௳யுள்ள இன்தியார் நிபந்தனைக்கு நேர்விரோதமாயும் லோகவழக்கத்துக்கு ஒவ்வாத காரியமாயும் இருக்கிறபடியினாலே நீர் இந்த தாக்கீது கண்டவுடனே உம்முடைய தாலூகா டபேதார் பேருல் வாரண்டு கொடுத்தனுப்பிவித்து ஷை பூலாங்குளத்துக்கு மாமூலாய் வந்துகொண்டிருந்த பிளானில கண்ட ஷை இரண்டு வாரியையும் செவள்குளம் கடைபோக்கையும அடைத்துப்போட்டிருக்கிற கறையை சாப்பாய் திறந்துவிட்டு வாறிகளினுடையவும் கடப்போக்குனுடையவும் ஜலம் மாமூல்படிக்கு ஷை பூலாங்குளத்துக்கு முன் ஒப்பந்தம் தாராளமாய் போய்க்கொண்டிருக்கும் படி திட்டம்செய்து அந்தப்பிறகாரம அமுல் நிறவேத்தின சங்கதிகண்டு சீக்கிறம் அசூருக்கு அறிக்கை செய்கிறதுமல்லாமல் இனி ஷை வாரிமுதலானதில் கைவைத்து யாதொரு காறியமும் செய்யக்கூடாதென்றும் மருபடியும் பிரவேசித்த யாதேனும் செய்ததாக தெரியவந்தால் பாரி தண்டனை செய்யப்படுமென்றும் ஷை குப்பா முதலிக்கு கண்டிப்பாய் தாக்கீதுசெய்து திட்டம் செய்யவும்.

1856௵ பிப்ரவரி௴ 27௳ }
திருச்சிராப்பள்ளி }

(ஒப்பம) மு. கி. வெங்குவய்யன்

தி. கு.

No. 12.

1856௵ மார்ச்சு௴ 1௳யுள்ள 291 நீ.

கோனாடு தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

அளுந்தூர் மஜரா குப்பகுறிச்சியில் நாகநாடாவான் சாகுபடி செய்து வரப்பட்ட பூலாங்குளத்துக்கு மாமூலாய் வந்துகொண்டிருந்த இரண்டுவாரிகளையும் குசவன்குளத்து கடப்போக்கு ஜலத்தையும் 1855௵ மேமீ 18௳யுள்ள இன்தியார் நிபந்தனைக்கு நேர் விரோதமாய் குப்பாமுதலி அடைத்துப்போட்டிருக்கிற கறையை தூர்த்துவிட்டு முன ஒப்பந்தம் தாராளமாய் ஜலம் போயிக்கொண்டிருக்கும்படி செய்து அறிக்கைசெய்யும் படி உசூர் உத்திரவு வந்திருக்கிறதாகவும் ஷை குப்பாமுதலி உம்மையும் பேஷ்கார் நாகசாமியையும் பிரதிவாதிகளில் சேர்த்து ஷை கறையை வெட்டாதிருக்கவேணுமென்று கோனாடு தாலூகா முன்சிப்கோர்ட்டு நாளது வருஷம் 153-நெம்பரில் செய்திருக்கிற வியாச்சியத்திற்காக ஆனைவர் குடுக்கும்படியாகவும ஷை நெம்பரை பைசலாகிறவரை ஷை கறையில் பிறவேசிக்காதிருக்கும்படிக்கும் ஷை கோர்ட்டிலிருந்து உம்மிடத்துக்குவந்த நோட்டீஸ் இன்தியார்கட்டளை இந்த 3-க்கும நகல் அனுப்பியிருக்கிறதாகவும் உசூர் உத்திரவு பிறகாரம் நிறைவேத்துகிறதற்கும் அலலது நிறுத்திவைக்கிறதற்கும ஆனவர் கொடுத்து வழக்காடவேண்டியதற்கும் உத்திரவு தெரியவேணுமென்றும் சில விவரம் கண்டு நீர் எழுதிய நாளது வருஷம் பிப்ரவரி௴ 23௳யுள்ள 150-நீ அர்ஜி வந்தது.

அது காரியத்துக்கு ஷை பூலாங்குளத்துக்கு மாமூலாய் போய்க்கொண்டிருந்த ஷை வாரிகளையும் குசவன்குள கடப்போக்கையும் ஷை குப்பாமுதலி அடைத்திருப்பது போர்டாருடைய உத்திரவுப்பிரகாரம் நாம் பிறசித்தப்படுத்தியிருக்கிற 1855வருஷம் மேமீ 18உயுள்ள இஸ்தியாருக்கு நேர் விரோதமாயும் லோக வழக்கத்துக்கு ஒவ்வாத காரியமாயும் இருக்கிறபடியினாலே ஷை குப்பாமுதலியினால் நூதனமாக அக்கிரமமாயி அடைத்துப்போட்டிருக்கிற கரையை துறந்துவிட்டு ஷை வாரிகளினுடையவும் கடப்போக்கினுடையவும் ஜலம் வழக்கப்பிரகாரம் ஷை பூலாங்குளத்துக்கு போயிக்கொண்டிருக்கும்படி திட்டம்செய்து அறிவிக்கும்படியாக நாம உத்திரவு அனுப்பியிருக்கிறது வெகு நியாயமானதாயிருக்கிறது. நம்முடைய உத்திரவுப்பிறகாரம் நிறைவேத்தவேண்டியது உமக்கு முக்கியமான காரியமானதினாலேயும் இந்த தண்ணீர் தகரார் விஷயமாய் அனுப்பப்பட்டிருக்கிற நம்முடைய உத்திரவை நிறைவேத்துகிறதில் தடைசெய்ய முனசீப்தாருக்கு யெவ்வளவும் அதிகாரமில்லாததினாலேயும் நீர் இந்த தாக்கிது கண்டவுடனே வீண் முகாந்திரத்தை முன்னிடாமல் முன் உத்திரவுப்பிறகாரம் அமுல் நிறைவேத்தி அதுவிவரம் அகுருக்கு அர்சகைசெய்யவும்.

நம்முடைய உத்திரவுப்படிக்கி நடக்கப்பட்ட உம்மையும் உமக்குள் இருக்கிற பேஷக்காரரையும் பிரதிவாதிகளில் சேர்த்தது ஒவ்வாதவும் நிமித்தியமில்லாதவுமான காரியமாயிருப்பதினாலே ஷை நெம்பர் வழக்குக்கு நீர் போய் ஆஜராகவேண்டியதுமில்லை. வியாச்சியம் ஆடவேண்டியதுமில்லை அறியவும்.

1856வருஷம் மார்ச்சிமீ 1உ.

மு. திருச்சினாப்பள்ளி.

No 13.

1856–வருஷம் சூன்மீ 25உயுள்ள 782-நீ.

கோனாடு தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

வேளூர் கிருமத்து பெரியகுளத்துக்கு ஜலம் வறப்பட்ட வறத்துவாரியை புதுக்கோட்டை இலாகா பெருமாநாடு தாலூகா விராலிமலை ருமன் வகையறுப்பேர்கள் அடைத்து குளங்கள் உண்டுபண்ணியிருக்கிறதினாலே ஷை வேளூர் பெரியகுளத்துக்கு ஜலம் வர குந்தகமாயிருக்கிறதைக்குறித்து உத்திரவு பிறகாரம் நீர் ஷை இலாகா பெருமாநாடு தாலூகா டிப்டி தாசில்தாருடன்போய் ஷை ஜாகாவை பார்வையிட்டு விசாரணை செய்ததில் பொம்மா நாயக்கன் வகையறு 7-பேர்கள் வறத்து வாறி முதலானதை அடைத்து 6-ஜாகாவில் கொளமும் யேந்தலும் கட்டுக்கரையும் இப்பால் நூதனமாக போட்டிருக்கிறதாகவும் ஷை 7-பேர் வழிகளில் ஆஜரான கொண்டம நாயக்கன வகையறு 4-பேர்கள் ஷை குளம் வகையறு நூதனமாய போட்டதாயும் முன் இருந்ததில்லையென்றும் ஒப்புக்கொண்டு வாக்குமூலம் யெழுதிவைத்திருக்கிறதாயும் அதுகளில் சிலது 3-வருஷமாயும் சிலது ஒரு வருஷமாயும் சிலது 9. 6-மீ காலமாயும் போட்டிருப்பதாக சாட்சிகளால் ருசுவாயிருக்கிறதாயும் அதுகளை சாப்பாட் யெடுக்காதவரையில் ஷை வேளூர் யேறிக்கி ஜலம் வற யேதுமில்லையென்றும் இன்னும் சில விவரம்கண்டு பிளான் வகையறு தஸ்தவேசுகளுடன் நீர் எழுதிய நாளதுமீ 21உயுள்ள 477-நீ அர்ஜி வந்தது.

அது காரியத்துக்கு ஷை அர்ஜி வகையறு தஸ்தவேசுகளை பார்வையிட்டதில் யெந்த கொண்டமநாயக்கன் வகையருப்பேர்கள் மாமூல் வாரியை தடுத்து தாங்கள் நூதனமாய் குளம் யேந்தல் முதலானதை உண்டுபண்ணியிருக்கிறதாக ஒப்புக்கொள்ளுகிறார்களோ அவர்களை அப்படிக்கி நூதனமாயும் மாமூல் யேறிக்கி ஜலம் வற குந்தகமாயும் போட்டிருக்கிற ஷை கரைகளை யெடுத்துப்போட உங்களுக்கென்ன ஆட்சேபமென்றும் அதை உடனே யெடுத்துப்போடுகிறீர்களாவென்றும் சவால்செய்து அதற்காக அவர்கள் சொல்லும் ஜவாப்பைக்கேட்டு யெழுதி வாங்கவேண்டியது உம்முடன் கூடவந்து பார்வையிட்ட ஷை பெருமாநாடு தாலூகா டிப்டி தாசில்தார் ஷை கொண்டமநாயக்கன் வகையறுப்பேர்களை நூதனமாய் கரை போட்டு குந்தகப்படுத்தியிருக்கிறது பேஜாரான காரியமென்று ஒப்புக்கொண்டு ஒப்புக்கொண்டிருக்கிறதற்காக அவரிடம் எழுத்துமூலமான யாதாஸ்து பெத்துக்கொள்ளவேண்டியதும் முக்கியமான காரியமாயிருக்க அவ்விதமாய் நீர் யாதொன்றும் செய்யவில்லையென்று காணப்படுகிறது.

இப்படிப்பட்ட அபூர்ணமான உம்முடைய ரிப்போர்ட்டின்பேரில் யென்னமாய் பைசல் உத்திரவு செய்யக்கூடும் ஆகையால் உம்முடைய அர்ஜி உடனே வந்த யெல்லா தஸ்தவேசுகளையும் இத்துடனே வாப்ஸ் அனுப்பியிருக்கிறது. நீர் உடனே புறப்பட்டு ஷை வேளூர் கிருமத்திற்குபோய் ஷை பெருமாநாடு டிப்டி தாசில்தாருடன் கூடயிருந்துகொண்டு ஆஜராயிருக்கிறவும் ஆஜராகாமல் இருக்கிறவுமான எல்லா எதிரிகளையும் வறவழித்து மேலேகண்ட ஸவால்களை கேட்டு அவர்கள் சொல்லும் ஜவாப்பை வாக்குமூலத்தில் எழுதி வாங்கிக்கொண்டும் ஷை நூதனமாய் போட்டிருக்கிற குளம் கரை வகையறுவை யெடுத்துப் போடவேண்டியது விசிதமென்பதைப்பத்தி ஷை டிப்டி தாசில்தாருக்கும் மெப்பிவித்து அவரால் எழுத்து மூலமான ஜவாப் யாதாஸ்து பெத்துக்கொண்டும் எல்லா தஸ்தாவேசுகளுடன் 15-தினத்தில தப்பாமல் அகுருக்கு அறிக்கைசெய்யவும். இதில் யெவ்வளவும் ஆலசியம் செய்யக்கூடாது அறியவும்.

1856-வருஷம் சூன்மீ 25உ.

மு. திருச்சினாப்பள்ளி.

No. 14.

1857வருஷம் மேமீ 16உயுள்ள 118-நீ.

கோனாடு தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

கல்சண்டார்கோட்டை கிருமத்தின் மகாஜனமாகிய அளகருமய்யனும் ருமய்யனும் பரஸ்பரம் தகரார்ப்படுகிற வாய்க்கால் ஜலத்தைக்குறித்து நீர் தறியாபஸ்து செய்ததில் அளகருமய்யன் எதிரி ருமய்யனுடைய நிலத்துக்கு ஜலம் சரியாய் பாயாதபடிக்கு வாய்க்காலில் கருங்கல்போட்டு அடைத்து அன்யாயம் செய்கிறதாக தெரியவந்ததினாலே உபய வாதிகளுக்கும் குந்தகம் ஸம்பவிக்காதபடி ஜாஸ்தி ஜலம் கொண்டுபோகவேண்டியதற்காக அளகருமய்யனால் நூதனமாய் வாய்க்காலில் ஜலம் போகப்பட்ட முகத்துவாரத்தில் போடப்பட்டிருக்கிற கருங்கல்லை யெடுத்துப்போடும்படி பயிசல்செய்து போட்டதாக சில விவரங்களாய் நீர் மார்ச்சுமீ 27உ யெழுதிய 56நீ அர்ஜிவந்ததின்பேரில்.

ஷை அளகருமய்யன் என்பவன் நம்முடைய ஹுஜுரில் வந்து ஷை உம்முடைய தீர்மானம் சரியாயிருக்கிறதில்லையென்றும் ஜாகாவை பார்வையிட்டு நியாயப்படி பயிசல் செய்யவேணுமென்றும் அப்பீல் செய்துகொண்டான். அதினமேல் ஷை வாய்க்காலை நாம் கண்ணாலே பார்வையிட்டு உபயவாதிகளுக்கும் இருக்கப்பட்ட சாதகபாதகங்களை தெரிந்துகொண்டு பயிசல் சொல்லவேணுமென்று நினைத்திருந்தபடி இன்றைதினம் காலமே உம்மையும் கூட்டிக்கொண்டு ஷை தகரார் வாய்க்காலை போய் பார்வையிட்டதில் ஷை முகத்துவாரத்தில் போட்டிருந்த கல்லை யெடுத்துப்போட்டு அந்த கல்லுக்கு பதிலாய் கிறுய்வைத்து ஜலம் பாச்சிக்கொள்ளும்படியாக நீர் செய்த தீர்மானம் நியாயமாயிருப்பதாக காணப்பட்டபோதிலும் கிறுய் வைப்பதில் அடிக்கடி மருபடியும் உபயவாதிகளும் தகரார்ப்பட இடமுண்டாகுமாகையால் இத்துடனே அனுப்பியிருக்கிற ஸ்கெச்சில் கண்டபடி உபயவாதிகளுக்கும் ஜலம் வறப்பட்ட வாய்க்கால் மத்தியில் கொஞ்சதூரம் ஸ்தாயியாய் நிற்கும்படியான ஒரு கறைபோட்டால் உபயவாதிகளுக்கும் ஷை வாய்க்காலில் வரப்பட்ட ஜலம் ஜாஸ்தி குறைச்சல் இல்லாமல் சரியாய் வரும். கறைபோட்ட பிறகு யெதிரி ருமய்யன் நிலத்துக்கு ஜலம் போகப்பட்ட துவாரத்தில் அல்லது போக்கில் கல்லுபோட வேண்டியதில்லை. கிறுய் வைக்கவேண்டியதில்லை. இந்தப்பிறகாரம் செய்வது விசிதமாய் நமக்கு தோணப்படுவதால் அந்தப்படி அமுல் நடக்கும்படிசெய்து அமுல் நடந்த சங்கதி அறிக்கை செய்யவும்.

1857௵ மே௴ 16௳.
மு திருச்சினாப்பள்ளி.

No. 15.

1859-௵ செப்டெம்பர்௴ 23௳ யுள்ள நி. 774.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தாருக்கு தாக்கீது.

ஷை தாலூகா வேளூர் கிராமத்திய பெரியகுளத்துக்கு ஜலம் வறப்பட்ட வறத்துவாரியை புதுக்கோட்டை இலாகா விருவிமலை வகையரு கிராமத்தார் அடைத்து சில குளங்கள் போட்டிருக்கிறதாக மாஜி தாசில்தார் எழுதிய 1856-௵ த்திய 477, 1040-இந்த அர்ஜிகளின் சங்கதியைக்குறித்து நம்மால் அனுபபலான யாதாஸ்து பிறகாரம் அசிஸ்டாண்டு கலெக்டர் மெஸ்தர் யே. ஆர். அச்சினஸ் துரையவர்கள் போய் புதுக்கோட்டை இலாகா கார்பார் வெங்கிடேசுவறப்யனுடனே கூட ஷை ஜாகாக்களை கண்பார்வையிட்டதில் முதலாவது பொம்மானயக்கன் கட்டுக்கறை (2) வது குருச்சிப்பட்டி யெல்லையில் கொண்டமநாயக்கன் முத்துநாயக்கன் இவர்களுடைய அணை 3-வது சிலப்பநாயக்கன் புதூர்குளம், 4-வது சாமிநாதன் குளம், 5-வது குளந்தைசேர்வைகாரன் யேந்தல் இதுகளில் தகராருக்கு முக்கியமான 2-வது காறணமாகிய குமறசமுத்திரம் யேரி குருக்கணையை புதுக்கோட்டை சமஸ்தானத்தார் சாபாய் எடுத்துப்போடும்படி உத்திரவு செய்யவேணுமென்றும்.

1, 3, 4, 5-இந்தக்காரணங்களைச்சேர்ந்த விஷயத்தில் வேளூர் கிராமத்தாருக்கு ஷை வறத்துவாறியைப்பற்றி உண்டாயிருக்கிற பாத்தியத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்தார் பிறவேசிக்கிறதில்லையென்று கபூலானதின்பேரில் மேலே சொல்லிய குளங்கள் யெதாப்பிறகாறமாய் இருக்கும்படி விட்டுவிடலாமென்றும் சிலவிவரங்களாய் ஷை அச்சினஸ் துரையவர்கள் நமக்கு செய்த ரிபோர்ட்டின்பேரில் நாம் மதுரை ஜில்லா பொலிடிகல் யேஜண்டு துரையவர்களுக்கு எழுதிய லெட்டருக்கு ஜவாபாய் அவர் எழுதிய நாளது௴ 19௳ யுள்ள 99-நி. லெட்டரையும் அதிலடங்கிய புதுக்கோட்டை சமஸ்தானம் சர்க்கில் அண்ணாசாமி அய்யருடைய லெட்டர் நகலையும் பார்வையிட்டதில் ஷை வேளூர் பெரியகுளத்தின் வரத்துவாறி தகராருக்கு முக்கிய காரணமான புதுக்கோட்டை யிலாகா குறிச்சிப்பட்டி சரகத்திலுள்ள கொண்டமநாயக்கன முத்துநாயக்கனால் போடப்பட்டிருக்கிற 2-வது காரணமான குமறசமுத்திரம் அணையை யெடுத்துப்போட்டதாயும் வேளூர் கிராமத்தாருக்கு ஷை வறத்துவாறிகளிலுண்டாயிருக்கிற அனுபோக பாத்தியத்தில் புதுக்கோட்டை யிலாகா கிருமத்தார்கள் பிரவேசிக்காமலிருக்கும்படி தடுக்கப்பட்டிருக்கிறதாய் கண்டிருப்பதினாலே.

இந்த பயிசலின் விவரத்தை ஷை வேளூர் கிராம கர்ணன் பட்டாதார்களுக்கு தாக்கீது மூலமாய் அறிவித்து இனி யாதொரு தகராருக்கும் யெடமன்னியில் நடந்து வரும்படி திட்டம் செய்கிறதுமல்லாமல் அந்தப்படி ஷை குமறசமுத்திரம் அணையை யெடுப்பித்தான சங்கதியையும் மாஜி தாசில்தார் எழுதிய மேல்கண்ட 1010-வது நி. அர்ஜியில் ஷை வறத்துவாறிக்கு யெடஞ்சலாய் இந்த யி[illegible] தொட்டியபட்டி பழனியாண்டி என்பவனால் அவனுடைய யேந்தல் கறை வளாத்தியிருப்ப[illegible] யெடுத்து[illegible]போடும்படி திட்டம்செய்திருக்கிறதாக கண்டிருந்த மேறைக்கி யெடுப்பிவித்தான [illegible]கதியையும் கண்டு [illegible]ருக்கு அறிக்கை செய்யவும்.

1859-௵ செப்டெம்பர்௴ 23௳,
மு. திருச்சினாப்பள்ளி,

(Signed) J. BIRD,
Collector.

(ஒப்பம்.) மு. கோ. சின்னசாமி நாயக்கன்.

No. 16.

1862-௵ ஏப்பிரல்௴ 30௳ யள்ள நி. 191.

திருச்சினாப்பள்ளி ஜில்லா டிப்டி கலெக்டர் திரு. சுந்திரம் பிள்ளையவர்கள்.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தார் காதர்சாஹெப்புவுக்கு தாக்கீது என்னவென்றால்.

மோவூர்முட்டம் கிருமத்துக்கும் ஆற்காடு சுபா மன்னார்குடித துக்குடி ஓமாம்புலியூர் வகையரு கிருமத்துக்கும் நேரிட்ட வாய்க்கால் தகராறைப்பற்றி கலெக்டர் துரையவர்களுடைய 1859-௵ த்திய 592-நி. உத்திரவு பிரகாரம் மாஜி தாசில் தம்பிசாமி பிள்ளையும் மன்னார்குடி துக்குடி தாசில்தாரும் ஷை தகரார் ஜாகாவைப்போய் பார்வையிட்டதில் ஷை வாய்க்கால் ஷை மோவூர்முட்டம் கிருமத்துக்காகவே ஆதியில் யேற்பட்ட வாய்க்காலென்றும் ஷை வாய்க்காலில் ஓமாமபுலியூர் சரகத்தில் சர்க்கார் உத்திரவு சிவாயி 5-யெடங்களில் 5-மடைகள் உண்டு பண்ணிவாய்க்கால் வெட்டி அவ்வூர் புஞ்சை நிலத்துக்கு ஜலம் பாச்சிக்கொள்ளுகிறதாயும் குணவாசல் சரகத்தில் சிலதூரம ஷை வாய்க்காலை தூத்து பூவரசம்போத்து முதலானது வைத்தும் மேலப்புளியப்பட்டு சரகத்தில் வாய்க்காலை நெருக்கி மேன்பாலம் கட்டி தருகிறுதம் செய்திருப்பதாயும் இது சங்கதியைப்பற்றி மனனாகுடி துக்குடி தாசில்தாரும் மாஜி தாசில்தாரும் சேர்ந்து பைசல்செய்ய ஷை தாசில்தார் அந்த ஜில்லா கலெக்டர் துரையவர்களுக்கு அர்ஜி எழுதியிருப்பதாயும் அதற்கு பதில் தாக்கீது வந்தவுடனே தெரியப்படுத்துகிறதாயும் ஷை தாசில்தார் மாஜிதாசில்தாருககு யாதாஸ்து யெழுயிருப்பதாயம் மாஜி தாசில்தார் கலெக்டர் துரையவர்கள் ஆபீசுக்கு யெழுதியிருக்கிற 1860-௵ த்துய யேப்பிரல்௴ 14௳ யுள்ள 39-நி. அர்ஜியில்கண்டிருக்கிறது.

அதின் பிறகு ஷை மன்னார்குடி தக்குடியைச்சேர்ந்த தாசில்தாரால் யேதாவது ஜவாப் வரப்பட்டிருக்கிறதா ஷை வாய்க்கால் தகரூர் இப்போது என்னஸ்திதியிலிருக்கிறது ஷை மோவூர் மூட்டத்திற்கு ஜலம் பாய்கிறதற்கு ராஜாவாய்க்காலிலிருந்து தலைப்புவைத்து வேறே வாய்க்கால் இஞ்சினீர் இலாகாவில் வெட்டிக்குடுத்திருக்கிறதினாலே இப்போது ஷை தகரூர் தீர்ந்துபோயிருப்பதாக மோவூர் கணக்கன் பட்டாதார்களால் தெரியவருகிறபடியால் அதின் உண்மையையும் விசாரித்து தெரிவிக்கவும்.

ஷை தகரூர் திராமலிருந்தால் மருபடி நீர்சிசம்பறத்துக்குடி தாசில்தாருக்கு முன்சங்கதிகளைக்கண்டு யாதாஸ்து யெழுதி நீரும் அவருமாய் ஷை தகரூர் பைசல்செய்துதெறியப்படுத்தவும். இதற்கு வெகுசீக்கிறத்தில் நீர் ஜவாப் தெறிவிக்கவேணும்.

1862-ளு ஏப்பிரல்மீ 30உ
மு. ஜெயங்கொண்டசோழபுரம்.

(ஒப்பம்.) தி. ரு. சுந்தரம்பிள்ளை,
டிப்டி கலெக்ட்டர்.

No. 17.

1866-ளு பிப்ரவரிமீ 15உ யுள்ள 53-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆக்டிங் ஏட் அசிஸ்டாண்டு கலெக்டர் டபிளியூ-எச்சு-கம்மிங்கு துரையவர்கள்.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசிலதார் தி-பட்டாபிராம் பிள்ளைக்கு தாக்கீது.

நவாப் இலாகா பேகம் சாதாரொசா முஹமதல்லி சாஹேப் என்பவன் தாலூகாவில் கொடுத்த பிட்டிஷன் சங்கதியைப்பற்றி நீர் யெழுதிய 27, 44-இந்த இரண்டு நி. அர்ஜி வகையறாக்களை பார்வையிடப்பட்டது.

சித்திரைகுளத்தின் ஜலத்தை சுப்பன் செட்டி என்பவன் நூதனமாய் புஞ்சை நிலத்துக்கு பாச்சஎத்தனப்பட்டு புதிசாய் வாய்க்கால் வெட்டியிருக்கிறதாக வாதி வகீல் சொல்லியிருக்கிறான்.

எ. குறிப்பு ரிஜிஸ்தரில் சுப்பன்செட்டிக்கு புறம்போக்கு வகையில் நந்தவனம் காணி 1-65, அதைச்சேர்ந்த தரிசு காணி 1, இந்தப்படி காணி 2-65, திட்டம் யேற்பட்டிருந்ததில் ஷை தரிசு நிலத்தில் குழி 50, நிலத்தை 73-ம் பசலியில் நஞ்சை செய்து செட்டில்மெண்டுல் யேசர் 1, நிலத்தை நஞ்சையென்று தாக்கல் செய்வித்துக்கொண்டு அந்த ஆதாரத்தின்பேரில் ஷை சித்திரைகொளத்தின் ஜலத்தை பாச்ச புதிசாய் வாய்க்கால்வெட்டி நூதனமாய் ஜலம் கொண்டுபோக யெத்தினப்பட்டிருக்கிறதாயும் ஷை நிலம் 72-ம் பசலி வரையில் புஞ்சையாகவே யிருந்ததாகவும் தெரியவருகிறது.

புதிசாய் வாய்க்கால் வெட்டயில்லையென்றும் நந்தவனத்துக்கு முன்னாலே ஷை குளத்தின் ஜலம் பாஞ்சுவந்த பழயவாய்க்காலே தூரஸ்துசெய்து ஜலம் கொண்டுபோனதாகவும் ஷை குளத்தின் ஆசராவில் பேகம் மானியம் யேகர் 44-17, அயனுக்கு யேகர் 22-83, இந்தப்படி திட்டம் யேற்பட்டிருப்பதில் விவாதப்படுகிற ஷை புஞ்சை ஒரு யேகர் நிலமும் ஷை அயன திட்டத்தில் சேர்ந்ததென்றும் கர்ணனும் எதிரி சுப்பன்செட்டியும் சொல்லியிருப்பதில் ஷை வாய்க்கால் புதிசாய் வெட்டப்பட்டதென்று ஜாகாவை பார்வையிட்ட நாட்டுக்கர்ணனால் சொல்லப்பட்டிருக்கிறதும் தவிர விவாதப்படுகிற நிலம் முன்னாலே ஷை அயன் திட்ட நிலத்தில் சேரயில்லையென்றும் 72-ம பசலி வரையில் புஞ்சையாகவே யிருந்ததென்றும் மருபடி கர்ணனால் சொல்லப்பட்டுமிருக்கிறது.

அப்படி புதிசாய் வாய்க்கால்வெட்டி ஷை குளத்தின் ஜலத்தை நூதனமாய் கொண்டுபோய் பாச்சுவது கிராமமன்னியிலும் அப்படி செய்வதினால் ஷை குளத்தின் ஆசராவிலுள்ள திட்ட நிலங்களுக்கு ஜலத்தட்டு நேரிட்டதென்றும் பிட்டிஷனர் வகைரூப்பேர்கள் அடிக்கடி புகார்செய்ய ஆஸ்பதமாகவுமிருக்கிறது.

ஆகச்சே அந்தப்பிறகாரம் புதிசாய் வாய்க்கால்வெட்டி ஷை கொளத்தின் ஜலத்தை நூதனமாய் கொண்டுபோய் பாச்சக்கூடாதென்று யெதிரி சுப்பன்செட்டிக்கு அறிவித்து அந்தப்படி நடந்துகொள்ளத்தக்கதாய் திட்டம் செய்யவும்.

1866-ளு பிப்ரவரிமீ 15உ
மு. திருச்சினாப்பள்ளி.

(Signed.) W. H. COMMING,
Ag. H. A. Collector.

No. 18.

1868-ளு நவம்பர்மீ 6உ யுள்ள 6-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆக்டிங்கு கலெக்டர் மெ-டி-ஜே-மால்ட்டிபீ துரையவர்கள்.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தார் தி-பட்டாபிராம் பிள்ளைக்கு தாக்கீது.

நெய்குப்பை மருதமுத்துநாடாவான் நாராயண நாடாவான் வகையறாப்பேர்கள் யேரி ஜலத்தை அதின் ஆசரா நிலங்களுக்கு பாயவொட்டாமல் பெருவளவாய்க்கால் பாச்சல் நிலங்களுக்கு கொண்டுபோவதாக சிலவிவரங்களாய் கொடுத்த பிட்டிஷனைப்பற்றி விசாரணைசெய்து நீர் சென்ற அக்டோபர்மீ 27உ எழுதிய 12-நி. அர்ஜி வந்தது.

ஷை அர்ஜி வகையறாவை பார்வையிட்டதில் ஷை யேரி சர்க்கார் மராமத்தைச்சேர்ந்ததென்றும் ஷை யேரி ஆயக்கட்டைச்சேர்ந்த நிலத்தில் சாகுபடியான பயிர்கள் சுவல்பம்கூட பாக்கியில்லாமல் முழுதும் மடங்கனும் விட்டபிறகு அந்த யேரியில் ஜலமிருந்தால் அது வீணாய் போகாமல் பெருவளவாய்க்கால் நிலங்களுக்கு ஜலத்தட்டு நேரிடும் காலத்தில் ஷை சர்க்கார் யேரிஜலத்தை ஷை வாய்க்கால் பாச்சல் நிலங்களுக்கு பாச்சிக்கொள்வது விகிதமாய் இருப்பதாலும் ஷை யேரி ஆஜரா நிலங்களில் சுவப்ப நிலம் மடங்சனுகவேண்டிய பாக்கியிருந்தால் அப்போது ஷை யேரி ஜலத்தை அந்த ஆஜரா நிலத்துக்குத் தவிற வேறை எந்த நிலத்துக்கும் பாச்சக்கூடாததாகவும் காணப்படுவதாக தெரியவருகிறது.

ஆகையால் ஷை நெய்குப்பை கிறாமத்திய சர்க்கார் யேறிப்பாச்சல் நிலங்கள் சாகுபடியாகியிருப்பது முழுவதும் பூரா மடங்கனுகி விட்டதின்பேரில் ஷை குளத்தில் மீதிஜலமிருந்தால அந்த ஜலத்தை ஷை கிறாமத்திய குடிகள் பெருவளவாய்க்கால் பாச்சல் நிலத்துக்கு பாச்சிக்கொள்ளவேண்டிய பிரமேயம் நேரிடும்போது அந்த காலத்தில்மட்டும் அவர்கள் ஷை சர்க்கார் குளத்தில் மீதிஜலத்தை பாச்சிக்கொள்ளலாம்.

உம்முடைய அர்ஜியுடன் வரலான தஸ்தாவேஜுகள் 22-யும் இத்துடனே வாப்ஸ் அனுப்பியிருக்கிறது.

1868-ளு நவம்பர்மீ 6உ
மு. திருச்சினாப்பள்ளி.

(Signed.) T. J. MALTBY,
Ag Collector.

No. 19.

1877-௵ டிசம்பர்௴ 7௳ யுள்ள 1016-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆக்டிங்கு ஜனரல் டிப்டி கலெக்டர் அவர்கள்.

உடையார்பாளையம் தாலூகா ஆ. தாசில்தாருக்கு தாக்கீது.

வடவாத்தைச்சேர்ந்த நாரோகால் வாய்க்காலில் சிதம்பரம் தாலூகா கண்டமங்கலம் கிராமத்தில் கட்டப்பட்டிருக்கிற வடிகலிங்கலை அந்த கிராமத்தார்கள் அடைத்துவிட்டதினாலே உம்முடைய தாலூகா காட்டகரம் கிராமத்திய நிலங்களில் ஜலம் தேக்கி பயிர்களுக்கு கெடுதி சம்பவித்த விஷயமாய் நீரெழுதிய நர்லாதும்௴ 20௳ யுள்ள 902-நி. அர்ஜி தாக்கலாச்சுது.

ரிவினியூ இன்ஸ்பெக்டருடைய ரிபோர்ட்டிலாவது உம்முடைய அர்ஜியிலாவது ஜலம் நின்றிருந்ததாக சொல்லப்படுகிற நிலம் நஞ்சை அல்லது புஞ்சையென்றுகூட தெரியவில்லை. நிலங்களில் ஜலம் பூர்த்தியாய் நின்றிருந்ததினாலே இவ்வளவு விஸ்தீரணத்தில் அது தங்கியிருந்ததாக தெரிந்துகொள்ளக் கூடவில்லையென்று ரிவினியூ இன்ஸ்பெக்டர் சொல்லியிருக்கிறார். இந்த முகாந்திரமானது சுத்தமாக கிருப்திகரமத்ததாக யிருக்கிறது. பீல்டுவாரியாய் அளக்கக்கூடாமல் போனாலும் பிளானையும் அடங்கலேயு வைத்து சாகுபடி கணக்கை பார்த்தால் இன்ன பேர்வழியினுடைய இன்னின்ன நம்பர் ஸ்தலம் அந்த சரகத்தில் சம்மந்தப்பட்டிருக்கிறதென்று தெரியாமல் போகாது. இதை வெகு சுலபத்தின்பேரில் கண்டுபிடித்த ஸ்டேட்டுமெண்டு தயாரிக்கப்படுத்த கூடியதாக இருந்தது ரிவினியூ இன்ஸ்பெக்டர் அப்படிக் கூட செய்யவில்லை. எவ்வளவு விஸ்தீரணத்திலிருந்த என்னவிதபயிர் அப்படி ஜலம் நின்றிருந்ததினாலே சேதமென்றும் எத்தினைநாள் அப்படி ஜலம் நின்றிருந்ததென்றும் தெரியவேணும். மருபடியும் பார்வையிடச்செய்து ரிபோர்ட்டு அனுப்பவும். இப்போ அந்த ஜாகா என்ன நிலமையில் இருக்கிறதென்கிற விவரம் கூட தெரியப்படுத்தவேண்டியது கண்டமங்கலம் கிராமத்தாகள் செடிகலிங்கலை அடைத்ததைப் பற்றி கலெக்டரவர்களுக்கு லெட்டர் யெழுதப்பட்டிருக்கிறது.

1877-௵ டிசம்பர்௴ 7௳ }
அரியலூர்.

No 20.

1866-௵ செப்டெம்பர்௴ 19௳ யுள்ள 423-நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஆக்டிங்கு ஏக்டிசிஸ்டாண்டு கலெக்டர் டபிளியூ-எச்-கம்மிங்கு துரையவர்கள்.

திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தார் தி-பட்டாபிராம் பிள்ளைக்கு தாக்கீது.

பூவாளூர் தேவஸ்தானம் மானேஜர்களுடைய வக்கீல் வரதையன் ஷெ தேவஸ்தானத்தைச்சேர்ந்த அனந்தனூர் கிராமத்திய நஞ்சை நிலங்களுக்கு அருந்தல் காலத்தில் ஜலம் பாச்சவும் மாடாடுகளின் குடிதண்ணீருக்கு உபயோகமாகவுமிருக்கிற குட்டை ஜலத்தை மருதூர் வசுதேவநாடான் வெட்டிக்கொண்டுபோய் அவனுடைய புஞ்சை நிலத்தை நஞ்சை செய்கிறதாக குறித்த பிட்டிஷனைப்பற்றி விசாரித்து நீர் எழுதிய சென்ற௴ 9௳ யுள்ள 403-நி. அர்ஜி வகையறாக்களை பார்வையிடப்பட்டது.

பிளானில்கண்ட 1-நி. அடையாளமுள்ள வாய்க்கால் அனந்தனூர் கிராமத்திய நஞ்சைக்கு பாய்கிறதாகவும் அப்பால் ஏ. அடையாளம் போட்டிருக்கிற இடத்திலுள்ள குட்டையில்விழுந்து அதுரொம்பி மீதி கழிவுஜலம் 4-நி. வாய்க்கால்வழியாக உப்பாத்தில் விழுந்துகொண்டிருந்ததாகவும் இப்போது அந்த கழிவு ஜலத்தைக்கொண்டு அதற்கு சமீபமிருக்கிற யெதிரி வாசுதேவநாடானுடைய புஞ்சை நிலத்தை நஞ்சை சாகுபடி செய்திருக்கிறதாகவும் அனந்தனூர் சரகத்திலே ஷெ வாய்க்காலை கொஞ்சமாழமாக யெதிரியால் வெட்டப்பட்டிருந்ததாய் சொல்லப்பட்டதை யிப்பால் தூர்க்கப்பட்டிருக்கிறதாகவும் தெரியவருகிறது.

ஷெ 1-நி. வாய்க்காலை அனந்தனூர் கிராம சரகத்தில் ஆழப்படுத்தி வெட்டாமலடிக்கு அந்த கிராமத்துக்கு பாய்ந்து மீதி உபயோகமில்லாமல் உப்பாத்தில் விழுகிறதிற்காக வரப்பட்ட கழிவுஜலம் கொண்டு யெதிரி வாசுதேவநாடான் நஞ்சை சாகுபடி செய்ததில் குற்தகம ஒன்றும் காணப்படவில்லை.

ஆகச்சே அந்தப்படி செயவதில் ஆட்சேபமுண்டாவென்பதை விசாரித்து தெரிந்துகொண்டு ரிபோர்ட்டுசெய்யவும்.

1866-௵ செப்டெம்பர்௴ 19௳ }
மு. திருச்சினாப்பள்ளி.

(Signed.) W. H. COMMING.
Ag. H A. Collector.

No. 21.

1875-௵ டிசம்பர்௴ 5௳ யுள்ள 444 நி.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்டரவர்கள்.

பெறம்பலூர் தாலூகா தாசில்தாருக்கு.

ஆமராகூர் கிராமத்திலிருக்கும் சின்ன முத்துஸாமி பிள்ளை சொக்கலிங்கம் பிள்ளை யிவர்கள் தங்கள் கிராமத்திலுள்ள இனிக்கட்டியேறி என்னும் பேருள்ள குட்டைக்கு வருகிற தெத்து வாரியை மால்வாய் காப்புடயான் வகையறா அடைத்து நூதனமாக ஒரு குட்டை உண்டுபண்ணி இருப்பதாக சில விவரங்கண்டு தொகுத்த பிட்டிஷன்பேரில் நீர் யெழுதிய மேஜிஸ்திரேட் தறபில் சென்ற நவம்பர்௴ 26௳ யுள்ள 59-நி. அர்ஜி வகையறா நடவடிக்கைகளை பார்வையிடப்பட்டது.

அதுவிஷயத்தில் உம்முடைய விசாரணை குறைவாயிருக்கிறது. நீர் அனுப்பியிருக்கிற நக்ஷாவானது விவாத வரத்துவாரியை காட்டாமலும் தயார்செய்யப்பட்டும் அநேக அம்சங்கள் விட்டுப்போயுமிருக்கிறது உம்முடைய பார்வையில் வரத்துவாரியிருந்ததாகவாவது அடைக்கப்பட்டதாகவாவது தெரியவில்லையென்றும் நீர் சொல்வதை நாம் நம்பவில்லை. ஏனென்றால் வரத்துவாரியே இராவில் யாதொரு புசரவுக்கும் இடமிராது. B-அடையாள விவாதகுட்டைக்கு ஏதாவது வரத்துவாரியிருக்கவேண்டுமல்லவ? அந்த வரத்துவாரி யெப்படிப்பட்டதென்று நீர் சொல்லவில்லை. பிட்டிஷனர்கள் நீர் விவாத ஜாகாவுக்கு போய் நேரும் பார்க்கவில்லை யென்று சொல்லுகிறார்கள். அப்படிக்கிருக்க நீர் அர்ஜியில் அதற்கு விரோதமாய் சொல்லுகிறீர். இதற்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட விஷயத்தைக்குறித்து யெடுத்துகாட்டி கேட்டபோது நீர் பிசகுதானென்று ஒப்புக்கொண்டிருப்பதுபோல் இதுவும் ஒருவேளை அர்ஜியெழுதின குமாஸ்தாக்களுடைய கைப்பிசகாய் இருக்கலாமென்று நினைக்கிறோம்.

A-அடையாளயேரிக்கு வேறே வரத்துவாரியிருந்தபோதிலும் விவாத வறத்துவாரியானது பிட்டிஷனர்கள் சொல்லுகிறபடி அவர்களுடைய வெகுகால அனுபவமாயிருந்து அதை யெதிரி கருப்புடையான் வகையறா அடைத்தது ஷ A-யேரியின் கீழ் சாகுபடியாயிருக்கிற நிலங்களுக்கு நஷ்டமுண்டாகும்படியாய் ஒரு குட்டை உண்டுபண்ணியிருந்தால் அது விஷயத்தில் ஷ யெதிரிகளை தடுத்திருக்கவேணும் ஆகச்சே நீர் தாலூகா மஜகூர் சிறஸ்தேதாரைக்கொண்டு விவாத ஜாகாவைப்பார்வையிடச்செய்து விவரமான நகஷாவுடன் பூர்த்தியாய் ரிப்போர்ட்டு செய்யும்படிக்கும் பழய மாமூல் இன்னதென்று விசாரித்து தெரியப்படுத்தும்படிக்கும் அறிவிக்கவும். பின்னும் ஷ கருப்புடையான் வகையறா குட்டையாக வளைத்து ஜலம் பாச்சிக்கொள்ளுகிற நிலத்துக்கு நீர்க்கூலி கொடுத்து வருகிறார்களா? அப்படிக்குவந்தால் சென்ற 10 வருஷத்தில் ஒவ்வொரு பசலியிலும் எவ்வளவு விஸ்தீரண ஜலம்பாய்ந்து சாகுபடி செய்யப்பட்டதென்றும் அதற்கு நீர்க்கூலி யெவ்வளவு வசூலாச்சுதென்றும் தெரியும்படியாக ஒரு ஸ்டேட்டுமெண்டு தயார்செய்து அனுப்பிவிக்கும்படி செய்யவும். தர்ஜியுடன்வந்த தஸ்தாவேசுகளேயும் பிட்டிஷனருடைய மற்றொரு மனுவையும் இதனுடன் அனுப்பியிருக்கிறது.

1875-ளு டிசம்பர் மீ 5உ,
மு. திருச்சினாப்பள்ளி.

(Initialed) T. K.

No. 22.

1887-ளு ஆகஸ்டு மீ 11உ.

திருச்சினாப்பள்ளி ஜில்லா திருச்சினாப்பள்ளி தாலூகா இன்சார்ஜ் டெம்டறெறி டிப்டி கலெக்டரவர்கள் மகா-ா-ா-ஸ்ரீ-வி-முத்துசாமி ஐயரவர்களாலும் புதுக்கோட்டை சமஸ்தானம் தவான பேஷகார் அவர்கள் மகா-ா-ா-ஸ்ரீ-வெங்கிட்டராவு அவர்களாலும் செய்யப்பட்ட பைசல்நாமா,

2 திருச்சினாப்பள்ளி தாலூகா இலுப்பூர் மாகாணம் வேளூர் கிராமத்தின் பெரிய யேரிக்கு வறப்பட்ட வறத்துவாரி வகையறாக்களை அடைத்து புதுக்கோட்டை யிலாகா விராலிமலை பிற்கா வடுகப்பட்டி மஜரா குருக்கிப்பட்டியில் இருக்கு இறந்துபோன சாமினாதன் வகையறா புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 1850-ளுத்தில் கவுல்பெற்று நூதனமாய் குளம்போட்டதைப்பற்றி 1852-ளுத்தில் தகரார் நேரிட்டு திருச்சினாப்பள்ளி ஜில்லா அசிஸ்டாண்டு கலெக்டர் மேஸ்தர் ஏ-ஆர்-அட்கின்ஸ் துரையவாகளும் புதுக்கோட்டை சமஸ்தானம் சார்பார் வெங்கடேசுவர ஐயரவர்களும் மேலான அதிகாரிகளுடைய உத்திரவின்பேரில் தகரார் ஜாகாவை பார்வையிட்டு கரஸ்பாண்டென்ஸ் நடந்த அப்போதிய சர்க்கில் மகா-ா-ா-ஸ்ரீ அண்ணாசாமி ஐயரவர்கள் பொலிடிகல் யேஜண்டு மேஸ்தர் டி-கிளார்க்கு துரையவர்கள் பேருக்கு எழுதிய 1859-ளு செப்டெம்பர் மீ 8உ யுள்ள லெட்டரையும் அதை அனுசரித்து ஷ பொலிடிகல் யேஜண்டு துரையவர்கள் திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டர் துரையவர்கள் பேருக்கு யெழுதின 1859-ளு செப்டெம்பர் மீ 19உ யுள்ள 99-நெ. லெட்டரின்பேரில் கோளூர் தாலூகா தாசில்தாருக்கு அனுப்பின ஷ 1859-ளு செப்டெம்பர் மீ 23உ யுள்ள 774-நெ பைசல் உத்தரவையும்.

3. அந்த பைசல் உத்திரவுக்கு விரோதமாய் ஷ சாமினாதன் வகையறா ஷ குளத்துக்கரையை விர்த்திசெய்து பலப்படுத்தினதினலேயும் ஷ வேளூர் பெரியகுளத்திற்கு வறப்பட்ட பெரிய வரத்துவாரியை அடைத்து ஷ சாமினாதன் குளத்திற்கு தண்ணீர் திருப்பிக்கொண்டு போனதினலேயும் ஷ வேளூர் குளத்திற்கு ஜலக்குறைவு சம்பவிக்கிறதாய் 1864-ளுத்தில் பிராதாகி திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ-டி-பட்டாபிராம் பிள்ளையவர்களும் விராலிமலை பிற்கா டிப்டி தாசில்தார் முத்துகிருஷ்ணய்யரவர்களும் தகரார் ஜாகாவை பார்வையிட்டு அவர்கள் முன்பாக உபயகிராமத்து குடிகளும் எழுதிவைத்த 1865-ளு டிசம்பர் மீ 10உ யுள்ள பைசல்நாமாவையும் வாசிக்கலாச்சுது.

4. ஷ இரண்டு பைசல்களுக்கும் விரோதமாய் ஷ சாமினாதனுடைய குளத்திற்கு சம்மந்தப்பட்டவர்கள் ஷ குளக்கரையை வடபக்கமாய் நாளடைவில் வளர்த்து பலப்படுத்தியும் அது மூலமாய் ஷ வேளூர் குளத்திற்கு வறப்பட்ட பறவல் தண்ணீர்களை தடைசெய்தும் இருக்கிறதாய் வேளூர் கிராமத்தார் 1882-ளுத்தில் தகரார்செய்த நிமித்தியம் திருச்சினாப்பள்ளி ஜில்லா கலெக்டர் துரையவர்களுக்கும் புதுக்கோட்டை சமஸ்தானம் மகா-ா-ா-ஸ்ரீ-திவான் ரீஜண்டு அவர்களுக்கும் பொலிடிகல் யேஜண்டு துரையவர்கள் துவாராய் கரஸ்பாண்டென்ஸ் நடந்து மேலான ஆபீசர் அவர்கள் உத்திரவுபடிக்கி அது விஷயமாய் நாமிருவரும் திருச்சினாப்பள்ளி தாலூகா தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ-ஆர்-சந்தசாமி பிள்ளையவர்களும் விராலிமலை பிற்கா டிப்டி தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ-சுப்பராவு அவர்களும் அடியில் கையொப்பம் வைத்திருக்கிற சாமினாதன் குளத்திற்கு சம்மந்தப்பட்டவர்களும் வேளூர் கிராமக் குடியானவர்களும் உபய கிராமத்து நவுக்கர்களும் நேற்றும் இன்னும் ஜாகாக்களை கண்பார்த்து அளந்தும் பிளான் தயார்செய்தும் பைசல்செய்த விவரமாவது.

I. ஷ சாமினாதன் குளத்தின் தென்மேற்குகரை A. அடையாளம் முதல் 65ளுத்து பைசல் நாமாப்படிக்கி போடப்பட்டதாயும் இப்போது ஜாகாவில் இருக்கிறதுமான பிளானில் E. அடையாளம் கொடுக்கப்பட்டிருக்கிற குறுக்குகரை ஷ குளத்து கரையுடன் பொருந்துகிற B. அடையாளம் வரை 770-அடி தூரமுள்ள பழய கரையானது இப்போது யிருக்கிற ஸ்திதியிலேயே யிருக்கவேண்டியது.

II. ஷ B. அடையாளத்தில் இருந்து தொடர்ச்சியாய் வடக்கே போகிற கரையில் ஷ 1865-ளுத்து பைசல்நாமாப்படி வெட்டிவிடாமல் நின்றுபோய் அதிகமாய் நாளடைவில் பலப்படுத்தப் பட்டிருக்கிறதும் ஷ B. அடையாளத்திலிருந்து 165-அடி தூரத்திற்கு வடக்கே ஷ சாமினாதன் குளத்துக்காரர்களால் சாது வருஷத்திய பஞ்சத்தின பொழுது வெட்டப்பட்டிருக்கிற கிணத்துக்கு மேல்புறமிருக்கிறதும் பிளானில் ஷ B. அடையாளம் முதல் C. அடையாளம் வரை உள்ளதுமான 277-அடிக்கரை இப்போது யிருக்கிற ஸ்திதியிலேயே யிருக்கவேண்டியது.

ஷ III C. அடையாளம் முதல் 19-வது அடவு தாசி வள்ளியினுடைய றொக்ககுத்தகை மானிய பஞ்சசகாட்டின் கீழ்புற பொழியில் பிளானில்கண்ட D. அடையாளம் வரை 497-அடி தூரத்துக்கு இப்போது மார்க்குசெய்து கல் நட்டுகொடுத்திருக்கிற லயனை அனுசரித்து ஷ சாமினாதன் குளக்காரர்கள் புதிதாய் கரைபோட்டுக் கொள்ளவேண்டியது. அந்த கரையானது ஒரு கெஜ உயரத்திற்கு குறையாமல் இருக்கவேண்டியது இந்த புதுக்கரையை அடுத்த நவம்பர் மீ 30உ க்குள் தப்பாமல் போட்டுவிடவேண்டியது,

IV. மேலேகண்டபடி புதிசாய்போடவேண்டிய கரைக்கி வடக்கே தென்வடவாய் F. G. அடையாளங்கள் உள்ள இரண்டு பழய கலாகளேயும் அடுத்த செப்டெம்பர்மீ 30உ க்குள் தப்பாமல் ஷை சாமிநாதன குளக்காரர்கள் வெட்டி யெடுத்துவிடவேண்டியது.

V. மேற்கண்ட தாசி வள்ளியினுடைய புஞ்சைக்கும் 16-ம் அடவு தாசி அன்னம் என்பவளுடைய மானிய புஞ்சைக்கும் மத்தியில் போகிறதும பிளானில் H. அடையாளம் காண்பிவித்திருக்கிறதுமான வரத்து வாரி நீரோடியில் வரப்பட்ட ஜலத்தையாவது ஷை நீரோடிச்கு வறப்பட்ட பறவல் காட்டுத்தண்ணியையாவது ஷை சாமிநாதன் குளத்திற்கு எப்போதும் எவ்விதமாயாவது திருப்பிக்கொண்டுபோகக்கூடாது.

VI. மேலேகண்ட C. D. அடையாள ஜாகாவுக்கு வடகே பிளானில் I. அடையாளம் கொடுத்திருக்கிற வேளூர் குளத்திற்கு போகுற பெரிய வாரிஜலத்தை எப்போதும் எவ்விதமாயாவது ஷை சாமிநாதன் குளத்திறகு திருப்பிகொண்டுபோகக்கூடாது.

VII. E. அடையாளமுள்ள பழய குருக்குகறையை வைத்துக்கொள்வதும் யெடுத்துவிடுவதும் ஷை சாமிநாதன குளக்காரர்களுடைய சவுகுரியானுகுணமாய் யிருக்கிறது.

5. இந்த தீர்மானமானது ஷை சாமிநாதன் வகையறாவுக்கு புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கொடுத்திருக்கிற கவுல்நாமா ஒண்ணு மேற்கண்ட 1859-ஷு த்திய தீர்மானம் 2, 1865-ஷு த்திய பைசல்நாமா 3, இதுகளில் கண்ட நிபந்தனைகளை பார்க்கிலும் ஷை குளக்காரனுக்கு அனுகூலமாயிருந்தாலும் மேலே தீர்மானத்தின் 2-வது நிபந்தனையில் கண்ட கிணர்வெட்டியிருப்பதையும் பிரகறையில் நஞ்சை உண்டு செய்து சாகுபடி செய்திருட்பதையும் உத்தேசித்தும் வேளூர் பெரியகுளத்து ஜலவரத்துக்கு விசேஷபாதகம் உண்டாகாதென்று காணப்படுவதனுலேயும் சமாதானமாய் இந்த பைசல் செய்யலாச்சுது.

6. இவ்விதமாய் பைசல்செய்திருக்கிற இந்த தீர்மானத்துக்கும் மேலேகண்ட பிளானுக்கும் இரண்டு பிரதிகள் தயார்செய்து சம்மந்தப்பட்டவர்கள் எல்லாருடைய கையெழுத்தும் வாங்கியிருப்பதில் அதில் ஒரு பிரதி புதுக்கோட்டை சமஸ்தானம் திவான் பேஷ்கார் மகா-ா-ா-ஸ்ரீ-ஒ-வெங்கடறாவ் அவர்களாலும் மற்றொரு பிரதி திருச்சினாப்பள்ளி ஜில்லா டெம்பொரிபட்டி கலெக்ட்டரவர்கள் மகா ா-ா-ஸ்ரீ-வி-முத்துசாமி அய்யரவர்களாலும் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

7. இந்த தீர்மானத்திற்கு விரோதமாய் இனி இரண்டு இலாகாதாரகளும் எவ்விதகாரியங்களும் செய்யக்கூடாது.

(ஒப்பம்) வேளூர் கிராமமிராசு வெங்கிடாசலம் பிள்ளை.

(ஒப்பம) ஷை யூர் மிராசு நல்லசாமி பிள்ளை.

(ஒப்பம்) ஷை யூர் வெங்கிட்ட நாயக்கன்.

(ஒப்பம்) ஷை யூர் ப-ம-வீறியபெருமா பிள்ளை.

(ஒப்பம) ஷை கிராம கணக்கு சவுரிமுத்து.

சாமிநாதன் கொளத்து மத்தியஸ்தர்கள்.

(ஒப்பம்) குருச்சிப்பட்டியிருக்கும் துரைசாமி.

(ஒப்பம்) ஷை தம்பி கோபாலன்.

(ஒப்பம்) ஷை தங்கச்சி மோகனாள்.

(ஒப்பம்) ஷை வடுகப்பட்டி கிரும கர்ணம் வேலாயுதம் பிள்ளை.

(ஒப்பம்) சுப்பராமய்யன் மணியம்.

(Signed.) R. Kandaswami, Tahsidar.

(Signed.) S. Subbarow, Ag. Dy. Tahsildar.

(Signed.) V. Muthusami Iyer, Temporary Dy. Collector.

(Signed.) A. Venkata Row, Dewan Peishkar.

No. 112/30-10-87.

MEMO.

To

THE VERNACULAR RECORD-KEEPER.

The Faisalnamah and sketch regarding the water dispute between Velur, Trichinopoly Taluk, and Kurichipatti of Pudukkotta territory received with letter No. 541/28-9-87 of the Temporary Deputy Collector are herewith sent for safe custody in the Vernacular Record room.

Trichinopoly,
3rd October 1887.

(Signed) W. C. WILLOCK,
Ag. Collector.

No. 23.

1885-௵ ஜுன் ௴ 29௳ யுள்ள 640-நெ.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டி. கலெக்டரவர்கள்.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தாருக்கு.

இருயம்புரம் கிருமத்திய அணிக்குளம்யென்று பேருள்ள புறம்போக்கு குட்டை விஷயமாய் நீர் எழுதிய 1884-௵ ஜுன் ௴ 11௳ யுள்ள 543நெ 1885௵ ஜுன் ௴ 21௳ யுள்ள 529 இந்த நெம்பர் அர்ஜிகள் படிக்கப்பட்டது.

இப்பால் நீர் நேருய் ஷை கிருமத்துக்குப்போய் குட்டையைப்பார்த்து எதார்த்தத்தை விசாரித்திருப்பதில் ஷை குட்டையின் ஜலம் குடிதண்ணீருக்கு உபயோகமில்லையென்றும் வழக்கமாய் செல்லமுத்துப் படையாச்சி வகையருப்பேர்கள் நஞ்சை புஞ்சை நில்ங்களுக்கு பாச்சிவந்திருப்பதாயும் நமூதாகியிருப்பதுனாலே இதுவரையில் எப்படி நடந்துவந்ததோ அப்படியே இனியும் நடந்துவரவேணுமென்றும் நூதனமாய் யாதொரு உத்திரவும் செய்யத்தக்கதல்லவென்றும் கிரும நவுக்கர்களுக்கு உத்தரவு அனுப்பி திட்டம் செய்யவேண்டியது.

இந்த கேசில் ரிவினியூ இனிஸ்பெக்டருடைய நடத்தை மிக அதிர்ப்திகரமாகயிருக்கிறது. 1885-௵ ஜுன் ௴ 29௳ யுள்ள 638-நெ உத்திரவில் பிறஸ்தாபிக்கப்பட்டிருப்பதை அனுசரித்து அவரிடம் எக்ஸ்பிளநேஷன் வாங்கி அனுப்பவேண்டியது. அடக்கம் வாப்ஸ்.

(Signed) H. SUBBARAYER,
Dy. Collector.

No. 24.

1885-௵ ஜுலை ௴ 19௳ யள்ள 713-நெ

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்டரவர்கள்.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தாருக்கு.

நமங்கொணம் தாண்டவருய முத்துபடயாச்சியினுடைய பிட்டிஷனைப்பத்தி நீர் எழுதிய 1884-௵ ஆகஸ்டு ௴ 19௳ யுள்ள 830-நெ, 1884-௵ செப்டெம்பர் ௴ 19௳ யுள்ள 891-நெ, 1885 ௵ ஜுலை ௴ 7௳ யள்ள 587-இந்த நெ அர்ஜி வகயரு நடவடிக்கைகளை பார்வையிடப்பட்டது.

ஷை கிருமத்திய சர்வை 455, 192, 187 இந்த நெம்பர்களில் சம்மந்தப்பட்டிருக்கிற குட்டையின் ஜலத்தை ரங்கப்படையாச்சி வகையருப்பேர்கள் பாச்சலுக்கு உபயோகப்படுத்திவருவதாயும் இது கால் நடைகளுடைய குடித்தண்ணீருக்கு உபயோகமாக தக்கினதென்றும் பிட்டிஷனர் தாவா செய்திருக்கிறான்.

ரெங்கப்படயாச்சி வகையருப்பேர்கள் ஷை குட்டை தங்கள் பட்டாநிலத்தில் ஸம்மந்தப்பட்டதென்றும் புறம்போக்கைச் சேர்ந்ததல்லவென்றும் எதிர்வாதம் செய்திருக்கிறார்கள்.

நடவடிக்கைகளினாலே பிறஸ்தாபகுட்டை சிலபாகம் பட்டாநிலத்திலும் சிலது புறம்போக்கிலும் சம்மந்தப்பட்டிருப்பதாக நமூதாகிறது. மேலும் இந்தக்குட்டையிருக்கிற 187-நெ C-லெட்டரை பட்டா பெறறுக்கொள்ளும் முன்னுக்கு ரெங்கப்படயாச்சி சபாபதி படையாச்சி இவர்கள் 1878-வருஷத்தில் கொடுத்திருக்கிற வாக்குமூலத்தில் இந்தக்குட்டை ஜலத்தை பாச்சலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிறதல்லவென்றும் சாகுபடி செய்கிறதில்லையென்றும் குட்டையின் ஜலம் கால்நடைகளுடைய குடி தண்ணீருக்கு உபயோகமாய் வரும்படி விட்டுவிடுவதாயும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதறகுவிரோதமாய் இப்போ அந்த ஜலத்தை பாச்சலுக்கு உபயோகப்படுத்திக்கொள்வது சரியாக இருக்கவில்லை. இந்த குட்டை ஜலத்தை இனி பாச்சலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாதென்றும் உத்திரவு மீறி நடக்கிறபட்சத்தில் தெண்ட நீர்க்கூலி யேற்படுத்தப்படுமென்றும் ரெங்கப்படையாச்சி வகையருப்பேர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது. அவசியமிருந்தால் நாளது பசலி ஜமாபந்தியும்போது இந்த கேசை நோட்டீசுக்கு கொண்டுவரவும். பட்டாதார்களுடைய சம்மதமன்னியில் குட்டையின் சில பாகத்தை இப்போ புறம்போக்கில் வஜா செய்யவேண்டிய அவசியம் காணப்படவில்லை. அடக்கம் வாப்ஸ்.

(Signed) H. SUBBARAYER,
Dy. Collector.

No. 25.

1889-௵ ஜனவரி ௴ 19௳ யுள்ள 66-நெ.

திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜனரல் டிப்டி கலெக்டரவர்கள்.

பெரம்பலூர் தாலூகா தாசில்தாருக்கு.

அயிலூர் கிருமத்திய குடிகள் தங்கள் யேரிக்கு வரப்பட்ட வரத்துவாறியை சிருவாச்சூர் கிருமத்தார்கள் தடுத்து அணைபோட்டு புஞ்சை நிலங்களுக்கு ஜலம் பாச்சிக்கொளவதுனாலே நஞ்சை நிலங்களின் பாச்சலுக்கு குந்தகம் சம்பவிப்பதாய் கொடுத்த பிட்டிஷனைப்பத்தியும் புஞ்சை நிலங்களுக்கு தெண்ட நீர்கூலி யேறபடுத்த உத்திரவு கோறி 1296-ம் பசலியில் கணக்கனகொடுத்த ஸவால்பட்டியின்பேரிலும் நீர் எழுதிய 1888-௵ டிசம்பர் ௴ 31௳ யுள்ள 983-நெ அர்ஜி வகயரு நடவடிக்கைகளை பார்வையிடப்பட்டது.

2. பிறஸ்தாப அணைகள் வெகுநாளாக இருப்பதுனாலே அவைகளைப்பற்றி நோட்டீஸ் எடுத்துக்சொள்ளவேண்டிய அவசியமில்லையென்று இப்போ நீர் யெழுதியிருக்கிறீர். பிட்டிஷனர் தவிற அயிலூர் கிருமத்தாரையும் ஒன்றும் விசாரிக்கவேயில்லை.

3. இதே அயிலூர் கிருமத்தார்களான பிட்டிஷனர்கள் 1885-௵த்தில் இதே சங்கதியாய் கொடுத்த பிட்டிஷன்பேரில் நஞ்சை நிலங்களுக்கு ஜலத்தட்டு நேரிடும்படி பிறஸ்தாப ஓடை ஜலத்தை பாச்சக்கூடாதென்று சிருவாச்சூர் கிருமத்தாருக்கு நீரே 1886-௵ செப்டெம்பர் ௴ 30௳ நோட்டீஸ்கொடுத்து தண்டநீர்கூலி யேற்படுத்துவதற்காக ஜமாபந்தி காலத்தல் நோட்டீசுக்கு கொண்டுவரும்படி கணக்கனுக்கும் 1886-௵ செப்டெம்பர் ௴ 30௳ யுள்ள 994-நெ உத்திரவு அனுப்பியிருக்கிறீர். இவ்வித நடவடிக்கை நடத்தின நீரோ இப்போ வேறு ஒரு விசாரணையும்செய்து ரிக்கார்டு யேற்படுத்திக்கொள்ளாமல் நேருய் ஜாகா பார்த்ததாயும் தாவா உபயோகமில்லையென்றும் யெழுதியிருப்பது திருப்திகரமுள்ளதாக இருக்கவில்லை.

4. பிட்டிஷனர் 87-ஹு த்திய 215-நீ இண்டார்சு பிட்டிஷனில் சிருவாச்சூர் கிருமத்தார் இந்த புஞ்சை நிலங்களுக்கு பிறஸ்தாபஓடை ஜலத்தை பாச்சக்கூடாதென்று 1885-ஹு த்திய அசூர் 733-நீ உத்திரவுவந்து நடவடிக்கை நடந்திருப்பதாய் சொல்லியிருக்கிறார்கள். அது யெதார்த்தமதானு அப்படிக்கிருந்தால் அந்த நடவடிக்கைகளையும் அனுப்பவேண்டியது.

5. பிறஸ்தாப ஓடை அயலூர் கிருமத்திய சர்க்கார் மருமத்துள்ள ஏறிக்கு வறத்துள்ளது தானு அந்த ஏறியின் ஆயக்கட்டு என்ன, சென்ற 5-பசலிகளில் சாகுபடி தரிசு என்ன நீர்கூலி ஏதாவது கூடுதலுக்கு வந்திருக்கிறதா, சிருவாச்சூர் கிருமத்தில் பிரஸ்தாப வரத்துவாரியில் எத்தினை கொண்டம் யெப்போ போடப்பட்டிருக்கிறது மண் அணையா அல்லது எப்படி ஒவ்வொன்றின் கீழ் எவ்வளவு புஞ்சை நிலம் சாகுபடியாயிவருகிறது. சென்ற 5-ஹு த்திய நீர்கூலி கூடுதல் யெவ்வளவு பசலிவாரியாய் ஸ்டேட்மெண்டு சித்தம்செய்து அனுப்பவேண்டியது.

6. பிட்டிஷனர்தள் இந்த கொண்டங்கள் எப்போ போடப்பட்டதென்று தாவா செய்கிறார்கள். வெகு நாளாயிருந்ததென்று ஒப்புக்கொள்ளுகிறார்களா அல்லது என்னஸமாதானம் சொல்லுகிறார்கள் எழுத்து மூலமாய் ஸ்டேட்மெண்டுகள் வாங்கி அனுப்பவேண்டியது.

7. நஞ்சை நிலக்காரர்கள் தாவாசெய்திருக்கையில் நிஜஸ்திதி இன்னதென்று வியக்தப்படுத்திக்கொள்ளாமலும் யாதொரு விசாரணை அன்னியிலும் சிருவாச்சூர் அதிக ஹீறணமுள்ள 50-ஏக்கர் கிருமத்தார் புஞ்சை நிலங்களுக்கு ஏரியின் வரத்துவாரி ஜலத்தை பாச்சிக்கொள்ள அனுமதி கொடுப்பது ஆட்சேபணைகறமாக இருக்கிறது. இருகட்சிக்காரனையும் விசாரித்து விவரமான நக்ஷா சகிதம் பூர்த்தியாய் ரிபோர்ட்டு செய்யவேண்டியது. அடக்கங்களை வாப்ஸ் செய்திருக்கிறது.

(Signed) H. SUBBARAYER,
Dy. Collector.

19—1—89.

No. 26.

1887-ஹு த்திய செப்டெம்பர்மீ 29உயுள்ள 1084-நீ.

திருச்சினுப்பள்ளி ஜனரல் டிப்டி கலெக்டரவர்கள்.

உடையார்பாளையம் தாலூகா தாசில்தாருக்கு.

கல்லாத்து ஜலம் இஸ்திமிரா வெங்கிடகிஷ்ணுபுறம் வகையரு கிருமங்களின் நிலங்களுக்கு பாய்ந்து வருவதற்காக நீர்கூலி யேற்பட்டு வராததைப்பற்றி அசூர் 1887ஹு செப்டெம்பர்மீ 23உயுள்ள 1171நீ உத்திரவுக்கு ஜவாப்பாய் நீரெழுதிய 1887-ஹு செப்டெம்பர்மீ 26உயுள்ள 989-நீ அர்ஜி வகையரு நடவடிக்கைகளை பார்வையிடப்பட்டது.

இஸ்திமிரா லைகரலாபாத் கிருமத்தில் ஊற்றுஉண்டாகி இஸ்திமிரா சுரோத்திரியம் கிராம சரகத்தில் வந்து அப்படியே மருதையாற்றில் இந்த கல்லாறு விழுந்து போவதாக தெரியவருகிறது. இந்த ஆறு சர்க்கார் கிராமத்தில் உண்டானதாக இருக்கயில்லை. சர்க்கார் பாசனத்துக்கு போகத்தக்க மராமத்து உள்ளதாயுமில்லை. இஸ்திமிரா கிராமத்தில் உணடாய் வரப்பட்ட இந்த ஆற்றின் பாசனத்துக்காக சுவான்தார்கள் தோட்டதீர்வையும் நஞ்சை தீர்வையும் யேற்படுத்தி மாமூலாய் குடிகள் அவர்களுக்கு அதிக தீர்வை செலுத்தி வருகிறதாயும் நமூதாகிறது. இந்த ஸ்த்தியில் இந்த ஆத்துப்பாச்சலுக்காக சர்காரிலும் நீர்கூலி யேற்படுத்தக்கூடியதாக இருக்கவில்லையென்று நேராய் ஜாகாபார்த்த டிப்டி தாசில்தாரும் நீரும் சொல்லியிருப்பது சரியாகவேயிருக்கிறது. 5நீ ஸ்டாண்டிங் ஆர்டர் 1-வது பாராவை அனுசரித்து புஞ்சை நிலங்களுக்கு கெவர்ன்மெண்டு பாச்சலில் தண்ணீர் பாயும்போதுமட்டும் தான் நீற்கூலி ஏற்படுத்தக்கூடியதாயிருக்கிறது. பிறஸ்தாபகேஸ் அதற்கு சம்மந்தமுள்ளதாக இராதனலே இதில் வேறு விதமாய் யாதொரு நோட்டீசும் யெடுத்துக்கொள்ளவேண்டியதாக இருக்கவில்லை. அடக்கங்களை வாப்ஸ் செய்திருக்கிறது.

(Signed) H. SUBBARAYER,
Dy. Collector.

29—9—87.

TRICHY:—PRINTED BY V. SINGARAVELU MUDALIYAR, AT THE COLLECTORATE PRESS.